BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER

Paper - 03 Issue - 60 01 Friday December 2006 விற்பனைக்கல்ல

- நீங்கள் வீடு வாங்க, வியாபாரம் வாங்க கடன் தேவையா?
- வியாபார, ஆயுள்க் காப்புறுதிகள் செய்ய வேண்டுமா?
- உங்களுக்கு தேவையான Tax Advice, வியாபார ஆலோசனைகள் மற்றும் அனைத்துவகை Accountancy Servicesகளுக்கும் நாட வேண்டிய இடம்...

Forward Consultants
1, Lancelot Road, Wembley HA0 2AJ Tel: 0208 900 9052




OFF LICENCE & ON LICENCE

- New Personal Licence Holder (NCPLH) & Premises Supervisor (DPS) course
- உங்களுக்குரிய Personal Licence எடுக்க வேண்டிய சகல உதவிகள்.
- புதிதாக கடை எடுப்பவருக்கு வேண்டிய Licence, வேலும் வழி முறைகள். சென்று தப்புக்கும்.
- Running & Established Shops for sale/to buy anywhere in the UK
- Food-Hygiene, Health & Security, Shop owns

No Win No Fee

www.ltta.co.uk

LTTA LTD

தொடர்புகளுக்கு Mr. Ravi
Head office, System House, 19 Pershore Road south, Birmingham B30 3EE
Tel : 07782 223 005

RAJA & CO SOLICITORS
10 Upper Tooting Road, Tooting Bec
London SW17 7PG
Tel:020 8772 4900 Fax:020 8682 9425

We provide following Legal Services:
Conveyancing:-
Buying and Selling
Houses Flats & Business
Criminal Cases
Civil Litigation
Family
Immigration
We hold Legal Aid Franchise in Immigration & Crime

ABBEY TRAINING. NET

- OFF Licence/ Restaurant Personal Licence
- NCPLH CERTIFICATE COURSE
- Supervisor Course For OFF Licence and Restaurants (DPS)
- off licence / restaurant premises licence
- LIFE IN THE UK -
- Course

38 London Road, Tooting SW17 9HP
தொடர்புகொள்ள: Thavanessan
020 8640 9900 / 07956 913 164 / 07960 665 575

SIVA BUSINESS TRAINING
எங்களிடம் வாருங்கள்
வென்று தருகின்றோம்
Citizenship Course (Life in UK வகுப்புகள்)
Personal Licence
(For OFF Licence and On Licence)
National Certificate
for Personal Licence Holders (NCPLH)
New Supervisor Course (NDDPS)
* New Premises Licence * Transfer of Licence
* Change of DPS * Night Cafe Licence
Siva 020 8683 6544, 079 0480 6371

Rasam Gayathri Silks
Specialists in Wedding Sarees
* Deepam * Kolam
* Mangalyam * Suyamvaram
www.rasamsilk.com
Open 7 days a week 11am-8pm
Tel: 020 8552 6060
Street North, Eastham E12 6SA

Want to learn English?
ESOL English Levels 1,2 & 3
pitman training
IELTS, Citizenship Exam, Computer, ECDL, Admin, Accounts, Secretarial and Full Practical Courses in Hardware, Networking and PC Security
Overseas Students Welcome
Call: 020 8903 9580
Or Email: wembley@pitman-training.net
FCL College, Hazel House, 1-3 Lancelot Road, Wembley, Middlesex HA0 2AJ

LONDON ACCIDENT CLAIMS LIMITED
70 Windmill Road, Croydon, CR0 2XP
Had an accident - Not your fault
Driver / Passenger - within last 3 years
3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட....
(Neck, Back & Shoulder Pain)
NO WIN - NO FEE
Tel:020 8665 7667 Fax: 020 8684 7177
Mob: 07950 953 514 Call Free: 0800 032 6798

Landlords Insurance
COVERSURE
INSURANCE SERVICE
Competitive rates for all tenant types includes HMOs, DSS, Council Let
Underwritten by a major insurer. Competitive, Quick and Expert advice
Exclusive 15% discount for "Accredited" Landlord
தொலைபேசி
0870 4585 680
தொடர்பு கொள்ளுங்கள்
Authorised and Regulated by the Financial Services Authority No:307008

ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

# ANGELS

+ Mortgages + Loans
+ Letting Management
+ Insurance + Building Insurance

## Properties and Financial Services Ltd.

- வியாபார வங்கிக்கடன்
- விற்பனைக்கு 0.5% மட்டுமே அறவிடப்படும்
- வாடகை வீடுகள்
- காப்புறுதி
- மோட்கேஜ் (Mortgages)

**100% Mortgage Specialist**

- 100% வீட்டு வங்கிக்கடன்கள் 5 நிமிடத்தில் ஏற்பாடு செய்யமுடியும்
- வருமான அத்தாட்சி அவசியமில்லை
- முற்பணம் (Deposit) அவசியமில்லை
- ஏற்கனவே உள்ள கடனுக்கு வட்டியை குறைக்க குறைந்த வட்டிக்கு கடனை மாற்றமுடியும்
- முத்திரை தீர்வு அவசியமில்லை
- உங்களின் நிதி சம்பந்தமான அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தகுந்த தீர்வு தரப்படும்




74 Lee High Road
Lewisham SE13 5PT
Tel: 020 8852 1683
Fax: 020 8852 1621
email: info@angelsproperties.co.uk
web: www.angelsproperties.co.uk



# POS TECH

POS TECH LTD
EPOS SOLUTION

Limited Offers
Touch Screen Till
**£1600**
IBM PC Base Till
**£900**



NISA OCS LINK / C CARD LINK
PAY POINT / PAYZONE LINKS

- Touch Screen
- Stock Control
- Promotions & Offers
- Shelf Labels
- Special 'Z' Report
- Account Customers
- Access from Home
- Free 50,000 Item List
- Staff Security
- Link with SAGE Line 50

**020 8873 1710**

Retails Tills
Restaurant Kit News Round

Free Support | Free Barcode Printer | Interest Free Payments Options | Free Laser Printer





## *PLANNING A PARTY FOR 20/160 PEOPLE?*

*Superb new venue available in the Wembley/Harrow area.*

*Ring* 020 8904 8581 *(mornings)*
*or email: wendy.farrell@bwps.org*

*Easy parking*



# SELVARAJA GOLD HOUSE



Tooting Mitcham Road இல் புதியதோர் நகைக்கூடமாம்

## செல்வராஜா *Gold House*

## இலவசம் ! இலவசம் ! இலவசம் !

இந்த நகைக்கூடத்தில் £750க்கு மேல் நகைகளை கொள்வனவு செய்வோருக்கு ஒரு தங்க நாணயம் இலவசம்

இந்நகை மாளிகை *New Gold House* இன் மற்றுமொரு நிறுவனமாகும்.

திறப்பு விழாவை முன்னிட்டு அனைத்த வைரத்தாலிக்கொடிகளும் செய்கூலி இல்லாமல் செய்து தரப்படும்



**162 Mitcham Road, London SW17 9NJ**
Tel / Fax: **020 8767 3795 / Mob: 07825 005 269**

### அநுராவும் ரசிகனா?

மாவீரர் தின உரை எல்லோரும் கேட்டோம். ஆனால் அது பற்றி விமர்சனம் செய்யும் அனுரா பண்டார நாயக்காவின் வசனங்களைப் பார்க்கும்போது தேசியத் தலைவரின் மன உறுதி போன்றவற்றால் கவரப்பட்ட அவரின் ஒரு ரசிகனின் பேச்சுப்போல் அல்லவா இருக்கிறது.

— *கதிரமலைநாதன்*

### அசத்தல்

சும்மா சொல்லக்கூடாதையா! ஒரு பேப்பர் எண்டால் ஒரு பேப்பர் தான். அசத்திப் போட்டீங்க போங்க. அட உங்கடை அட்டைப் படத்தைத் தான் சொல்லுறன். கீப் இட் அப்...

— *மாறன்*

### தகவல்களுக்கு நன்றி

சென்ற வாரம் உங்களுடைய பத்திரிகையில் பிரசுரமான ஓட்டிசம் தொடர்பான மருத்துவத் தகவல்கள் மிகவும் பிரயோசனமாக இருந்தன. தொடர்ந்து பயனுள்ள மருத்துவத் தகவல்களை எதிர்பார்க்கிறோம்.

— *மதிவதனி*

### அம்பாறை

அழகிய பாறை என்ற அர்த்தத்தில் வந்த அம்பாறை என்ற சொல்லை சொல்லை அம்பாற என்று மாற்றி அதிலும் திருப்தியடையாது அந்த மாவட்டத்தை இன்று திகாமடுல்ல என்று முழுமையான சிங்களப் பெயருக்கே மாற்றி விட்டார்கள். கொண்டை வெட்டுவானை கொண்டை வெட்டுவானா ஆக்கினார்கள். இப்போ என்ன பெயரோ தெரிய வில்லை. எனது பெயரையும் தயவுசெய்து பாண்டிருப்பானா ஆக்க அனுமதியாதீர்கள்.

— *பாண்டிருப்பான்.*

### போஸ்ட் ஒபிசோ?

என்ன உங்கடை பேப்பரிலை ஒரே கடிதமயமாக் கிடக்குது. அதை விட்டுப் போட்டு நல் லவிசயங்களாத் தாங்கோ!

— *வினித்*

### பயமா?

27ம் தகதி தமிழ் ஈழப் பிரகடனத்தை எதிர்பார்த்திருந்தேன். அது நடந்தது. இன்று என்ன நடக்குமோ என்று பயமாக இருக்கிறது. யார் பயந்தும் என்ன, ஒரு கர்ப்பிணிப் பெண் பயப்படகிறாள் என்பதற்காக அவள் வயிற்றில் இருக்கும் குழந்தை பிறக்காமலா வயிற்றுள் இருக்கப் போகிறது?

— *தம்பிராசா*

### அரசியல்

அரசியலை அறிய வேண்டுமானால் ஒரு பேப்பரின் அரசியல் கட்டுரைகளை வாசித்தாலே போதும் என்று சொல்கின்ற அளவிற்கு உங்கள் அரசியல் கட்டுரைகள் தரமானவையாக இருக்கின்றன. தொடரட்டும் உங்கள் பணி

— *வித்தியா*

### கலக்கப்பட்டதா?

விஜயனுக்கு மடடுமல்ல அவனுடன் சேர்ந்த 700 காடையருக்கும் தமிழ் மன்னன் பெண் கொடுத்தானாம். 701 தமிழிச்சிகளிலிருந்து வந்த பரம்பரையின் மொழியில் குறைந்தது எத்தனை வீதம் தமிழ்ச் சொற்கள் புகுந்திருக்க முடியும். இதனைக்கூடச் சிந்திக்காது வரலாற்றில் ஆதாரம் தேடும் இந்த மூளைசாலிகளைப் பார்த்து பரிதாபப்படுகிறேன்.

— *விநாயகம்*

### மாறுங்கோ

என்ரை ஒரு பேப்பர் குஞ்சுகள்! நீங்கள் மாற்றங்களை விரும்ப மாட்டியளோ? தொடங்கின நாளிலை இருந்து ஒரே மாதிரிப் பேப்பர் போய்க் கொண்டிருக்குது. புது வருசத்தோடையாவது கொஞ்சம் மாற்றங்களைச் செய்தால் என்ன? முக்கியமா அந்த ஒசி எண்ட சொல்லையும் முன்பக்கத்திலை இருக்கிற அந்தக் குப்பைக் கூடையையும் எடுத்துப் குப்பைக் கூடைக்குள்ளை போடுங்கோ.

— *புதுமை விரும்பி*

### மாற்றவேண்டும்!

மதிப்பு மிக்க ஆசிரியர் குழுவிற்கு, ராமநாதன் எழுதிக்கொள்வது. ஒரு பத்திரிகை என்பது குறிப்பிட்ட ஒரு சமூகத்திற்கான வழிகாட்டி போன்றது. ஆகவே இம்மாதிரியான அதாவது பத்திரிகைத் துறையில் ஈடுபடுகிற பொழுது அதற்கென்ற ஒரு பொறுப்பு இருக்கிறது.

சாதாரணமாக ஏதாவது எழுதுகிறோம் கிழித்து விடுகிறோம் என்று சிறு பிள்ளைத்தனமாக இருந்து விட முடியாது. அப்படி இருந்தால் நீங்கள் உண்மையானவர்கள் அல்ல நீங்கள் போலிகள்.

பத்திரிகையில் பயன்படுத்தப்படும் எழுத்து முறையே தங்கள் பத்திரிகை மிகவும் தரம் குறைந்த ஒரு பத்திரிகை என்று தெளிவு படுத்துகிறது. நான் ஒரு போதும் தங்கள் பத்திரிகையின் பெயர் குறித்துப் பேசப்போவது கிடையாது. அப்படிப் பேசி என்னுடைய இரத்த அழுத்தத்தினை அதிகரிக்கும் எண்ணம் எனக்கு இல்லை! ஆங்கிலத்திலும் தமிழிலும் ஒரு பெயர். ஏன் தமிழில் உங்களுக்கு திருப்திகரமாக ஒரு பெயர் கிடைக்க வில்லையா? அந்தளவிற்கு குறைவானதா எங்கள் செம்மொழி எனப்படும் செந்தமிழ்! நன்றாக சிந்தித்துப் பாருங்கள்!

— *இரா.நாதன்*

### பங்களிப்பு

எம் இனப்பிரச்சனை, மொழி, கல்வி பிரதேசம் பொருளாதாரம் ஆகிய எல்லாவற்றையும் கடந்து தமிழ் இன அழிப்பு நிலைக்கு சென்ற பின்பே தனிநாடாகப் பிரகடனப் படுத்தப்பட உள்ளது. இதற்கு உரிய பங்களிபபை நாம் வழங்க வேண்டும். தவறின் சும்மா வெறும் ஆசைக்கு தனிநாடும் வராது வரலாறும் எம்மை மன்னிக்காது.

— *கணபதிப்பிள்ளை*

### புதுப் புரட்சி

அண்ணை சத்தியமாச் சொல்லுறன். நீங்கள் ஒரு புதுப் புரட்சியைச் செய்திட்டியள். உங்கடை பேப்பர் வரத் தொடங்கேக்குள்ளை இதென்ன பேப்பரோ எண்டும் பத்திரிகை நடை இல்லாமல் கதைக்கிற மாதிரி எழுதுறாங்கள் எண்டும் கன பேர் கதைச்சுத் திரிஞ்சவையள்.

இப்ப இங்கை கனடாவிலை உங்கடை பாணியிலை புதுசா இன்னொரு ஒரு பேப்பர் வருகுது. ஆனால் பேர் இன்னொரு பேப்பர் இல்லை.

— *ரவி*

### Correction

I wish to inform that the baby David adopted by Madona was thirteen months old and not 13 years old as mentioned in your last issue.

***- Rajee Selvaratnam***

### Promotion campaign

Dear Sir,

Your paper, I mean 'Oru Paper' is really a good reading material for young, not so young, for old, and not so old.

Many of the topics are exciting and some make us raise our eye borrows, too. It makes us laugh and some of us do become fat. It is special because it is bilingual.

Because it is given free, I see lot of people don't bother even to look at it. May I suggest you, that you do a promotion campaign like distributing fliers or posters with some attractive captions?

Evening standard is very, very popular tabloid, still they spend lot of money in advertising. Anyway, well done chaps!

***- Kuruparan (14)***

## தாயகத்திலிருந்து ஓர் கடிதம்



கடைகளில எதுவுமில்லையெண்டு அப்பா சொன்னார். ஏன் எதுக்காக எண்டு காரணங்கள் சொல்லுகினம். ஆனா எனக்கெதுவும் விளங்கேல்லை. இனிப்புக்கள், பிஸ்கற்கள், பட்டர், பால்மா.. ஏன் முட்டை, மீன் இவையெல்லாம் எங்கை போயிட்டுதுகள்.. என்னை விரும்பிற ஆக்கள் எனக்கென்ன வேணும் எண்டு போனில கேட்கினம். என்னட்டை ஒரு பெரிய லிஸ்ற் இருக்கு.

ஆனா அதை அனுப்பத்தான் ஒரு வழியும் இல்லை. மூண்டு நாளைக்கு முன்னாலை என்ர நண்பன் தன்ரை அன்ரி தனக்கு பார்சல் அனுப்பியிருக்கிறதா வகுப்பறையில வைச்சு சொன்னான். அதுக்குள்ளை பால் மா, சீனி, பிஸ்கற், சவர்க்கார பவுடர் எல்லாம் இருந்ததாம். அதை திறந்து பாக்க சீனியும் சவர்க்கார பவுடரும் ஒண்டா கலந்து கிடந்ததாம். எண்டாலும் பிஸ்கற்றும் பால்மாவும் தாங்கள் எடுத்தவையாம். என்ர அன்ரியும் நாங்கள் எப்பிடி இருக்கிற மெண்டு அறிய போன் பண்ணினவ. நான் அவவிட்டை பிஸ்கற்றும் பால்மாவும் அனுப்ப சொன்னனான். ஆனா சவக்கார பவுடர் அனுப்ப வேண்டாம் எண்டும் சொல்லியிருக்கிறன்.

இப்ப ஒவ்வொரு நாளும் தபால்க்காரனை பாத்துக்கொண்டிருக்கிறன். நேற்று என்ர அப்பா பாண் வாங்கிற கியுவில நிக்கிறதுக்கு போக பிந்திட்டார். அவருக்கு பாண் கிடைக்கவில்லை. நான் காலை எதுவும் சாப்பிடாமல்த்தான் பள்ளிக்குடம் போனன். இடைவேளைக்கும் எதுவும் சாப்பிட இல்லை. இண்டைக்கும் வழமை போல காலமை 5 மணிக்குத்தான் ஊரடங்குச் சட்டம் எடுத்தவை.

சனம் எல்லாக் கியுவிலையும் நிக்கினம். கப்பல்ல கொழும்பு போறதுக்கு ஒரு கியு, சாமான் வாங்க ஒரு கியு, மண்ணெண்ணை வாங்க ஒரு கியு. என்ரை அப்பாவும் விடிய பாண் வாங்கிறதுக்கு கியுவில நிக்கப் போனார். அவர் ஒரு பாண்துண்டோடை வந்தார். நான் அதில ரண்டு துண்டைச் சாப்பிட்டு விட்டு ஒரு துண்டைப் பள்ளிக்குடம் கொண்டு போனன். இன்ரெர்வெல் நேரம் நான் என்ர பாண் துண்டு வைச்சிருக்கிற பெட்டியை திறந்தன். அதை பக்கத்தில இருக்கிற என்ர நண்பி எட்டிப் பாத்தா.. பாவம் அவ.. அவ இன்ரெர்வெலுக்குச் சாப்பிட ஒண்டும் கொண்டு வரேல்லை.

அதோடை அவ காலையும் ஒண்டும் சாப்பிடேல்லையாம். அவவின்ர அப்பாவை ஆமிக்காரன் சுட்டுப் போட்டான். அதாலை காலைமை எழும்பிப்போய் கியுவில நிண்டு பாண் வாங்க அவவுக்கு ஆருமில்லை. நான் என்ர பாண் துண்டை ரண்டா பிய்த்தேன். பிறகு என்ன நினைச்சனோ தெரியாது. முழுவதையும் அவவுக்கே குடுத்திட்டன். பாவம் இன்று முழுதும் சாப்பிட வில்லைத்தானே.. எனக்கு இப்ப பசிக்குது. எனக்கு பசித்தாலும் பரவாயில்லை. அவவின்ர அப்பாவை சுட்ட மாதிரி என்ர அப்பாவையும் ஆமி சுட்டுவிடக் கூடாது கடவுளே..

- *கொழுவி*

Strong. Safe. Reliable.
MCG
Open 7 Days
MONEY IN MINUTES TO SRI LANKA




இலங்கைக்கான பணமாற்றுச் சேவை
நம்பிக்கை நாணயமிக்க மிகத் துரிதமான சேவை
குறிப்பிட்ட அதே நாளில் பணத்தை அங்கு பெற்றுக்கொள்ளவோ அன்றி அங்குள்ள உங்களது எந்த வங்கிக் கணக்கிலும் வைப்பு செய்ய கூடியதான வசதிகள்.
HSBC · COMMERCIAL BANK · HNB · PEOPLE'S BANK · SEYLAN BANK LIMITED · SampathBank · BOC BANK OF CEYLON
Head Office : 125 - 127 Bramley Road, Oakwood, London N14 4UT
Transfer Hotline
020 8886 4488
www.cecfastcash.com

PAY AT
BARCLAYS
நீங்கள் எங்கிருந்தாலும் உங்கள் பணத்தை பாதுகாப்புடனும் விரைவுடனும் அனுப்ப அருகில் உள்ள BARCLAYS இல் பணத்தை வைப்புச் செய்த பின் எம்மை அழையுங்கள்
A/C NAME : C.E.C.LTD
A/C NO : 70713945
SORT CODE : 20-36-47
BRANCH : HANOVER SQ.

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, DECEMBER 01, 2006, ISSUE 60

## புலம் பெயர்ந்தவருக்கு விடுக்கப்பட்ட செய்தி

தலைவர் பிரபாகரனது மாவீரர் நாள் செய்தியானது அரசியல் அரங்கில் பெருத்த அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. வழமை போலவே அவர் தெரிவித்த கருத்துக்களுக்கு தமக்கு ஏற்றபடி வேறுபட்ட விளக்கங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அவர் தனிநாட்டு பிரகடனம் செய்யவில்லையாயினும் தனியரசு ஒன்றே எங்கள் முன் உள்ள ஒரே தீர்வு என்பதை ஐயத்துக்கு இடமின்றி தெரிவித்துள்ளார்.

புலம்பெயர்ந்த மக்களிடையே அவரது இந்த முடிவுகள் வரவேற்கப்பட்டிருப்பது வெளிப்படையாகவே தெரிகிறது. எம்மக்களின் இந்த நிலைப்பாட்டுக்குக் கூட ஒரு சிலர் குதர்க்கமான வியாக்கியானங்கள் கொடுக்க முனைந்தாலும், தலைவர் அவர்கள் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு வழங்கிய முக்கியத்துவம் எல்லாத் தரப்பினராலும் உணரப்பட்டுள்ளது. சிங்களப் பேரினவாதத்தின் தமிழின அழிப்பு முயற்சியிலிருந்து தாங்கள் பிறந்த மண்ணையும் மக்களையும் காக்க வேண்டியதன் அவசியத்தினை நன்றாகவே உணர்ந்தவர்கள் புலம்பெயர்ந்த தமிழர்கள். அதனால் தலைவர் சுதந்திரத் தனியரசுக்கான போரை முன்னெடுக்க விருப்பதாக அறிவித்தபோது அவர்கள் ஆர்ப்பரித்ததில் ஆச்சரியமில்லை.

இருப்பினும் இது வெறுமனே விசிலடித்து ஆராவரப்படும் விடயமில்லை. இந்தப் பாரிய பணியினை செய்து முடிப்பதற்கு ஒவ்வொருவரினதும் காத்திரமான பங்களிப்பு தேவைப்படுகிறது. தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் சிங்களப் பேரினவாதிகள் எங்கள் மண்ணுக்கும் மக்களுக்கும் அழிவைத்தான் கொடுத்துக் கொண்டிருப் பார்கள். அதிகாரப் பரவலாக்கம், சமஸ்டி, அந்தச் சபை இந்தச் சபை என்ற மாய்மாலங்களில் தமிழர்கள் குழம்பிக் கொண்டிருந்த காலம் கழிந்து விட்டது. இனி வருவது போராடும் எங்கள் மக்களுக்கு கரங்கொடுத்துச் செயற்பட வேண்டிய காலம். இதனையும் தவறவிட்டால் வரும் அவலங்களை நீங்களே சுமக்க நேரிடும்.

நீங்கள் வாழும் நாடுகளின் சட்ட வரையறைக்குள் நின்றபடி செய்து முடிப்பதற்கான பணி நிறையவே இருக்கிறது. பேதங்கள் பாராது அனைவரும் இணைந்து செயற்பட வேண்டிய அவசியமிருப்பதால் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களின் அடிப்படையில் செயற்படுவதற்கு இது தருணமல்ல. முன்பு செயற்பட்டு ஓய்ந்து போனவர்களும். வேறு காரணங்களினால் விலகிப் போனவர்களும் மீளச் செயற்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. எனவே எம்மிடையே விட்டுக் கொடுப்புடனும் அனைவரையும் உள்வாங்கும் மனப்பாங்குடனும் இணைந்து செயற்படுவோம். வாரீர்.

## ஒரு பேப்பர்

*வாசகர்களுக்கு*
*வணக்கம்!*

*கடந்த வாரம் உணர்வு பூர்வமான வாரமாகக் கடந்து சென்றது. அவ்வுணர்வும் அப்படியே கடந்து போய் விடாதபடி எங்களை காத்துக் கொள்வோம்!*

*சொல்ல நிகைக்கிறதை உடனயே சொல்லவேணும். இவ்வளவு நாளும் "ஓசியா வாசிக்க ஒருபேப்பர்" என்ற வாசகத்தை மாத்து எண்டுதான் ஒரு பக்கத்தில இருந்து கடிதங்கள் வந்தன இப்ப ஒராள் பேப்பரின்ட பேரை மாத்து எண்டு எழுதி இருக்கிறார்.*

*ஐயா! வேண்டாமையா! விடுங்கய்யா! வெளில பாக்காதேங்கையா விசயத்தைப் பாருங்கையா!*

*கவிதை எழுதிற கவிஞர்களுக்கு ஒண்டைச் சொல்லவேணும் நீங்க எழுதிற கவிதைகளை இயலுமானவரைக்கும் சுருக்கமா எழுதுங்கோ. நீளமான கவிதைகள் நாங்கள் வாசிக்கிறதோட சரி. அதை பேப்பரில போடுறது கடினம்!*

*இந்தப் புனைபெயர் எண்ட ஒரு விசயம் இருக்குதெல்லோ அதப் பாவிக்கிற ஆக்களுக்கு ஒரு விசயம்!*

*புனைபெயரில வாசகர்களுக்கு எழுதுங்கோ எங்களுக்கு எழுதாதேங்கோ. எங்களுக்கு நீங்க ஆரெண்டு தெரியவேணும் எல்லே.*

*நாளைக்கொரு பிரச்சனையெண்டா உங்களுக்காக நாங்க அடிவாங்கேலாதப்பா!*

*அண்டைக்கு ஒரு நாள் பேப்பரில வந்த ஆக்கத்தைப் பாத்துப் போட்டு ஒராள் தன்ர அதிருப்தியைத் தெரிவித்தார். எப்பிடி!?*

*தம்பி நான் கருத்தைக் கருத்தாலதான் மோதுவன் எண்டு சொல்லிப் போட்டு தூசணத்தாலே ஏசிப் போட்டு போனார். பொது விசயம் எண்டு இறங்கினால் இதெல்லாம் சகஜம்தானே.*

*கதையோட கதையா மறக்காம புனை பெயர் காரர்கள் தயவு செய்து எங்களுக்கு உங்கட விபரங்களைத் தாங்கோ!*

*நீங்கள் அனுப்புகிற ஆக்கங்கள் ஒருபேப்பரில் பிரசுரிக்கப்படாவிட்டால் அதற்குத் தகுந்த காரணங்கள் இருக்கும் இடம் போதாமை உட்பட தயவாய் இதனை ஏற்றுக் கொள்ளுப்படி கேட்டுக் கொள்கிறோம்.*

*இது பண்டிகைக்காலம்! விடுமுறைக்காலம்! பலவிதமாய்க் காலம் கழியும். பிள்ளைகளை நாலு இடத்துக்குக்கு கூட்டிக் கொண்டு போங்கோ அல்லது அதுகளோட போங்கோ. உலகத்தைப் பாருங்கோ. மனசு லேசாகும். எழுதி ஆக்களுக்குச் சொல்லோணும் எண்டு விரும்பினால் எழுதி அனுப்புங்கோ!*

*ஒரே வேலை வேலை எண்டு ஓடி ஓடி எங்களில கனபேரின்ர காலில சப்பாத்து மட்டுமில்லை சொக்ஸ்சும் பிஞ்சு கால்ரேகையும் காணாமல்ப் போட்டுது. அவை மாதிரி ஆக்கள்தான் முக்கியமா மேல சொன்னது பொருந்தும்.*

*நாங்கள் மனிதர்கள் இயந்திரங்கள் இல்லை!!!!*

*சரி இனியென்ன!*

*மறுமுறை ஒருமுறை மீண்டும் சந்திப்போம்*

*அதுவரை உங்களிடம் இருந்து விடைபெறுவது*

*- ஒரு பேப்பர் காரன்கள்+காரிகள்*

EDITORIAL

# History Repeats

The Sri Lankan military controls every supply route into the Tamil Northeast. In the North it controls the A-9 road which supplies the Jaffna peninsula and the mainland Vanni. This area is the home of more than a million of our brethren, with almost ninety percent of us, the Tamil Diaspora coming from the villages and towns of this beautiful part of Sri Lanka. And in the East the Sri Lankan military controls all supply routes into this huge impoverished land, home to more than 300,000 of our people.

Young racist army commanders control every movement and activity of our people on the ground while the sleek, cosmopolitan, well educated and well connected Sri Lankan diplomats in Colombo and world capitals justify this military occupation and their commanders' racism in the name of national security.

During the last forty years the entire Northeast has suffered immensely under the successive Colombo regimes. This is because our people stood up and resisted political and military pacification programmes led by the Sri Lankan state which was funded and diplomatically supported by the West.

The worst period for our people was between 1995 and 2001. During this period the Sri Lankan Government headed by the Sorbonne educated Chandrika Kumaratunge and Oxford educated Laxman Kadirgama, two supposedly liberal democrats, tightened up the screws on the Tamil people like never before. In their immoral and unethical 'War for Peace' every humanitarian need was used as a weapon of war. Economic sanctions, food embargoes, blocking off medicine and fuel supplies- all in order to break the Tamil will to resist.

Throughout these six long bloody years, we, the Tamil Diaspora tried every democratic forum in our adopted countries to inform our own members of parliament and other elected representatives of the injustices done in our native home. But we were not listened to, our cries for our people's suffering, not heeded. We were told that the situation needed to be verified and an international presence was a must, as neutral observers, as monitors etc. They needed to see it for themselves as our evidences were not good enough.

In 2001 the Norwegian led peace talks were started when the Sri Lankan military's back was broken by the Tamils and Sri Lankan economy was in ruins due to its years of war-mongering.

During the last six years our adopted nations' diplomats went to the Tamil Northeast on fact finding missions. Western non-governmental organisations went and worked in our people's nature blessed but persecuted little villages. Officially and unofficially we were told that whatever we complained of through those "War for Peace' years of 1995-2001 were true. And many regrets they had for not believing us.

**Well educated and well connected Sri Lankan diplomats in Colombo and world capitals justify military occupation**

It will never happen again, we were told. The enlightened and informed International Community will never allow the Sri Lankan State to behave as it did during those bloodstained Chandrika- Kadirgama years, we were repeatedly reassured.

Thus we, the learned, well travelled, professional Tamil Diaspora who embodies globalisation felt reassured.

Not only did we trust our adopted nation's officials we also went to our people and tried to proselytise them. We were listened to patiently by our people. We did not like what they told us- their uncertainties about relying on others for their security and political rights. Surely they were being paranoid, we argued.

So who was right?

In 2005 the Sinhalese South had elected a hardliner as their leader and he has set up an administration manned and run by war mongers.

During the last twelve months the Tamil Northeast has been bombarded day in day out by Israeli supplied jet fighters, Chinese built artillery guns, Pakistani made multi barrel rockets and European made phosphorous bombs. The entire project is being funded by the Canadian, American, Australian, European and the Japanese governments.

During the last twelve months more than three thousand of our people, world class journalists, intellectuals, and students included, have been killed. More than two hundred thousand of our brethren have been internally displaced (again) and are living in dire conditions.

The main land supply route to Jaffna, the A-9 was closed by the military during the first week of August 2006. Since July, Vakarai in the east has been closed to all outside contacts apart from infrequent food aid vehicles.

Again, the actions of the Sri Lankan state are the same as before the peace talks. Again they represent an extreme level of control and repression of the Tamil population. The idea behind is consistent with successive Governments of Sri Lanka's efforts to consolidate its control of land and exerting pressure on Tamil society, its people and its institutions in order to pacify them.

The emergence of using food etc as a weapon of war once again reveals the immorality of the Sri Lankan state and its undemocratic and racist nature.

Thus, in short, the Sri Lankan State has not changed its colours. There is no difference between Madam Chandrika's 1996 and Mr Rajapakse's 2006 as far as the Tamils are concerned.

It has been argued that this isolation of Jaffna and Vakarai, violates the Fourth Geneva Convention, which provides various protections to populations living under occupation.

We have not seen any concrete action from the International Community regarding these human rights violations. Will there be any change in the International Community's behaviour in the coming months?

We doubt it.

# தமிழீழப் பேரரசும் தமிழ் மக்களும்

இளந்திரையன்
(ஒரு பேப்பருக்காக)

கார்த்திகை 27. இந்து சமுத்திரத்தின் ஒரு சிறு தீவை உலகமெங்கும் உற்று நோக்கும் பெருமை பெற்ற நாள். தம் உதிரத்தாலும் உயிராலும் சுதந்திரப் பயிரை உறுதியேற்றிய வீர மறவர்களின் தியாகத்தை நினைவு கூரும் நாள். அதே நேரம் இந்து சமுத்திரப் பிராந்திய அரசியல், மையங் கொண்டிருக்கும் அரசியல் சுழற்சியின் மையப் புள்ளியாக விளங்கும் தமிழீழத் தேசியப் போராட்டத்தின் தலைமைத்துவம் வாய்திறந்து எதிர்கால அரசியல்ப் போக்கின் திசையினை எதிர்வு கூறும் நாள்.

இதுவரை உலக நாடுகளின் எதிர்பார்ப்புக்கும் ஆலோசனைகளுக்கும் ஏற்ப இழுபட்டு சிங்களப் பேரின வாதிகளின் முகத்திரையைக் கிழித்து தக்க ஆதாரத்துடன் நிறுவுவதற்காக தமிழ்த் தேசியம் எடுத்த நடவடிக்கைகளும் விட்டுக் கொடுப்புகளும் முடிவுக்கு வந்த நாள். சிங்களப் பேரினவாதிகளின் தகிடுதத்த அரசியலையும் தமிழருக்கான தக்க தீர்வு எதுவுமற்ற அவர்களின் கையறு நிலையையும் தெளிவாக சர்வ தேசம் புரிந்து கொண்டிருக்கும் வேளையில் தமிழ்த் தேசியத்தின் பாதை எதுவென்பது வெகு தெளிவாக எடுத்துக் கூறப்பட்ட நாள்.

சுதந்திரத் தமிழீழப் பேரரசைத் தவிர வேறெதுவும் தமிழருக்கான அபிலாசைகளைப் பெற்றுத் தரமாட்டாது என்று நிறுவப்பட்ட நாள். சர்வதேசத்துக்கும் சிங்களக் கபட அரசியல் வாதிகளுக்கும் இனியும் தமிழ்த் தேசியம் ஏமாறத் தயாரில்லை என்பதையும் ஏமாற மாட்டாது என்பதையும் வெகு ஆணித் தரமாகக் கூறப்பட்ட நாள்.

சமாதானம் என்றும் அதன் நிமித்தமான பேச்சு வார்த்தை என்ற போர்வையிலும் விரயமாக்கப் பட்ட நாட்களையும் வீணே பறி கொடுத்த உயிர்களையும் நினைத்துப் பார்க்கின்றோம். சிங்களப் பேரினவாதிகளின் நஞ்சு கலந்த உள்ளக் கிடக்கையைத் தெளிவாக சர்வதேசம் புரிந்து கொள்ளும் வகையில் தெளிவு படுத்த எமக்கு நிறையவே சந்தர்ப்பங்களும் கிடைத்திருந்தன. உயர்பாதுகாப்பு வலையங்களை அகற்றுதல், சுனாமிப் பாதிப்பில் ஏற்பட்ட அனர்த்தங்களை மீளக்கட்டமைத்தல், பொருளாதாரத் தடைகளை அகற்றி சுமுக நிலமையைக் கொண்டு வருதல் போன்ற பல முன்முயற்சிகள் பற்றிய அனைத்துப் பேச்சு வார்த்தைகளும் சிங்களப் பேரின வாதத்தின் அழுகிய மன நிலையை வெளிக் கொண்டு வருவதற்கும் சர்வ தேசத்திற்கு மட்டுமல்லாது தமிழ் மக்களும் நன்கு புரிந்து கொள்ளும் வகையில் வெளிச்சத்திற்கு கொண்டு வரப் பெரிதும் உதவியது.

**தமிழ் மக்கள் வேறு விடுதலைப் புலிகள் வேறல்ல. தமிழ்த் தேசியத்தின் வெற்றியும் தமிழீழப் பேரரசின் மலர்வும் இதை நாம் புரிந்து கொள்வதிலேயே தங்கியுள்ளது.**

சிங்களப் பேரினவாதிகளுடன் சமாதானம் பற்றியும் பேச்சு வார்த்தையின் மூலம் தீர்வு கண்டு விடலாம் என்றும் அற்ப சொற்ப நம்பிக்கைகளுடன் இருந்த மிதவாதத் தமிழ்மக்களின் நம்பிக்கையையும் ஆட்டங்காணச் செய்ததுடன் உண்மை நிலையையும் புரிந்து கொள்ள இப் பேச்சுவார்த்தைகள் பெரிதும் உதவியிருக்கின்றன. ஈரினம் இரு நாடு என்பதே யதார்த்த பூர்வ சாத்தியம் என்பதை உலகுக்கு உரத்துச் சொல்லியிருக்கின்றது.

தமிழீழத் தேசியத் தலைவரின் உரை இந்தச் செய்தியை மிகவுரக்கச் சொல்லியிருக்கின்றது. இதுவரை செய்த விட்டுக் கொடுப்புகளும் சமாதானத்துக்கான முயற்சிகளும் விழலாய்ப் போனதையும் அதற்கான தமிழர் தரப்பின் இழப்புகளையும் விளக்கமாகவே தெளிபுபடுத்தியிருக்கின்றது.

இனியும் இவ்வாறான வெற்றி அளிக்காத வீண் வேலைகளில் காலத்தை போக்குவதற்கு தமிழ்த் தேசியம் தயாரில்லை என்பதையும் இது வெறும் ஓட்டு சேர்க்கும் அரசியல் அல்ல என்பதையும் சுதந்திரப் போராட்டம் என்பதையும் அதற்கான விலையைக் கொடுக்க தமிழ்த் தேசியம் தயாராகி விட்டது என்பதையும் தெளிபு படுத்தியுள்ளது.

இதற்கு மேலும் அகிம்சை பேசுவோருக்கும் அடிமை சேவகம் செய்ய விழைவோருக்கும் ஈழப் பேரரசில் இடம் இல்லை என்பதை தெளிபு படுத்தியுள்ளது. இன்று முதல் எமது ஒரே சிந்தனை சுதந்திர ஈழப் பேரரசு பற்றியே இருக்க வேண்டும் என்பது முடிந்த முடிபாக்கப் பட்டுள்ளது.

இங்கு காட்டிக் கொடுப்போருக்கும் கூட்டிக் கொடுப்போருக்கும் இடம் இல்லை இவர்களைத் தெருவில்ப் போட்டுத் தீயிட்டுக் கொளுத்த வேண்டும். இது ஒவ்வொரு உணர்வுள்ள தமிழனின் கடமை மட்டுமல்ல உரிமையும் கூட.

பட்டம் பதவிக்காக ஒட்டிக் கொண்டிருப் போருக்கும் பம்மாத்துக் காட்டி ஊரை ஏய்ப்பவருக்கும் இனி இங்கு வேலையில்லை. ஒரே சிந்தனை... அதையே செயல் கொண்டோருக்கே இங்கு வேலை காத்திருக்கின்றது.

புலி வீரர்கள் அனைவரும் கரும்புலியாவார், தமிழ் மக்கள் அனைவரும் புலி வீரர் ஆவார் என்பதையேமாவீரர் உரைஎடுத்துச்சொல்லியிருக் கின்றது. தமிழ் மக்கள் வேறு விடுதலைப் புலிகள் வேறல்ல. தமிழ்த்தேசியத்தின் வெற்றியும்தமிழீழப் பேரரசின் மலர்வும் இதை நாம் புரிந்து கொள்வதிலேயே தங்கியுள்ளது.

இதனை எந்தச் சக்தி எதிர்த்து நின்றாலும் அவர்கள் எம் எதிரிகளே. உள்நாட்டுச் சக்தியாயினும் வெளி நாட்டுச் சக்தியாயினும் அவர்கள் எதிர்க்கப் பட வேண்டியவர்களே. வன்மனம் கொண்ட படைப்பலம் கொண்ட அரசுகளை எதிர்த்து ஒரு கியூபாவோ இல்லை ஒரு வியற்நாமோ மட்டும் தான் தோன்றுமென்பது விதியல்ல. ஒரு ஈழப் பேரரசும் விரைவில் தோன்றும் என்பதுவும் உறுதி.

மன உறுதி கொண்ட மாந்தர் இருக்குமிடமெல்லாம் சுதந்திரமும் கூடவே இருக்கும். சின்னஞ் சிறு வியற்நாமோ சின்னஞ் சிறு கியூபாவோ மனிதர்களின் மனவுறுதியால் வெல்லப்பட்டதேயன்றி ஆயுதத்தாலோ அதிகாரத்தாலோ வெல்லப் பட்டதல்ல. அதேபோல இரக்கத்தால் தானம் கொடுக்கப் பட்டதுமல்ல.

எமக்கான தேவை எதுவென்பதை நாம் அறிந்திருக்கின்றோம். அதனை வெற்றி கொள்வதே எமது சிந்தனையில் இருக்க வேண்டும். அதுவே எப்போதும் எமது சிந்தனையாகவும் இருக்க வேண்டும்.

உலகில் எவ்விடயம் நிகழ்ந்தாலும் "ஒரு" பேப்பரில் தானாம் வாசிக்க வேண்டும்!

ஒரு பேப்பர்
ORU PAPER

Excerpts from the Morning Leader Editorial (29 November 2007):

## War or Peace: Pirapaharan is not clear

A few days or even weeks may pass to comprehend the full implications of LTTE Velupillai Pirapaharan's 'Heroes Day' speech on Monday. His speech was essentially one of prevarication — not saying exactly what was intended — and left his audience guessing except to renew his call for a separate state.

But will the LTTE continue with the peace process? He had said: "It is now clear that the Sinhala leaders will never put forward a just resolution to the Tamil question. Therefore we are not prepared to place our trust in the impossible and walk along the same old path."

Pirapaharan had also said: "President Rajapakse wants to occupy Tamil lands and then force an unacceptable solution on the Tamils. Due to this strategy of the Rajapakse regime 'the CFA had become defunct." The Rajapakse regime by openly advocating attacks on our positions 'has effectively buried the CFA.'

These statements indicate that the LTTE may breakaway from the six year peace process which Pirapaharan was severely critical of earlier in his speech but he did not spell out clearly that they were calling the peace process off.

When the LTTE leader says that the CFA is 'defunct' it once against tends towards ambiguity. 'Defunct' according to the dictionary meaning means: 'No longer existing or working incorrectly.' On the other hand for the past two months or so a full scale war has been on where hundreds of civilians and soldiers have been killed on land, air and sea.

**Rajapakse have to consider the options whether there is war or peace.**

Pirapaharan also said: "The uncompromising stand of Sinhala chauvinism has left us with no other option but an independent state for the people of Tamil Eelam. We therefore ask the international community and the countries of the world that respect justice to recognise our freedom struggle." In this statement too he does not specifically spell out any change of direction his movement may take but is the closest he comes to declaring his intention to pursue the goal of a separate state.

If the LTTE intends to call off the Ceasefire Agreement and thus walk out of the peace process according to the provisions of the CFA, the Sri Lanka Monitoring Mission will have to be given two weeks notice before such an event takes place.

In recent months the international community has been much concerned about the carnage that has been going on here. Thus, these nations as well as President Rajapakse have to consider the options whether there is war or peace.

The most concerned should be President Rajapakse as the head of state. He should take firm control of the situation and not let it slip into the control of the LTTE or other countries — be it the international community, UN or India. Of late we have witnessed too many foreign cooks dipping into the Sri Lankan soup.

Both President Rajapakse and Leader of the Opposition UNP Ranil Wickremesinghe are now in India. The President appears to be engaged in very parochial functions such as a Mayor's meeting and attending school prize givings while also meeting the Indian leaders. Wickremesinghe too is scheduled to meet Indian leaders and the agenda for these meetings have not been disclosed.

No doubt the enforcement of the Indo-Lanka agreement, its validity and the government's commitment to it will be issues that will surface in the discussions with the Indian leaders

The stark reality of South Indian compulsions bears down very heavily on the New Delhi government where Indo-Lanka relations are concerned. The government of Sonia Gandhi and Manmohan Singh is propped up with the support of South Indian parties many of whose leading MPs are sympathisers of the LTTE.

Thus President Rajapakse cannot expect much help from New Delhi and he should look to his own backyard for help. The UNP-SLFP, MoU which Pirapaharan has been severely critical of, is the only raft now available for him to cling to. For that he will have no option but to shift from his commitment to a unitary state to one that is federal. Otherwise, Rajapakse will be up the creek without a paddle.

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள்
யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
லண்டன்
சேயோன் - சாரங்கி
மணி - சுஜீத்
கனடா
தயா - பொன்.விவேகானந்தன்
இளந்திரையன்
பாரிஸ்
சிறி - வண்ணை
ஜேர்மனி
சபேசன் - சுதந்திரா
சுவிஸ்
ரேமன் - சந்துரு
பொறுப்பாசிரியர்
- கோபி -
விளம்பரம்
கௌரி - பகீரதி - பிரபு
அச்சு
ஊர்மிளா
வடிவமைப்பு
jasmine studio
முகப்பு வடிவமைப்பு
seven zero graphics
விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - கிரி
இணையத்தள வடிவமைப்பு
ரஜீவன்
தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்
நிதி – நிர்வாகம்
ஊர்மிளா - முருகானந்தன்
வழங்கல்
உதயகுமார்-ராஜு-கரன்

உங்கள் தொடர்புகட்கு:
தொலைபேசி (Tel)
லண்டன் 020 8640 4604
020 8286 9327
பாரிஸ் 01 7289 8165
சுவிஸ் 043 500 0277
தொலைநகல் (Fax)
020 8640 6972
ஆக்கங்கள் மற்றும்
அஞ்சல்வழித்தொடர்புகட்கு:
பணிமனை முகவரி
Oru Paper
45'B' Crusoe Road
Mitcham CR4 3LJ
Surrey
மின்னஞ்சல்:
info@orupaper.com
இணையம்:
www.orupaper.com

"Oru Paper" is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month. The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.

# சற்று மாறுதலுக்காக . . . .

## விடுதலை மூச்சை விலங்குகள் என் செய்யும்?

**சேயோன்**
*(ஒரு பேப்பர்)*

இன்றைக்கு ஒரு மகிழ்வு என்னை ஆட்கொள்கிறது தெரிகிறது. ஒரு கடினமான பயணம் நாம் மேற்கொள்ளப் போகிறோம் என்று. என்றாலும் இன்றைக்கு நான் மகிழ்ந்து கொண்டிருக்கின்றேன். என்ன காரணம்? பெரிதாகச் சொல்ல ஒன்றுமில்லை. சொல்வதானால் எங்களுடைய தேசியத் தலைவரின் மாவீரர் நாள் உரையையே சொல்ல வேண்டும்.

அவர் என்ன சொல்லி விட்டார்? போர்ப் பிரகடனம் ஒன்றைப் புரிந்தாரா? இல்லை.

அடிமையாக இருந்து பழக்கப்பட்ட எங்களுக்கு அது தெரியவில்லை.

தமிழீழம் என்று ஏதும் சொன்னாரா? இல்லவே இல்லை. அப்படி என்றால் அதில் சந்தோசப்பட என்ன இருக்கின்றது?

ஓம் இருக்கின்றது. இவ்வளவு நாளைய மாவீரர் நாள் உரையில் இம்முறை மாத்திரம்தான் நாம் நெகிழ்ந்து நிறைந்து போக வார்த்தைகள் இருந்தன.

தயவு செய்து குழம்ப வேண்டாம். இவ்வளவு நாளைய மாவீரர் நாள் உரையில் ஒன்றுமே இல்லை என்றல்ல, அல்லது தெளிவாக ஒன்றையும் குறிப்பிடவும் இல்லையென்றல்ல.

என்னவோ இந்த முறை மாவீரர் நாள் உரை எங்கள் மனக்கிடக்கையை வெளிப்படுத்தியது. நாம் என்ன நம்பினோமோ, நாம் என்ன விரும்பினோமோ அதை தலைவர் தன் வாயால் சொன்னார். எங்கள் எண்ணக்கிடக்கை எதுவோ அதை தலைவர் தன் வாயால் வெளிப்படுத்தினார்.

வன்னி வாகரை என்று விடுதலை பெற்ற பிரதேசம் ஆயினும் சரி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா என்று அன்னிய ஆக்கிரமிக்குட்பட்ட பிரதேசமாயினும் சரி, எல்லா மக்களும் இரு கரம் நீட்டி இதனை வரவேற்கிறார்கள். என்ன காரணம்? அடிமையாய் இருக்க ஆருக்கும் சம்மதமில்லை. சுதந்திரமாய் இருப்பதே சுகம் என்று எல்லோரும் சொல்கிறார்கள். ஓம் அது உண்மை.

அடிமையாக இருந்து பழக்கப்பட்ட எங்களுக்கு அது தெரியவில்லை. மிருகக்காட்சி சாலையில் (Zoo) கம்பி வேலிகளுக்குள்ளே காலாதி காலமாக இருந்த உயிரினம் எதற்குமே சுதந்திரம் என்ற சொல்லின் தாற்பரியம் எதுவும் புரிவதில்லை.

சுதந்திரம் என்பது சும்மா ஒரு சொல் அல்ல. மானுடர் யாவருக்கும் வேண்டிய வாழ்வு அது.

காட்டிலும் கடும் வெய்யிலிலும், வெட்ட வெளியிலும், நீண்ட காட்டிலும் இருந்தோரை ஓர் ஒடுங்கிய அறைக்குள் ஒடுக்கி வைத்திருந்தால் தான் சுதந்திரம் என்பதன் சொல்லை புரிந்து கொள்ள முடியும்.

சுதந்திரம் என்பது சும்மா ஒரு சொல் அல்ல; அது ஒரு நெடுமூச்சு. சுதந்திரமான காற்றை சுவாசிக்க கிடைத்த ஒரு பெருவெளி. ஆடவும், பாடவும், ஓடவும், நடக்கவும், திரியவும், கிடைத்த ஒரு வெளி. எவர் சொல்லுக்கும் கட்டுப்படாமல் ஏனென்ற கேள்விக்கு பதில் சொல்லாமல் திரியத்தக்க ஒரு வெளி.

**அடிமையாய் இருக்க ஆருக்கும் சம்மதமில்லை. சுதந்திரமாய் இருப்பதே சுகம் என்று எல்லோரும் சொல்கிறார்கள்.**

ஆருக்கு அஞ்ச வேண்டும்? எவருக்கு பயப்பிட வேண்டும்? நான் என்ன சாப்பிட வேண்டும் என்று எவர் தான் தீர்மானிக்க முடியும்?

எதைப் பார்க்க வேண்டும் எதைக் காணவேண்டும், எதை இரசிக்க வேண்டும் எதைக் கேட்க வேண்டும், எதை உண்டாக்க வேண்டும், எப்படிப் படுக்க வேண்டும் என்று தீர்மானிப்பவர் எவர்? கடவுளின் தீர்ப்பாக இருந்தாலும் அதை நாம் கைக்கொள்ள வேண்டுமா?

சுதந்திரமான தேசத்தில் நாம் இனி வாழப் போகிறோம்.

அந்தக் கணத்தில் நாம் சுதந்திரம் பற்றிச் சிந்திக்கின்றோம். சுதந்திரம் என்பது சும்மா ஒரு சொல் அல்ல. மானுடர் யாவருக்கும் வேண்டிய வாழ்வு அது. நம் பிறப்பினதும் வாழ்வினதும் அர்த்தமே அதுதான்.

**அடிமையாக இருந்து பழக்கப்பட்ட எங்களுக்கு அது தெரியவில்லை.**

நம் தலைவர் மாவீரர் நாள் உரையில் அதைத்தான் செப்பியிருக்கிறார். இது ஈழத் தமிழருக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம். சுதந்திரம் பற்றி, விடுதலை பற்றி நம் முன்னோர் சிலர் சிந்தித்தார்கள் செயற்படுத்தினார்கள் அது குறித்த அக்கறையை வெளிப்படுத்தினார்கள். அது காலம் கடந்தவை. வெற்றி பெற்றவை சில. தோல்வியுற்றவை பல.

ஆனால் நமது தலைவர் சொன்னதன் பின் அது வெற்றியை நோக்கி நகரும் என்ற நம்பிக்கையை நாம் பெறுகின்றோம். தலைவர் சும்மா சொல்பவர் அல்லர். அவர் சொல்லும் ஒவ்வொரு சொல்லுக்கும் பிரக்ஞை உண்டு. ஆழ்ந்த ஆர்த்தம் உண்டு. மழை பொழிந்த பிறகு மண் வளம் பெற்றது போல் அதற்கு வலிமை உண்டு. வளம் உண்டு.

எனக்கு மிக்க மகிழ்வு வருகிறது. சுதந்திரமான தேசத்தில் நாம் இனி வாழப் போகிறோம். சோற்றுக்கு இனி ஆய்க்கினை இல்லை சுகத்துக்கு இனி ஆய்க்கினை இல்லை

இழப்போம் நாம் இன்னும் கொஞ்சம். ஆயினும் பெறுவோம். நாம் மிக அதிகம். மிக மகிழ்கிறேன்.

என் கேள்வியும் என் தேடலும் ஒன்றுதான். என் பங்கு இதில் என்ன? நான் என்ன செய்ய வேண்டும்? சொல்லுங்கள் செய்கிறேன்.

# வாழ்வில் வெற்றி பெற...

## போதுமென்ற மனம்

**இராம K. நாதன்**
*(ஒரு பேப்பருக்காக)*

நாம் ஒரு நுகர்வோர் சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இதை ஆங்கிலத்தில் (Consumer Society) என்று கூறுவர். இந்தச் சமுதாயத்தில் இந்தப் 'பொருள் நுகர்வு' என்னும் வழக்கம் நாளுக்கு நாள் கூடிக்கொண்டே வருகின்றது. இன்று எம்மிடம் உள்ளதைவிட பெரிதான, விரைவான, அழகான மேலான பொருட்களைப் பெறுவதில் ஆர்வம் கொண்டுள்ளோம். எம்மிடையே உள்ள ரெலிவிஷனிலும் பார்க்க பெரிதான அல்லது புதுமையானதொன்றைத் தேடுகிறோம். அதைப்போலவே விரைவான கார், பெரிய வீடு, புதிய கைத்தொலைபேசி, சிறந்த கணனி என்று தேடிக் கொண்டேயிருக்கிறோம்.

எமது மனம் திருப்தியடைவதற்கு, பொருட்களின் மீதும் பண்டங்களின் மீதும் தங்கியிருப்பது அதை தற்காலிகமாக திருப்திப்படுத்துவதாக மட்டுமே அமைகிறது. ஏனெனில் நாளை இன்று இருப்பதிலும் பார்க்க மேலான, திறமையான பொருட்கள் வந்துவிடும்.

இது ஒருவருக்கு தொடர்ந்து திருப்தியின்மையையே அளிக்கும். இம் மாதிரியான ஆசையும் ஆர்வமும் ஒரு நிறைவு பெறாத திருப்தியையும், உணர்வையும் பேவே வழி வகுக்கும். இது தண்ணீர்த்தாகத்திற்கு உவர் நீரைக் குடிப்பதுபோன்றது. குறைப்பதற்குப் பதிலாக அது தாகத்தைக் கூட்டிவிடும்.

மனத்திருப்தியைப் பெறுவதற்கு உள்ள ஒரேவழி பொருட்களின் மீது உள்ள ஆசையையும் ஆர்வத்தையும் குறைத்துக்கொள்வது ஆகும். இது ஒரு திருப்திகரமான மனநிலையையும், பாதுகாப்பான உணர்வையும் வெளிப்படச் செய்து ஒரு தருமசிந்தனையை உருவாக்கும். இவ்வாறான திருப்தியைப் பெறுவதற்குச் சில வழிமுறைகளைக் கையாளலாம்.

1. உங்களிடம் உள்ள பொருட்களுடன் திருப்தியடையுங்கள். உங்களிடம் இல்லாத பொருட்களைத் தேடி அலைவதைக் கைவிடுங்கள். உங்களிலும் பார்க்க கீழ் நிலையிலுள்ள மக்களின் தேவைகளைப் பற்றி எண்ணிப் பாருங்கள். உணவின்றி, உடுக்க உடையின்றி அலையும் ஏழைகளின் தேவைகளுடன் உங்கள் தேவைகளை ஒப்பிட்டுப் பாருங்கள். உங்களிடம் உள்ள வசதிகளுக்காகவும், பொருட்களுக்காகவும் மனம் மகிழ்ந்த நன்றி சொல்லுங்கள்.

2. நீங்கள் ஏதாவது பழக்கங்களுக்கு அடிமையாகி (Addiction) இருந்தால், அவற்றைச் சிறிது சிறிதாகக் குறைக்க சங்கற்பம் எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு நாளைக்கு 10 சிகரெட் புகைப்பவராக இருந்தால் நாளொன்றிற்கு ஒரு சிகரெட்டால் குறைக்க முயலுங்கள். தினமும் மது அருந்துபவராக இருந்தால் சிறிது சிறிதாக நீங்கள் மது அருந்தும் இடைவெளியை ஒவ்வொரு நாளாக கூட்ட முயலுங்கள். நீங்கள் உடலாலும் மனதாலும் ஒரு பழக்கத்திற்கு அடிமையாகி இருக்கலாம். ஆனால் உங்கள் ஆத்மாவை அடிமையாக்கி விடாதீர்கள். ஆத்மாவின் சக்தி கொண்டு உங்கள் பழக்கங்களை வெல்ல முயலுங்கள்.

3. பணம், பொருள், புகழ் இவற்றின் நிலையாத் தன்மை பற்றி ஒவ்வொருநாளும் சிறிது நேரம் ஆழ்ந்து சிந்தியுங்கள். எல்லாப் பொருட்களுமே நிலையற்றவை. இன்று எம்மிடம் உள்ள எல்லாவற்றையுமே நாளை நாம் இழந்துவிடலாம். எனவே நிலையற்றவற்றைத் தேடி அலைதல் ஒரு பிரயோசனமற்ற செயல். மனத்திருப்தி பெற பணத்தையும், பொருட்களையும் நம்பியிருத்தல் அபாயகரமானது. பணம் போனதும் நிம்மதியும் போய்விடும். எனவே நிலையற்ற பொருட்களில் நம்பியிராது நிலையானவற்றில் தங்கியிருக்கப் பழகிக் கொள்ளுங்கள். அத்துடன் அந்த மகிழ்ச்சியை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

4. தானம் செய்வதை தாராளமனதுடன் செய்யுங்கள். மற்றையோர் பசியுடன் இருக்கும் போது உங்கள் உணவை ஒழித்து வையாதீர்கள். தானம் செய்வதற்கு நீங்கள் செல்வந்தனாக இருக்கவேண்டியதில்லை.

இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல் – குறள்

இருப்பதை மற்றையோருடன் பகிர்ந்து கொள்ளுங்கள். உபயோகிக்கும் பொருட்கள் கூடக் கூட கழிவுப் பொருட்களையும் கூட்டிக் கொண்டே போகின்றோம். உங்களுக்குத் தேவையில்லாவற்றை மற்றவர்க்குக் கொடுங்கள். தேவையற்றவற்றை உங்களுக்கு உரிமையாக்காதீர்கள்.

5. உங்களின் தேவைகளைச் சுருக்கிக் கொள்ளுங்கள். தேவைகளும் ஆசைகளும் அதிகரிக்க அதிகரிக்க திருப்தியும் குறைந்துவிடுகின்றது. பொருள்களைத் தேடுவதில் செலவு செய்யும் நேரத்தை உங்களுக்கு ஆத்மதிருப்தி தரும் காரியங்களில் செலவிடுங்கள். எவ்வளவு குறைவான பொருட்களை நாம் பாதுகாக்க வேண்டியுள்ளதோ, அவ்வளவு குறைவாக எமது பாதுகாப்பற்ற உணர்வும் குறைந்து போகிறது.


6. நீங்கள் பெறவேண்டுமாகில், நீங்களும் கொடுக்க வேண்டும். கொடுத்தால்தான் கிடைக்கும். அன்பைக் கொடுங்கள், அன்பு கிடைக்கும். சேவையைக் கொடுங்கள், மகிழ்ச்சி கிடைக்கும். பொருட்களைக் கொடுங்கள், திருப்தி கிடைக்கும்.

இங்கே கூறியவை ஒன்றும் புதிதான புரட்சிகரமான கருத்துக்களன்று. காலம் காலமாக எமது இலக்கியங்களும், சமய நூல்களும், புராணங்களும் இந்த உண்மையைத் தான் சொல்லிவந்துள்ளன. ஆனால் அவற்றை நாம் இடைக்கிடையே நினைவூட்டிப் பார்க்கவேண்டிய தேவையுள்ளது.

வாழ்க்கையில் முன்னேறவேண்டுமாகில், நிம்மதி வேண்டுமாகில், திருப்தி வேண்டுமாகில் சில உண்மைகளை நாம் ஞாபகப்படுத்தவேண்டி உள்ளது. இக்கட்டுரையின் நோக்கம் அவ்வளவே தான்.

# மாவீரர் தின உரை போர் பிரகடனமா?

வி. சபேசன்
(ஒரு பேப்பருக்காக)



பலத்த எதிர்பார்ப்புக்களை உருவாக்கியிருந்த தேசியத் தலைவரின் மாவீரர் தின உரை முடிந்து விட்டது. மாவீரர் தின உரை பற்றி பலவாறான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. யுத்தப் பிரகடனம் செய்துள்ளார் என்றும், தமிழீழப் பிரகடனம் செய்துள்ளார் என்றும் கருத்துக்கள் பரவி உள்ளன.

தமிழீழத் தனியரசை நிறுவுவது என்று தீர்க்கமாக முடிவு செய்துள்ளதாக தேசியத் தலைவர் தனது மாவீரர் தின உரையில் அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பு உலகத் தமிழர்களின் மத்தியில் மகிழ்ச்சியையும், சிங்கள மற்றும் அதன் ஆதரவு சக்திகளின் மத்தியில் அதிர்ச்சியையும் தோற்றுவித்துள்ளது.

ஆனால் இந்த அறிவிப்பை சிலர் தமிழீழப் பிரகடனம் என்று பொருள் கொள்வது தவறான ஒன்றாகும். தமிழீழத் தனியரசுக்கான போரட்டம் வேறு. தமிழீழப் பிரகடனம் வேறு. தமிழீழத் தனியரசுக்கான போராட்டம் வெற்றி பெற்ற பின்னரே, தமிழீழம் பிரகடனப்படுத்தப்படும்.

விடுதலைப் புலிகள் பல வருடங்களாக தமிழீழத் தனியரசை நிறுவுவதற்கான போராட்டத்தை நடத்தி வருகிறார்கள். கடந்த ஆறு வருடங்கள் சர்வதேச சமூகத்தின் வேண்டுகோளை ஏற்று தமிழீழக் கோரிக்கையை வலியுறுத்தாது, மாற்றுத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார்கள். இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது தமிழீழ இலட்சியத்தை கைவிட்டு விட்டார்களோ என்ற சந்தேகம் வருகின்ற அளவிற்கு விடுதலைப்புலிகள் விட்டுக் கொடுப்போடு நடந்து கொண்டார்கள்.

## நாடு கேட்டவர்களுக்கு ஒரு வீதியைக் கூட சிறிலங்கா அரசு தர மறுத்து விட்டது.

விடுதலைப் புலிகள் சுயாட்சி முறை பற்றி பரிசீலிப்பதற்கு தயாராக இருந்தார்கள். அதிலும் உள்ளக சுயாட்சி முறை பற்றியும் பேச்சுக்கள் வந்தன. இவ்வாறு உள்ளக சுயாட்சிக்கு உலகில் வேறு உதாரணங்கள் இல்லாத போதும், புதிதாக ஒரு முறையும் உருவாக்குவதற்கும் அவர்கள் தயாராக இருந்தார்கள். பின்பு ஒஸ்லோவில் சமஸ்டி ஆட்சி முறைக்குள் தீர்வு காணுகின்ற யோசனைக்கும் கொள்கை அளவில் இணங்கினார்கள். கடைசியில் விடுதலைப்புலிகள் தாமாகவே தன்னாட்சி அதிகார சபை வரைவை உருவாக்கி, அதை ஒரு இடைக்கால தீர்வாக முன் வைத்தார்கள். தமிழீழத் தனியரசை வலியுறுத்திய விடுதலைப் புலிகள் மிகவும் இறங்கி வந்து சிறிலங்கா அரசோடு பேசத் தயாராக இருந்தார்கள் என்பதற்கு இவைகள் சான்றுகளாக இருக்கின்றன.

ஆனால் சிறிலங்கா அரசு இவைகளை உதாசீனம் செய்தது. மீண்டும் மீண்டும் ஒற்றையாட்சி என்று கோசத்தை தூக்கிப்பிடித்தது. மேற்குலக நாடுகளும் 'ஐக்கிய இலங்கை' என்று பின்பாட்டுப் பாடின.

## தமிழீழத் தனியரசு பற்றிய அறிவிப்புக்கு இதுவரை பெரும்பாலான நாடுகள் எவ்வித கருத்தையும் தெரிவிக்காது மௌனம் சாதிப்பதும் சிறிலங்கா அரசுக்கு கலக்கத்தையே கொடுக்கும்.

அத்துடன் சிறிலங்கா அரசு ஆக்கிரமிப்பு யுத்தத்தையும் அடக்கு முறையையும் கட்டவிழ்த்து விட்டது. ஏ9 பாதையைமூடி ஆறு இலட்சம் மக்களை பட்டினி போட்டது. நாடு கேட்டவர்களுக்கு ஒரு வீதியைக் கூட சிறிலங்கா அரசு தர மறுத்து விட்டது. போதுமானதை விட அதிகமான கால அவகாசம் சிறிலங்கா அரசுக்கு வழங்கிய விடுதலைப்புலிகள் மீண்டும் தனியரசுக்கான போராட்டத்தை ஆரம்பிக்க முடிவு எடுத்துள்ளார்கள். இதன் மூலம் தமிழ் மக்களின் பிரச்சனைக்கான அரசியல் தீர்வையும் விடுதலைப் புலிகள் மீண்டும் ஒரு முறை உலகத்தின் முன்பு வைத்துள்ளார்கள். இந்த தீர்வுக்கு ஆதரவு தரும்படி உலக நாடுகளையும், உலகத் தமிழினத்தையும் விடுதலைப்புலிகள் கோரி நிற்கிறார்கள்.

தமிழீழத் தனியரசுக்கான போராட்ட அறிவிப்பை சிலர் போர் பிரகடனமாகவும் பார்க்கிறார்கள். இனவாத சிங்கள ஊடகங்கள் தேசியத் தலைவரின் அறிக்கை பற்றிய செய்தியை 'பிரபாகரன் போர் பிரகடனம் செய்துள்ளார்' என்றே எழுதின. தமிழ் மக்கள் மத்தியிலும் சிலரிடம் அவ்வாறான சிந்தனை உண்டு. இந்த இடத்தில் ஒன்றை சுட்டிக்காட்ட வேண்டும். போராட்டம் வேறு. போர் வேறு. போர் என்பது ஒரு போராட்ட வடிவம் மாத்திரமே. பல வகையான போராட்ட வடிவங்கள் உள்ளன. விடுதலைப்புலிகள் தமிழீழத் தனியரசுக்கான போராட்டத்தை ராஜதந்திர முறைகளிலும் மேற் கொள்ள முடியும்.

## போர் திட்டம் இருப்பதையும், போருக்கான பலத்தோடு இருப்பதையும் தேசியத் தலைவர் நேரடியாகவும் மறைமுகமாகவும் சொல்லவே செய்கிறார்.

தமிழீழத் தனியரசுக்கான போராட்ட அறிவிப்பை போர் பிரகடனம் என்றோ, விடுதலைப்புலிகள் உடனடியாக முழு அளவிலான போரை ஆரம்பிக்க போகிறார்கள் என்றோ அர்த்தப்படுத்திக் கொள்ளக் கூடாது என்பதற்காகவே இக் கருத்து இங்கு சொல்லப்படுகிறது. மற்றையபடி போரின் மூலமே சிறிலங்கா அரசை பணிய வைக்க முடியும் என்பதில் மாற்றுக் கருத்து ஏதும் இல்லை.

தேசியத் தலைவர் போருக்கான அறிவிப்பை செய்யவில்லையாயினும், போர் திட்டம் இருப்பதையும், போருக்கான பலத்தோடு இருப்பதையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் சொல்லவே செய்கிறார்.

நிலவதிர்வுப் பேரலைகள் தாக்கியபோது ஒரு தடவையும் மகிந்த ஜனாதிபதியாகப் பதவியேற்ற போது இன்னொரு தடவையுமாக இரண்டு தடவைகள் எமது போர்த்திட்டங்களைத் தற்காலிகமாகத் தள்ளிப்போட்டு சமாதானத்திற்கு மீண்டும் மீண்டும் சந்தர்ப்பம் வழங்கியிருக்கிறோம்' என்று தேசியத் தலைவர் சொல்கிறார்.

'இந்த ஐந்து ஆண்டுக்கால அமைதி முயற்சியில் இந்த அக்கினிப் பரீட்சையில் நாம் எரிந்து போய்விடவில்லை, அழிந்து போய்விடவுமில்லை. மாறாக, நாம் இந்த வேள்வித் தீயிற் புடம் போடப் பட்டு புதிய புலிகளாகப் புதுப்பொலிவுடன் எழுந்து நிற்கிறோம். தமிழரின் பலமும் வளமும் ஒன்று குவிந்து பலம் மிக்க வலு மிக்க ஒரு பராக்கிரமச் சக்தியாக எழுந்து நிற்கிறோம்' என்றும் தேசியத் தலைவர் பிரகடனம் செய்கிறார்.

போருக்கான தயார்படுத்தலோடு விடுதலைப் புலிகள் இருக்கிறார்கள். போர்திட்டங்களை இரண்டுமுறை தள்ளிவைத்தது கூட தற்காலிகமாக மட்டுமே. ஆகவே போர் திட்டத்தை விடுதலைப் புலிகள் மீண்டும் ஒரு முறை தள்ளி வைப்பது என்பது, சிறிலங்கா அரசின் கைகளிலேயே இருக்கிறது.

இதை உலக நாடுகளுக்கு தேசியத் தலைவர் மாவீரர் தின உரையின் மூலம் உணர்த்துகிறார். இந்த மாவீரர் தின உரை முற்று முழுதாக உலக நாடுகளுக்கும் உலகத் தமிழினத்திற்கும் சொல்லப்பட்ட செய்தியாகத்தான் இருக்கிறது. விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு இனி எதுவும் இல்லை என்பதை உலக நாடுகளுக்கு தேசியத் தலைவர் தெளிவாக சொல்லி விட்டார். தமிழினத்தின் பிரச்சனைக்கு இறுதித் தீர்வையும் வலியுறுத்தி உள்ளார்.

## போர் திட்டம் இருப்பதையும், போருக்கான பலத்தோடு இருப்பதையும் தேசியத் தலைவர் நேரடியாகவும் மறைமுகமாகவும் சொல்லவே செய்கிறார்.

இப்பொழுது உலகநாடுகள் தீர்க்கமான ஒரு முடிவுக்கு வரவேண்டிய நிலையில் உள்ளன. உலக நாடுகளுக்கு சிறிலங்கா அரசின் மீது கடும் அழுத்தங்களை பிரயோகிப்பதைத் தவிர வேறு வழியில்லை. இதுவரை மறைமுகமாக பிரயோகிக்கப்பட்ட அழுத்தங்கள் தற்பொழுது வெளிப்படையாக பிரயோக்கிப்பட ஆரம்பித்திருப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. ஐநா மனிதஉரிமை மாநாட்டில் சிறிலங்கா அரசு மீது தெரிவிக்கப்பட்ட கண்டனங்களையும் அவ்வாறு நோக்கலாம்.

## தமிழீழத் தனியரசு பற்றிய அறிவிப்புக்கு இதுவரை பெரும்பாலான நாடுகள் எவ்வித கருத்தையும் தெரிவிக்காது மௌனம் சாதிப்பதும் சிறிலங்கா அரசுக்கு கலக்கத்தையே கொடுக்கும்.

அத்துடன் தமிழீழத் தனியரசு பற்றிய அறிவிப்புக்கு இதுவரை பெரும்பாலான நாடுகள் எவ்வித கருத்தையும் தெரிவிக்காது மௌனம் சாதிப்பதும் சிறிலங்கா அரசுக்கு கலக்கத்தையே கொடுக்கும். இவ்வாறான அழுத்தங்கள் மூலம் சிறிலங்கா அரசை பணிய வைத்து பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு உலகநாடுகள் முனைகின்றன.

மீண்டும் பேச்சுவார்த்கைள் நடப்பதற்கு சாத்தியங்கள் உள்ளதா என்ற கேள்வி இந்த நேரத்தில் எழக்கூடும். இந்த மாவீரர் தின உரையை அடுத்து புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்தும் கேள்வி எழுப்பப்படுகிறது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இருந்து விடுதலைப்புலிகள் விலகி விட்டார்களா என்றும் கேட்கப்படுகிறது. விடுதலைப்புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இருந்து விலகி விடவில்லை. சிறிலங்கா அரசு விலகி விட்டது என்பதைத்தான் மாவீரர் தின உரை சுட்டிக்காட்டுகிறது.

ஆகவே உலகநாடுகள் சிறிலங்கா அரசை புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு உடனடியாக உயிர் கொடுக்கச் செய்து, அதை இயங்கச் செய்வதோடு தமிழ் மக்களினதும் மனிதாபிமானப் பிரச்சனைகளுக்கும் நியாயமான முறையில் தீர்வு காணச் செய்யுமானால், விடுதலைப்புலிகள் மீண்டும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதற்கு சாத்தியங்கள் உண்டு. அவ்வாறு விடுதலைப் புலிகள் விரைவாக மீண்டும் பேச்சுவார்த்தை மேசையில் அமர்வது சிறிலங்கா அரசுக்கே அதிக சாதகமானது. பேச்சுவார்த்தைகள் தமிழீழத் தனியரசுக்கான போராட்ட அறிவிப்பை வலுவிழக்கச் செய்யும்.

ஆனால் சிங்களப் பேரினவாதம் ஒன்றும் அவ்வளவு புத்திசாலித்தனம் மிக்கது இல்லை. இதை தமிழ் மக்களின் அதிர்ஸ்டம் என்றும் சொல்லலாம். சிங்கள பேரினவாதம் தன்னுடைய முரட்டுத்தனமான நடவடிக்கையால், தானாகவே தமிழீழத் தனியரசு அமைவதற்கு வழிகோலும்.

*விரும்பி*

*எடுத்த முடிவல்ல!*

*வீணர் வீம்பால்*

*எடுத்த முடிவு!*

ஒரு பேப்பர்
ORU PAPER

# தைப்பொங்கலை முன்னிட்டு மாபெரும் இன்னிசை நிகழ்ச்சியாம்!

தைப்பொங்கலுக்கு இன்னிசை நிகழ்ச்சி ஒண்டு நடக்கப் போகிறதாம். கறோ பிரதேசத்தில வெண்புறா அதை நடத்துகிறதாம். எனக்கு விளங்கவில்லை ஏன் அதை இப்போ நடத்துகிறார்கள். யாழில எங்கட சனம் சாப்பிட வழியில்லாமல் இருக்குது இங்க என்னத்துக்கு இப்பிடியொரு களியாட்டம். சத்தியமாச் சொல்லுறன் எனக்கு சினிமாப் பாட்டு எண்டால் உயிர். ஆனா இந்த நேரத்தில அதுக்கு என்ன அவசரம். கலைஞர்களை மதிக்கிறேன் அவர்களில் எந்த விதமான வருத்தமும் இல்லை. ஆனால் இங்க இருக்கிற ஆக்களுக்கு அப்படி என்ன பிரச்சனை. யார் அழுதது இன்னிசை நிகழ்ச்சி வையுங்கோ எண்டு?.

சனம் இப்பதான் தலைவரின்ர உரையால கொஞ்சம் கூடிய அக்கறையோட ஊர் விசயங்களில ஆர்வமா நிக்குது. இதை அப்பிடியே மழுங்கடிக்கிறதுக்கே இந்த இன்னிசை நிகழ்ச்சி!!?. முட்டாள்! உனக்கென்ன தெரியுமெண்டு கத்துறாய். இந்த நிகழ்ச்சி மூலம் பணம் சேகரித்துத் தாயகத்துக்கு அனுப்பப் போகிறாங்கள் எண்டு சில அறிவுஜீவிகள் சொல்ல வருவினம்.

ஐயா! ஊரில கஷ்டம் எண்டால் பாட்டுப் படிச்சுத்தான் காசு வாங்கோணுமே? வாற காசு எப்பிடி எல்லாம் செலவாகும் தெரியுமே.

இப்ப பாத்திங்கள் எண்டால்! வாற கலைஞர்களுக்கு குடுக்க வேண்டிய ஒரு தொகை! நிகழ்ச்சியில் பாடுற துக்கு இந்தியாவிலிருந்து இங்கு வாறதுக்கு ஒரு தொகை வெறும் நாலு பிரதான பாடகர்கள் வருகிறார்கள் என்றால் அவர்களுடன் சில பரிவாரங்கள் வருவார்கள். அனேகமான வேளைகளில் அவர்களது இசைக்கலைஞர்கள். இவர்களுக்கெல்லாம் ஒரு பெருந் தொகை. , வந்திறங்கிய பின்னர் அவர்களுக்கான பாதுகாப்பு. அவர்களை எங்கள் வீடுகளில் தங்கவைக்க முடியாது. அதனால் அவர்களுக்கு என்றொரு ஹொட்டேல் அதற்கான அடுத்த பெரும் செலவு. பின்னர் அவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு நாடு திரும்பும் வரையுள்ள அனைத்து செலவுகள். இதற்குள் பிரதானமாக ஹொட்டேல் பிரயாணம் உணவு போன்றவைகள் அடங்கும். அந்தக் கலைஞர்களை அழகாக அவர்கள் மனம் கோணாதவாறு கவனிக்க வேண்டிய பொறுப்பு என்று ஒரு பிரச்சனை. இப்பிடி எங்களுக்கு எவ்வளவு பிரச்சனைகள் இருக்கிறது.

இத்தனைக்கும் நான் நிகழ்ச்சி நடக்கிற மண்டபத்தைப் பற்றிக் கதைக்கவே இல்லை அதுக்கு எண்டு ஒரு பெருந்தொகை. இவ்வளவு செலவுகளின் பின் எங்களிடம் எவ்வளவு மிஞ்சப் போகிறது எண்டு அதை ஊருக்கு அனுப்ப பேகுறோம்?.

முழு நிகழ்ச்சிக்கான செலவும் குறைந்தது எத்தனை ஆயிரம் பவுண்ஸ்கள்? அத்தனையும் யாரிடம் இருந்து பெற்று அவர்களுக்காக செலவிடப்படுகிறது. எங்களிடம் இருந்துதானே! அதை நேரே எங்களிடம் வாங்கி நேரே தாயகத்துக்கு அனுப்பவேண்டியது தானே!

என்னட்டக் கேட்டால் ஒரு நாளும் தேவையில்லாத பெரும் செலவுகள் செய்து காசு சேர்க்கிறதில எனக்கு ஆர்வம் இல்லை. காசு அனுப்ப வேணும் எண்டால் காரணத்தைச் சொல்லியே சேகரிப்போமே. சுனாமிக்கு நாங்க றோட்டில நிக்கேலயா? காசு கிடைக் கேல்லையா? அதுவும் அது பொதுவான பிரச்சனை! இப்பிடிப் பாப்பம்.

ஏ9 பாதை நிலவரம் பற்றி இங்க ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்திறம். அது சம்பந்தமான நிகழ்வுகள் நடத்திறம் எங்களுக்குள்ளே காசு சேர்ப்பம். வெளியில சேக்கிறதா இல்லையா நிலைமையைப் பாப்பம். செய்வம். இப்பிடி திட்டங்களைப் போட்டு பிரச்சனைகளை அணுகிறத விட்டுப் போட்டு எதுக்கெடுத்தாலும் காசைக் கரியாக்கி ஒரு இசை நிகழ்ச்சி. ஏனய்யா மக்களின்ர மனத்தை மயக்கி மழுங்கடிக்கிறியள்! ஐயோ விடுங்கய்யா சனம் பாவம் எல்லே-!!!

*- உடையான்*

# பிறன் மனை நயந்த படுபாவி தான்

கடந்த இதழ்களில் வெளிவந்த இராமாயணம் பற்றிய சர்ச்சை தொடர்பாய் நானறிந்த சிலவற்றை தருகிறேன். இராமர் சீதை லட்சுமணரோடு தண்டகாரண்ய வனத்தில் இருந்தபோது அங்கே சூர்ப்பனகை அரக்கியாக காட்சியளிக்கிறாள். இராமனைக் கண்டதும் காமத்தால் அவனை அடையபலவழிகளிலும்முற்படுகிறாள். அவன் மறுக்க சீதையை கடத்த முற்படுகிறாள். அதிலே தான் லட்சுமணன் மூக்கையும் காதையும் வெட்டுகிறான்.

பின்பு சூர்ப்பனகை வந்து திட்டம் தீட்டி இராவணனை தூண்டி விடுகிறாள். அங்கே சூர்ப்பனகை கூறியது சீதையை இராவணனுக்காக தூக்கமுற்பட்டபோது தான் அங்கவீனமானதென்று. உடனே புறப்பட்டான் சீதையை கடத்த என்று திட்டமும் வகுத்தான். சீதையிடம் சென்று தன் காமத்தை வெளிப்படுத்தினான். அவள் மறுத்தாள். உடனே உருமாறி சீதையைத் தொட்டு கடத்தினான். இப்படி வால்மீகி எழுத கம்பர் அதனை மாற்றி தரையோடு சேர்த்து தூக்கி வந்ததாக எழுதிவிட்டார். அதே மாதிரி துளசி இராமாயணத்திலும் மாற்றி எழுதப்பட்டிருக்கிறது. அது தற்கால பெண்களுக்காக மாற்றப் பட்டது. அடுத்து சொல்ல வருவது இராவணன் கெட்டவனா? நல்லவனா? என்பது. தனது சகோதரனான குபேரனை விரட்டியடித்து விட்டு இலங்கையை ஆட்சி செய்தானே நல்லவனா? அவன் சீதையைத் தீண்டாமல் இருந்தது எதற்காகவென்றால் தான் நேசிப்பது போல் சீதையும் தன்னை நேசிக்கும் வரை காவல் இருந்தான். அனுமான் இராவணனது அந்தப்புரத்தினுள் நுழைந்தபோது இரவு வேளை இராவணனைச் சுற்றி எத்தனை அந்தப்புர ஸ்திரீகள் சூழ இருந்து இராவணனது காமத்தை தணித்துக் கொண்டிருந்தார்கள். இராவணன் சீதைக்கு கூறியதே என் மனைவிமார்களுக்கு நீ அரசியாக இரு என்று தானே கேட்டான். அந்த மனைவிமார்களுக்காக ஒரு பூந்தோட்டமே கட்டி வைத்திருந்தான்.

அதனைத் தானே அனுமான் அழித்தான். இராவணனை எத்தனை நல்ல அரக்கியர்கள் போர் புரியாதே என்று தடுத்தார்கள். அவன் கேட்டானா? சீதையின் மேல் ஆசை கொள்ளாதே நீ அழிவாய் என்று எத்தனை அவனது சகோதரர்கள் தடுத்தார்கள். கேட்டானா? விபீஷணன் (இராவணனின் தம்பி) இவனது புத்தி கெட்ட ஆசை பிடியாததினால் தானே இராமனோடு சேர்ந்தான். இராவணன் பிரம்மாவின் வம்சத்தில் பிறந்தவன் இப்படி செய்யலாமா? அரக்கியர்கள் தமிழர் என்று வால்மீகி கூறவில்லை. அது பிற்காலத்தில் தான் கூறப்பட்டது. ஆகவே இராவணன் 'பிறன் மனை நயந்த படுபாவி' தான்.

*- கிளியின் கண் ஊரான்*

# லா சப்பலில் லைலா

எல்லாருக்கும் வணக்கம்

என்ன இது போன தடைவை லா போஸ்ரிலை கடிதம் போட்டவா அதுக்கிடையிலை லாசப்பல் வீதிக்கு வந்திட்டா எண்டு யோசிக்காதையுங்கோ நான் போஸ்ரிலை தான் கடிதம் போட இருந்தனான் உந்த ஒரு பேப்பர் காரர்தான் சொல்லிச்சினம் பாவம் நீயே சோமாசிலை(உதவிபணம்) இருக்கிறனீ எதுக்கு கடிதத்திற்கு முத்திரை ஒட்டி வீண் செலவு அதாலை கடிதத்தை எழுதி லாசப்பலிலை எங்கையாவது போட்டு விடு அது எங்களிற்கு வரும் எண்டிச்சினம்.

லாசப்பலிலை எங்கை போடுறது? றோட்டிலையே எண்டு கேட்டன் இல்லை எங்கையாவது ஒரு தமிழரின்ரை கடையிலை குடுத்து விடு எண்டிச்சினம் நானும் பின்னை கடிதத்தை எழுதிப் போட்டு காய்கறி வாங்க லாசப்பல் இருக்கிற ஒரு கடைக்குப் போன இடத்திலை அவையிட்டை குடுத்துவிட்டன் கிடைக்கும் எண்டு நினைக்கிறன் படிச்சு பாருங்கோ

இந்த மாதம் மாவீரர் நாள் பிரான்சிலை பத்திற்கும் மேற்பட்ட இடத்திலை 27ந்திகதி எல்லா இடமும் ஒரே நேரத்திலை சிறப்பா நடந்தது. ஒரு சில இடங்களிலை இலங்கை அரசிட்டை பிச்சை எடுக்கிற சிலபேர் அதை குழப்ப நினைச்சாலும் தமிழ் சனத்தின்றை உறுதியான ஆதரவாலை அந்த தடைகளை எல்லாம் தாண்டி நல்லபடியா நடந்து முடிஞ்சுது. அதே நேரம் மாவீரர்களின்ரை பெற்றோர்களும் கௌரவிக்க பட்டினம்.

தமிழரை கண்டபடி சுட்டுதள்ளி பட்டினிபோட்டாவது பணியவைக்கலாம் எண்டு நினைச்ச இலங்கை அரசுக்கு தலைவரின்ரை மாவீரர் தின உரை நல்லா உறைச்சிருக்கும் எண்டு நினைக்கிறன்.ஆனாலும் பாருங்கோ உந்த இலங்கை அமைச்சர் மாரின்ரை வீர பேச்செண்டா வாய் கொழுப்பு சீலையாலை வடியிதெண்டமாதிரி அதுக்கு குறையில்லை.

இப்பிடித்தான் 80 களிலை யாழ்ப்பாணத்திலை ஆரியபெருமா என்டொரு சிங்கள பிரிகேடியர் சொன்னவர் தான் பலாலியிலை நிண்டு பாத்தால் யாழ்ப்பாணம் கோட்டை தெரியவேணும் அதுக்கேற்ற மாதிரி தமிழரின்ரை வீடுகள் சொத்துகளை தரைமட்டமாக்க சொல்லி. அப்பசில போராளிகள் யோசிச்சினம் ஆரியபெருமா ஏன் கோட்டையை பாக்க இவ்வளவு கஸ்ரபட வேணும் சுலபமா பாக்க வழிசெய்யலாம் எண்டு நினைச்சு அவர்வந்த வாகனத்துக்கு சக்கையை (கண்ணிவெடி) வைச்சு மேலைகிழப்பி விட்டினம் ஆரியபெருமாக்கு கட்டாயம் கோட்டை வடிவா தெரிஞ்சிருக்கும் ஆனால் என்ன அவர் பாத்ததை கீழைவந்து சொல்லவேயில்லை. அப்பிடியே போட்டார். இப்ப அவர்பாக்க ஆசைபட்ட கோட்டையும் இல்லை.

இப்பிடி எத்தினை பேரை கிழப்பினாலும் உவங்களுக்கு புத்தி வராது. சரி நான் ஏதோ எழுதிக்கொண்டிருக்கிறன். இந்த மாதம் மாவீரர் தினத்தாலை பிரான்சிலை வேறை நிகழ்வுகளும் ஒண்டும் பெரிசா நடக்கேல்லை ஏதாவது நடந்தா தானே எனக்கும் விடுப்பு கிடைக்கும் அதாலை அடுத்த தடைவை கன விடுப்போடை வாறன்

கடைசியா ஒண்டு இங்கை பிரான்சிலை எல்லா பல்பொருள் சந்தைகளிலையும்(சுப்பர்மாக்கற்) நீங்கள் சாமான் வாங்கேக்கை அதை போட ஒசிலை தாற பிளாஸ்ரிக் பைகளை பிரான்ஸ் சுற்று சூழல் அமைச்சு தடைசெய்து போட்டுது அதாலை நீங்கள் இனிமேல் சாமான் வாங்க போகேக்கை கட்டாயம் மறக்காமல் கையிலை பையோடை போங்கோ அல்லது ஒவ்வொருக்காலும் என்னை மாதிரி ஒரு யுறோக்கு ஒரு பை வாங்க வேண்டி வரும்

நன்றி

*- அன்புடன் லைலா.*

"Please respond to our forum"

www.orupaper.com/forums

**TRICO** - *The name you can trust*

**Door to Door Service**
Western province by air & Sea
Call for details Regular Shipping service
At competitive Prices to:
***Australia, Canada, Chennai, Bangalore, Cochin and Calcutta***

*Two more collection points:*
***Glasgow and South West London***
Regular weekly savings means the fastest delivery to Sri Lanka.

உங்கள் வசதிக்காக **Tooting** இல்
**Collecting point!**

*Contact* **Vimal**
Tel: **020 8672 5551**
Fax: **020 8889 5445**
Email: tricont@btclick.com

**A - Lanka**
*171 Tooting High Street,*
*London SW17*

**HOT NEWS**
Extra Receiving depot in South - London SW17
You can collect packing cases and deliver packed goods to SW17.
Save your money on transport

***Trico International Shipping Ltd.***
Unit 4,
Bittern Place,
Coburg Road,
Wood Green, London N22 6TP

# அவைக்காற்றுக் கழகத்தின் 5 நாடகங்கள்



தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகத்தின் நாடகவிழா நவம்பர் 17ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை Ruislip - Winston Churchil மண்டபத்தில் நடைபெற்றது.

அண்மையில் மரணித்த இலக்கியவாதி திரு. A.J.கனகரத்னா அன்றய நிகழ்வில் நினைவு கூரப் பட்டதோடு அவரால் மொழிமாற்றம் செய்யப்பட்ட 'திக்குத் தெரியாத காட்டில்' நாடகம் முதலாவதாக அரங்கேற்றப்பட்டது. இருவர் மட்டுமே பங்கேற்ற இக்குறியிட்டு நாடகத்தில் சந்தோஸ் ஆனந்தன் திறம்பட நடித்திருந்தார். அதனை தொடர்ந்து இளையவர்கள் பங்கேற்றுக் கொண்ட 'மலைகள் வழிமறித்தால்' என்ற இசை நாடகம் நடைபெற்றது. பேராசிரியர் சிவசேகரத்தால் மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட சீன தேசத்து நன்நெறிக் கதையிது. இந்நாடகத்தில் தோன்றிய அனைத்து இளையவர்களும் அவைக்காற்று கலைக்கழகத்தின் நாடகப் பள்ளி மாணவர்கள். எல்லோருமே சிறப்பாக செய்திருந்தாலும் ஆச்சியாக நடித்த பெண்ணை குறிப்பிட்டுச் சொல்லவேண்டும். அரங்கில் இசைக்கப்பட்ட அர்த்தமுள்ள இனிய தமிழ்ப்பாடல்கள் இந்நாடகத்துக்கு மெருகேற்றின. சத்தியமூர்த்தி, ஆனந்தராணி பாலேந்திரா, தர்சினி சிவசுதன், விஜயகுமாரி பரமகுமாரன், சிவசுதன், வாசுதேவன் ஆகியோர் பாடல்களைப் பாட, முத்து சிவராஜா, சத்தியேந்திரன், வேந்தன் ஆகியோர் இசை வழங்கினர்.

பார்வையாளர்களை குதூகலத்தில் ஆழ்த்திய நாடகம் 'அவசரக்காரர்கள்' இரட்டை அர்த்த வசனங்கள், அங்க நெளிப்புக்கள் எதுவுமின்றி சாதாரணமாக வாழ்வில் இடம்பெறும் சிறு விடயம் ஒன்றை கருப்பொருளாகக் கொண்டு மாவை நித்தியானந்தன் எழுதிய இந்த நகைச்சுவை நாடகத்தில் பாலேந்திரா, வாசுதேவன், ஆனந்தராணி ஆகியோர் நடித்தனர். மேடையில் ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பு வழங்கப்பட்டாலும் மொழி தெரியாமல் இந்நாடகத்தை முழுவதுமாக ரசித்திருக்க முடியாது.

வாசுதேவனின் 'காத்திருப்பு' நாடகம் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு காணாமல் போன இளைஞன் ஒருவனது குடும்பம் பற்றியது. நாளை வருவாரோ என தமது பிள்ளைகளை எதிர்பார்த்து ஏங்கித்தவிக்கும் ஆயிரக்கணக்கான பெற்றோர்களில் ஒரு வயதான தம்பதியினர் படும் அவலத்தை மனோகரன் மனுவல்பிள்ளையும், ஆனந்தராணியும் தமது மிகையில்லாத நடிப்பில் எமக்கு நினைவு படுத்தினர். ஆனால் இராணுவ அதிகாரிகளாகத் தோன்றுவோர் பேசுகின்ற மொழியிலும் அவர்கள் சம்பந்தமான காட்சிகளிலும் கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை. அவர்கள் இராணுவ அதிகாரிகள் போல் இல்லாமல் யாழ்ப்பாணத் தமிழில் பேசியபடி ஒட்டுக்குழுத் தலைவர்கள் போல் காட்சியளித்தார்கள்.

இறுதியாக சத்தியேந்திரன், வேந்தன், வாசுதேவன், சந்தோஸ் ஆனந்தன் ஆகியோர் பங்கேற்றுக் கொண்ட 'சர்ச்சை' என்ற நாடகம் நடைபெற்றது. சிலர் சும்மா உப்புச் சப்பில்லாத விடயங்களுக்கு எல்லாம் சண்டையிடுவதைச் சுட்டிக்காட்டும் இந்த 10 நிமிட நாடகத்தில் இரண்டு வசனங்களே திரும்பத்திரும்ப பேசப்பட்டன. அரங்கத்தில் எல்லோரும் ஒன்றிப்போய் ரசித்துப் பார்த்த நாடகங்களில் இதுவும் ஒன்று. இந்த அற்புதமான ஐந்து நாடகங்களும் திரு.க. பாலேந்திராவின் நெறியாள்கையில் மேடையேற்றப்பட்டன. முற்று முழுதாக நமது கலைஞர்கள் பங்கெடுத்துக் கொண்ட தரமான இந்தக் கலைப் படைப்புக்களை காண பார்வையாளர்கள் திரண்டு வந்து அரங்கத்தை நிறைத்திருக்கவேண்டும். அப்படியில்லாதது எம்மவரின் ரசிப்புத்தன்மையின் தரக் குறைவைத்தான் காட்டியது.

*- தேவபுத்திரன்*

**Petition to the U.N.Secretary General.**

A petition to the U.N. Secretary General has been organised on the Tamil Eelam Humanitarian Crisis. Please sign this petition on the web by going to www.PetitionOnline.com/TAMEELAM/petition.html.

**Petition to Rt Hon. Tony Blair, the Prime Minister of Great Britain.**

A petition to the Prime Minister of Great Britain has been organised on the Sri Lankan Humanitarian Crisis. Please sign this petition on the web by going to www.tamilsforum.com

# பொன்மாலைப் பொழுது





சூரியோதயம் தமிழ் ஒலிபரப்பு, லண்டன் தமிழ் வானொலி போன்றவற்றை இயக்கும், லண்டன் First Audio கலையத்தின் 75வது பொன் மாலைப்பொழுது, நவம்பர் 25ம் திகதி GreenFord நகர மண்டபத்தில் நடைபெற்றது. 1998ம் ஆண்டு முதல் ஐரோப்பா அடங்கலாக, எம்மவர் கலைத் திறன்களின் சங்கமமாக, நம்மவர் திறமை மேடைகளாக நீண்ட தொடர் மேடைகண்டு வருவது குறிப்பிடத்தக்கது. பொன் மாலைப் பொழுது முற்றிலும் ஐரோப்பியத் தளத்தில் வளர்ந்துவரும், நம்மவர்களுக்கான திறமை மேடையாகும். இதன் ஒளிக்காட்சிகள் சீ.ஐ.ரீவி தொலைக்காட்சியில் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

# ஹரோவில் மாவீரர் நாள் நிகழ்வு



மேற்கு லண்டன் பகுதிக்கான மாவீரர் நாள் நிகழ்வுகள் கடந்த திங்களன்று ஹரோவிலுள்ள பைரன் மண்டபத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றன. காலை 11.30 மணிக்கு அகவணக்கத்துடன் ஆரம்பமான நிகழ்வுகள் ஆரம்பமாகின.

மதியம் 12 மணிக்கு தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனின் வருடாந்த கொள்கை விளக்க உரையின் நேரஞ்சல் அகன்ற திரையில் ஒளிபரப்புச் செய்யப்பட்டது.

அதனை தொடர்ந்து லண்டனில் வாழும் கலை ஞர்கள் எழுச்சி பாடல்களை இசைத்த வண்ணம் இருக்க அங்கு திரண்டிருந்தோர் வரிசையாக மண்ட பத்தில வைக்கப்பட்டிருந்த மாவீரர்களின் உருவப்படங்களுக்கு மலர் வணக்கம் செலுத்தினர். திரு.கந்தையா இராஜ மனோகரன், திரு. தில்லை மோகன் ஆகியோர் எழுச்சிக்கவிதைகள் படித்தனர். திரு. இரவி அருணாசலம், திருமதி ரூபி குமார் பங்கேற்று கொண்ட இசை நாடகம் சிறப்பு நிகழ்சியாக நடைபெற்றது. பார்வையாளர்களை பெரிதும் கவர்ந்த இவ்வரங்க நிகழ்வில் பிரபல நடன ஆசிரியைகளான திருமதி. பத்மினி குணசீலன், திருமதி. ஜெயந்தி ஆகியோரின் மாணவிகளும் கலந்து கொண்டு நாட்டியமாடினர்.

2000 மக்கள் கொள்ளக்கூடிய மண்டபத்தில் நிகழ்ச்சி நடைபெற்றதால் அங்கு வருகை தந்த 6000 வரையான மக்களுக்கு மண்டபம் போதாமலிருந்தது. எனவே முதலில் உட்சென்றவர்கள் தாமாக முன்வந்து வெளியேறி வெளியில் காத்திருந்தவர்களும் மாவீரர்களுக்கு வணக்கம் செய்வதற்கு உதவினர். பணிநாளான திங்கட்கிழமை இத்தனை மக்கள் திரண்டு வந்தது புலம் பெயர்ந்து வாழும் மக்களின் எழுச்சியை பறைசாற்றுவதாக இருந்தது.

CARLTON EDUCATIONAL AND FINANCIAL SERVICES
(Student Visa Consultation & Documentations, Travels, Mortgages, Holidays, Money Transfer and Shipping)


Elite Consultations and Documentations to obtain Student Visas from Sri Lanka & India in affordable charges.
We Offer a broad spectrum of services for genuine students from Sri Lanka via our Colombo Office, Exponet (Pvt) Ltd.

- Help students to acquire admissions from reputed UK Universities and DFES registered Colleges
- Expert Guidance and Documentation to obtain student visas
- Dicounts on Air Tickets for students
- Pre departure and post arrival assistance
- Airport pickups for students
- Work Permit & HSMP guidance.... Very soon

Hotline 0208 554 4200
FOR FEBRUARY 2007 TOP BRITISH DEGREES
STUDENT VISA SPECIALISTS

Study - Work - Live in UK
# 742 EASTERN AVENUE, ILFORD, ESSEX IG2 7HU

# Sri Lanka is India's problem



By: C. Yogendran
REDIFF

The sun, round and orange, hangs high in the Jaffna sky like a lopped-off head, weeping rays of blood, while terror stricken civilians huddle in fear of the next wave of bombs. Pushed to the brink with killings and starvation, the people of north and east Sri Lanka are once more in dire straits.

Israeli designed Kfir jets roar into Jaffna peninsula and the east coast to deposit bunker busters and other demonic payloads. The casualties mount. The United States aggressively trains the Sri Lankan Special Forces. Pakistani generals and military personnel train and advise their counterparts in Colombo. China provides economic support. When are the Russians coming, I wonder?

Yet India, refusing to be shaken from its stupor, remains on the sidelines and fiddles. Or, so it seems.

The well worn expression 'using a sledgehammer to break an egg', comes to mind. With such enthusiastic support, it is no wonder the Sri Lankan government conducts a relentless campaign of terror against the Tamil civilians.

Pakistan, a near failed state, a hotbed of terrorism, a sanctuary and haven for terrorists and home of the nuclear bazaar, to be advising Sri Lanka on fighting and containing terrorism, is a perversion of justice. It is a kick in the butt for all those who cherish decency, justice and egalitarian values.

Has Pakistan's Inter Services Intelligence setup shop in Colombo? South India would be a deliciously close and accessible playground for the Pakistanis, wouldn't it?

And what is Israel, fresh from its pummeling of Lebanese civilians, doing in Sri Lanka? Does Israel have the moral authority to be fighting another man's war? The Israeli strategy and methods of warfare are coming through clearly in the tactics adopted by the Sri Lankan forces.

Recently, a few thousand miles away in the Gaza town of Beit Hanoun, 18 Palestinian civilians were killed by Israeli tank fire. A grief-stricken father cradled the remains of his six-month old baby in his arms. All he had left of the baby was a bloody lump of flesh. Stunned and dazed residents, crazed with pain and anguish, stared into space in disbelief or wept in each others arms.

The Israeli response? 'Oops, wrong coordinates!'

A few days later, eerie echoes of Beit Hanoun played out in the towns of Killinochi and Varakai. Sri Lankan armed forces bombed a hospital and shelled a school where civilians were taking refuge. Civilian death toll keeps rising.

The strategy to combat terror with terror is gaining in popularity. Civilians and infrastructure be damned. Recent events in South Lebanon, Gaza and Sri Lanka bare testimony to this appalling shift in thinking.

The Sri Lankan state has successfully claimed the moral high ground. The picture painted for foreign consumption is that the state is the helpless victim of Tamil aggression. The frequent pogroms the Tamil community was subjected to, is old hat and not discussed anymore.

The US' policy toward Sri Lanka appears to favor castrating the Liberation Tigers of Tamil Eelam while propping up the government with weapons, funding and training. As was evident in Lebanon a few weeks ago, civilian casualties are an unpleasant but necessary price to pay. The US now makes innocuous statements and looks the other way when civilians are killed.

Is the Trincomalee harbor a reason for this new found camaraderie? New friends and safe harbours are needed all the time when you're in the business of policing the world. An entire population was removed from Diego Garcia to accommodate a military base, so is it surprising that bombs and dollars are provided in exchange for a natural deep water harbour? And the Sri Lankan government appears desperate enough to trade its soul, if it means defeating the Tamils.

The current crop of nationalistic, war-mongering parliamentarians is ill-suited for navigating the waters of peace and reconciliation. Bloated with hubris, they brutally prosecute the war using paramilitary forces, sophisticated weapons and children.

Yes, the state does use child soldiers, while unabashedly pointing an unsteady finger in accusation at the LTTE. And, what can you say about a government that uses warplanes to strafe civilians and refugees so they could be herded to predetermined camps?

Another recent and terrifying development is the reappearance of the 'White Van', synonymous with abductions and killings and was at its most horrifying in the 1980s when thousands disappeared. Most victims are Tamil and the kidnappings are conducted in government-controlled areas. This is yet another alarming example of the government operating outside the law.

**The US' policy toward Sri Lanka appears to favor castrating the Liberation Tigers of Tamil Eelam while propping up the government with weapons, funding and training.**

The state hit a new low last week when it gunned down popular Tamil politician Nadaraja Raviraj in cold blood. Articulating his concerns and grievances in all three languages, Raviraj tirelessly fought for the Tamils. His number came up when the powers that be figured he had to go. Raviraj was mowed down in his prime leaving behind a young family and a massive void in the ranks of the Tamil leadership.

The dictionary describes 'terrorism' as follows: Violence or the threat of violence, especially bombing, kidnapping, and assassination, carried out for political purposes

The Sri Lankan state fits this description like a glove.

The world frets about negotiating a peaceful settlement, yet has remained callously quiet and indifferent to state sponsored atrocities. The most one hears are pithy statements of 'regret'.

Madness and mayhem embrace the Island. This is uncontrolled and unapologetic violence and hatred. Yet, they say the country is not at war.

Fires are burning at India's doorstep and some major players are in there jostling for space. So, why is India dithering? It is time for India to wake up from its slumber and step in to the fray. Past experience may have been unpleasant but the time has come to be assertive, demonstrate leadership and to take charge. The time for 'study' or for 'monitoring the situation', is over.

The notion of not interfering in the internal affairs of another state is quaint and antiquated. The flames of war may soon leap across the Palk Strait to lick at India's borders. This is now India's problem.

If ever there was a time ripe for India's intervention, this is it. Setting aside considerations of political expediency, India should act to stop the bleeding. If nothing else, the humanitarian crisis demands a response.

There are constant comparisons made with China and a yearning to be on the same playing field, yet India is always a step or two behind. It is happening yet again in Sri Lanka. India is still a non-starter, and as a player to be reckoned with, is a yawn.


I sincerely hope this is not a deliberate show of aloofness. I have faith that India will not turn its back on the Tamils and sell out for its 30 pieces of silver.

Not long ago, Sri Lanka was the sleepy and idyllic backwater known mostly for its natural beauty and tourism. Then, the challenge and opportunity was to serve French toast and young boys to eager and hungry German tourists. And we thought we had problems. Oh, for those lazy, hazy days of endless summer.

As a famed folk singer reminds us, 'The times they are a-changin'.

The unpleasant truth is that while battles may be won and lost, the war will persist for as long as a military solution is pursued. An entire people cannot be bludgeoned to death. A strong and vibrant community cannot be subjugated for ever.

The cry for peace and justice rings loud and clear as Lanka convulses from the horrors of war. Tread gently and walk in peace, for as history teaches us, you never know what tomorrow brings.

Non Fault Accident Claim
SAI MOT CENTRE
Class IV & VII Tested
Service & Mechanical Repairs

Auto Electronic Diagnosing - Air Condition Services - Tyre & Exhausts - Recovery Services

Mob: 07939 838 926
www.saimot.com
113 A Hardy Road
South Wimbledon
London SW19 1JB
T: 020 8542 3452
F: 020 8540 0505
Unit 1-9 Willow Business Park
3-9 Willow Lane, Mitcham
Surrey CR4 4NA
T: 020 8640 2221
M: 07956 387 877

# On Heroes' Day, Check the Label

## Are your clothes dripping Tamil blood?

By: Senthuri Thayamohan




Starting on Heroes ' Day, say no to all products made in Sri Lanka. Say no to Sinhala companies sending their profits to the Sri Lankan government. Say no to the Sri Lankan government. Say no to the slaughter of Tamils.

They are innocuously peppered throughout your house: jeans thrown over your chair, sweatshirts piled on the couch, t-shirts in the laundry. And they are covertly funding the bombings of our Tamil brethren in Northeast Sri Lanka?

Even as our hearts ache and our minds rebel reading the horror stories on TamilNet, we don't realize the way we contribute to the bloodshed.

But the sad reality is that we are funding Sri Lanka's war against our own people when we purchase goods made in Sri Lanka.

One quarter of Sri Lanka's exports are textiles, the second largest industry behind its food and drink business (booming due to its high demand Ceylon teas). Thus, textiles and products for consumption are the most significant components of Sri Lanka's economy, fuelling the Sri Lankan state and thereby fuelling the government's war against the Tamil people.

The war against the Tamil Tigers has been an ugly one, well-documented by photos from Pesalai, Mavilaru, Vangalai, Allaipitty, Vaharai. Even in so-called peacetime, schools were bombed and hospitals shelled. And we, as members of the Tamil diaspora, have felt helpless in front of our computers, as we read about the latest massacres and saw the bodies pile up.

It is time for the Tamil people to stop being helpless in Sri Lanka and around the world. We can do something to stop the slaughter. Even simpler than campaigning with our host country's government, we can let our money campaign for us.

We can stop purchasing goods made in Sri Lanka. All textiles, Ceylon tea, Lemon Puffs, Chocolate Puffs, gems, accounts in Sri Lankan banks – part of the profits from these products ends up in Mahinda's pockets, which he then uses to purchase Kfirs and weapons to turn against Tamil children at Sencholai and patients in Kilinochchi General Hospital.

So this Heroes' Day, instead of sitting blankly in front of your computer, feeling pangs of helplessness and sorrow at the plight of our brethren in our homeland, do something. Starting on Heroes' Day, say no to all products made in Sri Lanka. Say no to Sinhala companies sending their profits to the Sri Lankan government. Say no to the Sri Lankan government. Say no to the slaughter of Tamils.

*(Courtesy: sangam.org)*

# Legitimising Colombo thrusts new obligations on international community

When the LTTE withdrew from participating in peace negotiations in April 2003, stating it had been excluded by the U.S government from the Washington Conference because it was a 'terrorist organisation,' the signal it wished to transmit was that parity, which is essential for successful peace negotiations, was not being observed.

The Tigers alleged that talks which had begun in September 2002 with two protagonists – the Sri Lanka government and themselves, had by April the following year grown, thanks to the international safety net. It now included actors from the international community – symbolised by the co-chairs and India – supporting Colombo.

The next time the two sides met was in February this year in Geneva, about which special peace envoy, Minister Erik Solheim patted himself on the back as a major achievement. Peaceniks and conflict management experts believe a sea change occurs in conflict if the antagonists can be brought to the table.

But what happened? The government ignored its obligations towards Geneva I – disarming Karuna.

After more shuttling between the two camps, the Norwegians got the Geneva II talk show on the road. The LTTE went to Geneva II protesting it was doing so only in deference to the international community.

Not surprisingly, matters raised by the Tigers were given scant consideration. The A9 remains closed and the blockade of Jaffna continues and so does the suffering of the people without food, medicines and fuel. The killing and abductions all over the Northeast, as well as Colombo have not abated even a jot, despite the empty talk of the government investigating such violations.

But crowning it all are the air raids – the almost daily aerial bombardment of areas of the Northeast. Colombo's barbarity reached new heights when it bombed an area within 500 metres from the Kilinochchi hospital. The bombs killed five civilians from a family and led to damage to the hospital, and worse, the evacuation of terrified patients to safer areas.

But what did the government do no sooner than its delegation returned to Colombo, but unleash a terrible air strike on civilians, and that too near a hospital.

It is now the international community's responsibility to compel the government to behave in a way that a civilised entity engaged in armed conflict behaves.

If the international community does not, what little credibility it enjoys in the eyes of the Tamils will vanish. The LTTE will be forced to react by paying back the government in its own coin and thereby showing what regard it actually has for the co-chairs and India for trying to prop up and legitimise a rogue state.

*(Courtesy: Northeastern Monthly)*

# Incredible India! ....Not always.

By: Chithirakuptan
FOR ORUPAPER

Are Indian interests better served by pleasing Sri Lankan Governments? This has been the anxiety of many, Tamils in particular. Our National Leader in his annual Heroes' Day speech on 2006 has duly expressed his gratitude in no uncertain terms, to the Tamil Nadu people and leaders for voicing their support. Further, he has appealed for their continued efforts to help us in our freedom struggle.

In 1999, an important Indian Government's adviser was asked about the 'Greater Tamilakam' (the supposed Pan-Tamil political project; an independent Tamil Homeland merging Northeast of Sri Lanka and the Indian State of Tamilnadu), the following was the sound and firm reply; "this is ridiculous. The argument is hollow and reflects the hatred one has for fellow humans. Again, there is no direct evidence from LTTE on the question of Greater Tamilakam. Sri Lankan Tamil militancy is in response to the violence imposed on them by the Sinhalese. If you remove the violence against Tamils then the Tamil militancy will disappear. These are cooked up and imaginary positions. They question the loyalty of the Tamils in Tamil Nadu. Persons who propagate this theory are the idiots".

Then the next question was asked, why India still supporting Sri Lanka?

The answer was; "The same lady who is Prime minister of Sri Lanka now (referring to Late Mrs Srimavo Bandaranayake) was the PM in 1971. India was at war with Pakistan then. How many military flights from Karachi to Dacca passed through Colombo that period? Sri Lanka's collaboration with Pakistan during India's critical hour prolonged the war and delayed India's victory. When China was at war with India the reaction from Colombo was the same. Instead of supporting us Sri Lanka went to China to 'mediate'. Because of that war large chunks of our land are now in Chinese hands. Indira Gandhi as Prime Minister warned Sri Lankan president against handing over Trincomalee to the US. After all these can you trust Sri Lanka? In International forums Colombo works against Indian interests by collaborating with our enemies."

Another highly rated Indian diplomat had this to say about the Tamil struggle; "there are two major political parties in Sri Lanka. For both, Tamil issue is their bread and butter. In 50 long years of their governance, both alternating, they have never been able to subjugate the Tamils. It is the Tamil's determination to resist this oppression that has saved them from annihilation. Now the whole issue is internationalized, Scandinavian countries are mediating. But India is not anywhere in the picture"

For any reader India's perception and understanding of our problem is simply complete and brilliant. So what is the hitch? Why can't the great India help the Tamils?

### Indo-US Military Ties

In August, 2001 the Bush administration decided to work with congress to lift sanctions against India, imposed in the aftermath of May 1998 nuclear tests, clearing the way for greater military cooperation, joint operations and eventual sharing of weapons technology with New Delhi. Straight away, US decided to lift restrictions against American firms selling military hardware and technology to New Delhi. Nevertheless, the Indo-US Nuclear deal is I the final stages of culmination, having gone through the Senate, only recently. Further India has come to believe that democracy and free markets are extremely productive combination.

### China-India Relations

President of China Hu Jintao visited India for the first time from November 20-27, 2006. This visit was a 'politically correct ' one , in which not less than 13 agreements were signed with strong emphasis on building of a strategic relationship and joint approaches to regional and international issues. China agreed to support India's candidature for Permanent Member status in the UN Security Council.

One of the agreements relevant to South Asia is that China did not seek "selfish goals" and was ready to play in contrast "a more constructive role".

(To be continued)

INTERNATIONAL REFUGEES ORGANISATION
IMMIGRATION
• புதிய சட்ட அமைவுகளின் கீழான
Fresh Applications
மேன் முறையீடுகள்
• இலங்கையில் நிராகரிக்கப்பட்ட
விண்ணப்பங்களுக்கு எதிரான
மேன் முறையீடுகள்
• ஐரோப்பிய நாட்டில்
இருந்து வருபவர்களுடன்
தங்கியிருப்போருக்கான விசா
• விண்ணப்பங்கள்
• மொழி பெயர்ப்புகள்
அணுகுங்கள்:
குலேந்திரன்
INTERNATIONAL REFUGEES ORGANISATION
1083 Garratt Lane - London SW17 0LN
OISC
தொலைபேசி 020 8682 4494
கைத்தொலைபேசி 078 7781 9494
( ஆலோசனைக் கட்டணம் £100.00 )
Tel: 020 8682 4494
Fax: 020 8682 9922
Tube: Tooting Broadway

# REST HARROW & CO SOLICITORS

குடிவரவு வர்த்தகம் மற்றும் வீடு / கடை கொள்வனவு தொடர்பான சட்ட ஆலோசகர்கள்

Specialists in Immigration, Commercial & Conveyancing Law

Aequitas per jus

- Judicial Review
- Detention and Bail
- Work Permits
- Injunction
- Appeals
- Visit Visa
- Highly Skilled Immigration Program
- Naturalisation Application
- EEA Application
- Human Rights Applications

- Wills & Probate
- Personal Injury
- Housing : Landlord & Tenant
- Family: Matrimonial / Divorce
- Contract: Consumer & General
- Employment Disputes
- Debt Collections

**We provide comprehensive legal services in land, matrimonial, property and immigration to Sri Lanka**



- அகதி விண்ணப்பங்கள்
- குடிவரவு பிணை / மேன்முறையீடு
- வேலை அனுமதிப்பத்திரம்
- வதிவிடவுரிமை
- வரையறையற்ற வதிவுரிமை
- பிரஜாவுரிமை விண்ணப்பம்
- Student Visa Services

Contact:
**Prakash** BLM, MBA

238 Merton Road, Wimbledon SW19 1EQ

Tel: **020 8544 2731** / **020 8544 2752**

Email: solicitors@restharrow.com / Web: www.restharrow.com

---

புதிய இல்லம்! மனநிறைவுடன் விடைகொடுக்க
ஒரு முகவர்...
இது உங்கள் கனவாயின்!
அந்த வெற்றிடத்தை நிரப்ப...

# PORTMANS
ESTATE AGENTS

36 Court Parade, East Lane , Wembley
Middlesex HA0 3HS
Tel: 020 8904 8844
Fax: 020 8904 9966



**£650 PCM**

***Bedrooms*** 1
***Location*** ***SUDBURY TOWN***

***Description***
1 BEDROOM GROUND FLOOR FLAT

OPEN PLAN RECEPTION ROOM
KITCHEN
BATHROOM
GOOD CONDIDTIONS
EXCELLENT LOCATION



**£750 PCM**

***Bedrooms*** 1
***Location*** ***ALPERTON***

***Description***
1 BEDROOM SECOND FLOOR FLAT

NEWLY DECORATED
RECEPTION ROOM
KITCHEN
BATHROOM
COMMUNAL GARDENS
MINTUES FROM STATION



**£950 PCM**

***Bedrooms*** 2
***Location*** ***NORTH WEMBLEY***

***Description***
2 BEDROOM FIRST FLOOR FLAT

RECEPTION ROOM
KITCHEN & BREAKFAST ROOM
BATH ROOM
TERRACE
MINUTES FROM STATION
WATER RATES INCLUDED



**£1100 PCM**

***Bedrooms*** 3
***Location*** ***SOUTH HARROW***

***Description***
3 BEDROOM MID TERRACE PROPERTY

RECEPTION ROOM
KITCHEN
BATHROOM
REAR GARDEN
PARKING



**£1200 PCM**

***Bedrooms*** 3
***Location*** ***ALPERTON***

***Description***
3 BEDROOM MID TERRACE PROPERTY

2 RECEPTION ROOMS
KITCHEN
BATHROOM WITH SEPARATE WC
REAR GARDEN
PARKING
CLOSE TO EALING ROAD




**£1350 PCM**

***Bedrooms*** 3
***Location*** ***KENTON***

***Description***
3 BEDROOM SEMI DETACHED PROPERTY

3 RECEPTION ROOMS
KITCHEN
BATHROOM
REAR GARDEN
GARAGE & PARKING
CLOSE TO STATION

# திருப்புமுனைக்கான உரை



அகத்தியர்
*(ஒரு பேப்பருக்காக)*

எங்களில் பலரும் எதிர்பார்த்தது போலவே இந்த வருட மாவீரர் தின உரை அமைந்துள்ளது. தமிழரின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை வழிப்படுத்திச் செல்லும் விடுதலைப் புலிகளின் எதிர்காலத்திற்கான கொள்கைப் பிரகடனமாக இந்த உரை அரசியல் அவதானிகளால் நோக்கப்படுகின்றது.

தமிழர் போராட்டம் மிகக் கடுமையான சிக்கல் நிறைந்த அரசியல், இராணுவப், பொருளாதாரக் கருக்களைக் கொண்டது. இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கும் இயக்கமும் தலைவனும் இக்கருக்களை நன்கு விளங்கி அதற்கேற்ப கால ஓட்டம், உலக அரசியல் யதார்த்தங்கள் என்பன பார்த்துமுடிவுகளை எட்டுவது வழமை. இப்படியான விளக்கங்களையும் முடிவுகளையும் இலகு தமிழில் இந்த வருட மாவீரர் உரையும் உணர்த்தி நிற்கிறது.

**தமிழர் போராட்டம் மிகக் கடுமையான சிக்கல் நிறைந்த அரசியல், ராணுவப், பொருளாதாரக் கருக்களைக் கொண்டது.**

1505 இல் போர்த்துக்கேயரின் ஆக்கிரமிப்புடன் தாயகத்தைத் தொலைத்தவர் நாம். எமது அரசியற் சுதந்திரத்தை, அதைப் பாதுகாக்கும் போர்க் குணத்தை, போரிடும் வலிமையை சிறிது சிறிதாக அழிந்து போக விட்டவர் நாங்கள். 'கோழி மேய்த்தாலும் கவுண்மேந்தில்' என்று கூறிக் கொண்டும் சாதி பார்த்தும் சமயப் பெருமை பேசியும் எங்களுக்கு நாங்களே குழி வெட்டிக் கொண்ட கடந்த காலத்தை கொண்டவர் நாம்.

இப்படியாக 450 வருடங்களுக்கு மேல் அரசியற் சுதந்திரமில்லாமல், இராணுவ போர்க்குண முதுகெலும்பு இல்லாமல் இருந்த எம்மை நிமிர்த்தி ஒரு இனம் அழிந்து போகாமல் இருப்பதற்கு தாயகம் என்பது ஏன் முக்கியமானது என்று விளங்க வைத்தவர்களுள் தலைவர் பிரபாகரன் முதன்மையானவர். ஆக்கிரமிப்பாளனின் முதுகெலும்பை முறித்தெடுத்துத்தான் ஆக்கிரமிக்கப்பட்டவர் புதிய முதுகெலும்பு சமைத்துக் கொள்ளுவர். இது உலக நியதி. நாமும் இதற்கு விதிவிலக்கானவர் அல்ல.

**ஆக்கிரமிப்பாளனின் முதுகெலும்பை முறித்து எடுத்துத்தான் ஆக்கிரமிக்கப் பட்டவர் புதிய முதுகெலும்பு சமைத்துக் கொள்ளுவர். இது உலக நியதி.**

எம்மை ஒடுக்குபவரின், ஆக்கிரமித்துள்ளவரின் இராணுவ முதுகெலும்மை முறிக்க நாம் கொடுத்த விலை கொஞ்சம் நஞ்சமல்ல. அதிலும் குறிப்பாக ஈழப்போர் மூன்றில் (1995-2001) தமிழீழத்தில் வாழும் எம்மவர் கொடுத்தது அளப்பரிய விலை.

1995 யாழ்ப்பாண இடப்பெயர்வின் பிறகு தமிழர் பட்ட துன்பம் கொஞ்சமல்ல. 1995க்குப் பிறகான ஆறுவருடத்தைய போரைப்போல ஒரு போரை தமிழினம் கண்டதில்லை.

இப்படியான ஒரு நிலையில் இருந்து கொண்டுதான் இருந்த பலம் எல்லாம் கூட்டி ஆனையிறவு வெல்லப்பட்டது. கட்டுநாயக்கா கொழுத்தப்பட்டது. சிங்கள தேசத்துக்கும் தமிழர் தேசத்துக்கும் இடையிலான இராணுவச் சமநிலை எட்டப்பட்டது.

போரிடும் தரப்புகளுக்கு இடையே இராணுவச் சமநிலை ஏற்படும் போது (பல்வேறு காரணிகளுக்காகவும்) பேச்சுவார்த்தைகளுக்குப் போவது முக்கியமான ஒரு அரசியல் காய் நகர்த்தல். இதைத்தான் தமிழர் தரப்பும் செய்தது.

இப்பேச்சுவார்த்தைகளுக்குப் போகும் போதே இது நிரந்தரச் சமாதானத்தில் முடியாது என்ற ஞானம் விடுதலைப் புலிகளுக்கு இருந்தது உண்மை. ஆனால் பல வருடங்களாகப் பட்ட இறப்புகள், துன்பங்கள், அழிந்து போயிருந்த பொருளாதாரம், கல்வி, மருத்துவம் என்பன பெரும்பாலான தமிழீழம் வாழ் மக்களை இதற்கு மேல் முடியாது என்கின்ற ஒரு நிலைக்குக் கொண்டு வந்திருந்தது.

போராட்டத்திற்கு மூலாதாரமாய் களத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும், பங்களிப்புச் செய்து கொண்டிருக்கும் மக்களது விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப தமது அரசியல், இராணுவ மூலோபாயங்களை அமைத்துக் கொள்ளும் ஒரு இயக்கமே வெற்றிகரமான ஒரு மக்கள் இயகமாகிக் காலப்போக்கில் வெற்றியை அடைகிறது. இந்த அரசியல் யதார்த்தத்தை நன்கு விளங்கி வைத்திருப்பவர்கள் விடுதலைப் புலிகள்.

கடந்த 6 வருடங்களாக அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்க்கவும், நிரந்தர சமாதானத்தை நோக்கியும் என்று கூறி நடந்த பேச்சுக்களின் இறுதியில் நடந்தது என்ன?

சமாதான காலம் என்று கூறப்படுகின்ற 2006 க்கும் சமாதானத்துக்கான போர் என்று கூறிய சந்திரிகா அம்மையாரின் 1996 க்கும் என்ன வித்தியாசம்?

**போரிடும் தரப்புகளுக்கு இடையே இராணுவச் சமநிலை ஏற்படும் போது பேச்சுவார்த்தைகளுக்குப் போவது முக்கியமான ஒரு அரசியல் காய் நகர்த்தல்.**

போர்க்காலத் தலைவர்களது சுயசரிதங்களை அவர்களைப் பற்றிய தீர்க்கமான ஆய்வுச் சரிதங்களை வாசிக்கும் போது பொதுப் பண்பு ஒன்று புலப்படும். இத்தலைவர்கள் தமதுமக்களை போருக்கென்று கூவி அழைத்துச் செல்லும்போது அவர்களுக்கு ஏற்படும் சிக்கலான எண்ண ஓட்டங்களே அது.

தீர்க்கதரிசனமான, அரசியல், இராணுவ முதிர்ச்சி உள்ள தலைவன் இறுதி வரையும் பொறுமைகாத்து, போரைத் தவிர்க்க அத்தனை வழிகளையும் ஆராய்ந்து பார்ப்பான், முயன்றும் பார்ப்பான். இனி வேறு வழிகள் ஏதும் கிடையாது என்றால் தான் போர் என்று முடிவு எடுப்பான்.

மக்கள் நலன் விரும்பும், அரசியல் ஞானமுள்ள தலைவன் ஒருவனுக்கு ஏற்படக் கூடிய மிகக் கடுமையான சோதனை, மன வேதனை தன் மக்களை போருக்கென அழைத்துச் செல்லுதலாகும். ஏனெனில் ஒரு போரில் ஆயிரம் ஆயிரம் மக்கள் கொல்லப் பட்டும் காயம் அடைந்து அங்கவீனர் ஆகவும் போக வேண்டி வரும். மேலும் பொருளாதாரம், கல்வி, மருத்துவம், இயற்கை என்பன அழிந்தும் போக மிஞ்சியோர் ஓடியும், ஒளிந்தும் அகதி வாழ்வு வாழவேண்டி வரும்.

ஆக, ஒரு தீர்க்கதரிசனமுள்ள தலைவனுக்கு இந்த விலைக்கனதி நன்றாக விளங்கும். ஒரு போரில் கொடுக்கவேண்டிய விலை என்ன? அப் போர் எவ்வளவு காலம் நீடிக்கும் போன்ற கேள்விகளுக்கு மனிதரால் விடை கூற முடியாது. வேலுப்பிள்ளை பிரபாகரனும் மனிதரே. ஆக, இப்படியான ஒரு இறுக்கமான சிக்கலான பாதையில் பயணஞ் செய்ய வேண்டிய காலத்தின் கட்டாயத்துக்குள் தமிழர் தள்ளப்பட்டுள்ளனர்.


இப்படியான ஒரு நிலையில் இயன்றளவு முயன்று நடந்தவைகளை விளக்கி யதார்த்தத்தை முன்னிலைப்படுத்துவது முக்கியமான அரசியற் பண்பு. ஒரு இறுக்கமான போருக்குப் போகும்போது தன்னால் இயலுமானவரை முயன்று தன்னுடன் அரசியல் விளக்கமுடைய ஒரு மக்களை, மக்கள் படையைச் சேர்த்துச் செல்லும் ஒரு இயக்கமே இறுதியில் வெற்றியை அடைகின்றது. இதுவே வரலாறு தரும் பாடம்.

**இயன்றளவு முயன்று நடந்தவைகளை விளக்கி யதார்த்தத்தை முன்னிலைப் படுத்துவது முக்கியமான அரசியற் பண்பு.**

தமிழர் தலைவரின் வழிகாட்டி வரலாறு என்பதுபுலம்பெயர்ந்த தமிழராகிய எமக்கு நன்றாக தெரியும். அதேபோல நாங்கள் வாழும் நாடுகளின் வரலாறுகள் எங்களுக்குத் தெரியாதது அல்ல. நாங்கள் வாழும் நாட்டு மக்கள் அனேகர் (முக்கியமாக யூத மக்கள்) தமது சுதந்திரத்துக்காகவும், தாயகத்துக்காகவும், தம்மை ஆக்கிரமித்தவர்களுக்கு எதிராகவும் போர் செய்து அழிவுகளுக்கு உட்பட்டவர். இப்படியாக இலட்சக்கணக்கில் இளம் உயிர்களைப் பறிகொடுத்துத் தான் இன்றைய சுதந்திரத்தை அடைந்தார்கள், தக்க வைத்துக் கொண்டார்கள்.

இப்படியான வரலாறுகளை உடைய இந்த நாடுகள் மற்றவர்களது சுதந்திரப் போராட்டங்களை கொச்சைப் படுத்துவதிலும் பொறிகளுக்குள் தள்ளிவிட்டுப்பின் அமைதியாக அழித்தொழிப்பதிலும் முன்னிற்பவர்கள். ஆக உலக அரசியலில் மனித தர்மம், நியாயம், நட்பு என்று கிடையாது. அவரவர் நாட்டின் பொருளாதார, அரசியல், இராணுவ நலன்களே அந்தந்த நாட்டின் அரசியல் நடத்தையை, பண்பை முடிவு செய்கின்றன. இப்படியான ஒரு உலக ஓட்டத்துக்கு முகம் கொடுத்து திருப்புமுனையை நோக்கிய பயணத்தை எம்மவர் தொடங்குகின்றனர்.

இப்பயணத்திற்கு எமது தார்மீகக் கடமையை அன்றும் இன்றும் யூத மக்கள் தாங்கள் வாழும் நாடுகளில் எல்லாம் செய்வது போல நாமும் செய்யப் போகிறோமா? அல்லது இன்னமும் குதர்க்கம் பேசப் போகிறோமா?




jk CARPET CARE
08000 40 71 25
இது தமிழர்களால் நடாத்தப்படும் ஒரு நிறுவனமாகும்

Fully Trained Staff
100% Safe for Children & Pets
Fast Drying (1-2 hours) 7 Days a week
All work guaranteed
(Fully Insured)

இலவசமாக அழைக்கலாம்...
Carpets - Upholstery - Rugs
Car & Hard Floors
உங்கள் இடங்களில் இவர்கள் கைப்பட்டால்
தூய்மை! தூய்மை! தூய்மை!

Call Alan or Jey 0800 040 7125 / 07814 817 908
Email: alan-jk-carpetcare@hotmail.co.uk
"We won't let you down"



# இந்துமகா சமுத்திரத்தில் இன்னுமொரு இஸ்ரவேல் உருவாக்கப்படுகிறதா?

**உமா மகாலிங்கம்**
*( ஒரு பேப்பருக்காக )*

இலங்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட மிகப் பெரிய அளவிலான பாதுகாப்புக்கான செலவீனம், தமிழ் மக்கள் மீது தொடரப்போகும் பாரிய அளவிலான யுத்தத்தை வெளிப்படையாக உணர்த்துகிறது. சுதந்திரமடைந்த காலத்தின் பின்னர் இலங்கை மீது பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எந்த ஒரு நாடும் விடுத்ததாகவோ அல்லது விடுக்க எத்தனித்ததாகவோ இதுவரை தடயம் எதுவும் இல்லை. இந் நிலையில் ஏராளமான பணத்தை பாதுகாப்புக்காக ஒதுக்கும் அரசாங்கம் தனது இறைமைக்குள் அடக்கி வைத்திருக்கும் ஒரு இனத்தை அழிப்பதற்காகவே கங்கணம் கட்டி நிற்பதை, பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்ட பாரிய அளவிலான முதலீடு ஒப்புக்கொள்ள வைக்கிறது.

இராணுவத் தளபதி சரத் பொன்சேகா அவர்கள் ஓய்வுபெறும் நிலையில் இருந்தும் அவரது சேவையை நீடித்து, அமெரிக்காவின் அழைப்பின் பேரில் இம்மாத இறுதியில் விஜயம் ஒன்றை மேற்கொள்ளவிருப்பது, இராணுவ ரீதியாக இலங்கைக்கு உதவும் அமெரிக்காவின் அடுத்த கட்ட நடவடிக்கையின் நோக்கமாக இருப்பினும் ஆச்சரியமில்லை.

இந்து மகா சமுத்திரத்தில், குறிப்பாக இலங்கையில் நிரந்தரமான ஒரு கால் பதிப்பை ஊன்றிவிட விரும்பும் அமெரிக்கா, பல சந்தர்ப்பங்களை இந்தியாவின் தலையீட்டால் இழந்தாலும் தனது அந்தரங்க ஆசையை நிறைவேற்றிக் கொள்ள தகுந்த தருணத்தை உன்னிப்புடன் ஊன்றிக் கவனித்து வருவதை அவ்வப்போது விடுவிக்கப்படும் அறிக்கைகள் மூலம் கண்டு கொள்ளலாம். இலங்கை அதிபர் மகிந்த ராஜபக்ச அவர்கள், இலங்கையின் விவகாரத்தில் இந்தியாவின் உதவி தேவைப்படாது என்ற தொனியில் கூறியிருப்பதும், தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த மட்டும் உதவினால் போதுமென வேண்டுகோள் விடுத்திருப்பதுவும், இலங்கைக்குத் தேவைப்படும் உதவிகளை வேறு நாடுகள் உதவ முன்வந்திருப்பதை சூசகமாக வெளிப்படுத்தியிருக்கிறதல்லவா?

இந்தச் சூழ்நிலையில், தமிழ் மக்கள் மீது பிரயோகிக்கப்படும் அத்துமீறிய அடாவடித்தனம், போக்குவரத்துத் துண்டாடல், பட்டினி போடும் உணவுத் தட்டுப்பாடு, பொருளாதார முற்றுகை ஆகிய நடவடிக்கைகள் பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும், பலஸ்தீன மக்களுக்கும் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்கள் கொடுத்து வரும் தொல்லைகளை ஒத்ததாக விருப்பது அனுமானிக்கக் கூடியதே.

## கடல்வழியால் அனுப்பப்படும் உணவுப் பொருட்கள் கூடச் சரியான நேரத்தில் பகிரப்படுவதில்லை

தமிழீழ விடுதலைப் புலிகளின் இலக்குகளை நோக்கி குண்டு வீச்சுக்கள் நடைபெறுவதாகக் கூறிக் கொண்டு, தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் விமான மூலமும், எறிகணைகள் மூலமும் குண்டுகளை வீசி அப்பாவி மக்களையும் சின்னஞ்சிறு குழந்தைகளையும் அழித்தொழிக்கும் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறும் இவ்வேளையில் கூட, போதியளவு சாட்சியங்கள் இருந்தும், போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினரின் பக்கசார்பற்ற அறிக்கைகள் இருந்தும், அமெரிக்கா உட்பட இணைத்தலைமை நாடுகள் இலங்கை அரசை உடனடியாகக் கண்டிக்கவோ அல்லது அத்தகைய குரூரச் செயல்களை தடுத்து நிறுத்தவோ முடியாமல் இருக்கும் தயக்கம், தென்லெபனான் மீது இஸ்ரேல் அரசால் 34 நாட்கள் கட்டவிழ்த்துவிடப்பட்ட காட்டுமிராண்டித்தனமான யுத்தத்தை கண்டிக்கத் தயங்கிய நிலைமைக்கு ஒப்பீடாகிறது. இதன் பின்னணியில் உதவிய வல்லரசு நாடுகள், இலங்கையிலும் இத்தகைய ஒரு நிலைமையை உருவாக்கி விடுகிறதா?

பலஸ்தீன மக்களின் பூர்விகப் பூமியை பலாத்காரமாக ஆக்கிரமித்து தாயகத்திலிருந்து விரட்டப்பட்ட பிரசைகளாக நாளும்பொழுதும் அல்லல்படும் பலஸ்தீன மக்களுடைய அவலம் போல, தமிழ் மக்களின் தாயகத்தை துண்டாடி தமிழ் மக்களை தாங்கொணாத ஒரு துன்பத்தில் அமுக்கி அவர்களது அடிப்படைத் தேவைகளைக் கூட அவர்களுக்கு கிடைக்கவிடாமல் செய்வதில் இலங்கை இராணுவம் வெகுமுனைப்புடன் செயல்பட்டு, வாகரை கதிரவெளிக்கு செஞ்சிலுவைச் சங்கத்தினர் மூலம் எடுத்துச் செல்லப்பட்ட உணவுப் பொருட்கள் திருப்பி விடப்பட்ட சம்பவத்தை ஐக்கிய நாடுகள் சபை இதுவரை கண்டிக்கவோ அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவரத் தவறிய தயக்கமோ, ஐ.நா.சபையின் மீது தமிழ் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை வலுவிழக்கச் செய்கிறது.

மரத்தால் விழுந்தவனை மரமேறி மிதித்தது போல, கடல்வழியால் கொண்டு செல்லப்படும் உணவுப் பொருட்களைக் கூட கையாளும் தொழிலாளர்கள், சரிவரச் செயலாற்றாத வகையில் ஏராளமான பொருட்கள் சிதைந்தும், தேங்கிக் கிடக்கும் நிலையில் உதவாத பொருட்களாக மக்களுக்கு பகிர்ந்தளிப்பது பரிதாபத்துக்குரிய படுமோசமான பணியாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

தமிழ் மக்கள் படும் கஷ்டத்தைப் போக்க மனிதாபிமான சிந்தனையில் சிங்கள மக்களால் சேகரிக்கப்பட்ட உணவுப்பண்டங்கள் கூட, தமிழ் மக்களைச் சென்றடையாமல் போனது திட்டமிட்ட அரசியல் சதியென்று சிந்திக்குமளவுக்கு, இலங்கை அரசின் நிர்வாகம் சீர்கெட்டுப்போய், இராணுவப் பிடிக்குள் அகப்பட்டு திக்குமுக்காடுவதை அரசியல் நோக்கர்கள் அறிவார்கள்.

ஜனநாயக வழிமுறையில், தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை சிங்கள மக்கள் மத்தியில் விளக்கும் திறன்படைத்த தமிழ் அரசியல் பிரமுகர்களையும், ஊடகத்துறை விமர்சகர்களையும் வாயடைக்கச் செய்வதற்காய்ச் செய்யப்பட்ட அரசியல் படுகொலைகளின் பட்டியல் நீண்டுவருவதை அரசாங்கத்தால் நிறுத்த முடியாமல் இருக்கிறதா அல்லது நிறுத்த விரும்பவில்லையா என்ற சந்தேகம் எழுவது இயற்கையானது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் அடங்கிய சம்பூர் பிரதேசத்தை ஆக்கிரமித்த பின், பனிச்சங்கேணி தாக்குதல்களும், இடம்பெயர்ந்த வாகரைமக்களை கதிரவெளி விக்னேஸ்வராக் கல்லூரியில் வைத்து எறிகணைத் தாக்குதல்களால் படுகொலை செய்தும், படு காயங்கள் ஏற்படுத்தியும் துவம்சம் செய்த இராணுவ நடவடிக்கைகள் தற்செயலாக நடந்த ஒரு சம்பவமென அரசாங்கம் மூடி மறைத்தாலும், இது ஒரு திட்டமிட்ட இராணுவ நடவடிக்கையாகவே ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

இத்தகைய தாக்குதல்களின் அச்சுறுத்தலால் இடம்பெயர்ந்த தமிழ் மக்களை மட்டக்களப்பு நோக்கி விரட்டி அடிப்பதே உள்நோக்கமென நம்பலாம்.

தொடரும் எறிகணைத் தாக்குதல்களால், தமிழீழ விடுதலைப் புலிகளை தனிமைப் படுத்தும் ஒரு போர் உபாயமாக இராணுவம் கடைப்பிடிப்பது கண்கூடு.

20 வருடகால யுத்தத்தால் 18,000 க்கு மேற்பட்ட தமிழ் மக்களின் இளம் வாரிசுகளை இழந்ததுமல்லாமல், போரின் அனர்த்தத்தில் சிக்குண்டு மாண்ட 70,000 க்கும் மேற்பட்ட அப்பாவி மக்களை இழந்ததோடு மட்டுமன்றி, தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சிலரையும், ஊடகத்துறை வல்லுனர்களையும் நினைவு கூரும் இவ்வேளையில், நாம் ஒன்றுபட்டு எம எதிர்காலத் திட்டங்களை முன்னெடுப்போம்.


# ANYLOANUK
## Mortgages and Commercial Loans



- Non Status Upto 95% (No Proof of income required)
- Full - Status | Re-Mortgages
- Let-To-Buy Mortgages | Buy-To-Let Mortgages
- Council Purchase - Right To Buy
- Special rate for first time buyers
- Mortgage for European Residents
- Mortgages for Work Permit Holders
- Commercial Loans | Secure Loan

முதல் முறை வீடு வாங்குபவர்களுக்கும் Re-Mortgage செய்பவர்களுக்கும் 100% Mortgage செய்து தரப்படும்.

**FREE** Valuation and Legal Fee paid for Selected Products

Only £199 Broker Fee

CCJ, Default Cases and Bad Credit History ஆனாலும் உங்களுக்கு Mortgages செய்து தருகிறோம்



**No Hidden Charges**
**0800 470 158**

All loans and mortgages are subject ot status
Your home is at risk if you do not keep up repayment of mortgages or other loans secured on it

சிறுகதை

# போலிகள்

காலையில் தன்னுடைய பெற்றோல் நிரப்பும் நிலையத்திற்கு வந்ததிலிருந்தே சதாசிவத்தின் கால்கள் நிலத்தில் நிற்க மறுக்கின்றன. பரபரப்பும் அவசரமும் கலந்த வேகத்துடன் அவர் பம்பரமாகச் சுழன்று கொண்டிருக்கிறார். லண்டன் மாநகரின் அந்தப் பிரபல்யமான கோயில் திருவிழாவின் இன்றைய உபயகாரர் அவர்தான். பரபரப்பு இருக்காதா என்ன?

சதாசிவம் சாதாரண 'அகதியாக' இங்கிலாந்திற்கு வந்தவர்தான். கடும் உழைப்பும் 'வேறுபல' காரணங்களும் இன்று அவரை நகரின் பெயர் குறிப்பிடக் கூடிய தமிழ்ப்பிரமுகராக உயர்த்தியிருக்கிறது. நகரத்தில் இருக்கும் இரண்டு பெற்றோல் நிரப்பும் நிலையங்களுக்கும் மூன்று கடைகளுக்கும் சொந்தக்காரர். கணக்கில் வராத பல 'வியாபாரங்களிலும்' கில்லாடி.

இதை விட ஆலய பரிபாலன சபைத் தலைவர், புலம்பெயர் மக்கள் முன்னேற்றச் சங்கச் செயலாளர்... இப்படிப் பலப்பல பதவிகள். வளமும் வசதியும் உள்ள இடத்தைத் தேடி பட்டங்களும் பதவிகளும் வந்து ஒட்டிக் கொள்வது இயல்பு தானே.

'எல்லாரும் வாயைப் பிளக்கிற மாதிரி என்ரை திருவிழாவை எடுப்பாச் செய்து காட்டாட்டி நான் சதாசிவம் இல்லை.'

மனதிற்குள் சபதம் எடுத்தவாறு காரியங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்.

"குமார்! ஓடிப்போய் தமிழ்க் கடையிலை நல்லதாப் பாத்து ஒரு நூறு தேங்காய் வாங்கிக் கொண்டு வா? சும்மா கண்டதையும் வாங்காமல் நல்லா கிலுக்கிப் பாத்து வாங்கு"

ஏதோ சொல்ல வாயெடுத்த குமாரைக் கவனிக்க அவருக்கெங்கே நேரம்? அதற்குள் தாவி மற்றைய வேலையாளை எதற்காகவோ ஏவிக் கொண்டிருக்கிறார்.

குமார் அந்தப் பெற்றோல் நிலையத்தில் வேலை செய்யும் இளைஞன். புலம்பெயர் மண்ணிலே வாழும் உரிமை மறுக்கப்பட்டு எதிர்காலம் கேள்விக் குறியாக்கப்பட்டுள்ள பல்லாயிரக்கணக்கான தமிழர்களில் ஒருவன். சதாசிவம் முதலாளியிடம் கடந்த மூன்று ஆண்டுகளாக வேலை செய்து கொண்டிருக்கிறான். தான் வாங்கும் சம்பளத்தைப் பற்றிக் கணக்குப் பார்க்காது கடுமையாக உழைப்பவன். விசுவாசமும் நேர்மையும் கொண்ட உழைப்பாளி.

இன்று வேலைக்கு வந்ததிலிருந்தே அவன் மனம் ஒரு நிலையில் இல்லை. அதற்குக் காரணம் மனைவி சுகந்தி. நிறைமாதக் கர்ப்பிணியான அவள் காலையிலிருந்தே வயிற்றுக் குத்துவதாகச் சொல்லிக் கொண்டிருந்தாள். அவளைத் தனியே விட்டுவிட்டு வந்தது அவனை உறுத்திக் கொண்டிருந்தது. அதிலும் இன்றைக்கு வேலைக்கு வெளிக்கிடும் போது 'நீங்கள் இண்டைக்கு என்னோடை நில்லுங்கோ. எனக்குப் பயமாக் கிடக்குது' என்று சுகந்தி கெஞ்சியது கண்ணுக்குள் நின்று அவனைப் பாடாய்ப் படுத்தியது.

பாவம் சுகந்தி. அவள் 'அகதியல்ல'. பல்கலைக்கழகத்திலே படிப்பதற்காய் மாணவியாய் வந்தவள். அவன் வேலை செய்யும் பெற்றோல் நிலையத்திற்கு அண்மையில் சகோதரனின் குடும்பத்துடன் வசதியாகவே வாழ்ந்து கொண்டிருந்தவள். ஆனால் ஆளையும் வாழ்வையும் மாற்றி விடும் இந்தக் காதல் அவள் வாழ்வையும் மாற்றித் தான் விட்டது.

வீட்டிலே தன்னுடைய காதலைச் சொன்ன போது ஆரம்பத்தில் எதிர்ப்புக் கிளம்பவில்லைத் தான். ஆனால் குமாரைப் பற்றி மணந்து பார்த்துவிட்ட பொன்னுத்துரை மாமா வந்து 'அந்த' விசயத்தைச் சொன்னதுமே எல்லாம் தலைகீழாகிப் போய்விட்டது.

'அந்தப் பெடியன்ரை ஆக்கள் நாங்கள் புழங்கக்கூடாத பகுதியாம். ஏதோ யோசிச்சுச் செய்யுங்கோ'

தமிழ்ச் சமூகத்தின் சாபக் கேடுகளில் ஒன்றான இந்தச் சாதி வெறி இப்போது அருகிவிட்டது என்றும் குறிப்பாக புலம்பெயர் நாடுகளிலே முற்றாகவே மறைந்து விட்டது என்றும் மேடையேறி முழங்குபவர்களுக்கு பத்திரிகைகளிலே வரும் 'மணமக்கள் தேவை' விளம்பரப் பகுதியைக் கொண்டுபோய்க் காட்ட வேண்டும்.

நாங்கள் அதுகள் ஒண்டும் பாக்கிறதில்லை என்று முன்னறையில் முழங்குபவர்கள் பின் குசினிக்குள் சாதியைக் கட்டிப் பிடித்துக் கொண்டுதானே இருக்கிறார்கள்.

தன்னுடைய பொறுப்பை ஒப்பேற்றிவிட்ட திருப்தியுடன் பொன்னுத்துரை மாமா போய் விட்டார். வீட்டிலே பிரளயம் கிளம்பிவிட்டது.

'சுகந்தி... சொல்லிப் போட்டன். நீ இனிமேல் அவனோடை கதைச்சாயெண்டால் வீட்டை விட்டுத் துரத்திப் போடுவன்'

வீட்டிலே இதுவரை காட்டப்பட்ட பச்சைக் கொடி இறக்கப்பட்டு சிவப்புக் கொடி ஏற்றப்பட்டு விட்டது.

'உங்கை பார் அவற்றை கொழுப்பை.. என்ன துணிவிருந்தால் எங்களோடை சம்பந்தம் வைக்க வெளிக்கிடுவார்'

கேட்கக் கூடாத வார்த்தைகள் எல்லாம் நாராசமாய் அவள் காதில் இறங்கின. பெண்மை மென்மையானது தான். ஆனால் அந்த மென்மை தீண்டப்படும் போது அதிலும் தன்னுடைய அன்புக்குரியவன் கொச்சைப்படுத்தப்படும் போது வன்மை வீறு கொண்டு எழுவது இயற்கை தானே.

'நீங்கள் என்னைத் துரத்தத் தேவையில்லை. நானே போறன். நீங்கள் உந்தச் சாதி வெறியைத் தூக்கித் தலையிலை வைச்சிருக்கும் மட்டும் நான் இந்த வீட்டை எட்டியும் பாக்க மாட்டன்'

ஆவேசத்துடன் புறப்பட்டு அவனிடம் வந்து விட்டாள். அவர்கள் கணவன் மனைவியாகி இரண்டு வருடங்கள் உருண்டோடி விட்டன.

'என்ன ஏமலாந்திக் கொண்டு நிக்கிறீர்? நீர் இன்னும் கடைக்குப் போகேல்லையே'

சதாசிவத்தின் அதட்டலில் சுயநினைவுக்கு வந்தவனாய் கடைக்குச் சென்று தேங்காயை வாங்கிக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு மெல்ல ஆரம்பிக்கிறான்.

'அண்ணை, சுகந்தி வீட்டிலை தனிய இருக்கிறா... காலையிலை இருந்து வயித்துக் குத்துது எண்டு சொல்லிக் கொண்டிருந்தவா சரியான சாப்பாடும் இல்லை. எனக்கு இண்டைக்கு லீவு தந்தீங்களெண்டால். . . '

குமார் முடிக்கவில்லை. அதற்குள் சதாசிவம் சன்னதங் கொண்டு விட்டார்.

"விசர்க் கதை கதைக்காதை. பேசாமல் வேலையைப் பார். எனக்கு இஞ்சை தலைக்கு மேலை வேலை கிடக்குது. . ."

"சரியண்ணை நான் வேலை செய்யிறன். சுகந்திக்கு ரெண்டு நாளாச் சரியான சாப்பாடும் இல்லை. பாவம், பிள்ளைத்தாச்சி. ஒரு அம்பது பவுண் கடனாத் தந்தீங்களெண்டால் மருந்தும் சாப்பாடும் வாங்கிக் கொண்டுபோய்க் குடுத்திட்டு ஓடி வாறன். . . . . "

'எனக்கு விசர் வரப் பண்ணாதை. இண்டைக்கு எவ்வளவு செலவெண்டு உனக்குத் தெரியும் தானே. அந்த இந்தக் கதையை விட்டுப் போட்டு இஞ்சை வந்து இந்த ரில்லிலை நில் பாப்பம். நான் ஒருக்கால் கோயிலடிக்குப் போயிட்டு வாறன்'

காசாளர் பொறுப்பை அவனிடம் ஒப்படைத்து விட்டு விறுக்கென்று கிளம்பி விட்டார்.

பாவம் அவன் தான் என்ன செய்வான்? முதலாளியைப் பகைச்சுக் கொண்டு எங்கே தான் போக முடியும்? அதுவும் நம்பருமில்லாமல் 'களவாய்' வேலை செய்கின்ற அவனால் இன்னொரு வேலையை இலகுவாகத் தேடிவிடத் தான் முடியுமா?

'பாவம் சுகந்தி, சொந்தம் பந்தம் எல்லாத்தையும் விட்டிட்டு என்னையே நம்பி வந்து எனக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கிறவளின்ரை இந்தச் சின்ன விருப்பத்தைக் கூட நிறைவேற்ற முடியாமல் கிடக்குதே. சீ! இதென்ன வாழ்க்கை. ஏழையாப் பிறந்திட்டால் பிள்ளை, குட்டி ஒண்டுமில்லாமல் சந்நியாசியாத்தான் வாழ வேணும். இல்லாட்டிச் செத்துப் போக வேணும்."

இயலாமை வெறுப்பாக மாறுகிறது.

விறுக்கென்று கிளம்பிப் போகும் மோட்டார்க் காரின் சத்தத்திலே சுதாகரித்துக் கொண்டு பார்த்தபோது ஐந்தாம் நம்பர் பம்மிலே பெற்றோல் அடித்துக் கொண்டிருந்த காரைக் காணவில்லை. ஐம்பது பவுணுக்குப் பெற்றோல் அடித்துக் கொண்டு போய்விட்டான்.

இனி என்ன செய்வது? முதலாளியிடம் சொல்லி கமராவில் பார்த்து நம்பரைக் கண்டு பிடித்து பொலீசிற்கு அறிவிக்க வேண்டும்.

எதற்கும் முதலாளி வந்ததும் கதைத்துப் பார்ப்போம் என்று எண்ணியவனாய் வேலையில் மூழ்கி விட்டான். முதலாளி வந்ததும் மெல்லப் பேச்சை எடுக்கிறான்.

'ஐந்தாம் நம்பர் பம்மிலை ஒருத்தன் ஐம்பது பவுணுக்குப் பெற்றோல் அடிச்சுப் போட்டு ஓடீட்டான். கமராவில் பார்த்து நம்பரைச் சொல்லுவீங்களோ?'

'என்ன ரில்லிலை ஏத்தி விட்டிட்டன் எண்டு சாதிக்கிறீரோ? நான் இஞ்சை தலைக்கு மேலை வேலையோடை நிக்கிறன். இதுக்குள்ளை கமராவைப் போட்டுப் பாத்துக் கொண்டு சதிராட என்னாலை ஏலாது. இண்டைக்கு ரில்லிலை காசு குறையட்டும் பாப்பம்'

அந்தப் பணத்தை நீ தான் போட்டுக் கட்டவேண்டும் என்பதை மறைமுகமாகச் சொல்லி விட்டார். அவனுக்குக் கோபம் வரவில்லை. அந்தக் குணம் தான் புலம் பெயர்ந்து வந்த இந்த ஐந்து ஆண்டுகளில் கொஞ்சம் கொஞ்சமாகச் செத்துப் போய் விட்டதே.

அவனுடைய முகத்திலே முத்திரையிட்டிருந்த கவலையும் சோர்வும் அந்தக் கடையிலே வேலை செய்யும் அந்த போலந்து இளைஞனை ஏதோ செய்திருக்க வேண்டும்.

அவனருகே வந்தவன் நேற்றுத் தனக்குக் குதிரைப் பந்தயத்திலே 100 பவுண்கள் வெற்றி கிடைத்ததாகவும் அதில் ஐம்பது பவுணை ரில்லிலே போட்டுவிட்டு மிகுதிப் பணத்திலே சுகந்திக்கு மருந்தும் சாப்பாடும் வாங்கிக் கொடுக்கும் படி சொல்லி அவனுடைய கைக்குள் பணத்தைத் திணித்துவிட்டுச் சென்று விட்டான்.

அந்தப் போலந்து இளைஞனை சூதாடி என்றும் குடிகாரன் என்றும் சொல்லி அவனுடன் பழகுவதை முடிந்தளவு தவிர்த்து வந்த குமாரின் மனம் குற்ற உணர்ச்சியில் குறுகிப் போய் விட்டது.

இத்தனை விந்தைகளையும் அதிசயங்களையும் செய்து கொண்டிருக்கும் இந்த விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் மனிதனுடைய மனத்தை அறிந்து கொள்வதற்குக் கருவியொன்று செய்தால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று தனக்குள் எண்ணிக் கொண்டான்.

"சரி சரி எனக்கு நேரம் பொயிட்டுது. நான் வெளிக்கிடப் போறன். நீ கடையைப் பூட்டித் திறப்பைக் கொண்டு வந்து கோயிலிலை தா. கடையைக் கவனமாப் பாத்துக் கொள். கைச் செலவுக்கு இதை வைச்சுக் கொள்."

10 பவுணை நீட்டுகிறார் .

எலும்புத் துண்டை வீசுகிறார் என்று தெரிந்தாலும் பணத்தை வாங்கிக் கொண்டு தலையை ஆட்டுகிறான்.

மாலையில் வேலை முடித்து விட்டு திறப்பைக் கொடுப்பதற்காக கோயிலைச் சென்றடைகிறான்.

"அடியார்களே, சதாசிவம் ஐயா அவர்கள் ஆலய அபிவிருத்திக்கென ஆயிரம் பவுண்களை அன்பளிப்பாக வழங்கியிருக்கிறார். அவரது சமூகப் பணிகளை நாம் வாயார வாழ்த்துவோம். இறைவன் அவருக்கு எல்லா ஐசுவரியங்களையும் வழங்க வேண்டும்"

கோயில் ஒலிபெருக்கியில் ஒருவர் கடவுளுக்குச் சிபார்சுக் கடிதம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.


குமாருக்கு என்றோ கேட்ட

'இருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடம் தேடி எங்கெங்கோ அலைகின்றார் ஞானத் தங்கமே அவர் ஏதும் அறியாரடி ஞானத் தங்கமே'

என்ற பாடல் வரிகள் ஞாபகத்தில் வர அத்தனை கவலைகளுக்குள்ளும் உதட்டிலே ஒரு புன்னகை தோன்றி மறைகிறது.

*- ஒவியன்*

S. Satha & Co Solicitors
We are always at your service



* Injunction
* Family Law
* Immigration
* Criminal Law
* Conveyancing
* Legal Aid Work

Community Legal Service
Criminal Defence Service

Principal Partner
S.Sathananthan

Tel: 020 8471 9484
Fax: 020 8471 9485
Property Department Fax: 020 8471 1887

376-378 High Street North,
Manor Park
London E12 6PH

Emergency No
07956 288 671
DX: 133012 Upton Park 2

# ரத்துவத்தையிடம் கேள்விகளும் அவரின்ர பதில்களும்!



எல்லோருக்கும் தெரியாத ரகசியம் ஒண்டு சொல்லப் போறம் கேளுங்கோ! ஒரு பேப்பர் ஒரு பேப்பர் எண்டு சொல்லிக் கொண்டு திரியிறவை எல்லாரும் வேற வேலை இல்லாத ஆக்கள் பாருங்கோ. அதிலயும் பந்தி எழுதிறம் கட்டுரை எழுதிறம் எண்டு புளுகுகிற ஆக்கள், நாங்கள்தான் ஆசிரியர் எண்டு சொல்லி விலாசம் எழுப்பிற ஆக்கள் ஒரு சதத்துக்கும் உதவாதவை.

இப்பிடி இருக்கையிலைதான் எங்கடை முன்னை நாள் யுத்த நாயகனும் துட்ட கைமுனுவின் கொள்ளுப் பேரனுமாகிய மாமா ரத்வத்தை ஒரு பேப்பரை அணுகினார். ஒரு பேப்பரின் தரம் காணாது எண்டும் அதனை ஒசியில் வாசிப்பவரை கொஞ்சம் யோசிக்க வைக்க தரத்தைக் கூட்ட தான் விரும்புவதாகவும் சொன்னவர். இத்தனை பேருக்கும் இடம் குடுத்தனாங்கள் இவருக்கு மாத்திரம் இல்லையெண்டு சொல்லி முகம் முறிக்கிறதே எண்டுட்டு விட்டிட்டம். ஆக மாமா ரத்வத்தைக்கும் இந்தக் கிழமையிலிருந்து இடம் குடுத்திருக்கிறம்.

ஆய்போவன் எல்லாருக்கும்!

நம்ம சந்திரிக்கா மருமகள், சங்கரி ஐயே எல்லாருக்கும் யுனெஸ்கோ வேலையும் லச்ச லச்சமா காசும் குடுக்கிறததாண. அதுதா நானும் ட்ரை பண்ணுறது. யுனெஸ்கோ கிடைக்கு மட்டும் நாம ஒரு பேப்பரில வேல செய்றது. நீங்க கேள்வி கேக்கிறது, நாம பதில் சொல்றது. நீங்க என்ன சொல்றது?

*1வது கேள்வி:* எனக்கு வெளிநாட்டுக்கு வந்து உடம்பு நல்லா பெருத்திட்டது சேர். உடம்பைக் குறைக்க ஒரு வழி சொல்லுங்கோவன்?

*- ஜெயத்தேவன், லண்டன்*

*ரத்வத்தை பதில்:* நீங்க வெளிநாட்டு தெமிழ் ஆக்கள். ரொம் மோசம் தாண. நீங்க ஸ்ரீலங்கா வாறது இல்ல. அதுதா பிரச்சின. நீங்க அங்க வாறது. நாம நம்மட போலிசிட்ட சொல்லறது. அவங்க உங்கள ஒரு ஆறு மாசம் உள்ளுக்க கொட்டி எண்ணு சொல்லி துவைக்கிறது. எல்லாம் சரியாகி போறதுதான. என்ன சொல்றது?

*2வது கேள்வி:* என்ர மனிசன் குடிச்சுப் போட்டு வந்து என்னோட பெரிய சண்டை. அவரை எப்பிடித் திருத்தலாம்?

*- மங்கயக்கரசி, லண்டன்*

*ரத்வத்தை பதில்:* ரொம்ப சிம்பிள் தங்கச்சி. அடுத்த தரம் தம்பி குடிச்சு நித்திர கொள்றது. நீங்க அவங்க தலையில கல்லு போடுறததான. அப்புறம் அவங்கள உங்கட காடனில பொதைக்கிறது. அப்புறம் நீங்க தம்பி ஸ்ரீலங்கா போனது எண்ணு எல்லாருக்கும் சொல்றது. அங்கிட்ட போய் அவங்க கொட்டில சேந்து நிக்கிறது எண்ணு சொல்றது. ஏதாவது பிரச்சின வந்தா நீங்க யுனிசெப்புக்கு போன் பண்ணி, கொட்டி அவங்கள கடத்தினது எண்ணு புகார் பண்றது. எல்லாம் தீந்து போறதுதாண.

*3வது கேள்வி:* யாழ்ப்பாணத்தில அப்பா வோடை போன் கதைச்சன். கொலஸ்ரோல் மருந்து ஒருடமும் எடுக்கேலாதாம் எண்டு சொன்னவர். உங்கட ஆக்கள் ஏனிப்பிடி அனியாயம் செய்யினம்?

*- வாமதேவன், பாரிஸ்*

*ரத்வத்தை பதில்:* நீங்க மல்லி ரொம்ப அனியாயம் சொல்றது தான. வெளிநாட்டு தெமள் ஆக்கள் அதிலும் யாப்பனே ஆக்கள் நம்ம மகிந்த மல்லிக்கு லெட்டர் போட்டது தாண. ஒங்க அப்பா அம்மா எல்லாரும் ரொம்ப ரொம்ப சாப்பிட்டு குண்டாப் போயி கொலஸ்ரோல் கூடிப்போயி பிறசர் கூடிப்போயி கஷ்டம் பண்றதுதாண.

அதுதா மகிந்த மல்லி றோட்டை பூட்டுனது. பட்டிணி போடுறது.கொஞ்ச நாளில எல்லாரும் மெலிஞ்சி போறது தாண. அப்புறம் பிறசறும் இல்லத்தாண. கொலஸ்ரோலும் இல்லத்தாண. எல்லாரும் நல்லா இருக்க வேணும்தாண.

*4வது கேள்வி:* அமெரிக்க ஜனாதிபதி புஷ் உங்களக் கூப்பிட்டு அடுத்த பாதுகாப்பு அமைச்சராக்க கேட்டதாக அறிக்கைகள் வருகின்றன. உண்மையா?

*- ராமராஜ், சுவிஸ்*

*ரத்வத்தை பதில்:* ஆ... நீங்க சீஐஏக்கு வேல செய்றது? எப்பிடி இது எல்லாம் தெரியிறது? எங்கள ஈராக்கு போய் சண்டை பிடிக்க புஷ் ஐயே கேட்டது தாண. நம்மளக்கு ரொம்ப விருப்பம் தாண. ஆனா நம்பளுக்கு பாதை சொல்லித் தாறது நம்ம சங்கரி ஐயே தாண. அவனுக்கு மகிந்த ஐயே வேள குடுத்திருக்கிறது தாண. சங்கரி ஐயே இல்லாம நாம ஒண்ணும் பண்ண முடியாது. நீங்க ஒருக்கா சங்கரி ஐயேக்கு போன் பண்ணி கேக்கிறது?

*5வது கேள்வி:* இந்தமுறை மாவீரர் தின உரையைப் பற்றி என்ன நினைக்கிறீங்கள் சேர்?

*- சங்கரி, இலங்கை*

*ரத்வத்தை பதில்:* சீ... அதைப் பற்றி பேசவேணாங்க. அந்த மல்லிக்கு நம்ப மேல ரொம்ப கோவந்தாண. நாம அள்ளி அள்ளி ஆயுதங் குடுத்ததுதாண. அப்பிடிக் குடுத்தும் நம்ம பாட்டியை குளப்பினவங்கதாண. ரொம்ப கோவங். கதைக்க வேணாங்.

*6வது கேள்வி:* உங்கடை மருமகன் அனுரா பண்டார நாயக்கா எப்பிடி இருக்கிறார்?

*- ஜெமினி ஜேர்மனி*

*ரத்வத்தை பதில்:* அனுர தாண அடுத்த உலக சுமோ சம்பியன் ஆக ட்ரை பண்றது தாரண. அதுதா அவங்க புல்ரைம் வேல. தின்றது. நித்திர கொள்றது. திண்றது. அவங்க வாற ஜனவரி ரோக்கியோ போறது. சுமோ வெளார்றது. ஸ்ரீலங்காவ பேமஸ் அக்கறது.

*7வது கேள்வி:* உங்கட மருமகள் சந்திரிகா யுனெஸ்கோவில என்ன செய்யிறா?

*- ரகு, கனடா*

*ரத்வத்தை பதில்:* சந்திரிக்கா மிச்சங்க கெட்டிக்காரிதாண. உலகத்தில எங்க பிரச் சினை நடந்தாலும் அவங்க தீத்து வைக்கிறது. அவங்கட அப்ரோச்ரொம்ப சிம்பிள்-தாண. குண்டு போர்றது.

பள்ளிக் குடங்கள ஒடைக்கிறது. ஆமி போய்ச சொல்லி சனத்தை காணமப் போறது. அவங்கதான் புஷ் ஐயேக்கு இப்ப அட்வைஸ் குடுக்கறிது. ரொம்ப நல்லங்தாண. அவங்க சமாதானத்துக்குதாண் சண்ட பிடிக்கிறது.


*- ரவீந்திரன்*

KINGSTONS SOLICITORS

ஐரோப்பிய பிரஜா உரிமையுடன் **Sponsor** செய்ய விரும்புபவர்களுக்கு ஐரோப்பிய நாட்டு அகதி நிலை விண்ணப்பங்களை நுட்பமாகத் தயாரித்து சமர்ப்பித்தல், அகதி நிலை கோருதல், அகதி நிலை மேன் முறையீடுகள் **(Detention & Bail)** இன்னும் பல சட்டம் சம்பந்தமான சகலதேவைகளுக்கும் எம்மை உடன் நாடுங்கள்

எங்கள் நேர்மையான நம்பிக்கையான சேவையை விரும்பிய வாடிக்கையாளர்கள் ஏற்கனவே பலர் இருக்கின்றனர்.

- IMMIGRATION
- FAMILY & MATRIMONIAL
- CRIMINAL LITIGATION
- CIVIL LITIGATION
- LANDLORD AND TENANT
- PERSONAL INJURY
- EMPLOYMENT
- WILLS AND PROBATE



IMMIGRATION

- ASYLUM AND HUMAN RIGHTS APPLICATION
- EEA APPLICATION
- WORK PERMIT
- STUDENT VISA
- ENTRY CLEARANCE APPLICATION
- APPEALS
- DETENTION AND BAIL
- INJUNCTION
- JUDICIAL REVIEW
- NATURALISATION APPLICATION

Contact:
Chrishanthi Vincent
LLB (Hons) London

Tel:
020 8540 0468
Fax:
020 8540 7504

251A HAYDONS ROAD,
WIMBLEDON,
LONDON SW19 8TY

Your home is at risk if you do not keep repayment of mortgages or other loans secured on it.

சி. புஸ்பராசாவின்

# ஈழப் போராட்டத்தில் எனது (பொய்) சாட்சியம்

## அவரது புத்தகம் மற்றும் அவரைப் பற்றிய ஒரு பார்வை - பாகம் 11

**சாத்திரி**
*( ஒரு பேப்பருக்காக )*

ஈழபோராட்டத்தில் இறங்கிய போராட்ட இயக்கங்கள் இந்தியா தவிர்ந்த வேறு பிற நாடுகளிலும் பயிற்சிகள் எடுத்திருந்தன என்று கடந்த பகுதியில் பார்த்திருந்தோம். அதில் முக்கியமாக பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் இராணுவ அமைப்பான பி.எல்.ஓ விடமும் நிக்கரகுவா வின் விடுதலை இயக்கங்களிடமும் பயிற்சிகளையும் எடுத்திருந்தன. இதில் ஈரோஸ். புளொட். ஈபிஆர் எல்.எவ். ஆகிய இயக்கங்களே அடங்கும். அதைவிட இலங்கை அரசிற்கு ஆயுத உதவி மற்றும் இலங்கை இராணுவத்திற்கு பயிற்சிகள் வழங்கிய இஸ்ரவேலின் உளவு அமைப்பான மொசாட் இலங்கை இராணுவத்திற்கு மட்டுமல்ல தமிழ் இயக்கமான புளொட் அமைப்பிற்கும் பயிற்சிகளை வழங்கியது.

காரணம் இஸ்வேலின் இலங்கையுடனான நட்பு முழுக்க முழுக்க இராணுவ நலன் சார்ந்ததாகவே அன்றிலிருந்து இன்றுவரை இருந்து வருகிறது. இலங் கையில் பிரச்சனை இருக்கும் வரைதான் தாங்கள் தங்களது இராணுவ தளபாடங்களை இலங்கைக்கு விற்பனை செய்வது மட்டுமல்ல அவற்றை பரீட்சிக்கும் ஒரு பரீட்சை களமாகவும் இலங்கையை அது வைத்திருந்தது அதே போல தென்கிழக்காசியாவிலேயே இஸ்ரவெலிடம் இருந்து இலங்கை அரசே அதிகளவு ஆயுத தளவாடங்களை வாங்கிய நாடும் ஆகும். எனவே தான் மொசாட் அமைப்பு தமிழ் இயக்கங்களிற்கும் பயிற்சிகளை வழங்கியது இதன் விபரங்களை மொசாட்டின் ஒய்வுபெற்ற அதிகாரி ஒருவர் தன்னுடைய புத்தகம் ஒன்றில் எழுதியிமிருந்தார். புளொட் அமைப்பில் பாலஸ்தீன பி.எல்.ஓ விடம் பயிற்சி பெற்றதாக கூறிக்கொண்ட பலர் உண்மையிலேயெ மொசாட்டிடம்தான் பயிற்சி எடுத்திருந்தனர். பயிற்சி எடுத்தவர்களிற்கு தாங்கள் உண்மையில் யாரிடம் பயிற்சி எடுக்கிறோம் என்று உண்மையில் தெரிந்திருந் திருந்ததா? என்பது தெரியவில்லை.

ரெலோவிற்கு இந்திய இராணுவமே பயிற்சிகளை தொடர்ந்தது. புலிகள் அமைப்பு பின்னர் தமிழ் நாட்டிலும் தமிழீழத்தின் பகுதிகளிலும் பயிற்சி பாசறைகளை நிறுவி தாங்களே பயிற்சிகளை வழங்க தொடங்கினார்கள் வேறு எந்த வெளிநாட்டிடமும் பயிற்சி உதவி என்று போகவில்லை. காரணம் இங்கு ஒரு சம்பவத்தை நினைவு படுத்த விரும்புகிறேன் 80 களில் ஆயுதபோராட்டம் முனைப்பு பெற்றவேளையில் அனேகமான எல்லா இயக்கங்களும் பாடசாலைகளிற்கு வந்து அங்கு மாணவர்கள் மத்தியில் போராட்டம் பற்றிய அவசியத்தையும் விழிப்புணர்வையும் ஊட்டுவதற்காக மாணவர்களை அழைத்து வகுப்புகள் வைப்பார்கள். அப்படியே தங்கள் அமைப்பில் இணைய விரும்புபவர்களையும் இணைத்து கொள்வார்கள்.

அப்படி ஒரு நாள் நான் படித்த கல்லூரியில் ஈ.பி.ஆர். எல்.எவ்வினர் ஒரு வகுப்பை வைத்தனர் நானும் போயிந்தேன் அதில் அவர்கள் கியூபா விடுதலை போராட்டம் பற்றி அழகாக விளங்கபடுத்தி அதை போல நாமும் போராடவேண்டும் என்று கூறி கியுபா விடுதலை போராட்டம்பற்றி தமிழில் சிறிய ஒரு புத்தகம் ஒன்றையும் அனைவரிற்கும் தந்துவிட்டு போனார்கள். அடுத்ததாக புலிகள் அமைப்பின் சார்பில் திலீபன் ஒரு வகுப்பை வைத்தார். அதில் முன்னர் ஈபியினரின் வகுப்பில் கலந்து, கொண்ட அனைவருமே திலீபன் நடாத்திய வகுப்பிற்கும் சென்றிருந்தோம்.

அதில் திலீபன் இலங்கையரசின் அடக்குமுறை கள் படுகொலைகள் முக்கியமாக மாணவர் மீதான தரப்படுத்துதல் பற்றிய உள்நோக்கம் என்பனவற்றை விபரித்து விட்டு யாரிற்காவது ஏதாவது சந்தேகங்கள் இருந்தால் கேள்வி கேட்கலாம் என்றார். அப்போது ஒரு மாணவன் எழுந்து திலீபனிடம் அண்ணா முதலில் கூட்டம் வைத்த ஈபியினர் கியூபா விடுதலை போராட்டத்தை பற்றி விளங்கபடுத்தி அழகாக உதாரணமும் காட்டி அந்த நாட்டு மக்களை போலவே நாங்களும் போராட வேண்டும் என்று சொல்லி இதோ இந்த புத்தகத்தையும் தந்தார்கள் ஆனால் நீங்கள் எந்த நாட்டு விடுதலை போராட்டத்தையும் உதாரணமாக சொல்லவில்லையே என் உங்களிற்கு தெரியாதா? என்று கொஞ்சம் நக்கலாகவே கேட்டார்.

அதற்கு திலீபன் சிரித்தபடியே சொன்னார் தம்பி உதாரணத்தை நானும் சொல்லலாம் வியட்னாம் கியூபா பாலஸ்தீனம் என்று வேறுநாட்டு போராட்டங்களை பற்றி சொல்வது கொஞ்சம் கவர்ச்சியாகவும் இருக்கும் எனக்கும் இதெல்லாம் தெரியும் என்று காட்டி உங்களிடம் ஒரு மதிப்பை உயர்த்ததான் இவை உதவுமே தவிர உண்மையான எங்கள் போராட்டத்திற்கு இவை பெரிதாய் உதவாது எங்கள் போராட்டத்திற்கான உதாரணங்களை அனுபவங்களை எங்கள் போராட்டத்தில இருந்தேதான் பெறவேண்டும் உதாரணமாய் கியூபா கொரில்லா யுத்தத்திற்கு அந்த நாட்டின் இயற்கை அமைப்பு மலையும் காடுகளும் போராளிகளிற்கு உதவின அதைபடித்துவிட்டு காடுகளோ மலைகளோ இல்லாத எங்கள் யாழ் குடாநாட்டில் எப்படி கெரில்லா யுத்தத்தை முன்னெடுப்பது என்று தலையை போட்டு குழப்பவேண்டாம். எங்கள் குடாநாட்டின் ஒழுங்கை அமைப்புகள் தான் எங்கள் கெரில்லா யுத்தத்தின் காப்பரண்கள் விரும்பினால் அறிவை வளர்த்து கொள்ள மற்றைய விடுதலை போராட்டம்பற்றிய புத்தகங்களையும் படியுங்கள் என்றார்.

இந்திய படையுடனான புலிகளின் யுத்தத்தின் போதும் ஏன் இப்பொழுதும் நினைத்து பார்க்கிறேன் திலீபன் அன்று சொன்னது எவ்வளவு நிதர்சனமான வார்த்தைகள். இப்படி வேறுநாடுகளில் பயிற்சிகள் பெற்றும் வேறு நாட்டு போராட்டங்களை பற்றியே பக்கம் பக்கமாக பேசியும் எழுதியுமே மற்றைய இயக்கங்கள் காலத்தை கடத்தி காணாமல் போயும் விட்டன. இதில் ஈ.பி..ஆர்.எல்.எவ். இயக்கமும் அதன் செயற்பாடுகளை நியாயபடுத்தும் புஸ்பராசாவும் கூட விதிவிலக்கல.

இதில் இந்தியா ஈழபோராட்ட அமைப்புகளிற்கு பயிற்சிகள் வழங்கினாலும் இந்த அமைப்புகள் ஒன்ற ாய் இணைந்துவிடாதபடி மிக கவனமாக பார்த்து கொண்டார்கள் ஏனெனில் இயக்கங்கள் ஒன்றிணைந்தால் தங்கள் கட்டுபாடுகளை மீறி இவர்கள் ஈழத்தை அமைத்து விடுவார்கள் என்கிற பயத்தினால் இடைக்கிடை அந்த அமைப்புகளிற்கிடையே பிரச்னைகளை உரு வாக்குவதிலும் ஏன் அந்த இயக்கங்களின் உள்ளேயே கூட பிரச்சனைகளை உருவாக்கி விட்டுகொண்டும் தான் இருந்தனர். இந்த விடயத்தில் அவர்கள் வெற்றியும் பெற்றனர். இயக்க உட்படுகொலைகளிற்கு றோவினரின் பின்னணி இருந்தது என்று புஸ்பராசாவே ஒத்துகொள்கிறார்.

அதே நேரம் இந்த போராட்ட அமைப்புகளிற்கும் தமிழ் நாட்டு தமிழர்களிற்கும் அதிகளவு நெருக்கத் தையும் இந்தியபுலனாய்வு துறை விரும்பவில்லை அதற்குள்ளும் அவ்வப்போது ஏதாவது சதி செய்து கொண்டேதான் இருந்தனர். ஆனாலும் இந்த விடயத்தில் றோ அதிகாரிகளால் பெரிய வெற்றியை பெற முடியவில்லையென்றே சொல்லலாம். தமிழ் நாட்டின் அரசியல் விளையாட்டுக்களை தவிர்த்து பார்த்தால் தமிழ்நாட்டு தமிழரின் ஆதரவும் அக்கறையும் ஈழத்தமிழரிற்கு எப்பொழுதும் இருந்துகொண்டேதான் இருக்கிறது. தற்பொழுது அது புத்துயிற் பெற்று இன்னும் வேகமெடுக்க தொடங்கியுள்ளது இதுவும் சில இந்திய கொள்கை வகுப்பாளர்களிற்கும் சில புலனாய்வு அதிகாரிகளிற்கும் அவ்வளவு மகிழ்ச்சியை கொடுக்காது.

இதை விடுத்து இந்திய படை காலத்தை பார்த்தால் ஈழத்தில் இந்திய படைகாலத்தில் கூட இந்திய அரசு தங்கள் ஒட்டுக் குழுவாக ஒரு குழுவை வைத்திருக்காமல் அங்கும் பல குழுக்களையே வைத்திருந்தனர் காரணம் ஒரேயொரு குழுவை வைந்திருந்து அது சில நேரம் தங்கள் மக்களை தாங்களே எண்ணியபடி துன்புறுத்தி படுகொலைகளை செய்வது என்று மனம் மாறியோ அல்லது வேறு விடயங்களால் இந்திய அதிகாரத்துடன் முரண்பட்டு பிரிந்து போய் விட்டாலோ அது இந்திய அதிகாரத்திற்கு, பேரிழப்பாகிவிடும் எனவே தான் ஒன்று கைவிட்டு போனாலும் இன்னொன்று தங்கள் தாளத்திற்கு ஆடும் என்பதால் பல குழுக்களை இயக்கி அதில் எந்தக்குழு தங்களிற்கு அதிக விசுவாசமாய் இருக்கிறதோ அதன் விசுவாசத்திற்கேற்ப அதற்கு சலுகைகளை வழங்கினர்.

அப்படி அதிக விசுவாசம் காட்டியகுழுதான் புஸ்பராசா சார்ந்திருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கமாகும். அவர்களின் கீழ் ஒரு தமிழ் தேசிய இராணுவம் என்று ஒரு படையணியை உருவாக்கி ஒரு கண்துடைப்பு வாக்கெடுப்பையும் நடாத்தி வடக்குகிழக்கு மகாணத்தை கடதாசியில் சில கையெழுத்துகளால் இணைத்து தங்கள் நூலில் ஆடும் வரதராஜபெருமாளை முதலமைச்சரும் ஆக்கினார்கள். இன்று இந்திய அரசால் உருவாக்கபட்ட அந்த வடக்கு கிழக்கு கடதாசி இணைப்பைகூட தமிழருடன் செய்து கொள்ளும் எல்லா ஒப்பந்தங்களையும் கிழித்தே பழக்கபட்ட சிங்கள இனவாதம் அதையும் கிழித்து குப்பையில் போட்டுவிட்டு கூத்தாடுகிறது. அதைபார்த்து மண்டையை சொறிந்தபடியே மகிந்தராஜபக்சவிற்கு செங்கம்பள வரவேற்பு குடுத்து மகிழ்கிறது இந்திய மத்திய அரசு. இந்த இந்திய இராணுவத்தால் உருவாக்கபட்ட தமிழ் தேசிய இராணுத்தின் பின்னால் தமிழ் மக்களின் சொல்லமுடியாத வேதனைகள் இழப்புக்கள் அழுகைகள் அவலங்கள் என்று ஏராளம் ஏராளம். அடுத்த பாகத்தில் அவற்றையும் பார்த்து கொண்டு இந்த தொடரை முடிவிற்கு கொண்டு வரலாம்.

**WANTED**
**MARKETING EXECUITIVES** - BY A FINANCIAL SERVICES COMPANY
M 25 க்கு உட்பட்ட அனைத்து இடங்களிலும் முன்னனுபவம் தேவையில்லை - பயிற்சி அளிக்கப்படும். தமிழ் சமூகத்துடன் மிகவும் தொடர்புள்ளவர்.
Contact: **020 8150 9714**

**Room for Let**
Double room ஒன்று வாடகைக்கு உண்டு.
North cheam area.
தொடர்புகளுக்கு: 07974 118 190

**Shop for Sale**
*Pizza & Chicken shop for sale*
Selling price £76,000 In Croydon area
Contact: **07944 441 089**

**PRIVATE TUITION – MATHS**
- For 11+ Maths
- For year 7 to GCSE Maths
- A/Level Maths

**By: Rav** BSc (Hons) MSc (Eng)
**Tel: 07961 111 945**

**Two Big Shops for 20 years Leasehold Sale**
குறைந்த வருமானம் ஆனால் கூடிய இலாபம், காரணம்
Rent & Rate **£9,500**
கூடிய வருமானம் ஆனால் குறைந்த இலாபம், காரணம்
Rent & Rate **£27,000**
மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்.
தொடர்புகளுக்கு: **நிரோஜன் 07930 935 281**


**UNIVERSAL SERVICES**
**Rent a car in Sri Lanka**
When you are on holiday or business
Free airport pickup and delivery
Reserve the car before you come to Sri Lanka
Flexible packages for customers
Self drive or with a driver

Rates from £9.99 per day
Email: slcars@googlemail.com
*For further information*
**UK Office**
020 8864 8698
Mob: 0796 1583 600
**Sri Lanka Office**
0094 011 5554888 / 9
011 5554123
Email: vassl@lankabellnet.com

**ஒரு பேப்பர்** ORU PAPER
உங்கள் வாசல் தேடி வர, ஒரு வருடத்திற்கு £25 மட்டுமே!
**SUBSCRIPTION FORM**
Name:
Address :
Postcode:
Telephone:
Email:
மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், **£25** க்கு **"Jasmine Studio Ltd."** ன் பெயரில் காசோலையினையும், Oru Paper, 45'B' Crusoe Road, Mitcham, Surrey CR4 3LJ, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# KIDS

## Tajmahal - A Tribute to Beauty



Agra, once the capital of the Mughal Empire during the 16th and early 18th centuries, is one and a half hours by express train from New Delhi. The postcard picture of *Taj Mahal* does not adequately convey the legend, the poetry and the romance that shroud what Rabindranath Tagore calls *"a teardrop on the cheek of time"*.

*Taj Mahal* stands on the bank of River Yamuna, which otherwise serves as a wide moat defending the Great Red Fort of Agra, the center of the Mughal emperors until they moved their capital to Delhi in 1637. It was built by the fifth Mughal emperor, Shah Jahan in 1631 in memory of his second wife, Mumtaz Mahal, a Muslim Persian princess.

When Mumtaz Mahal was still alive, she extracted four promises from the emperor: first, that he builds the Taj; second, that he should marry again; third, that he be kind to their children; and fourth, that he visits the tomb on her death anniversary. He kept the first and second promises. Construction began in 1631 and was completed in 22 years. Twenty thousand people were deployed to work on it. The material was brought in from all over India and central Asia and it took a fleet of 1000 elephants to transport it to the site. It was designed by the Iranian architect Ustad Isa and it is best appreciated when the architecture and its adornments are linked to the passion that inspired it. It is a *"symbol of eternal love"*.

As a tribute to a beautiful woman and as a monument for enduring love, the Taj reveals its subtleties when one visits it without being in a hurry. The rectangular base of Taj is in itself symbolic of the different sides from which to view a beautiful woman. The main gate is like a veil to a woman's face which should be lifted delicately, gently and without haste on the wedding night. In Indian tradition the veil is lifted gently to reveal the beauty of the bride. As one stands inside the main gate of Taj, his eyes are directed to an arch which frames the Taj.

The dome is made of white marble. The colours change at different hours of the day and during different seasons. Like a jewel, the Taj sparkles in moonlight when the semi-precious stones inlaid into the white marble on the main mausoleum catch the glow of the moon. The Taj is pinkish in the morning, milky white in the evening and golden when the moon shines. These changes, they say, depict the different moods of woman.

.As an architectural masterpiece, nothing could be added or substracted from it.

## Brain teaser.

**1. How many birthdays does the average man have?**

**2. Some months have 31 days. How many have 28?**

**3. Why can't a man living in USA cannot be buried in Canada?**

**4. Is it illegal for a man to marry his widow's sister?**

**5. Divide 30 by ½ and add 10. What is the answer?**

**6. If there are 3 apples and you take away 2, how many do you have?**

**7. A doctor gives you 3 pills and asks you to take one every half hour. How long does the pills last?**

**8. A farmer has 17 sheeps. All but 9 die. How many are left?**

**9. A butcher in a shop is 5ft10inches tall. What does he weigh?**

**10. How many two cents are in a dozen?**

### Answer

*1. One. The day he was born.*

*2. All of them.*

*3. He cannot be buried if he is living.*

*4. No. He is dead if his wife is a widow.*

*5. 70. 30 divided by ½ is 60 plus 10 is 70*

*6. 2, because you took away 2.*

*7. 1 Hour. At the start, middle and end.*

*8. 9, it said all BUT nine*

*9. Meat. The butcher weighs the meat.*

*10. 12. A dozen of anything is still 12.*

***By: Mayuran Ganesh***

## Tounge Twister

**How much wood would a woodchuck chuck if a woodchuck could chuck wood? He would chuck, he would, as much as he could, and chuck as much wood as a woodchuck would if a woodchuck could chuck wood.**

***By Tharshia.R(11)***

## Jokes

1.What is a dogs favourite school subject?

***"Dog-Ruff-E "***

2. What did the left nut say to the right nut?

***The guy in the middle thinks he is so hard!***

3.What do cows do for entertainment?

***They rent moovies !***

4. What do you call a deer with no eyes ?

***I have no I-Deer***

5. What do you call a camal with 3 humps?

***Humphreys***

6. What did the ghost say to the bee?

**BOO-BEE**

7. What do you call a snake that informs to a police?

***A grass snake***

8. What does ghost dance to?

***Soul music***

9. Why was the Energizer Bunny arrested?

***He was charged with battery.***

10. What did the dog say to the flea?

***Stop bugging me***

11. What was the snail doing on the freeway?

***About one mile a day***

12. Why do you call the new player Cinderella?

***Because he's always running away from the ball.***

13. What type of monster really loves dance music?

***The boogieman***

14. What does Tweety Bird say on Halloween?

***Twick or Tweet***

15. Why did the vampire quit the baseball team?

***They would only let him be BAT boy***

***By: Venuga Raveendran***

## Riddle

Dharam turns off the light in his bedroom. The light switch is twenty feet from the bed, but he still manages to get into his bed before it is dark. How does he do it?

**Answer: He goes to bed when there is still daylight.**

***By Tharshia R (11)***

## Colouring




Why not enter our colouring competition? Simply colour me in and send it to *ORU PAPER* and you could be the lucky winner of a water colouring kit.

The winner will be published in the next issue.

Last week's winner: ***Kirthana Thurairajah (Age 6) from Toronto***

Last week's runners up -

***Tharshana Nanthakumar (Age 6)***
*Morden, England*

***Tharsika Thavakumar (Age 8)***
*Scarborough*

***Amal Paramalingam (Age 6)***
*Markham*

***Ayshvaan Thevaraja (Age 5)***
*Kenton*

***Abina Indirathas (Age 9)***
*Scarborough*


***Inthu Rameshkulan (Age 6)***
*Dortmund, Germany*

## The moods of music

Raga, which defines the mood of the Indian classical music was described by the Pann. Specific panns were sung during worship and during religious and royal ceremonies. Maduraikanchi refers to women singing Sevvazhi pann to invoke the mercy of God during childbirth. In Tolkappiyam, the five landscapes of the Sangam literature had an associated Pann, each describing the mood of the song associated with that landscape.

The Sangam landscape was classified into five regions to describe the mood of the poem and to describe the intangibles of human emotions. While describing life and romance, the poets employed the background of the natural landscape and used the pann specific to that landscape to provide the mood. The neithal landscape, which is employed to convey the grief of separation of lovers had the associated sevvazhi pann expressing pathos.

***- By Tharshia.R (11)***



## Word Search

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| U | N | E | E | L | A | M | N | B | R |
| A | V | E | L | L | A | I | I | N | W |
| S | O | H | I | K | A | R | U | P | U |
| Q | Y | Z | S | P | A | I | B | I | L |
| M | A | M | I | A | D | P | E | O | E |
| N | I | A | V | C | L | M | A | P | O |
| D | E | N | A | H | L | J | E | U | A |
| R | S | J | P | A | M | R | D | V | F |
| T | N | A | U | I | G | E | Q | Y | Z |
| A | I | L | U | W | S | O | H | I | B |

**Hidden Words:**

**Subject: Colours**

PACHAI, MANJAL, SIVAPU, KARUPU, NEELAM, VELLAI

**Submitted by:**

***By: Ayshvaan Thevaraja (Age 5) (Kenton)***

# SPECIAL COMPETITION!!!

Hello! Welcome to Orupaper's Special Competition which will be run by Rishiyan Ravindrakumaran This competition will have 10 General Knowledge Questions in each paper for the next 10 issues. Over the next 10 issues (100 Questions) the person who answered the most correct answer will win prizes.

## The Prizes are:

1st 7" Portable DVD Player

2nd 40GB MP3 Player

3rd Two PC Webcam (With microphone)

To participate just e.mail the answer to kids@orupaper.com or send the answers to:

**ORUPAPER (UK)**

45b Crusoe Road, Mitcham, CR4 3LJ.

**ORUPAPER (CANADA)**

230-55 Nugget Avenue, Scarborough ON, M1S 3L1

*The questions for this issue will be:*

1. **Who first proposed the business cycle of growth and recession?**
2. **Who invented the term "lateral thinking"?**
3. **What are the three broad categories of medical specialties?**
4. **What is Pangia ?**
5. **What percentage of fragranced product ingredients are petroleum based?**
6. **What is fusion ?**
7. **Who led the humanistic thought movement in the 1950s and 1960s?**
8. **What is a GUI?**
9. **What are the two basic groups of vitamins?**
10. **What is the alcohol content of natural or table wines?**

**GOOD LUCK KIDS!!!!**..in answering these ten wacking questions, and send them in by **13/12/06** Wednesday.......

**YOU** could be the one of the **WINNERS**, in winning one of our three prices!!!

# How to make silencing Rolls

**Ingredients and Cooking accessories**


Bread crumbs
Egg + Egg Beater
Roll Pads
Curry (own choice)
Oil
Round Plate
Bowl
Frying Pan



**Method**

1. Make your favourite curry. (Has to be thick paste no gravy) . Own choice. (Any Curry)
2. Put bread crumbs in a round plate.
3. Put 1 egg into the bowl and beat it.
4. Get each roll pads at once and fill them with your curry (1st step) then roll them up again and cover them.
5. Then dip the roll into the bowl of egg and take it out and roll against the bread crumbs. Carry on doing this process. Until finished,
6. Then get a suitable frying pan. Then deep fry the rolls you have previously made. Get an adult to help you if you need help!!!

***By Tharshia.R (11)***





*By: Meran Annalingam (Year 5, Colindale Primary School)*



*By: Ayshvaan Thevaraja (Age 5) (Kenton)*



*By: Thivyan Prabaharan (Age 8)*




*By: Jathursan. G (Age 8)*







*By: Rusetha. A*



*Dear Kids,*
*What do you think of this page? Write to us or e-mail us*
***kids@orupaper.com***

சகல தளபாட வசதிகளுடன் தொடர்மாடி வீடுகள்
கிழமை / மாத வாடகைக்கு...

**Bala's Holiday Apartments**
at Rohini Road, Wellawatte, Colombo, Sri Lanka
*Further details*
**Web:** www.balasapartments.com / www.balasapartments.com
**e-mail:** balasapartments@yahoo.com / balasapartments@yahoo.com

*Contact:*

| Raj | Bala |
|---|---|
| Colombo, Sri Lanka | Kassel, Germany |
| Tel: 94-11-2624547 | Tel: 561-575667 |
| Mobile: 0777-667002 | Mobile: 01729061327 |

**யாழ்தேவி திருமணச்சேவை**

யாழ்தேவி திருமணச்சேவை இலண்டனில் இரு உள்ளங்களை திருமணம் என்னும் பந்தத்தில் இணைப்பதற்கு பாலமாகப் பணியாற்றுகிறது. இலங்கை, கனடா, அவுஸ்திரேலியா, மற்றும் ஐரோப்பாவின் பலபாகங்களிலும் உள்ள மணமகன்-மணமகள் எம்மிடம் உண்டு.



உங்கள் தொடர்புகளுக்கு:
**தொலை: 07960 744 104**
Email: **jarlltheavy@yahoo.com**

**Architectural Plans**
**Planning Permissions**
***New Buildings**
***Extensions**
***Officense Plans**
***Change of use**
**Call: 07780978027**

**MILLENNIUM** Accouting Services
Accountants Preparation | Taxation | Insurance Arranged | Financial Arranged | Advice



எங்களின் ஏற்கனவே உள்ள Membership அமைப்பில் நீங்கள் அங்கத்தவராக சேர்ந்தால், உங்களுக்கு உடன் 25% கழிவு உண்டு. இந்தச் சலுகை சில காலம் மட்டுமே ! இது உங்கள் கவனத்திற்கு !

- Any firm holding more than 25 employees we charge £1 per pay slip
- We have a special arrangements to do quick commercial loan

74, Greenway, Chislehurst, Kent BR7 6JF
Tel: **020 8467 2996** / Fax: **020 8325 0337**
Mob: **0781 396 9192** / Email: mill2000@btinternet.com

**ALL DRINKS OFF LICENSE**
*A friendly and a cool setup*




**LOTTERY**
**POST OFFICE**
**PAY POINT**
POST OFFICE
82, Bulington Road,
New Malden, Surrey KT3 4NU
Tel: **020 8949 6734**

**AYNGARAN FOOD & WINE**



**QUALITY SRI LANKAN GROCERIES, WINE ITEMS AND OFF LICENCE, FROZEN SEE FOODS, FISH, HALAL MEAT & BUS PASS also**
***Original Audio, CD, DVD for sale***
80, Burlington Road, KT3 4NU
**Tel:020 8949 5640**

# மார்க்சீயம் தளிர்க்குமா?



சமுதாய மாற்றத்தின் தேவைக்காக எத்தனையோ கோட்பாடுகள் தோன்றியுள்ளன. ஆனால் அவை காலத்தால் ஒதுக்கப்பட்டு விட்டன. ஏனெனில், சமுதாய மாற்றத்தின் தேவை என்பது, உண்மையான மனித விடுதலையின் தேவை என்பதைத் தங்களின் அடிப்படையாக, மையமாகக் கொள்ளவில்லை அல்லது அந்த நோக்கத்துக்காகச் செயல்படவில்லை. மனிதனின் விடுதலைக்காகத் தோன்றிய சமயங்களும், மெய்யியல்களும் மனிதனை விட மேம்பட்டவையாக நின்று அவனைச் சிறுமையாக்கிச் சிறை வைத்தன.

அதனால் மனிதனின் சுதந்திரம், விடுதலை என்பது இந்த அமைப்புக்குள் முன்னரை விடச் சிக்கலாகியது. சமயங்கள், மனிதனின் விடுதலை அவனது நம்பிக்கையில்தான் உள்ளது என்றன. அவன் இறைவனை நம்ப வேண்டும். இறைவனிடம் தன்னை ஒப்புவிக்க வேண்டும். அதுவே அவன் விடுதலை என்றன. இந்தக் கருத்து மனிதனுக்கு, அவனது வாழ்க்கைச் செயலுக்கு எதிரானதாகவே இது வரை இருந்து வந்திருக்கிறது.

இனியும் அப்படித் தான். ஆனால் மனித விடுதலையை, சமயங்கள் மீதும், இறைவன் மீதும் வைக்கும் நம்பிக்கையிலிருந்து ஒரு போதும் பெற முடியாது. அது வரலாற்றுச் செயல்களிலிருந்து பெறக்கூடியது. அதுவும் சமுதாயம் முழுமைக்குமான விடுதலை. அதுவே மனித விடுதலையை சுதந்திரத்தைச் சாத்தியப்படுத்தும். இந்த வரலாற்று உண்மையைக் கூறியவர் மார்க்ஸ்.

19.ஆம் நூற்றாண்டின் இறுதியில், ஐரோப்பாவில் கார்ல் மார்க்சின் சோஷலிசச் சிந்தனைகள் பாட்டாளி வர்க்க வரலாற்று நிகழ்வில் பெரும் மாறுதலைக் கொண்டு வந்தது. மார்க்ஸ், சுரண்டலற்ற சமுதாயம் (மனிதன் சகமனிதனைச் சுரண்டுகிற போக்கை ஒழித்த சமுதாயம்) பற்றியும், மனிதன் முதலாளித்துவ சமுதாயத்தில் தன்னிலிருந்தும், தன் சக மனிதனிடமிருந்தும், தான் செய்த உற்பத்தியிலிருந்தும் 'அந்நியமாகி' இருப்பது பற்றியும், வரலாற்றில் நிகழ வேண்டிய அவனது விடுதலை பற்றியும் கூறியுள்ளார். பாட்டாளி வர்க்கப் புரட்சியின் மூலம், சமுதாயத்தின் எல்லா வகையான சுரண்டல்களையும், ஒடுக்கு முறைகளையும் ஒழித்து, அந்நியமாதலைக் கடந்து, மனிதனின் உண்மையான விடுதலையைப் பெற முடியும். அந்த உண்மையான விடுதலை என்பது உண்மையான சமுதாய விடுதலை ஆகும்.

சுரண்டலற்ற சமுதாயமே விடுதலை பெற்ற சமுதாயம். விடுதலை பெற்ற சமுதாயமே பொதுவுடமைச் சமுதாயம் ஆகும். ஆகவே மனிதனின் விடுதலை என்பதும், சமுதாய விடுதலை என்பதும் வெவ்வேறானதல்ல. இரண்டும் பிரிக்க முடியாதது என்பதை மார்க்ஸ் தெளிவு படுத்தி உள்ளார்.

'உலகத்தை விளக்குவதல்ல, மாற்றுவதே இன்றையக் கடமை' என்ற மார்க்சின் கருத்தை அடியொற்றி இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ரஷியப் புரட்சியும், பின்பு சீனப் புரட்சியும் ஏற்பட்டுச் சமுதாய மாற்றங்கள் நிகழ்ந்தன. அதன் பிறகு கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பலவும் சோஷலிச நாடுகளாக மாறின. கியுபா, வியட்நாம் போன்ற நாடுகளிலும் புரட்சியின் மூலம் சமுதாய மாற்றம் நிகழ்ந்து சோஷலிச நாடுகளாக உருவாயின. ஆனால் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னால், சோவியத் ரஷ்யாவின் சோஷலிசக் கொள்கை, நடைமுறை பற்றிய விமர்சனங்களும், ஆய்வுகளும் வெளிவந்தன. அதேபோல் மாவோவின் மறைவுக்குப்பின் எழுபதுகளின் இறுதியில் சீனாவில் ஏற்பட்ட மாறுதல்கள் பற்றி விமர்சனங்களும், ஆய்வுகளும் வெளி வந்தன. அதில் பல அதிர்ச்சி அளிக்கக் கூடிய விஷயங்கள் இருந்தன. சோவியத் ரஷ்யாவைப் போன்றே சீனவிலும் சோஷலிசத்துக்குள்ளே முதலாளித்துவ அமைப்புகள் உருவாயின.

**சுரண்டலற்ற சமுதாயமே விடுதலை பெற்ற சமுதாயம். விடுதலை பெற்ற சமுதாயமே பொதுவுடமைச் சமுதாயம் ஆகும்**

பாட்டாளி வர்க்கம் மீண்டும் சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைக்கும் உள்ளாகியது கம்யுனிஸ்ட்டுக் கட்சிகளின் அதிகார வர்க்கத்தினரே சுரண்டும் வர்க்கமாக உருவாகி விட்டனர் என்கிற உண்மை, மார்க்சீயர்களைச் சுட்டது.

சோஷலிச சமுதாயத்தில் கலை, இலக்கிய பண்பாட்டு வளர்ச்சி முத்லாளித்துவத்தில் இருந்ததை விட மேன்மையாக விளங்கும் என்று மார்க்சீயர் நம்பினர். கலை இலக்கிய படைப்பாளிகளும் அதே நம்பிக்கையில் தங்கள் படைப்புகளை உருவாக்கினர். ஆனால் அதற்கு நேர் மாறாக நிகழ்ந்தது. கலை இலக்கிய பண்டாட்டு வளர்ச்சிக்குரிய சுதந்திரத்தைச் சோஷலிசக் காவலர்கள் மறுத்தனர். கட்சிகளின் கட்டளைப்படி கலை இலக்கியம் படைக்கப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப் பட்டது. இந்தச் சீரழிவுகளுக்குப் பிறகு, சோஷலிச சமுதாயங்கள் மீது வைத்திருந்த நம்பிக்கை தகர்ந்த போது, மார்க்சீயத்தின் தோல்வியை முதலாளித்துவம் பிரகடனம் செய்தபோது, உலகிலுள்ள, மார்க்சீயத்தின் மீது நம்பிக்கையுள்ள அனைத்து மார்க்சீயர்களும், மார்க்சீயத்தின் தேவையை உறுதிப்படுத்தினர்.

இன்றும் முதலாளித்துவத்துக்கு மாற்று சோஷலிசமே என்ற எண்ணம் நிலவி வருகிறது. அதற்கான மார்க்சிய இயங்கியல் அடிப்படையிலான சமூக ஆய்வுகள் வெளி வந்தன. அதனடிப்படையில் மேலை நாடுகளில் பாட்டாளி வர்க்கப் புரட்சி சாத்தியமில்லை என்பதைக் கண்டனர். ஆனால், விளிம்பு நிலையிலுள்ள மூன்றாம் உலக நாடுகளில் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் சாத்தியப்பாடு குறித்து பால் ஸ்வீஸி போன்றோர் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

அதே சமயம் கலை இலக்கியத் துறைகளில் மார்க்சீய அறிஞர்களின் கொள்கைப் படைப்புகளின் வளர்ச்சி மிகப் பெரிய அளவில் நிகழ்ந்தன. ஜார்ஜ் லூகாக்ஸ், பிஸர் மெஷரி, வால்டெர் பெஞ்சமின், பெர்த்தோல்ட் பிரக்ட் போன்றோரின் சிந்தனைகள் இன்னும் முக்கியத்துவம் உடையதாகத் திகழ்கின்றன.

மார்க்சீயத்தில் (சோஷலிச நாடுகளுக்கு வெளியே) ஏற்பட்ட இச்சுதந்திரமான சிந்தனைப் போக்கு பல வளரும் நாடுகளில் வாழும் ஒடுக்கப்பட்வர்கள் இன்றும் மார்க்சியத்தின் மீது நம்பிக்கை வைத்திருப்பதற்குக் காரணமாக அமைகிறது.

மார்க்சீயம் பல துறைகளிலும் (மெய்யியல், அரசியல், பொருளாதாரம், சமூகவியல், பண்பாட்டியல்) செல்வாக்குடன் திகழ்கின்ற கோட்பாடு. இது பின்தள்ளுப்பட்டு விட்டது போன்ற ஒரு தோற்றம் நிலவினாலும் விரைவில் வீறுகொண்டெழும் என்பது யதார்த்தவாதிகளினதும் தீர்க்கதரிசிகளினதும் எதிர்பார்ப்பாகும்

*நன்றி - திண்ணை*









**Terms & Conditions**
Calls are billed at your telecom providers 0844 & 0871 rates. To find out the cost of calling from a provider other than BT, contact your service provider directly. Your service provider may have a minimum call or connection charge. Calling subject to availability. Calls are charged from the time of connection to the Planet Talk Instant service. If calling from a mobile phone remember only press the call/send button after dialling the access number not again after dialling the destination. Terms and conditions apply and are at www.planettalkinstant.com. Use of the service will be deemed to be an agreement to allow relevant marketing of telecom services to your telephone number. If you wish to not receive any marketing, you can deregister at www.planettalkinstant.com



# Euro Asian Cash & Carry

Tel: 020 8902 2323
Fax: 020 8903 3185

For all Your
Groceries & Seafood

உங்களுக்கு தேவையான இலங்கை இந்திய
உணவுப்பொருட்கள் பழவகைகள் சகலவிதமான
உடன் மரக்கறி வகைகள் கடலுணவுப் பொருட்கள்
அனைத்து விதமான மளிகைப் பொருட்கள் ஆகிய
அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
உங்கள் நினைவில் என்றும் இருக்க வேண்டிய இடம்...



உள்நாட்டு – வெளிநாட்டு மதுபானங்கள் மற்றும் குளிர்பாணங்கள் கிடைக்கும்

100 Hirst Crescent, East Lane, Wembley, Middx HA9 7HH

# YALEE Importers & Exporters

Tel: 020 8902 2323












## Marsh Wholesale UK Ltd

**100 Hirst Crescent, East Lane, Wembley HA9 7HH**
**TEL: +44(0) 20 8902 2323 / (0) 20 8904 4321**
**FAX: +44 (0) 20 8900 0252 / (0) 20 8904 4114**


READY TO EAT
Niru BRAND
Frozen Foods
சமையலறைக்கு
Bye சொல்லுங்கள்!!
Parotta
Masala Dosai
READY TO EAT
பரோட்டா
சிலோன் ரொட்டி
மசாலா தோசை
BUY 2
GET 1
FREE!
Another quality product from Niru

# ORIENT
TEXTILES & JEWELLERY

புதிய கிளைதாபன திறப்பையும் நத்தார் புதுவருடத்தை முன்னிட்டும் அனைத்து ஜவுளி வகைகளும்

- 20% சிறப்பு தள்ளுபடியுடன் விற்பனையாகிறது
- கோலம், ரங்கோலி, காஞ்சி, கிரிஜா, கௌரி, பனாராஸ், மைசூர் ஆகிய பட்டுப் புடவைகள்
- சுடிதார், சல்வார் கமிஸ், லங்க, காகிறாச் சோலி, சீக்குயின்ஸ் வேலை செய்த வட தென் இந்திய Fancy சாறிகள்.



- சிறுவர், ஆண்களுக்கு ஏற்ற குருத்தா, ஜிப்பா, பட்டுவேட்டி, சாரம்
- வர்ணங்களுக்கு ஏற்ப காப்பு, கம்மல், மாலை, நெத்திச்சுட்டி போன்ற அலங்கார ஆபரணங்கள்

தொடர்புகளுக்கு:

S.ஜெகதீஸ்
165, Upper Tooting Road
Tooting, London SW17 7TJ
**(Opp. to Tooting Muthu Mariamman Temple)**

**Tel: 020 8682 3958**

உயர்ந்த தரம்! மலிவு விலை!

UNBEATABLE PRICE

# Direct Property Services
**Residental Sales, Lettings & Management**

*Landlords*
- Free Valuation - No Obligation
- Guaranteed Rent Scheme available for Short Term & Long Term
- Efficient and Quick Landlord Payment
- Best Rent Achieved
- Friendly Professional Advice from our experienced representatives

*Tenants*
- Looking to Rent
- Make the Right Move
- We always have a large selection of properties available to Rent




கிழக்கு இலண்டனில் உங்களுக்கு சேவை செய்ய காத்திருக்கின்றது

## Direct Property Services

212 A High Street North
Eastham, London E6 2JA
Tel: 020 8472 4447 / Fax: 020 8471 8126

*"Discover the Genius within"*

UCMAS
MENTAL ARITHMETIC

*An overall academic excellence and beyond*

24557
54628
-54612
84512
?

5468 x 562 = ?
4568 ÷ 87 = ?

891+55x11
+432511
=? 6938
÷ 62 = ?
645 x 15

*Can your child solve these problems in seconds?............... and without using a calculator or a computer...............?*

*At UCMAS Every child can solve these problems with an amazing speed and accuracy, faster than a calculator or a computer...........*

*............Using their Mental Calculation abilities learned with an ABACUS, an ancient Chinese Tool*

*Also Offering*
*11+ Classes - Verbal, Non - Verbal & Maths*
*Maths - KS2, KS3 & GCSE*

*- in Harrow*

For further details:
**Harrow Academy**
164 Pinner Road, Harrow
Middlesex HA1 4JJ
Tel: **020 8861 2444**
Mob: **07904 652 856**
Email: admin@harrowacademy.com

ENROL NOW
4-12 years old

*An overall Academic Excellence and Beyond....*

***U C MAS - A whole brain development program enhances child's life time skills***

Photographic Memory | Concentration | Comprehension | Creativity | Listening Skills | Imagination | Speed & Accuracy | Concentration

# TEENSபேப்பர்




## Remember, remember the 27th of November



By: Uma Kumaran
ORU PAPER

This has been a week of remembrance for many people in the Tamil community, this week saw the annual day of remembrance, otherwise known as 'Maveerar naal', for those lost in the war in Sri Lanka. Currently CIA statistics estimate that as a result of the on going conflict in Sri Lanka that 60,000 civilians and fighters have died and more than one million have been displaced. Surely after 26 years of fighting the question on everybody's mind is, 'when is this all going to end'? Sadly I do not have an answer or even a prediction for this, but what I can offer some insight into is why it is so important for our community to remember those who have died in the war. The fighters and innocent civilians who have been killed have all been killed in the name of 'Tamil Eelam' and pursuing the belief that one-day there will be a Tamil Eelam.

What I am attempting to explain is why the Tamil community places such a divine importance on this day itself.

Ultimately besides the political importance of the date, one thing that makes this day resonate amongst the Tamil Diaspora around the world, is remembrance. In everyday lives where one worry precedes another, work is hectic, chores are plentiful and daily stresses cloud ones mind there is no time to think about personal worries let alone the worries of an entire community. So the allocated date of the 27th is all the more poignant for Tamil who live outside of their native homeland. It is a day where personal worries are left behind and the thoughts turn to more profound worries of an entire nation. The collective gathering and feeling of unity helps each individual grieve and remember those who have sacrificed their life for the greater good of the Tamil community.

The fighters and innocent civilians who have been killed have all been killed in the name of 'Tamil Eelam' and pursuing the belief that one-day there will be a Tamil Eelam.

It is important for everyone to remember, for who knows what the future may hold and our generation is already less informed than our older generation. When the next generation of Tamils emerge, that is our children, they will have been brought up by parents who have been born and brought up outside of Sri Lanka and have little or no detailed knowledge of the conflict. Eventually memories held by the older generations will start to fade and with it will censor certain events, thus the observance of one day in the year for fallen 'heroes' is more than appropriate.

Without remembrance, many of the immense accomplishments around the world would long be forgotten and taken for granted. World War 1 now has no survivors and World War 2 has few left, but by holding a remembrance day the entire world can relive and contemplate what fellow men have done in order to make the world a better place. Independence days around the world celebrate the giving of independence after bitter struggles to gain it, in America thanks giving is held to thank the forefathers for founding the constitution to which Americans live their life by, the list of these days of thanks and remembrance are endless. However, the one thing that stands out among all this is that the world acknowledges the need to hold times of commemoration to pay tribute to and honour the brave heroes of the past.

Without remembrance we are doing those who have given their life for their county (and for the people of the country, many of those whom they never knew) a great injustice. Often times we remember those whom we may not have met or never would have had the chance to meet, but this does not mean we are unable to remember them just as well as their family or friends would have been able to. To quote from Oscar Wilde 'people know the price of everything, but know the value of nothing'; hopefully by holding this day of remembrance our community does know the value and the importance of all aspects of life, especially the lives of those who have sacrificed their life for the community's well being.

## Read it if you want...

By: Tharmila Shabanathan
ORU PAPER



Last week, my article was very good. Most of you who read it might have thought "what a boring girl, doesn't she have anything else to write about". I think this because someone actually approached me and asked me the question and I was shocked. For a person who just reads the paper and doesn't even have the courage or the interest to write, I believe she had no right to come up to me and ask such a question. Yes I might be a bit more interested in the fighting back home and I have my personal opinions on these topics which means no harms to others.

For a person who just reads the paper and doesn't even have the courage or the interest to write, I believe she had no right to come up to me and ask such a question.

This girl first approached me after she was told by one of my friends that I wrote the article for the paper, last month and it was very controversial. She stated that the last article was written about the fighting back home, which has nothing to do with this country and she insisted on writing something more astonishing. I guess if people want more from something they have to put some effort into it themselves don't they? It's the only way you can make something even better than it already is.

For me, I personally did not understand what was wrong with writing about the things that happen back home in Sri-Lanka. Yes it's all over the news on TTN, and on the papers, and often you get emails from strangers or friends about supporting the fight back home. It's all over the place, but it does help to add a bit of touch ourselves. Does it not?

I personally did not understand what was wrong with writing about the things that happen back home in Sri-Lanka.

There are many things I could have written about this issue, the Heroes' Day of our soldiers on the November 27th, my mysterious thoughts, my cousins wedding and many more but I am stuck with what to write. It's one of those days that you just sit in front of your computer for hours and nothing gets done. It has been 3 hours now and I'm helpless. Many things have happened this week, but the most exciting day was last Saturday when we celebrated my cousins wedding. Yes, it was fun and more traditional than I imagined, but it was a load of fun (except the part where the camera man assumed I was the Bride)

However there was no time to spare and I had to run around all the time to make the wedding a perfect one, so at the end, it was up to me again to clean up the house. After my cousins were all gone, I was all alone and gutted, but it took three days to clear everything and make the house look just the way it was before.

Heroes' Day (Maveerar Naal) was not any different to any other day. Usually we go to the Maveerar Naal which happens in one place in London, but since it was split up like other countries I was not very enthusiastic about going. I did watch TTN and listened to Mr.Pirapaharan's speech, and many other programs which made me wish I was there, but it wasn't that important. I guess what matters now is for us to win our rights back and our freedom. So until then, just keep praying and keep hoping to the best and don't forget to study and make the most of your time while you're here in this country. Who knows, we might all end up rushing back to our country very soon.


BLUE MOON CARS

உண்மை - உழைப்பு - உயர்வு

*A complete fast and reliable car services. Our services are standard. Our drivers were fully trained professional*

* 24hrs friendly and reliable services
* 0-15 minute free waiting
* Disabled facilities
* Airport Pickup and Drop
* Chauffer Services
* Limouslines
* 7-17 Seated Van and Minibus
* Executive Cars
* Marriage Services
* Your Immediate Contact for bookings

விமானச்சீட்டு எடுத்துவிட்டீர்களா?
அழையுங்கள் எங்களை
விஷேச வைபங்களா? கவலையை
விடுங்கள் !
நாங்கள் இருக்கிறோம்
அழைத்துச் செல்ல



0845 326 4074 | 020 8903 2534
020 8838 2655 | 07932 856 893
Email: bluemooncars@fsmail.net

# Why wait till university?...



**By: Bairavi Ratnabal**
**ORU PAPER** .

Normally when people enter university they will be eighteen until then parents usually expect their children to behave appropriately, bluntly meaning not get them self a boy or a girl friend, this especially applies for the girls. The reason behind this is perfectly reasonable I gathered recently after listening to a close friend's relative's story.

Our parents want us to make the right choice for a life partner, someone who is educated, mature and simply caring. They seem to think that before eighteen or before entering university the person we are with are only set out to destroy our studies and reputation, this may be true is some cases. I am sure most of you will agree that not many of us are fully established before the age of eighteen so we are vulnerable to trust the words of someone who is believed to be showing us "true love", don't get me wrong I am sure in many situations the person is telling the truth but for any parents they are unable to sit back and watch their child been taken away from them at a age which they consider as too young.

> Sixty percent is because they want us to make the right choice at the right time, and twenty percent is because of the status we will seek for ourselves in the Tamil community.

I know this is not the only reason why parents want us to wait. Sixty percent is because they want us to make the right choice at the right time, and twenty percent is because of the status we will seek for ourselves in the Tamil community. People will penalise and bring us down for something that we thought was right but that is another thing our parents want to protect us from, as I said before this especially applies to the girls because, like my Amma says "It is very easy to get a bad name but it is very difficult to gain back the good name you once had if you're a girl". For a girl by making that one mistake and depending on how fast and far the word spreads (believe you me Tamil parents can talk) her future may result a dismay. It has thought to be that Tamil girls should be reserved and silent but in the western world, I can safely say most people's opinions have slightly changed however if a girl does the same mistake a boy does she will be punished with a further degree than a boy. That scrutiny has still yet to be altered.

The other twenty percent I presume is our education. If our mind diverts to other actions that is in need of our full attention I can assure you that our education will not get its satisfied concentration, and we will not get the full potential grade that we deserve.

By saying all this I am only telling you how probably your parents feel, and I know many of them do not express this as well as they should. Parents have to stop telling their children it is wrong to find someone at an early stage but start to tell them that this may not be a wise decision and alert them of the consequences. They have to stop telling them they will get in tremendous amount of trouble and start telling them that this will affect their future.

More than any other reason, what is the point? Why run around trying to hide from people's sight? Why try and fool our parents? Why end up in trouble for someone who might not be worthy? Why go through the pain of being heart broken? Most of all, why do we have to put ourselves in a position to let other people's words scar us? It takes so much energy and eventually we will run out of it but some may argue all this is worth finding true love, but how do we know what true love is?

# The importance on an Arangetram

**Nanthana Uthaya Sangeetha Navendren**



I am very stunned by the comments made by Kayathiry on May 05-May 18 issue, which I totally disagree, and has made me make my point of view. Arangetrams are important and show the level of understanding for the subject in which the performer is performing. Surely, some people do over excessively spend money on arangetrems unnecessarily but then it is as asking the question "Why do people have grand weddings?" If such a person will take the choice of having an arangertram they might as well have a grand one. For Tamil people arangetrams itself is a very big factor in their lives if they are doing one, so it wouldn't do any harm in having a grand one. It is not compulsory for them to have a grand one. I myself have gone to various selection in arangetrams and each one of them was effective.

Tamil people always have to find something negative in a subject even if it were amazing. So what if they do not do their speech in Tamil, is it not enough taking part in their culture and taking interest? Surely doing an arangetram is a major deal itself. I have seen many Bharathanatya arangetrams in which it has been performed by a different language speaking people. Surely you are not asking them to do their speech in Tamil? What sense does that make? Doing an arangetram does not mean that you want to become a teacher for that art. I suppose such people would not understand.

I myself did a Bharathanatya arangetram on 12th august 2006 and I am only 13 and in fact my speech was in English. It is not compulsory to do an arangetram AND also know Tamil. Arangetrems take a lot of effort, compassion and patience. They are very important in someone's life because they give you an opportunity in learning something in a huge depth and discipline the performer to learn the art inside and out. It is a means to master our ancient art. It's like taking an exam. If the objective of studying is to acquire knowledge, why an exam is necessary? Sitting for an exam sets discipline target, same thing, an arangetram does. I myself cried and cried through out from the stress, from the lessons and the difficulties I was in but I couldn't have been more pleased in the result and in myself. There is no gain without any pain. How can one judge on arangetrems if they have not taken part in it them selves?


Accounts preparation, Self Assessment,VAT & PAYE Tax Planning, Mortgages and Business finance
An efficient, practical service for small to medium size companies, partnership and sole Traders
with over 20 years experience in public practice
VASAN & COMPANY
Auditors & Accountants
Tel: 020 8778 8666 Fax: 020 8778 8999
43 Anerley Road, London SE19 2AS
email: info@ajaccountancy.co.uk | web: www.ajaccountancy.co.uk

MORTGAGE PLUS London Ltd
Mortagages Tailormade for you
Specalist in CCJ Default Cases
S.Kaul
Tel: 020 8571 2570
07710 150 713
81 South Road, Southall,
Middx UB1 1SQ

Meera Arnold & Co.
pay roll
book keeping
company formation
45 Chandos Ave, N14 7ES, Tel: 020 8882 2333

PERMA
INTERNATIONAL SHIPPING LTD
உங்கள் தனிப்பட்ட பாவனைப்பொருட்கள், வாகனங்கள், வீட்டுப் பாவனைப்பொருட்கள், இயந்திர உபகரணங்கள், போன்றவற்றை தாயகத்திற்கோ பிற நாடுகளுக்கோ அனுப்ப விரும்புகிறீர்களா?
இங்கிலாந்தின் எப்பகுதியாயினும் உங்கள் பொருட்களை எம்மால் சேகரித்து பாதுகாப்புடன் வைத்திருந்து அனுப்ப முடியும் தரமான பிரத்தியேக சேவைக்கு நாடவேண்டிய இடம்
தொடர்புகளுக்கு: சிவம்
45C Crusoe Road, Mitcham, Surrey CR4 3AL
Tel: 020 8646 5222, Mobile: 07939 550397

Workpermits4u
UK Immigration - Workpermits & Visas
Work Permits in IT, accounting, Finance, retail, catering, healthcare, HSMP
Permanant residance, UK Citizenship, marriage applications, domestic workers.
Leave to Remain in UK, leave extensions, immigration forms completed.
Visas for students, spouses, dependent family, working holiday, sole rep visa.
Business immigration : entrepreneurs, investors, UK company formation & management, full accounting, payroll & tax services.
Contact : Raj Ganguly workpermits4u.com,
37 Panton street, (near Piccadilly Circus), London SW1Y 4EA
Tel: 020 7839 0389 / 020 7839 4731 / 07766 828 851
email:workpermits@workpermits4u.com/ www.workpermits4u.com
(division of RKG Consulting Ltd, OISC Registered).

IT PAYS TO ADVERTISE IN ORU PAPER
CALL 020 8640 4604 | 020 8286 9327

# பள்ளியறையான பள்ளி

பட்டணத்துப் பாடசாலைச் சூழலில் இருந்து பெரிதும் மாறுபட்டதாகவே இவ்வூர்ப் பாடசாலைச் சூழல் அமைந்திருந்தது. பட்டணத்துப் பாடசாலையில் படித்தவன் என்ற ஒரு சிறிய மரியாதை எனக்கு வழங்கப்பட்டாலும், அப் பாடசாலைச் சூழலோடு ஒட்டிக் கொள்ள பல நாட்கள் பிடித்தன. கால ஓட்டத்தில் பல புதிய நண்பர்களும் நண்பிகளும் எனக்கு உருவாகினர்.

ஆரம்ப நாட்களில் பாடங்களோடு ஒன்றுவது சற்றுக் கடினமாக இருந்தது. புதியவையாக இருந்தன. படித்தாக வேண்டும் என்ற தீவிரம் உள்ளூர இருந்ததினால் பாடங்களோடு ஒன்ற முடிந்தது.

மாமரமொன்றில் தொங்கிக் கொண்டிருந்த தண்டவாளத் துண்டு பாடங்களை நகர்த்தும் மணியாகத் திகழ்ந்தது. உயர்வகுப்பான எமது வகுப்பே பெரும்பாலும் நேரந் தவறாமல் மணி அடிக்கும் பொறுப்பை ஏற்றிருந்தது. அதற்காகவே ஓரிருவர் 'பளிச் பளிச்' என கடிகாரம் கட்டிக் கொண்டும் வருவர்.

வகுப்பில் மணி அடிக்கப் பலர் முண்டியடிப்பதுண்டு. ஆரம்பத்தில் எனக்கு இது ஏன் எனத் தெரிந்திருக்கவில்லை. பின்னர் ஒருநாளில் விபரம் தெரிந்தபோது ஆச்சரியமாக இருந்தது.

அது அவர்கள் கல்விக் கூடத்திற்காக எழுப்பிய ஒலி மட்டுமல்ல....

காதல் பாடத்திற்காகக் காட்டிய சைகையும் கூட.

பின்னாளில் அதே காரணத்திற்காய் நானும் மணி அடிக்கப்போகின்றேன் என்பதை அப்போது நான் அறிந்திருக்கவில்லை.

நல்ல புரிந்துணர்வோடு கூடிய நண்பர் குழாம் ஒன்று நமக்குள் இப்போது உருவாகியிருந்தது. மனம் திறந்து பலவற்றையும் பேசுகின்ற கூட்டமாக இது இருந்தது.

பாடசாலைப் பொழுதில் மட்டுமல்ல..... மாலைவேளைகளில் விடுமுறை நாட்களில் எப்போதும் கூடியே திரிகின்ற குழாமாக நாம் உருவாகியிருந்தோம்.

அது மட்டுமல்ல... எம்மில் பலர் வீடுகளில் மின்சார வசதி இல்லை. அதை சாக்காக வைத்துக் கொண்டு இரவு வேளைகளில் பாடசாலையிலேயே தங்கிப் படிக்கத் தொடங்கியிருந்தோம்.

வாழ்வில் மறக்க முடியாத நாட்கள் அவை.

வீடுகளில் இருந்து கொண்டுவரும் உணவுகளைப் பதம் பார்த்துவிட்டு, பல்சுவைக் கதைகள் பேசி படுத்துறங்கிய காலம் அது.

காலையில் மட்டும் பொழுதோடு எழுந்து படிப்பது போல் பாசாங்கு செய்யவேண்டிய கட்டாயம் இருந்தது.

பாடசாலையால் ஒதுக்கப்பட்ட வீட்டில் குடியிருந்த பாடசாலை அதிபர் பாடசாலைக் கிணற்றடிக்கு அதிகாலையிலேயே வந்துவிடுவார்.

அவர் தண்ணீர் தெளிக்க எழுந்திருந்த நாட்களும் உண்டு.

பாடசாலையை அண்டிய குடியிருப்புகளில் வாழும் குடிமக்களுக்கு நாம் அங்கு தங்கியிருந்த செய்தி தெரியத் தொடங்கியிருந்தது. அவ்வப்போது ஒருசிலர் பாடசாலைப்பக்கம் வருவர். தம் குடும்பக் கவலைகளை எம்மோடு பகிர்ந்து செல்வதற்காய். அவசர உதவிகளுக்காய் சாமங்களில் தட்டி எழுப்பியவர்களும் இருந்தனர்.

அக்காலத்தில் பாடசாலையின் இரவுக் காவல்காரர் எம்மை நம்பியபடி நன்றாகத் தூங்கத் தொடங்கியிருந்தார். அவருக்குமாய்ச் சேர்த்து நாம் காவல் காக்க வேண்டியிருந்தது.

- முப்பத்தொண்டு -

அக்காலப் பகுதிகளில் நிறைய மினித் திரையரங்குகள் இருந்தன. அவ்வரங்குகளில் அடிக்கடி படம் பார்க்கத் தொடங்கியிருந்தோம். இந்த இரவு உலாவுக்கு அப்போது மிக இடைஞ்சலாக இருந்தவை அவ்வூர் நாய்களே.

பிரதான வீதியோரமாக எம் பாடசாலை அமைந்திருந்ததால் இரவுநேர வாகனப் போக்குவரத்து எம் தூக்கத்திற்கு அவ்வப்போது தொல்லை தரும்.

இவ்வாறான ஒருநாளில் இடம்பெற்ற ஒரு துயர நிகழ்வு எமது வாழ்நாளில் மறக்க முடியாத ஒன்றாக மாறியிருந்தது.

இதை இன்று நினைத்தாலும் உணர்வு ஒரு தடவை உறைந்து பின் ஒடும்.

அதை அடுத்த கோலத்தில் காணலாமா?

தொடரும்.

- கரிச்சான் குஞ்சன்.

## சிரிக்க...

ஒரு அப்பா மகனைக் கூப்பிட்டு வைச்சுப் புத்திமதி சொல்லிக் கொண்டிருந்தார்.

"அப்பா நீங்கள் சொல்லுறதை நான் ஏன் கேக்கக வேணும்"

எண்டு பெடியன் கேக்க

"எங்களுக்கு வயசு கூட. அதாலை அறிவும் அனுபவும் கூட. ஆனபடியால் நீங்கள் கேட்டு நடக்க வேணும் ராசா"

எண்டு பக்குவமாச் சொன்னார்

உடனை பெடியன் கேட்டான்

"அப்பா றேடியோவைக் கண்டுபிடிச்சது யார்? "

மார்க்கோனி எண்டு அப்பா பதில் சொல்ல

பெடியன் கேட்டான்

"அப்ப றேடியோவை ஏன் அவரின்ரை அப்பா கண்டுபிடிக்கேல்லை? "

- ஜில்ரூபா

# கேள்வி பதில்

அஞ்சலா ஜெகநாதன்
*(மூலிகை மருத்துவர்)*

*கேள்வி :*

*நான் மாதவிடாய் நேரத்தில் மிகவும் துன்பப்படுகின்றேன். குமட்டல், கடுமையான அடிவயிற்று வலி (cramps), தலையிடி போன்றன மாதவிடாக்கு ஒரு கிழமைக்கு முன்பாகவே வந்துவிடும். நரக வேதனை மிகவும் உணர்ச்சிவசப்பட்டுவிடுகிறேன். மிகவும் சிறிய விடயங்களுக்கு கூட அழுதுவிடுவேன். எந்த மருந்தும் எனது நோவைத் தணிக்கவோ மனநிலை மாற்றத்தைத் தரவோ உதவுவதில்லை. இந்த துன்ப நிலையை தவிர்க்க ஏதாவது மருந்து சொல்வீர்களா?*

Mrs.S..*சுவிஸ்*

பதில் :

அடிவயிற்று வலியினால் துன்பப்படும் பெண்களுக்கு அவர்களின் கற்பப்பை சுவரிலிருந்து சுரக்கப்படும் prostaglandins என்னும் ஓமோனின் அளவு கூடுதலாகக் காணப்படுகின்றது. இந்நிலையை இறைச்சி, பசுப்பால் உணவுகளில் காணப்படும் நிரம்பிய கொழுப்புக்கள் மேலும் மோசமாக்குகின்றன. ஆகவே இவற்றை உட்கொள்ளும் அளவை குறைக்கவேண்டும்.

மூலிகை மருந்து ( Menstrual Pain Mix):

இது Cramp bark, Mugwort, Jamaican dog wood, True unicorn, Pasque flower ஆகிய மூலிகைகளின் சேர்மானமாகும். இக்கலவை ஓமோன் அளவுகளை மட்டுப்படுத்தி வைத்திருந்து நோய்க் குறிகளை எதிர்க்கும் நோக்கில் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளன.

Agnus Castus:

இம்மூலிகை பெண்களின் ஓமோன் அளவுகளைச் சமன் செய்து கட்டுப்பாட்டில் வைத்திருக்க மிகவும் பயனள்ளதாகக் காணப்படுகிறது. இது மிக நீண்ட காலமாக பயன்பாட்டிலும் இருந்து வந்துள்ளது. காலை எழுந்தவுடன் முதல் வேலையாக இதனை அருந்தவேண்டும். ஏனெனில் இந்நேரத்தில் தான் ஓமோனின் அளவு உச்ச அளவில் இருக்கும்.

Evening Primrose oil:

இது Gamma- Linoleic Acid (GLA) இனை அதிகவளவில் கொண்டுள்ளது. GLAஆனது நோவைத் தரும் ஓமோனுக்கு எதிராக வேலை செய்யும் Prostaglandin (Anti-inflammatory prostaglandin) ஆக செயற்படுவதனால் நோவையும் வீக்கத்தையும் தணிக்கப் பயன்படுகின்றது. நாளுக்கு 250mg அளவு GLA கிடைக்கக் கூடியவாறு 3 மாதங்களுக்கு எடுத்துக்கொண்டே வந்தால் நோவு நிலை குறை வடைவதை அவதானிக்கமுடியும். மாதவிடாய் கால நோவு, சமிபாட்டுக் குறை பாட்டினாலும் ஏற்படலாம் (உம் மலச்சிக்கல்). நார்ச்சத்து கூடியவுணவுடன் நல்ல தரமான probiotic உதவி செய்யக்கூடும்.

சில நேரங்களில் ஏற்கனவே உள்ள குருதி வெல்லத்தின் அளவு சமனற்ற நிலையை மாதவிடாய்க்கு முன்பு தோன்றும் பதற்ற நிலையினால் (Pre-Menstrual Tension -PMT) அதிகரிக்கச் செய்கிறது. இந்நேரத்தில் குருதிவெல்லத்தின் அளவை பெருமளவில் மாறுபடாமல் வைத்திருக்க GTF Chromium உதவுகிறது.

Pantothenic Acid குமட்டலையும் அடிவயிற்றுத் தசைவலியையும் அகற்றுவதற்கு பயன்படுகின்றது. மேலும் ஓமோன் சமநிலைப்படுத்தலில் நன்றே வேலைசெய்யும்

# வெங்காயத்தின் மருத்துவப் பயன்கள்..

வெங்காயத்தில் கொழுப்புச் சத்து மிக மிகக் குறைவு. அதனால் உடல் பருமனைக் குறைத்துக்கொள்ள விரும்புவோர் உணவில் வெங்காயத்தைத் தாராளமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.


இரத்த விருத்திக்கும் இரத்த சுத்தத்திற்கும் வெங்காயம் மிகவும் உதவிகரமாக இருக்கிறது. உணவோடு வெங்காயத்தைச் சேர்த்துக் கொள்ளும்போது அந்த உணவு வெகு எளிதில் ஜீரணமாக வெங்காயம் உதவுகிறது.

உடல் உஷ்ணம் அதிகரிக்கும்போது வெங்காயம் உடல் உஷ்ணத்தைச் சமன்படுத்துகிறது. நாடித் துடிப்பைச் சீராக வைத்திருக்க உதவும் ஆற்றலும் வெங்காயத்துக்கு உண்டு.

சாதாரணமாக தலைவலிக்கு வெங்காயத்தை நசுக்கி முகர்ந்தால் உடன் குணம் தெரியும்.

பொதுவான இருமலுக்கு வெங்காயச் சாற்றை மோருடன் கலந்து குடிக்க குணமாகும்.

- *சந்திரவதனா*

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு

HERBA NATURELLE வழங்கும் 10% விசேட விலைக்கழிவு...

★ Hair Dye, அழகு சாதனப் பொருட்கள்
★ Vitamins & Minerals
★ உடற்பயிற்சிக்கான போசாக்கு வகைகள்
★ உடல் எடை குறைப்புக்கான மருந்துகள்
★ மூலிகை மருந்துகள்
- இன்னும் பல தெரிவு செய்யப்பட்ட பொருட்களுக்கு 10% விசேட விலைக்கழிவு*




வெளிவந்துவிட்டது
இலவச மருத்துவ இதழ்
"ஆரோக்கிய வாழ்வு"
பெற்றுக்கொள்ள தமிழ் கடைகள்
ஆலயங்களை நாடலாம்

மருத்துவ ஆலோசனைகளுக்கு, மூலிகை மருத்துவர் அஞ்சலா ஜெகநாதன் - 020 8765 9015

HERBA NATURELLE Natural Health Centre, 1410, London Road, Norbury SW17 4BZ
Tel: +44 (0) 20 8765 9015 / Email: sales@herbanaturelle.com / Web: www.herbanaturelle.com

# மூளை!



மனித மூளையில் பரிணாம வளர்ச்சி துரித கதியில் நடந்து வருவதாக சமீபத்திய ஆராய்ச்சியொன்று சொல்கிறது. முக்கியமாய் மூளையின் அளவோடு சம்பந்தப்பட்ட மரபலகில் (gene ) இந்த வளர்ச்சி நிகழ்கிறதாம். பரிணாம வளர்ச்சியின் முக்கியமான அம்சமென்று கருதப்படும் மூளையின் அளவு மற்றும் சிக்கல் வளர்ந்து கொண்டே வருவதாகத் தெரிகிறது என்கிறார் ப்ரூஸ் லென் (Bruce Lehn) எனும் சிகாகோ பல்கலைக்கழக விஞ்ஞானி. அதே நேரத்தில் நம் சுற்றுச்சூழலும் நாம் வாழ்வதற்குத் தேவைப்படும் திறன்களும்கூட மாறியே வருகின்றன. இது வரையில் நன்றாகச் சமாளித்து வந்திருக்கும் மனித மூளை இனியும் இம்மாற்றங்களுக்குத் தன்னைத் தகவமைத்துக் கொள்ளும், என்கிறார் லென்.

பரிணாம வளர்ச்சி ஒட்டு மொத்த இனத்திலும் நிகழ்வதில்லை, மாறாக அவ்வினத்தின் சில(ர்) முதலில் மரபலகு திடீர் மாற்றங்கள்ள (mutations) உள்வாங்குகின்றனர். இத்தகைய மாற்றங்களைப் பெற்றவர்களின் வாழுந்திறன் அதிகரிப்பதால் இந்த மரபலகு மக்களிடையே பரவுகிறது (மரபு வழியாக). இரண்டு மரபலகுகளில் இந்த திடீர் மாற்றங்களைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இவையிரண்டுமே மூளையின் அளவை நிர்ணயிக்கும் மரபலகுகள். இயற்கைத் தேர்வின்படி (natural selection) இத்தகைய மாற்றம் பெற்ற மரபலகினைக் கொண்ட உயிரினங்களே வாழுந்திறனைப் பெறுகின்றன.

முன்னர் லென், மனிதர்களில் இரண்டு மரபலகுகள் விரைவாகப் பரிணமிப்பதாகக் கண்டு பிடித்திருந்தார். இவையிரண்டும் மூளையின் அளவைக் கட்டுப் படுத்தும் மைக்ரோசெபாலின் (microcephalin) மற்றும் ஏ.எஸ்.பி.எம் (ASPM, abnormal spindle-like microcephaly-associated) ஆகியன. இவையிரண்டும் மனிதர்களை வேறு உயிரினங்களிலிருந்து பிரித்துக் காட்டின. இவை மனிதர்களுக்கிடையே இன்னும் பரிணமித்துக் கொண்டிருக்கிறதா என்பதைச் சோதிக்கும் போது இரண்டு மரபலகுகளும் தொடர்ந்து பரிணமித்து வருவதாக அறிகிறார்கள்.

இரண்டிலுமே திடீர் மாற்றங்கள் நிகழ்ந்ததால் அண்மையில் விளைந்த வேறி (variant) மக்களிடையே அதிகமாகப் பரவியிருக்கிறது. மைக்ரோசெபாலினை எடுத்துக் கொண்டால் 37,000 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய இந்த வேறி இப்போது 70 சதவீத மக்களிடையே இருக்கிறது.

அதே போல ஏ.எஸ்.பி.எம் வேறியானது 5,800 ஆண்டுகளுக்கு முன் தோன்றி இப்போது 30 சதவீத மக்களிடையே காணப்படுகிறது. இந்த ஆண்டுக் கணக்கெல்லாம் பரிணாம வளர்ச்சியின் மிகவும் குறுகிய காலம். இது எதைக் காட்டுகிறதென்றால் இந்த வேறிகள் ஒரு குறைந்த கால அளவில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றன. அதுவும் நவீன மனிதன் (modern human) தோன்றிய 200,000 ஆண்டுகளுக்கு வெகு பின்னரே. இந்த வேறிகள் இரண்டுமே கலாச்சார நடத்தைகள் தோன்றிய கால அளவை ஒக்கின்றன.

கலை, இசை, சமயம், கருவி செய்முறைகள் இவையெல்லாம் தோன்றிய சுமார் 50,000 ஆண்டுகளை ஒட்டியே மைக்ரோசெபாலினின் வேறி தோன்றியிருக்கிறது. ஏ.எஸ்.பி.எம்மின் வேறியானது மெசபடோமிய நாகரிகத்தின் காலமான கி.மு.7000ஐ ஒத்திருக்கிறது.

இவ்விஞ்ஞானிகள் எழுதுகிறார்கள், மைக்ரோசெபாலின் நவீன மனிதன் உடலளவில் பரிணமித்ததன் பிறகும்கூடத் தகவமைப்புக்கேற்றவாறு பரிணமித்து வருகிறது. இது மூளையினளவு, அறிவாற்றல், ஆளுமை, இயக்கக் கட்டுப்பாடுகள், மனநரம்பு நோயுறும் தன்மை ஆகியவற்றைக் கட்டுப்படுத்தலாம். அடுத்து என்ன செய்யப் போகிறார்களாம், இந்த வேறிகள் இருப்பதால் உயிரியல் ரீதியில் என்ன மாறுதல்கள் இருக்கின்றன என்பதை ஆராய் வார்களாம்.

மேற்சொன்ன இரு மரபலகுகளிலுமே பல்வேறு வேறிகள் காணப்படுகின்றன. இவற்றில் சில அதிகளவில் தேர்ந்தெடுக்கப்படுகின்றதாகத் தெரிகிறது. இந்த வேறிகளின் வேறுபாட்டு அலைவை (variation frequency) லென் குழுவினர் உலகளாவிய 59 இனங்களிலிருந்து வந்த 1000க்கும் மேற்பட்ட மனிதர்களில் கண்டறிந்தார்கள். இவற்றில் ஏ.எஸ்.பி.எம்மின் ஒரு வேறியான D, மிகவும் அண்மையில்தான் தோன்றியதென்றும் இது தோன்றிய வேகத்தில் விரைவாகவே மக்களுள் பரவியிருக்கிறதென்றும் இதற்கான காரணம் இது அதிகளவில் தேர்ந்தெடுக்கப்படுவதேயாகும் என்கிறார் லென்.

இந்த D வேறியின் புவியியல் ரீதியான பரவலும் கணக்கிடப்பட்டிருக்கிறது. இதன்படி D வேறி யானது வட ஆப்பிரிக்கா, மத்தியக் கிழக்கு மற்றும் தெற்காசியாவில் அதிகமாகவும் கிழக்காசியா, செவ்விந்தியர்கள், உப-சகாரா ஆப்பிரிக்காவில் குறைந்தும் காணப்படுகிறது.

மேற்சொன்ன மரபலகுகளின் வேலைகள் இன்னும் முழுமையாகத் தெரியாது. ஆனால் ஓரளவுக்கு அவை மூளையின் அளவோடு சம்பந்தப்பட்டவை என்று மட்டும் தெரிகிறது. உதாரணமாக மைக்ரோசெபாலி எனும் சிறுத்தமூளை வியாதி வருவது இந்த மரபலகுகளின் செயலின்மை யாலேயே என்று அறியப்பட்டிருக்கிறது. மூளையின் அளவுக்கும் அறிவுத்திறனுக்கும் தொடர்பிருப்பதாக நம்பப்படுகிறது, சில விதி விலக்குகளுள்ளன. ஆணின் மூளையளவு பெண்ணினதை விட 3 முதல் 4 சதவீதம் பெரியது, ஆனாலும் இருவருக்குமான அறிவுத் திறன் ஒன்றே மூளையின் அளவு பரம்பரையைச் சார்ந்ததுமாகும். சத்துக் குறைவால் மூளை சிறுக்காது.

இவையெல்லாம் இன்னும் முழுமையாக அறியப்படவில்லை என்பதை இவ்வாராய்ச்சியாளர்கள் அழுத்திச் சொல்கிறார்கள். மேற் சொன்ன மரபலகுகளின் வேறிகள் உங்களுக்குள் இருப்பதாலேயே நீங்கள் மற்றவரை விட சாமர்த்தியசாலிகள் என்று அர்த்தமில்லை. நாங்கள் கண்டிருக்கும் இந்த வேறிகளுக்கும் அறிவாற்றலுக்கும் எந்தச் சம்பந்தமுமில்லாமலும் போகலாம். மேலும் நாம் சுயநலம், வன்முறை, கொடூரம் ஆகிய வற்றுக்கான மரபலகு மாற்றங்களைப் பெற்றிருக்கிறோம், ஆனால் இன்றைய சமூகச் சூழலில் அவை கூடாவொழுக்கங்கள்.


லென் குழுவினர் அழுத்திச் சொல்வது, இந்த ஆராய்ச்சி வெறும் இரண்டு மரபலகுகளை மட்டுமே சோதித்தது. இரண்டு இனக்குழுக்களுக்கிடையேயான வித்தியாசம் இதைக் காட்டிலும் மிக மிக அதிகம். பல மரபலகுகளைக் கண்டோமென்றால், இனங்களுக்கிடையே அவற்றில் காணப்படும் வேறுபாடுகள் ஒன்றையொன்று சமனப்படுத்தக் கூடும்.

தற்போது நாங்கள் கண்டிருக்கும் இந்த வேறியானது தேர்வு முறையில் சம்பந்தப்பட்டிருப்பதும் அது சில இனங்களில் மட்டுமே அதிகமாகக் காணப் படுவதும் தற்செயலாக நிகழ்ந்ததே. அடுத்த வொரு ஆராய்ச்சியில் இதுவே ஆசியர்களுக்கும், ஆப்பிரிக்கர்களுக்கும் அதிகமாயிருப்பதாக விடை கிடைக்கலாம். இப்போதைக்கு ஒரு அரை டஜன் மரபலகுகள் மூளையுளவைக் கட்டுப் படுத்துவனவாக இருக்கின்றன. இவற்றைக் கொண்டு மனிதனின் பரிணாம வளர்ச்சியை மேலும் ஆராயப் போவதாக லென் கூறுகிறார்.

*- சுந்தரவடிவேல்*


MARKANDAN & CO
SOLICITORS & ESTATE AGENTS

We have moved... to
**845 Romford Road**




குடும்பத்தினருக்கான சலுகை அடிப்படையிலான விண்ணப்பங்கள்

விவாக விண்ணப்பங்கள்

அகதி விண்ணப்பங்கள்

14, 10 அல்லது 7 வருட வதிவிட தகமை விண்ணப்பங்கள்

பிரித்தானிய பிரஜாவுரிமை

வீதிப் போக்குவரத்து சம்பந்தமான வழக்குகள்

We also Specialise in....

- ஒப்பந்த தகராறுகள்
- நுகர்வோர் பிரச்சினைகள்
- மரண சாசனம் உறுதி தயாரித்தல்
- Bankruptcy Problems
- மதுபான அனுமதிகள்
- கட்டட அனுமதிகள்
- Cafe அனுமதிகள்

- House/Flat Purchase or Sale
- Remortgages
- Right to Buy
- Highly skilled migration
- Power of Attorney
- Sponsorship for UK Visas
- Work Permit application
- Civil Litigation

01.02.2005 முதல் அமுலுக்கு வந்துள்ள பிரித்தானிய அரசாங்கத்தின் சட்டத்தின் பிரகாரம் இந்நாட்டில் திருமணம் புரியவிருப்பின் நீங்கள் பிரித்தானிய உள்துறை அமைச்சின் முன் அனுமதி (Home Office Clearance) பெற்றிருத்தல் வேண்டும். மேற்படி விண்ணப்பங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

No win – No fee

விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயம் அடைந்திருந்தால் நட்டஈடு கோருவது சம்பந்தமான விடயங்கள் அடிப்படையில்

**எல்லாவிதமான சட்ட சேவைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்**

845 Romford Road, Manor Park, London, E12 6JY
Tel: **020 8514 8188** Fax: **020 8514 8303**
web: www.markandan-solicitors.com
e-mail: mm@markandan-solicitors.com

எங்கள் கட்டணம் மிகவும் குறைந்ததும் நியாயமானதும் ஆகும்.
ஆரம்ப ஆலோசனைகள் இலவசமானவை.
வார இறுதி ஆலோசனைகள் வசதியாகவும் ஒழுங்குபடுத்தி தரப்படும்.

# அது வீரம் விளைகின்ற மண்




தாய் மண்ணிற்காய்த் தீரனைத் தந்த தமிழீழத் தாயே
தலை வணங்குகிறோம்!




உனைப்போல் பிள்ளையைத் தந்தவர் ஆயிரம்
உம்மவர் தியாகமும் மீட்டிடும் தாயகம்



பூவைக்கும் பூவுக்கு! கொஞ்சம் பொறுத்திடம்மா
அப்பாவின் கனவு, அண்மையில் நனவாகும்



ஆயிரம் ஆயிரம் குடும்பங்கள் உமைப் போல!
மறந்திடுவோமா உம் பிள்ளைகள் தியாகம்



விடுதலைக்காய் வித்தாகினான் என்மகன்! உன்முகத்தில்
வித்தாகியோர் எழுந்து விருட்சமாகினர் எம் அகத்தில்



அய்யா கலங்காதீர்கள்
தமிழீழத்தின் அடிக்கல் உங்கள் பிள்ளை!



உங்கள் காலத்தில் அண்ணனின் கனவு பலித்துவிடும்
தமிழ் ஈழவிருட்சம் வானாய் உயர்ந்து செழித்து விடும்




கண்கள் பனிக்கிறதே அம்மா! - உனக்கு
ஆறுதல் சொல்ல வார்த்தைகளுக்கு எங்கு போவோம்



அண்ணா சற்றே ஓய்வெடு
தங்கை வந்திருக்கிறேன் ஆசிகொடு

## CASH & CARRY



இலங்கை இந்திய உணவுப் பொருட்கள், கடலுணவு வகைகள், பசுமையான மரக்கறி வகைகள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், பாத்திர வகைகள், தமிழ், இந்தி சினிமா DVD, CD, VHS போன்றவற்றை பெறுவது மாத்திரமன்றி கடல் கடந்து வாழ்கின்ற உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவதற்கும் நாடவேண்டிய இடம்.

Tel: 020 8952 66 55, 020 8381 3442
Fax: 020 8905 7546



**MARUTHI**
15 - 17 Queensbury Station Parade
Queensbury,
HA8 5NR







## பரதேசிகளின் பாடல்கள்

சொந்த மண்ணைத் துறந்து பரதேசிகளாக அலைந்து கொண்டிருந்த போதும் தங்கள் கலை ஆர்வத்தால் முகிழ்த்த கவிதைகளின் தொகுப்பு அப்பால் தமிழ் வெளியீடாக வெளிவந்திருக்கின்றது. இந்தத் தொகுதி 'கடுகு சிறிதானாலும் காரம் பொரிது என்பது போலப் பல கனதியான கவிதைகளை தன்னகத்தடக்கி வெளிவந்திருக்கிறது.

அப்பால் தமிழ் குழுமத்தினர் இந்த இலக்கியப் பணியைத் தொடர்ந்து செய்வதற்குத் தீர்மானித்து ஆண்டுதோறும் இது போன்ற நூலினை வெளியிட உத்தேசித்துள்ளனர்.

இத் தொகுப்பில் தங்கள் கவிதைகளை வெளியிட விரும்புபவர்கள் aricles @appaal-tamil.com என்ற மின்னஞ் சலூடாகத் தொடர்பு கொள்ளலாம்.

## பாடலில் நகைச்சுவை

சங்க காலத்தில் வாழ்ந்த புலவர்களில் சிலர் நகைச்சுவை மிகுந்தவர்கள். அவர் களுக்கு யார் மீதாவது கோபம் வந்தாலோ போச்சு! பாட்டாலேயே வாட்டி விடுவார்கள். இவர்களில் காளமேகப் புலவர் விகடமாகப் பாடுவதிலும், இழிவுபடுத்திப் பாடுவதிலும் பேர்போனவர்.. இதோ அவர் பாடல் ஒன்று.

தெருவிலே இடைச்சிப் பெண் ஒருத்தி மோர் விற்றுக்கொண்டு போனாள். அவளிடம் புலவர் ஒரு குவளை மோர் வாங்கிக் குடித்தார். மோரோ அதிகம் தண்ணீர் கலந்த தனால் சுவையில்லாது இருந்தது. விட்டாரா புலவர்? அவருடைய நகைச்சுவை நையாண்டி யாக வெளிவந்தது.

'கார் என்று பேர் படைத்தாய் ககனத்து உறும்போது

நீர் என்று பேர் படைத்தாய் நீள் தரையில் வந்ததன் பின்

வார் என்று மென் முலையார் ஆச்சியர் கை வந்ததன் பின்

மோர் என்று பேர் படைத்தாய் முப்பேரும் பெற்றாயே!'

தண்ணீரே! வானத்தில் மேகமாக இருந்த போது உனக்குக் கார் என்று பெயர். இத்தரையிலே இறங்கிய பின் உன்னை நீர் என்று சொன்னார்கள். கச்சை கட்டிய மென்முலைகளையுடைய இந்த இடைச்சியர் கைகளில வந்தபின் உனக்கு மோர் என்றுபெயர் சூட்டி விட்டார்களே. இப்படியாக நீ கார், நீர், மோர் என்ற மூன்று பெயர்களையும் பெற்றுவிட்டாயே! என்று நையாண்டி செய்கிறார்.

அடுத்த முறை இன்னுமொரு நையாண்டிப் பாடலுடன் சந்திக்கிறேன்.

*- தீவான்*

வியாபாரம் பெருக விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர் அடிக்கவும் விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர்

## சமையல் குறிப்பு

### கிரேஸ் அக்கா
*(கிச்சனுக்குள்ளிருந்து)*

### Vegetable rice balls

தேவையான பொருட்கள்

4 Cup அரிசிக் குருணல்,

1/2 Cup கரட்,

1/4 Cup மாங்காய்,

1/2 Cup beans,

3 Cup தயிர்,

1 Cup வெங்காயம்,

1/2 Cup தக்காளி ,

1/2 Cup பச்சைப் பட்டாணி,

1/2 Cup கொத்தமல்லி இலை

தாளிக்க

கடுகு, சீரகம், கடலைப்பருப்பு, பெருங்காயம், கறிவேப்பிலை, பச்சைமிளகாய் (மிளகாய்த்தூள், மல்லித்தூள், சீரகத்தூள் ஒவ்வொன்றும் 1 தே.கரண்டி), 2 தே.க நல்லெண்ணெய்.

செய்முறை:

வாணலியில் 1 தே.க. எண்ணெய் விட்டு சூடாகியதும் கடுகு, கடலைப்பருப்பு, சீரகம், பெருங்காயம், கறிவேப்பிலை, தூளாக நறுக்கிய பச்சை மிளகாய் போட்டு வதக்கவும். பின் 6 Cup நீர் ஊற்றி, அளவாக உப்பு போட்டு நன்கு கொதித்ததும் அரிசிக் குருணலைக் கொட்டி கெட்டியாகக் கிளறி இறக்கவும்.இது நன்கு ஆறியதும் ஓரளவான உருண்டைகளாக்கி வைத்துக்கொள்ளவும்.

வேறொரு வாணிலியில் 1 தே.க.எண்ணெய் விட்டு சீரகம், மிளகாய், மல்லி, மஞ்சள்தூள், பட்டாணி, தூளாக நறுக்கிய கரட், பீன்ஸ், மாங்காய், உப்பு போட்டு 5 நிமிடம் வதக்கி நன்கு மசித்து எலுமிச்சை அளவு சிறு உருண்டைகளாக்கவும். உருண்டையாக்குவது சிரமமாக இருந்தால் ஒரு உருளைக்கிழங்கை அவித்து மசித்துச் சேர்த்துப் பிடிக்கலாம். பின் அரிசிக்குருணலை உருண்டையில் நடுவில் குழி செய்து மரக்கறி உருண்டையை அதில் வைத்து அரிசிக்குருணல் உருண்டையால் மூடி. உள்ளங்கையில் வைத்து நீளவாக்கில் உருட்டி ஆவியில் வேகவைத்து (இட்லி போல்) எடுக்கவும். தயிரை உப்பு, சீரகத்தூள் போட்டு நன்கு கடைந்து எடுக்கவும்.

ஆவியில் வேக வைத்த உருண்டைகளை ஓர் அகலமான பாத்திரத்தில் போட்டு பாதி தயிர்க் கலவையை அதன்மேல் ஊற்றவும். பரிமாறுமுன் ஊறிய உருண்டைகளை தட்டில் போட்டு அதன்மேல் வெங்காயம், தக்காளி, கொத்தமல்லி இலை (தூளாக நறுக்கியது) தூவிப் பரிமாறவும். (விரும்பினால் புதினா mince தூள் தூவிச் சாப்பிடலாம்.

## விருந்தினர் வந்தால்...

சென்ற முறை வெளிவந்த சோயா Mince (வறை) பற்றிய சந்தேகங்களை பல நேயர்கள் கேட்டார்கள். ஆனபடியால் அதன் விளக்கத்தை தருகிறேன்.


சோயா கட்டிகளை ஊறவைத்து அரைத்த பின் எடுத்து வறை செய்வதா? என்பதுதான் பலருடைய கேள்விகள்.

சந்தேகமே வேண்டாம். தற்பொழுது எல்லா தமிழ் கடைகளிலும் Health food கடைகளிலும் குறுணலாக அரைத் சோயா Mince பண்ணிய படியே கிடைக்கின்றன.

சோயா வறைக்கு கோவா சேர்த்து வறுக்கலாம் என எழுதியிருந்தேன். அதே செய்முறையில் கோவாவுக்கு பதிலாக வெங்காயத்தாள், புடலங்காய், Cauliflower இப்படியான மரக்கறி வகைகளையும் வெட்டி வறை செய்யலாம்.

*- புவனம் அக்கா*


Kerala Ayurvedic Health Clinic



Free Consultation | Authentic and effective Kerala ayurvedic treatments
Qualified and registered Ayurvedic Physicians | Affordable Prices

**Call 020 8902 1104 or 020 8902 1707**

உங்கள் நோய்க்கு ஏற்ப அனுபவம் மிக்க பிரத்தியேக ஆலோசனைகளுக்கும்,
மருத்துவ சிகிச்சைக்கும் கேரளா ஆயுர்வேத மூலிகை மருத்துவரை நாடுங்கள்



Massage therapies by experienced and highly skilled therapists
Treatment is designed around your individual health needs
Only natural herbal medicines are used
No side effects at all
Wide range of therapies

- ✓ Frozen Shoulder
- ✓ Digestive Disorders
- ✓ High Blood Pressure
- ✓ Pulled Muscles
- ✓ High Cholestrol
- ✓ Trapped Nerve
- ✓ Paralytic Conditions

- ✓ Stress and Strain
- ✓ Back Pain
- ✓ Joint Pain
- ✓ Diabetes
- ✓ Migraine
- ✓ Stiffness
- ✓ Arthritis

Male & Female Therapists available
We can also speak in Hindi
Tamil & Malayalam




**Open 7 Days a Week**

**1 Odeon Parade, Sudbury Heights Avenue, Greenford, Middlesex, UB6 0NA**
**5 mins walk from Sudbury Town - Piccadilly Line** **www.kahc.co.uk**

மட்டைக் கிளப்பானின்....

# அலசுவாரம் - 23

ஐயர் ஆத்தில குளிச்ச நானெண்டால் அவர் ஆத்தில குளிச்சாரா அவர் வீட்டுக் கிணத்தில குளிச்சாரா எண்டு விளங்காம நாமெல்லாம் முளிக்கிற மாதிரி தேசியத் தலைவருடைய மாவீரர் நாள் உரையையும் கேட்டு எல்லாரும் குழம்பிப் போய் இரிக்கிறாங்க. அவர் திட்டவட்டமாகச் சொல்லிப்போட்டார்? விடுதலைக்கான பாதையில தமது பயணத்தைத் தமிழர்கள் மீளவும் ஆரம்பிச்சிரிக்கிறாங்க அதுக்கான ஆதரவத் தாருங்க? எண்டு. அதாவது நாலாம் கட்ட ஈழப் போர் எப்பவோ ஆரம்பிச்சிற்றுது. ஆனாப் போருக்கான பாதையைப் போட்டது நாம இல்ல. இதுக்கு மேல என்ன இரிக்குது மண்டையைப் போட்டுக் குழப்புறதுக்கு. கண்காணிப்புக் குழு தலையைப் பிய்க்குது. நாம போரைக் கண்காணிக்கிறமா அல்லது போர் நிறுத்தக் கண்காணிக்கிறமா எண்டு.

சரி நாம விசயத்துக்கு வருவம். பூராயம் பகுதியில சிலவேளை இந்தத் தொடரைப்பற்றி விமர்சனங்கள் வருகுது. வாசகர்களுடைய சந்தேகங்களையும் தீர்த்து வைக்கவேணும். அலசு. 21 இல் நான் மேலோட்டமாக எழுதின கூர்ப்பைப் பற்றிய கருத்துக்கு ஒரு நண்பர் பதில் கருத்து எழுதியிருந்தார்.

கூர்ப்பு ஒரு கொள்கைதான் பாருங்கோ. முடிவான ஒரு விதியில்ல. கணித ரீதியில நிறுவப்பட்ட ஐன்ஸ்டீனுடைய சார்புத் தத்துவத்தையே ஒரு கொள்கையாகத்தான் அறிவுலகம் ஏற்றிருக்குது. ஹோமோ இறெக்டஸ் எண்டு விஞ்ஞானப் பெயர் கொண்டு அழைக்கப்படும் மனித மூதாதையரான நிமிர்ந்து நிற்கும் குரங்கு மனிதர்கள் ஒரு கற்பனையேயன்றி அதற்கான சந்ததிச் சுவட்டுச் சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை. பழைய கற்கால (உ-ம் ஹோமோ நியாண்டதாலென்சிஸ்-நியாண்டதால் சந்ததிச் சுவடுகள்) மனிதனை ஹோமோ சேப்பியன் என்றும் நவீனகால மனிதனை ஹோமோ சேப்பியன் சேப்பியன் (அதாவது பெரிய அளவில் உடற்கூற்று வேறுபாடுகளில்லாததால் பிரிவுப் பெயர் மாற்றமடையவில்லை என்றும் கூறுவதன் மூலம் கற்கால மனிதனுக்கும் தற்கால மனிதனுக்கும் பெரிய வித்தியாசமில்லை என்பதோடு இன்றைய விஞ்ஞான அறிவியலைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் கற்கால மனிதனுக்கும் (ஹோமோ சேப்பியன்) இருந்திருக்க வேண்டுமென்றே கருதப்படுகின்றது.

அந்த வகையில் மனித இனத்தின் பூரண பரிணாமம் எப்போது கூர்ப்பித்தது என்பதற்குத் தெளிவான விடை களில்லை. முன்னங்கால்களைக் கைகளாகப் பாவிக்கத் தொடங்கியதுமே மனித இனம் தோன்றிவிட்டது என்ற நண்பரின் கூற்றை ஏற்பது அறிவியலுக்குப் பொருந்தாது. பல சிறிய விலங்குகளும் முன்னங்கால் களைக் கைகளாகப் பாவிக்கின்றன (உ-ம்: அணில், எலி).

இந்த அறிவியல் சர்ச்சையை இத்தோடு நான் நிறுத்திக் கொள்கிறேன். இத்தொடரின் நோக்கம் இத்தகைய அறிவியற் செய்திகளை விஞ்ஞான பூர்வமாக விளக்கிச் செல்வதல்ல. சில எடுகோள்களைப் பாவித்துக் கட்டுரையை நகர்த்திச் செல்வதற்காகச் சில சமயங்களில் அவ்வப்போது சில செய்திகள் தரப்படுகின்றன. அவ் வளவே. நாம் மேற்கொண்டு செல்வோம்.

மட்டக்களப்பின் எல்லைப்புறங்களில் ஆங்கிலேயர் கண்டியைக் கைப்பற்றியபோது ஓடிவந்த சிங்களவர்கள் குடியிருப்புக்களை அமைத்ததைச் சென்றமுறை கூறியிருந்தேன். ஆனால் அந்தப் பழைய சிங்களக் கிராமங்களுக்கும் சுதந்திரத்திற்குப்பின் சிங்கள ஆட்சியாளரால் பலவந்தமாக ஏற்படுத்தப்பட்ட குடியேற்றங்களுக்கும் எதுவித சம்பந்தமுமில்லை. முன்பு வந்தவர்கள் தமிழரின்உறவினராய் இருந்தார்கள். பின்பு குடியேற்றப்பட்டோர் பகைவர்களாய்க் காணப் பட்டார்கள்.

உண்மையில் மட்டக்களப்பில் வேளாண்மையைத் தம் குலத்தொழிலாய்க் கொண்ட குடியானவர்கள் வாழும் கிராமங்களில் சிங்களக் குடியென்று ஓர் குடியினர் காணப்படுகின்றனர். இவர்கள் அனைவரும் சுத்தத் தமிழர்களாவர். இன்று இக்குடிவழிப் பிறந்த பலபேர் இனமானத்தோடு போராடும் விடுதலைப் போராளிகளாகவுள்ளனர். கோயில் கொடியேற்றக் காலங்களில் சிங்களக் குடியாருக்கென ஒதுக்கப்பட்ட பூசை திருவிழாக்களில் ஒன்றுபட்டு தங்கள் குடிவழிப்பூசை சிறப்புற இக்குடி இளைஞர்கள் செயலாற்றுவர். இந்தப் பெயர் இவர்களுக்கு ஏன் ஏற்பட்டது என்பதற்கான வரலாற்று விபரங்கள் அதிகம் கிடைக்கப் பெறவில்லையானாலும் மட்டக்களப்பு மான்மியம் என்னும் கல்வெட்டுத் தொகுப்பில் இவர்கள் பற்றிய மிகச்சிறிய செய்திகள் உள்ளன. அந்தக்காலத்தில் தமிழருக்கும் சிங்களவருக்கும் ஏற்பட்ட திருமண உறவுகளினாலேயே இத்தகைய ஒரு வம்சவழி ஏற்பட்டிருக்கவேண்டுமென்று ஊகிக்கத் தோன்றுகின்றது.

இது போன்றே இன்னொரு விடயத்தையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். வேடர்கள் என்பது பொதுவாகக் காட்டு மிராண்டிகளான வேட்டையாடும் தொழிலைக் கொண்ட ஆதிமனிதர்களைக் குறிக்கும் சொல்லாகும். ஆனால் இலங்கை வேடர்கள் அப்படிப்பட்டவர்களல்ல. அவர்கள் ஒருகாலத்தில் நாகரீகம் மிக்க சாதியாராக இருந்து தம் நாட்டைப் பறிகொடுத்ததால் அடித்து விரட்டப்பட்டுக் காட்டுக்கு ஓடியவர்கள் காட்டில் வேட்டுவ வாழ்க்கை வாழ்ந்ததால் நாகரீக உலகின் நடைமுறை அறியாது போனவர்கள். வங்காளத்திலிருந்து தந்தையால் நாடு கடத்தப்பட்ட விசயனை மணந்த இயக்கப் பெண்ணான குவேனியின் பரம்பரையினரே இவ்வேடர்கள். நாட்டை விசயன் அபகரித்துவிட்டு இவர்களைத் துரத்திவிட்டதால் இவர்கள் உயிர்தப்பிக் காடுகளில் தஞ்சம் புகுந்தவர்கள் என்று கூறப்படுகின்றது. இந்த வேடகுடியினரில் ஒரு பரம்பரையினர் மட்டக்களப்புப் பிரதேசங்களில் வந்து அங்கு வாழ்ந்த தமிழருடன் இனங்கலந்தனர் அவர்கள் தற்போது வேளாண்மையைக் குலத்தொழிலாகக்கொண்ட மட்டக்களப்பின் குடியானவர்கள் வாழும் கிராமங்களில் வேடகுடியினரென அழைக்கப்படுகின்றனர்.

இவ்வாறே குறவர் குடியென்றவோர் குடியும் மட்டக்களப்புக் கிராமங்களில் காணப்படுகின்றது. பழங்காலத்தில் நாடோடிகளாய் தமிழகத்தின் குற்றாலப் பிரதேசங்களிலிருந்து வந்து மட்டக்களப்பில் குடியேறி தமிழர்களுடன் இனங்கலந்தவர்களாக இவர்கள் இருக்கக்கூடும்.

இவ்விரு குடியினருக்கும் தற்காலத்தில் மையங்களை போன்ற இடங்களில் வாழும் வேடர்களுக்கும் அன்றி பாம்பாட்டிக் குறவர்களுக்கும் எவ்வித தொடர்புமில்லை. மட்டக்களப்பின் சிங்கள வேட, குறக்குடியினரெல்லாம் ஏனைய தமிழ் விவசாயிகளுடன் உற்றாராய் உறவினராய்க் கலந்து வாழ்ந்து மட்டக்களப்பின் டைவேசிற்றி என்று கூறக்கூடிய பன்முக அழகை மேம்படுத்தியவர்கள். காற்பரப்புக் காணிதானுமின்றி தாம் வேளாண்மை செய்வதாகப் பெருமையடிக்காமல் மிகப் பழங்காலத்திலிருந்தே கமத்தொழிலைத் தம் குலத்தொழிலாய் மதித்து பெரிய அளவில் விவசாயம் செய்து வாழும் குடியானவப் பண்பினர். இவர்களைப் பற்றி:

“அரியகல மிடுமுதலி மீகான் கோடை அவுறாளை
மேலச்சேனை பள்ளச்சேனை பெரிய கல்மடு முதலி
மூவாங்கல்லு போகளுமே புத்தூரர் மருங்கூரர்
வீரச்சோலை புகழ் காரைக்காட்டாரும் வித்தகமாய்
மேழி தொழில் செய்யுமென்றான்”

என்று மட்டக்களப்பு மான்மியக் கல்வெட்டுப் பாடலொன்று கூறுகின்றது.

*- தொடரும்*

# இல்லந்தோறும் இனிய வாழ்வு

## Detoxification Therapy - உடல் அக புற சுத்திகரிப்பு சிகிச்சை

**Dr. பாலேந்திரன்**
*(ஒரு பேப்பருக்காக)*

நாம் தினமும் பல பொருட்களை சுவாச மூலமும், வாய் மூலமும் உடலினுள் எடுக்கிறோம். மேலும் எமது தோல் பல்வேறு வகையான மாசுப்பொருட்களால் சூழப்பட்டுள்ளது. இவ்வாறு உடலினுள் செல்லும் பொருட்கள் கழிவுகளாக வெளிச்சுவாசம், வியர்வை, சலம், மலம் ஆகியவற்றுடன் வெளியேறுகின்றன. இவ்வாறான கழிவுகளை வெளியேற்ற ஆரோக்கியமான உடல் உறுப்புகள், உடற்பயிற்சி ஆகியன அவசியம். இவை குறைவடையும் போது படிப்படியாக தேவையற்ற பொருட்கள் உடலினுள் தங்க ஆரம்பிக்கும். இவ்வாறு தங்கும் கழிவு அல்லது நச்சுப்பொருட்களின் அளவு உடலினுள் தங்க ஆரம்பிக்கும். இவ்வாறு தங்கும் கழிவுகளின் அளவு உடலினுள் அதிகரிக்கும்போது பலவகையான நோய்கள் உண்டாகின்றன.

இவ்வாறான நச்சுப்பொருட்களை உடலில் இருந்து அகற்றி உடலைச் சுத்தப்படுத்தும் சிகிச்சைமுறை Detoxification Therapy எனப்படும். உலகில் அனேகமான எல்லா நாடுகளிலும் இவ்வாறான சிகிச்சைமுறை உள்ளது.

இவ்வாறு நச்சுப்பொருட்கள் உடலில் அதிகம் சேரும் அளவு நாம் வாழும் வாழ்க்கை முறையிலும் உண்ணும் உணவின் தன்மையிலும் பெரிதும் தங்கியுள்ளது. உடலில் சேரும் தேவையற்ற நச்சுப்பொருட்களை குறைப்பதற்கு பின்வரும் வாழ்க்கை முறை உதவும்.

கடவுள் நம்பிக்கை, பயபக்தி. தூய்மையான சிந்தனைகள், செயல்கள் மது, புகை போதைப் பழக்கங்களை தவிர்த்தல். தாவரவகை உணவுகளை உண்ணல். புலால் உண்பதை தவிர்த்தல். வாழ்க்கை சுகங்களை அளவோடு அனுபவித்தல். வாரம் ஒரு முறையாவது மற்றவர்களுக்கு பிரதிபலன் கருதாது உதவி, அதனால் கிடைக்கும் ஆத்மதிருப்தியை அனுபவித்தல் அதிக கோபம், அதிக ஆசை இவற்றை தவிர்த்தல் நிகழ்காலம், எதிர்காலம் பற்றி யதார்த்தமான எதிர்பார்ப்புகளுடன் அவற்றை அடைய கடுமையாக உழைத்தல். சுயகௌரவம், தன்னம்பிக்கை ஆகியவற்றை பேணுதல்.

உடலில் தோன்றும் சாதாரண காய்ச்சல், இருமல், வயிற்றுகோளாறு போன்ற நோய்களை இலகுவில் கண்டு மருத்துவரை நாட முடியும். ஆனால் உடலில் கழிவு நச்சுப்பொருட்கள் அதிகம் சேர்ந்துவிட்டால் அவற்றை பின்வருமாறு இனங்காணலாம். ஒருவர் தனது வாழ்க்கைமுறையை நேர்மையுடன் பின்னோக்கிப் பார்க்க வேண்டும்.

அத்துடன் உடலில் நோய் எதிர்க்கும் தன்மை குறைவடைவதுடன், உடற்சோர்வு, மனச்சோர்வு ஆகியன ஆதிக்கம் அடையுமானால் அதுவே உடலில் கழிவு /நச்சுப்பொருட்கள் ஆகியவற்றின் அதிகரிப்பாகும். மேலும் உடல்நோய்வாய்ப்பட்ட போது வழமையாக பயன்படுத்தும் மருந்துகள் போதிய பலனை அளிக்க தவறிவிடும். Detoxification Therapy பல முறைகளில் செய்யப்படும். ஒவ்வொரு நோயாளிக்கும் ஏற்றமுறையை தேர்வுசெய்வது அனுபவம் வாய்ந்த மருத்துவரின் திறமையாகும். அடுத்ததாக Detoxification Therapy சிலவற்றை பார்ப்போம்.

1) உண்ணாநோன்பு இருக்கும் முறையாகும். இவை பலவகைப்படும். தொடர்ச்சியாக பத்து நாட்களுக்கு பழச்சாறு மட்டும் குடித்து நோன்பு இருத்தல். அல்லது வார விடுமுறை நாட்களில் மட்டும் உண்ணாது இருத்தல். அல்லது தினம் ஒருபொழுது மட்டும் உணவுஉண்ணல்.


2) Alkaline-Detoxification Diet - இம்முறையில் பத்து நாட்களுக்கு வேகவைத்த காய்கறிகள் மட்டும் உண்ணவேண்டும். இது தவிர எவ்வகையான பழச்சாறோ, தேனீர், கோப்பி ஆகியன தவிர்க்கப்படும். கொதிக்க வைத்து ஆறிய நீரை வேண்டியமட்டும் குடிக்கலாம்.

3) Colon Therapy - இம்முறையில் மூலிகைசாறு கலந்த நீரை Enema போன்று உடலினுள் பெருங்குடலை சுத்தம் செய்வதாகும்.

4) Vitamin C therapy - இம்முறையில் பத்து நாட்களுக்கு வழமைக்கு அதிகமான அளவு Vitamin C உட்கொள்ளப்படும். இவ்வாறு செய்வதால் உடலில் தங்கியுள்ள நச்சுப்பொருட்களை செயலிழக்க செய்யமுடியும் என நம்பப்படுகின்றது.

5) Hyperthermia Therapy - மூலிகைசாறு கலந்த நீரை கொதிக்க வைத்து அதிலிருந்து வெளிவரும் நீராவியை சிறிய அறையில் நிரப்பி அதனுள் நோயாளி 30 நிமிடம் வரை தங்கவைப்பதாகும். இவ்வாறான சிகிச்சைகளை பெற்று பலனடைந்த பலர் இதன் மகிமையை நன்கு அறிவர்.


Strand Motor Co.
156 - 158 Handcroft Road, West Croydon CR0 3LE
Service
MOT
Parts
Bodywork


Italian Specialists French Specialists Japanese Specialists
தமிழில் பேசி உங்கள் காரின்
எந்தத் திருத்த வேலைகளையும்
முழுமையாகச் செய்ய வசதி
Tamil Specialist Service Centre Croydon
Monday to Friday 8.00am - 6.30pm Saturday 9.00am - 2.00pm
Tel: 0208 686 0868 Fax: 0208 686 0667

# என் ஞாபகப் பதிவிலிருந்து...

**சுதந்திரா**
*( ஒரு பேப்பருக்காக )*

அந்த மாலைப் பொழுது வடக்குப் புன்னாலைக்கட்டுவன் சந்திக்கு வடக்குப் பக்கமாக அமைந்த வசாவிளான் வீதியில் அமைந்திருந்த அந்தப்பலசரக்குக்கடை ஆட்களின் ஆரவாரமாகவிருந்தது. மாலைப் பொழுதாகையால் மண்ணெண்ணை வாங்குவோரிலிருந்து மலத்தியோன் வாங்குவோர் வரையும் அந்தத்தாடிக்கார மணியம் மாமாவின் முன்னால் குவிந்து நின்றார்கள். அந்தக்கூட்டத்தில் நானும் 10லீட்டர் மண்ணெண்ணைபரலுடன் மண்ணெண்ணைக்காகக் காத்திருக்கிறேன்.

அந்தக் கூட்டத்தில் புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த போஸ்மாஸ்ரர் மாமாவின் தேவாக்காவும் அந்த வசாவிளான் அண்ணாவும் நின்றிருந்தார்கள். மணியம் மாமாவும் அவ்ரது கடை ஊழியனும் வந்தவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் கவனமாயிருந்தனர்.

வானில் உலங்குவானூர்தியொன்று வட்டமடித்துக்கொண்டிருந்தது. அந்த இனிய மாலையின் இனிமையைக் குலைத்து வானை அது உளுதுகொண்டிருந்தது. வெளியிலை ஒருதரும் நில்லாதையுங்கோ.... கண்டா இதிலைதான் கொட்டுவான்.... மணியம்மாமா சொன்னார். மணியம்மாமா என்னைக்கெதியிலை அனுப்புங்கோ அம்மா தேடுவா....இருளப் போகுது.... எல்லாருக்கும்தான் அவசரம் கொஞ்சம் பொறுசடா.... தேவாக்கா என் அவசரத்தைப் பார்த்து மெல்லிதாகப் புன்னகைத்துக் கொண்டு நின்றா. அது எனது முறை எனக்கான மண்ணெண்ணைக்கலனில் பத்துலீட்டர் மண்ணெண்ணையை அந்த இளைஞன் நிரப்பித்தந்தான். அதற்கான பணத்தினையும் கொடுத்து ரசீதையும் வாங்கிக்கொண்டு எனது சயிக்கிள் கரியலில் மண்ணெண்ணைக்கலனை வைத்துக் கையால் பிடித்தபடி சயிக்கிளில் ஏறுகிறேன். வானையுழுத உலங்குவானூர்தி பதிந்து துப்பாக்கி வேட்டுக்களைத்தீர்க்கத் தொடங்கியது.

பிள்ளையாரே காப்பாற்று... பிள்ளையாரே உனக்கு அடுத்த வெள்ளி என்னளவு மாலை கட்டித்தருவேன்..... காப்பாற்று... ஓம் கணபதே நமக... என் உதடுகள் என்னையறியாது பயத்தில் பிள்ளையாரை வேண்டிக்கொள்ள வடக்குப் புன்னாலைக்கட்டுவன் சந்தியில் குப்பிளானை நோக்கிய வீதியின் அருகில் நின்றிருந்த நிழல்வாடியின் பின்னே சுழல்கிறேன். அந்த வீதியை உலங்குவானூர்தி கக்கிய சன்னங்கள் துளையிட்டுக்கொண்டிருந்தது. ஓம்... கணபதே நமக... ஓம் கணபதே நமக....என் உதடுகள் அதைத்தவிர வேறெந்த வார்த்தையையும் உச்சரிக்கவில்லை. இமைமுட்டிய கண்ணீர் என் கன்னங்கள் வழியே வழிந்துகொண்டிருந்தது.

பயம் என்னுயிரை அந்தக்கணங்களில் பிய்த்துத்தின்று கொண்டிருந்தது. என் வரவை எதிர்பார்த்திருக்கும் அம்மாவின் இதயம் எனக்காய்த் துடித்துக்கொண்டிருக்கும் இங்கோ நான் சாவின் விழிம்பில்.....

திடீரென பெரிதாக குண்டொன்று வெடிக்கும் சத்தம் என் காதுகளையும் அதிர்க்கிறது. அது எங்கே விழுந்தது என்பதை ஊகிக்கமுன்னம் மணியம்மாமா கடைப்பக்கமாக அழுகையொலிபோலவும் ஆட்கள் கதைப்பதுபோலவும் கேட்கிறது. ஆனால் உலங்குவானூர்தி மேலும் பதிந்து சுட்டுக்கொண்டிருந்தது. அந்த நிழல்வாடியைச் சுற்றிய என் உயிர் மீழுமா என்பதை அக்கணம் உணரவே முடியவில்லை.

சற்றுநேரம் செல்ல உலங்குவானூர்தி மேலுயர்ந்து பலாலியை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. மணியம்மாமா கடைப் பக்கமாக ஆட்களின் ஆரவாரம் அதிகமாக அங்கு என்ன நடந்தது என்பதைப்பார்க்க எனது மண்ணெண்ணைக்கலனோடு அங்கு போகிறேன். தேவாக்கா நின்ற இடத்தில் குருதிவழிய விழுந்து கிடந்தா. மணியம் மாமாவும் தான் நின்ற இடத்தில் அப்படியே கிடந்தார்.... அங்கால் நின்றிருந்த அந்த அண்ணா தலையால் குருதிவழய திகைத்து நின்றான். மற்றவர்கள் அவசரப்பட்டு ஓடுவோர் ஓட மீதிப்பேர் அந்த அதிர்ச்சியிலிருந்து விடுபடாமல்... வசாவிளானிலிருந்து எறிகணைகள் நாச்சிமார் கோவிலடிப்பக்கமாக விழுந்து கொண்டிருந்தது.

இறந்தவர்களையும் காயமானவர்களையும் வாகனமொன்று வந்து ஏற்றிக்கொண்டு போனது. நான் அந்த இடத்தில்...... என்னையே மறந்தேனா.....புரியவில்லை. வா போவம் அம்மா அங்கை தேடிக்கொண்டிருக்கிறா.... அப்பாவின் அந்த அழைப்புவரும்வரை என் புலனெல்லாம் அந்த வெடிச்சத்தமும் அந்தக்கொடுமையும்....

ஊர் உறங்கியதாய்
அயல்நாயின் ஊளையொலி—
இரவும் உறங்கியதாய்
உறுதிசொன்ன இராக்காத்து—
சேர்த்து வைத்த துளிகளை
பூமித்தாய் மடியில் இறக்கிவைக்க
காத்திருந்த மேகமாய் என் விழிகள்
அழுவதற்குத் தயாராக—
உறங்கிப் போயிருந்த அம்மாவின்
துயில் கலைத்து—
'அம்மா தேவாக்கா'
அதைவிட வேறுமொழி
என் மொழியில் வரவில்லை—

காலைவிடிந்து ஊர் தன்பாட்டில் இயக்கம் கண்டு... இயல்பாக... நேற்றைய பேரிடியை யாரும் நினைக்காமலில்லை... கடைக்கு வருவோர் போவோரெல்லாம் தேவாக் காவைப் பற்றித்தான் நிறையக்கதைத்தார்கள். அந்த அழகிய கிப்பித்தலைக்காறி, புன்னகை மாறாத அந்த முகம் மறக்கவே முடியவில்லை.

போஸ் மாஸ்ரர் மாமா, தேவாக்காவின் அக்கா, அம்மா அந்த முகங்களில் நிரந்தரமாகத் துயர் குடியேறியிருந்து கொண்டது. தேவாக்காவைத் தெரிந்தோர், பழகியோர், நண்பர்கள் என எல்லோருக்குள்ளும் அந்த அழகியில்லாத குறை இருந்தது நிசம்.

*- தொடரும்*

## அம்மாவுக்கு!

ஆயிரம்தான் கவிசொன்னேன்
அழகழகாய்ப் பொய்சொன்னேன்
பெத்தவளே உன்பெருமை ஒத்தை வரி
சொல்லலையே

எழுதவோ படிக்கவோ இயலாத தாய்பற்றி
எழுதியென்ன லாபமென்று எழுதாமல்
போனேனோ

கதகதண்ணு களிக்கிண்டி களிக்குள்ளை
குழிவெட்டி கருப்பெட்டி நல்லெண்ணை
கலந்து தருவாயே

தொண்டையிலை அது இறங்கும் சுகமான
இளஞ்சூடு மண்டையிலை இன்னும்
மசமசன்னு நிக்குதம்மா

தித்திக்கச் சமைச்சாலும் திட்டிகிட்டே
சமைச்சாலும் கத்தரிக்காய் நெய்வடியும்
கருவாடு தேனொழுகும்

வைகையிலை ஊர்முழுக வல்லாரும்
சேர்ந்தழுக கைப்பிடியாக் கூட்டிவந்து
கரையேத்தி விட்டவளே

எனக்கொன்னு ஆனதுன்னா
உனகுவேறை பிள்ளையுண்டு
உனக்கொண்ணு ஆனதுன்னா
எனக்குவேறை தாயிருக்கா

*- வைரமுத்து*


ஒரு பேப்பர்
BUSINESS DIRECTORY

Private Tuitions

* ENGLISH
Mrs. Kumar (Morden)
Spoken / Writing & Grammer
☎ 020 8335 3291

* MATHS/SCIENCE/ENGLISH
Mrs. Ajanthan (Mitcham)
KST 1-4
☎ 07961 981 278

Artistes(Bharatha Natyam)
Anuisha, Varathlingam 020 8554 3760
Chitra, Satkurunananthan 020 8949 5513
Chitranjan, Pamini 020 8664 7376
Dilrukshi, Rajkumar 017 5357 7973
Gajendran, Nilrushi 020 8428 8912

* DANCE
Mathivathani Prabakaran
(Croydon)
☎ 020 8239 4420

Mrs Kalamathy Prabaharan 020 8554 9940
Krishnalatha, Karthikesu 020 8357 6506
Miss Julie, D Thayalan 020 8813 0592
Ms Ruby, Kumar 020 8397 5261
Mrs Thavarani Nagulendran, 020 8230 4589
Mrs. Pathmini Gunaseelan 020 8509 1263
Mrs Ragini, Rajagopal 020 8767 8004
Mrs Nalayani Rajadurai, 020 8428 8912
Mrs Rajini Sureshkumar 077 9614 6251
Rohini Shantharoopan 020 8422 1553
Rukshanarthanalaya 020 8428 8912
Mrs Karthika Sakthivel 020 8864 0411
Selvaluxmy, Ramakrishnan 020 8248 0512
Shanmuganathan, Vinothini 020 8640 2755
Sivanesan, Mrs Roushanthi 020 8931 4467
Sivasakthy, Sivanesan 020 7386 0924
Thushyanthy, Thiyagarajah 020 8560 6760
Valentine, Anitha 020 8574 0597

Artistes(Carnatic Vocalists)
Ambika, Thamotheram 020 8904 1539
Seimani, Sritharan 020 8478 7151
Sivasakthy, Sivanesan 020 7386 0924
Suhirthakala, Kadatcham 020 8864 7009

* VOCAL & VIOLIN
A. Jegathambikai
Wembley
☎ 079 5793 4 275
☎ 020 8903 2134

Thayaalini, Skanthamoorthy 020 8509 0920
Thiruchelvi, Shanmugabavan 01274 600 105

Bridal Make-up
Anu Bridal Dressing & cakes 020 8423 5217
Arul K Mrs (Make-up etc) 020 8879 3902
Bama B (Make-up etc) 020 8503 7417

* WEDDING & OTHER OCCASION
A.Anuratha (Croydon)
☎ 07780 687 748
☎ 020 8668 2676

* TOUCH OF BEAUTY
R. Nalini
Wembley
☎ 07729 447 220

* MAKEUP SERVICE / CAKE
Pakee
Purley
☎ 020 8645 6445

Best Decorations 020 8552 9336
Bridal Make up 020 8668 2676
Cynthu Bridal, Make Up & Cake 020 8868 3520
Tamilarasy, Jeyadasan 020 8546 9447

Cake Makers
Cake For All Occasions 07944 875 969
Cakes 07957 984 446
Cakes for Any Occasion 020 8527 4350

* CAKES FOR ALL OCCASION
Aaravi
Croydon
☎ 020 8680 2665

* CAKE 4 ALL OCCASSIONS
Kumudhini
Croydon
☎ 020 8683 1614

* CAKES FOR ALL OCCASION
Priya
Hayes
☎ 020 8569 2202

Inspirations 07931 514 247
Laksha's Cake 07957 586 057
Mathura Cakes 020 8937 4073
Party Cakes 020 8423 4045
Ranji's Cakes 020 8930 5552
Suganthy J. Mrs 07958 459 070
Thanusan Cakes 020 8683 2025

Driving Schools
A Star Motoring School 020 8599 1536
Ambi School of Motoring 07900 980 226
GDS Driving School 020 8715 8977

* DRIVING
JJ School of Motoring
☎ 07956295200
☎ 07979866476

Mr Amirthalingam 07946 609 022
PSM Driving School 020 8554 5704
Road Master (Rooban) 020 8570 9751
Saraparan Driving School 07956 887 139
SLT Driving School 020 8949 7443
TDI School of Motoring 07879 461 843
Thurga & KNC Driving 07956 387 386

Plumbing & Central Heating
A.M Electrical & Heating 020 8405 0677
Abbas Contractors 020 8201 3100
Central Heating 020 8397 6650

* CENTRAL HEATING
Thaya
Central Heating Installation Services
☎ 020 8397 6650

Viknes Building Services Ltd 07957 152 601

Property Repairs/Construction
CV Constructions 020 8401 6824
Elm Construction Ltd 020 8537 8482
Franco Shop fitters 020 8552 8492
G & M Builders 020 8864 2745
Golden Way Construction Ltd 020 8951 9588
Keeran Designs Ltd 020 8574 2510
KS Building Services 020 8200 8962
Lotus Building Construction 07932 722 739
Lucky Windows & Doors 07939 198 926
N.S Heating Plumbing, Electrical 020 8942 8958

* REPAIRS CONSTRUCTION
Nesan Builders
☎ 07859 064 650
☎ 020 8239 0536

* REPAIRS CONSTRUCTION
Rhino Builders
☎ 07901 687 241

Nathan Repairs & Maintenance 07810 444 085
Pragas Builders 020 8665 1112
R.R Metal Work 020 8648 8207
SAI Construction 020 8470 6488
Sooriya Builders 020 8867 9132

Satellite Services
Advanced Satellite Systems 07984 446 194
Euro Electronics 07944 556 880
KS Satellite Services 020 8597 2005
SIA Satellite systems 07711 984 055
TTN Satellite Services 0800 085 3826

Tailoring
* CHARGES FROM - £10
Rani Tailoring
24 Hours Service
☎ 020 8687 6867

* TAILOR
All type of Tailoring
Hayes
☎ 020 8569 2202

New Star Tayloring 020 8690 2829
RK Tayloring 020 8795 1797
Tip Top Tailoring 020 8842 2581

Vehicle Hire
Ealing Car & Van Rental 020 8747 1000
Hemdha Travel 020 8646 6850
Nathan Coaches 020 8949 9111

* TAMIL TAXI SERVICE
Kumaran
Wales Trip & Airport Services
☎ 07958 562 456

* AIRPORT SERVICES / WALES
Sri Sathialingam
☎ 020 8690 3700
☎ 07949 760 931

* LOCAL & EUROPE TOURS
Minibus For Hire
Contact: Linges ☎ 07984 497 239
☎ 07811 200 510

* MINI BUS FOR HIRE
EJ Transport (Eastham)
☎ 07980 602 548
☎ 020 8470 8588

NS Siva Transport Service 07838 181 222
Royal Travels & Transport 020 8422 0633
SAI Chauffeur 020 8548 9191
TSR Van Hire 020 8640 3193
Van for Hire 020 8470 8488
Van for Hire 020 8690 3700

Wedding Services
(A) Wedding Party Services 020 8868 6999
A & Euro - Lanka Decorators 07946 717 029
A 1 Decorations 07958 652 647

* PHOTOGRAPHY
AS Kugan All for occassions
☎ 020 8686 9368
07899 811 402

Funtasia The Party Shop 020 8907 1333
Krishjon Social Club 020 8470 9595
Krishna Party Service 020 8900 9003
Nallur Kumaran Party Time 020 8684 1026

* பூமாலை
Vijaya
Wimbledon
☎ 020 8540 5677

Party Crafts 020 8688 7202
Party invitation 020 8471 9777

Party Ocean 020 8205 2342
Party Paradise 020 8553 9209
Party R Us 020 8931 7484
Prabha Banqueting Hall 020 8478 0606
Puu Manavarai 020 8544 1312

பூமாலை
* பூமாலை
ஐயா (Wimbledon)
☎ 020 8544 1312
☎ 07956 940 050

* பூமாலை
Varathan
Croydon
☎ 020 8665 6238

Horoscope
* சாதக குறிப்புக்கள்
Tharmalingam
Coulsdon
☎ 01737 550 147

Bramma Sri AN Somaskanda 020 8665 7639
Kaandam Naadi Jothidam 07960 708 245
Ramachanthira Kurukkal 07951 159 206
Navasakthi Vinayakar 020 8641 7835
Sekar Iyer 020 8903 6450
Tharmalingam, A 020 8653 9216

Catering
* சாப்பாடு
Bama (Croydon)
சகல விதமான உணவுகளுக்கும்
☎ 020 8239 7616

* சாப்பாடு
சகல விதமான உணவுகளுக்கும்
(Croydon)
☎ 020 8665 9256

சிறு விளம்பரங்களுக்கு அழையுங்கள்
0208 640 4604

# யுத்தத்தை பிரகடனப்படுத்தியுள்ளார் பிரபாகரன்! அனுரா எச்சரிக்கை

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் வாய்மூலமாக யுத்தத்தை பிரகடனப்படுத்தியுள்ளார். இதனூடாக சிக்கலான நிலைமைகளை எதிர்கொள்ளப்போகின்றோம் என்பது மட்டும் உண்மை என்று சுற்றுலாத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க சபையில் கடந்த புதன் அன்று தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவுசெலவுத்திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு பதிலளித்து உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:

இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசிய கட்சியும் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து கொண்டிருக்கின்ற இந்த சந்தர்ப்பத்திலேயே பிரபாகரன் வாய்மூலம் யுத்த பிரகடனத்தை விடுத்துள்ளார். இவ்வாறான சூழ்நிலையில் பிரபாகரன் மீண்டும் பேச்சுக்கு வருவாரா? என்பது சந்தேகமே. பிரபாகரனின் உலகளாவிய பேச்சுக்கு இலங்கை ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

ஆககுறைந்தது ஒரு சொல்லைக்கூட ஒலிஒளி பரப்பு செய்யவில்லை. ஆனால் பிரபாகரனின் உரை வெளிநாட்டு ஊடகமொன்றில் ஒளிபரப்பு செய்தபோது நான் பார்த்து கொண்டிருந்தேன். பிரபாகரன் தனதுரையில் வாய்மூலமாக யுத்தத்தை பிரகடனப்படுத்தியதுடன் மிகவும் நிதானத்துடன் நம்பிக்கையுடன் உரையாற்றிக் கொண்டிருந்தார். இனப்பிரச்சினைக்கு அதிகார பகிர்வு முறை ஊடாக அல்லது சொல்லை வைத்துக்கொண்டு முரண்டு பிடிக்காமல் ஏதாவது ஒரு முறையில் தீர்வு கண்டேயாக வேண்டும். இல்லையென்றால் சிக்கலான நிலைமைகளை எதிர்கொள்ள வேண்டிவரும். எதிர்கொள்ளபோகின்றோம்.

பேச்சுக்கு வரவழைக்க வேண்டும் பிரபாகரன் தனது உரைக்கு பின்னர் மீண்டும் பேச்சுக்கு வருவாரா? என்பது சந்தேகமே. எவ்வாறெனினும் இந்தியா அல்லது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் உதவிகளை பெற்றுக்கொண்டு புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு எப்படியாவது வரவழைக்க வேண்டும்.பேச்சுமூலம் தீர்வு காண்பதற்கு இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டு சமாதானத்தை ஏற்படுத்துவதனூடாக மட்டுமே நாட்டை முன்னேற்றமடையச் செய்ய முடியும். கடந்த காலத்தை மறந்து விட்டு எந்த நாட்டையாவது அழைத்துக் கொண்டு புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்து பேச்சின் மூலமாக தீர்வு காண வேண்டும். ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுக்க வில்லை பிரபாகரனின் மாவீரர் தின உரைக்கு முக்கியத்துவம் கொடுக்காத இலங்கை ஊடகங்கள் பிரபாகரன் சுனாமியால் பலியாகிவிட்டார் அவருக்கு உடல்நிலை கவலைக்கிடமாக இருக்கின்றது என்றெல்லாம் செய்திகளை வெளியிட்டன. ஆனால் அவர் திடகாத்திரத்துடன் ஆரோக்கியமுடனே இருந்து கொண்டிருக்கின்றார்.

தயவு செய்து பொய்யான செய்திகளை பரப்பாதீர்கள். அவர் தொடர்பான புரட்டுகளை நிறுத்துங்கள். வெளிநாட்டுக் கொள்கை காரணமாக ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் தோல்வியை தழுவிக் கொண்டு வருகின்றார். ஈராக்கிய மக்கள் படுகின்ற துன்பங்களை புஷ் எதிர்கொள்ள வேண்டிவரும் என்பதனால் ஈராக்கிய மக்களுக்கு உரிய தீர்வு வழங்கப்படல் வேண்டும். யுத்த நிலைமை தோன்றினால் வெளிநாட்டு முதலீடுகள் கிடைக்காது. சுற்றுலா துறை வீழ்ச்சியடையும். நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது என்பதனால் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காண வேண்டும்.

- *வீரகேசரி*

## அமெரிக்காவில் வி.புலிகளுக்கு எதிரான தடை நீக்கப்படுமா?

விடுதலைப் புலிகளை பயங்கரவாதப் பட்டியலிட்டது தொடர்பில் அமெரிக்க மாவட்ட நீதி மன்றம் தீர்ப்பு! அமெரிக்க நீதிமன்றம் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் அரசாங்கத்தினால், அமெரிக்க அரசயலமைப்புக்கு முரணான விதத்திலும், தெளிவற்ற நிலையிலும், பயங்கரவாதப் பட்டியலிடப்பட்ட இரண்டு குழுக்கள் குறித்து தீர்ப்பு வழங்கியுள்ளது. விடுதலைப் புலிகள் அமைப்பு மற்றும் குர்டிஸ்தான் விடுதலை அமைப்பு ஆகிய இரண்டு குழுக்களையும், 911 தாக்குதலின் பின்னர், பயங்கரவாதப் பட்டியலில் இணைத்து, இந்த அமைப்புக்களின் சொத்துக்களை முடக்கியமை செல்லுபடியற்றது என அமெரிக்க மாவட்ட நீதிபதி ஓட்றி கொலின்ஸ் இன்று தெரிவித்துள்ளார்.

புஷ் அரசாங்கத்தினால் இந்த இரண்டு அமைப்புக்களையும் பயங்கராவாதப் பட்டியலில் இணைக்கப்பட்டமைக்கு எதிராக வோஷிங்ரனைத் தளமாகக்கொண்டு இயங்கி வரும் Humanitarian Law Project என்ற சட்ட நிறுவனம் இந்த வழக்கினை வாதாடியது. இந்த நிறுவனத்தின் வழக்கறிஞர் டேவிட் கோல் இந்த வழக்கின் தீர்ப்புக் குறித்து கருத்து வெளியிடுகையில், ஜனாதிபதி புஷ், தனது அதிகாரத்தின் வாயிலாக இந்தத் தடையை பிரயோகித்திருந்ததாகக் குறிப்பிட்டார். இந்தத் தீர்ப்பின் மூலம் பட்டியலிடப்பட்ட ஏனைய குழுக்கள் பட்டியலில் இருந்து நீக்கப் படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லையென்று தெரிவித்த டேவிட்கோல், ஆனால் இந்த பட்டியல் குறித்து பல சந்தேகங்கள் எழுந்துள்ளதாக மேலும் தெரிவித்தார்.

வழங்கப்பட்ட தீர்ப்புக் குறித்து விடுதலைப் புலிகள் மற்றும் குர்டிஸ்தான விடுதலை அமைப்புக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளதாக ஏபி செய்தி நிறுவனம் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது. இந்த தீர்ப்பு தொடர்பாக அமெரிக்க நீதிநிர்வாக அமைச்சின் பேச்சாளர் சாள்ஸ் மில்லர் கருத்து தெரிவிக்கும்போது, நீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பாகவும், அமெரிக்க அரசின் அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பாகவும் தற்போது ஆராய்ந்து வருவதாகத் தெரிவித்தார். இதேவேளை, இந்தத் தீர்ப்புக் குறித்து எந்தவித கருத்தினையும் தெரிவிப்பதற்கு வெள்ளை மாளிகை வட்டாரங்கள் மறுப்புத் தெரிவித்துள்ளன.

- *பதிவு*

# செய்தித் துணுக்குகள்

வருகிற ஜனவரியிலிருந்து புகையிரதக் கட்டணம் அதிகரிக்க இருக்கிறது. ஆனால் இந்தக் கட்டண உயர்வு ஒரு சீர் இல்லாமல் பிரயாணத்திற்கு பிரயாணம் மாறுபட்டு 3 வீதத்திலிருந்து 7விதம் வரை அதிகரிக்கப்பட உள்ளது.

• • •

சென்ற ஆண்டுமட்டும் இங்கு ஜிசிஎஸ்சி எழுதிய 45,000 மாணவர்கள் தங்கள் பரீட்சை முடிவுகளில் திருப்தி இல்லாது மறு திருத்தத்திற்கு மனுக் கொடுத்துள்ளார்கள். இது பரீட்சை எடுத்த 14 பேரில் ஒருவர் என்ற விதத்தில் அமைகிறது..

• • •

வருவாய் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த கர்ப்பிணித் தாய்மாருக்கும் 4 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கும் இலவசமாக வாரத்திற்கு 2.80 பவுண்கள் பெறுமதியான வவுச்சர், பழங்களுக்கும் மரக்கறிக்கும் வழங்கப்பட உள்ளது. 1 வயது வரை இது இருமடங்காகக் கொடுக்கப்படும்.

• • •

லண்டனில் மட்டும் 40 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் 1 மில்லியன் பெறுமதியான வீடுகளில் வசிக்கிறார்கள். இது முழு இங்கிலாந்து வேல்ஸ் பகுதிகளின் மொத்த எண்ணிக்கையின் அரைவாசிக்குக் கூடுதலானது.

• • •

ருஷ்ய நாட்டின் உளவாளியான அலக்சாண்டர் லிற்விநொக்கோ, கண்டறிவதற்கும் கிடைப்பதற்கும் அரிதான கதிரியக்க உலோக மூலகமான பொலோனியம் 210 ஆல் கொல்லப்பட்டுள்ளார். அவர் கொலைக்கு ஒரு கிராமின் ஆயிரத்தில் ஒரு பகுதியே பயன்படுத்தப்பட்டுள்ளது.

• • •

1932 - 33க்களில் உக்ரேன் நாட்டில் பஞ்சத்தால் 10 இலட்சம் பேர் வரை இறந்தார்கள். இவ்வளவு மக்களின் மரணம் சோவியத் யூன்யனின் இன அழிப்பு நடவடிக்கையால் ஏற்பட்டதென்று பிரகடனப் படுத்தி இன்றைய உக்ரேன் பாராளுமன்றம் மசோதா ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

• • •

அமெரிக்க உளவு நிறுவனமான சி ஐ ஏ தன் பயங்கரவாதச் சந்தேக நபர்களை கடத்திச் செல்லவோ அல்லது தற்காலிகமாகச் சிறைப் படுத்தவோ ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைப் பயன்படுத்தியதற்கான சான்றுகள் அண்மைய அறிக்கை ஒன்றிலிருந்து தெரியவருகிறது.

• • •

பெற்றோல் விலை உயர்வு காரணமாக பெற்றோலுக்குப் பதிலாக கரியின் உபயோகம் கூடுவதால் 2000 ஆண்டில் சூழலில் ஒரு விதத்தால் அதிகரித்த கரியமல வாயு இப்போ வேகமாக அதிகரித்து 2 வீதத்தையும் கூடி விட்டது.

• • •


2005 நவம்பர் மாதத்தில் ஒரு நாயால் முகம் குதறப்பட்டு பகுதி முக மாற்றம் செய்யப்பட்ட 36 வயதான இசபெலா என்னும் பெண் இப்பொழுது இயற்கையாகச் சிரிக்குமளவிற்கு பாரிய முன்னேற்றம் கண்டுள்ளார்.

• • •

சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் நோக்குடன் 12 தென் அமெரிக்க நாடுகள் தங்கள் 12 நாடுகளினதும் குடிமக்கள் விசா இல்லாமல் அடையாள அட்டையுடன் தங்கள் நாடுகளில் சென்றுவர அனுமதி வழங்கப் போகிறார்கள்.

வியாபாரம் பெருக விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர் அடிக்கவும் விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர்

## பெறுமதி குறைந்த உணவுகள் பிள்ளைகளுக்கு வேண்டாம்



சிறுவர்களுக்கான நிகழ்ச்சிகளின்போது தொலைக்காட்சிகளில் பெறுமதி குறைந்த உணவுகளாகக் கருதப்படும் கூடிய கொழுப்பு, உப்பு, இனிப்பு கொண்ட எல்லா வகையான உணவுகளுக்குமான விளம்பரங்கள் யாவும் 2007ம் ஆண்டிலிருந்து தடை செய்யப்பட உள்ளன. பாடசாலை வயதை எட்டாத சிறுவர் நிகழ்சிகள், சிறுவர்களை இலக்கு வைத்து தயாராகும் நிகழ்ச்சிகள், சிறுவர்களுக்காக கேபிள் மூலம் அல்லது உபகோள்கள் மூலம் அனுப்பப்படும் நிகழ்சிகள், சிறுவர்களை இலக்கு வைத்து தயாராகும் இசை நிகழ்ச்சிகள், ஆகிய எல்லா நிகழ்ச்சிகளிலும் இந்த பெறுமதி குறைந்த உணவுகளாகக் கருதப்படும் உணவுகள் சம்பந்தமான விளம்பரம் ஒளிபரப்பில் சேர்த்துக்கொள்ளல் தடை செய்யப்பட உள்ளது.

இத்துடன் 16 வயதுக்கு உட்பட்டோர் கூடுதலாகப் பார்க்கும் நிகழ்சிகள் என்று கணிக்கப்பட்ட நிகழ்ச்சிகளின் போதுகூட வேண்டாம் இந்த பெறுமதி குறைந்த 'ஜங்' என்று அழைக்கப்படும் உணவு வகைகளின் விளம்பரம் என்று கடும் போக்குடன் செயற்பட்டு அந்த நிகழ்ச்சிகளின்போதும் விளம்பரத் தடை அமுல்படுத்தப் போகிறார்கள்.

- *மாசிலாமணி*

RISHI AGENCY MONEY TRANSFER

FAST MONEY TRANSFER ALL OVER THE WORLD


உங்கள் உறவுகளுக்கு உரிய நேரத்தில் உகந்த இடத்தில்
பணமாற்றீடு செய்திட நாட வேண்டிய இடம்.....

RAL

9 Caledon Road Eastham E6 2HE
Tel: 020 8471 6475
Fax: 020 8552 6385 | 020 8551 3671
Mobile: 07803 129 868 | 07932 504 208

Swiss
0041-1-2719329 (Suresh)
0041-079-5223047

Jaffna
PAY OUT POINT
0094 (0) 21 222-2824 (Pavi)



# டாக்டர் டி.வீ.பழனிவேல் FDSRCS (England)


## J.L. VARA DENTAL PRACTICE

290 High Street North, Manor Park

Eastham, London E12 6SA Tel: 020 8552 1626

ஈஸ்ட்ஹாம் ஸ்டேசனில் இருந்து ஐந்து நிமிட நடை

## Private Orthodontic Treatment




நெருக்கப்பட்ட முன்பற்கள்
Crowded Incisors




அண்ணப்பக்க தோற்றம்
Palatal view




சிகிச்சை 18 மாதத்தில் முடிவடைந்த பின்பு பல் புடுங்கிய இடைவெளி மூடப்பட்டு பற்கள் ஒழுங்காகியுள்ளன




நடுவில் நான்காவது பல் அகற்றப்பட்டு Fixed Appliance பொருத்தப்படுகின்றன




இடதுபக்க தோற்றம்
Left Lateral view



பற்களில் உலோக பிறக்கற்கள் Brackets பொருத்தப்படுகின்றன




பிறக்கற்களை இணைத்து ஆர்ச்வயர்கம்பி Archwire பொருத்தப்பட்டுள்ளது



சிகிச்சை முடிந்த பின் இரு வெள்ளி வளையங்கள் இன்னமும் அகற்றப்படவில்லை



பல்லு அகற்றிய இடம் 9 மாதத்தில் அடைந்து விடும்
Space Closed



பல்புடுங்கிய இடைவெளி மாதம் 0.76 மி.மீ வீதம் குறைகிறது

## பிறைவேட் பல் ஒழுங்குபடுத்தல் சிகிச்சை
## 11 வயது சிறுவர் முதல் 55 வயது வந்தோர் உட்பட

- இழந்த பற்களை, தாடை எலும்புகளில் இம்பிளான்ற் (Implant) மூலம் மீளவும் கட்டி எழுப்புதல்
- பல்வலியை பல் அகச்சிகிச்சை (Endonontic Therapy) மூலம் நிற்பாட்டுதல்
- முரசு இரத்தம் வருதலை நிற்பாட்டல்
- ஆட்டம் கண்ட பற்களை Splint Therapy மூலம் வலிமையாக்குதல்
- கிளிப் அல்லது பிறேஸ் (Orthodontic) சிகிச்சை மூலம் விகாரமான பற்களை அழகான வரிசைக்கு ஒழுங்குபடுத்தல்
- மஞ்சள் நிறமான பற்களை பால்போன்ற வெண்மையாக மாற்றுதல்
- பல் முரசு சம்பந்தமான சகல சத்திர சிகிச்சைகள்
- புன்னகை அழகை மேம்படுத்த (Cosmetic Dental Treatment)

சகல சிகிச்சைகளும் ஒரே நிறுவனத்தில் செய்யப்படும்.

நசனல் ஹெல்த் வசதி இல்லை. பிறைவேற் சிகிச்சைகள் மட்டுமே உண்டு

Orthodontic சிகிச்சை NHS இல் செய்யப்பட இயலாது பிறைவேற்கட்டணம் £1900 இல் இருந்து £3200 வரை, பிரச்சினையின் சிக்கல் தன்மையை பொறுத்தது. ஆறுவாரத்துக்கு ஒருமுறை தவணை முறையில் (Installation) உங்கள் சிகிச்சை செலவை கட்டமுடியும்.

டாக்டர் பழனிவேல் கொழும்பு, மட்டகளப்பு, யாழ்ப்பாணத்தில் நான்கு வருடமும், லண்டனில் இருபத்தைந்து வருட அனுபவமும் உள்ளவர்.

**Fellow in Dental Surgery of The Royal College of Surgeons of England**

# அரசியல் போராளி பாலா அண்ணை



இம்முறை மாவீரர்நாள் நிகழ்வுகள் தமிழர் வாழும் நாடுகளில் எல்லாம் வழமையைப் போலவே சிறப்பாக நடைபெற்றன. ஏக காலத்தில்ஒளிபரப்பட்ட தேசியத்தலைவர் அவர்களது கொள்கை விளக்க உரையானது தமிழர் வரலாற்றில் ஒரு திருப்பம் ஏற்படப்போவதை கட்டியம்கூறி நின்றது. தடைகள் ஏற்பட்டதால், இறுதி நாட்கள் வரை லண்டனில் மாவீரர்நாள் நிகழ்வுகள் நடைபெறுமா என்ற கேள்வி இருந்தது. ஈற்றில் நான்கு பிரதேசங்களில் மிக வும் எழுச்சியுடன் நடந்தேறின. இருப்பினும் இம்முறை எதையோ இழந்து விட்டது போல் இருந்தது உண்மையே. கடந்த வருடங்களைப் போல் தலைவரின் உரையைப்பற்றி விளக்கம் தர இம்முறை பாலா அண்ணை எந்த மேடைக்கும் வரவில்லை. யாவரும் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் எளிதான தமிழில் தலைவர் அவர்கள் உரையாற்றியிருந்தார். எனினும் தலைவரது வார்த்தைகளில் புதைந்து கிடக்கும் சில முக்கிய செய்திகளை பாலா அண்ணை வந்து விளக்கும்போது மேலும் தெளிவு கிடைத்திருக்கும்.

"தலைவரின் உரைக்கு பலர் பல விதமான விளக்கங்களை தருவார்கள். ஆனால் இயக்கத்தின் தத்துவ ஆசிரியர் என்ற வகையில் என்னால் தான் அதில் பொதிந்திருக்கும் கருத்துக்கள் பற்றி உண்மையான விளக்கத்தை தர முடியும்?"

என்று முந்தைய மாவீரர் நாள் விழாவில் பாலா அண்ணை சொன்னது நினைவில் வருகிறது. இம்முறை அவர் வரவில்லை அவருடன் கூட வரும் வெள்ளைத் தமிழச்சியான அடேல் அன்ரியும் வரவில்லை. அதனை விடப் பெரிய சோகத்தை தருவது பாலா அண்ணை கொடிய புற்று நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார், அவர் இன்னும் சிறிது காலத்தில்எங்களைவிட்டு நிரந்தரமாகவே பிரிந்து விடுவார் என்ற உறுதிப் படுத்தப்பட்ட செய்திகள்தான்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகராக 28 ஆண்டுகளுக்கு மேலாகத் தொண்டாற்றிவரும் திரு. அன்ரன் ஸ்ரனிஸ்லலாஸ் பாலசிங்கம் அவர்கள் மீது தமிழீழ மக்கள் கொண்டுள்ள பற்று சற்றும் குறைத்து மதிப்பிட முடியாதது. இந்த மூன்று தசாப்த காலத்தில் விடுதலைப்புலிகள் இயக்கம் எதிர்கொண்ட சோதனைகள், இடர்கள் சொல்லில் அடங்காதவை. அப்போதெல்லாம் கலக்கமடையாது, தடம்புரளாது தலைவர் பிரபாகரனுக்கு தோள் கொடுத்து நின்றவர் பாலா அண்ணை. தமிழ் மக்களின் தேசியப் போராட்டத்திலும் அமைதி முயற்சிகளிலும் அவர் ஆற்றிய பணி அளப்பரியது. அதனால் மக்களின் மனங்களில் இடம்பிடித்துக் கொண்டவர்.

முதிர்ச்சி (Maturity), விவேகம், மனோபலம், இவற்றிலும்மேலாய்பரிவுஇத்தகையகுணாதிசயங்களைக் கொண்ட ஒரு அசாதாரண மனிதன் தனக்கு வாழ்க்கைத் துணையாகக் கிடைத்துள்ளதாக பாலா அண்ணை பற்றி 'சுதந்திர வேட்கை' எனும் தனது நூலில் திருமதி அடேல் பாலசிங்கம் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய பண்புகளே லண்டனில் மேற்கத்தைய வசதிகளுடன் வாழந்தவரை ஈழத்தின் காடு மேடெல்லாம் சென்று தனது மக்களுக்காக அரசியல் பணியாற்ற வைத்தது.

## கலக்கமடையாது, தடம்புரளாது தலைவர் பிரபாகரனுக்கு தோள் கொடுத்து நிற்பவர் பாலா அண்ணை.

எல்லோருடனும் வெகு கலகலப்பாகவும் சாதாரணமாகவும் பழகும் அவரிடம் வித்துவ செருக்கு இருந்ததில்லை. நேரிலோ, மேடைப் பேச்சுகளிலோ அவர் தனது பாண்டித்தியத்தை பறைசாற்றியதில்லை. அதனால்தான் நம்மிடையே தங்களைப் புத்திசீவிகள் என்று பீற்றிக் கொண்டு திரிபவர்களிடமிருந்து அவர் வேறுபட்டுக் காணப்படுகிறார்.

பாலா அண்ணை, மாக்சிசம், புதியமாக்சிசம், மட்டுமல்லாது ஆன்மீகத் தத்துவங்கள் போன்றவற்றிலும் கவனம் செலுத்தி வந்துள்ளதாகத் தெரிவிக்கும் அடேல் அவர்கள் அவைபற்றி அவருக்கு பிரத்தியேக கருத்துக்களும் விமர்சனமும் இருப்பதை தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். புரிந்து கொள்ளமுடியாத கருத்துருவங்களையும் மனித ஆற்றல்களால் சாதிக்க இயலாத சிந்தனை வடிவங்களையும் அவர் நிராகரித்ததாகவும் அடேல் அவர்கள் தெரிவித்துள்ளார். இத்தகைய இயல்புகளே வெறும்கோட்பாடுகளுக்குள் உள்ளடக்கப்பட்ட இலட்சியப் போராட்டமாக இல்லாமல் மண்ணின் புவிசார் நிலைக்கும் அதன் மக்களின் சமூக பொருளாதார நிலைகளுக்கும் ஏற்ப வடிவமைக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் அவரை இணைத்து வைத்திருந்தது. வெறும் கோட்பாடுகளுடனும் கோசங்களுடன் செயற்பட்டவர்கள் போராட்டத்திலிருந்தும், மக்களிடமிருந்தும் ஒதுங்கிப் போனதும், இன்னமும் சிலர் உதிரிகளாய் கத்திக் கொண்டிருப்பதும் நாம் அறிந்தவை தான்.

## பேச்சுக்களில் நெகிழ்ச்சித் தன்மையைக் காட்டினாலும், தமிழர் உரிமைகள் என வருமிடத்து விட்டுக் கொடுப்புக்களை செய்ததில்லை.

ஒருபத்திரிகையாளராக தனது வாழ்க்கையை ஆரம்பித்த பாலா அண்ணா லண்டன் சவுத்பாங் பல்கலையில் விரிவுரையாளராக இருந்த போது, 1978ம் ஆண்டில் தமிழ்மக்களின் சுயநிர்ணயஉரிமைப்போராட்டத்தை மார்க்சிச-லெனினிச சிந்தனைகளின் அடிப்படையில் வலியுறுத்தி 'தமிழீழ தேசியப்பிரச்சனை பற்றியது' (On the Tamil National Question) என ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையே அவரை தமிழ்த் தேசியவாதிகளுக்கு இனங்காட்டியது. அதனைத் தொடர்ந்து 'சோசலிசத் தமிழீழத்தை நோக்கி' என்ற தலைப்பில் அவர் எழுதிய கட்டுரை அவரை விடுதலைப் புலிகளுடன் இணைந்து வைத்தது. போரின் கொடூரம் கோலோச்சிய காலத்திலும் அவர் தனது எழுத்தாற்றலை கைவிடவில்லை. இக் காலத்தில் பல புத்தகங்களையும் கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டுள்ளார். நோயின் உபாதைகளால் வெகுவாகப் பாதிக் கப்பட்டிருந்த அண்மைக் காலத்தில் கூட விடுதலை Politics of Duplicity, War and Peace என தமிழரின் போராட்டம் சமாதானப் பேச்சுவார்த்தை என்பன பற்றி விபரிக்கும் நூல்களை எழுதியுள்ளார்.

தமிழர் பிரச்சனைக்கான தீர்வு முயற்சியில் நடைபெற்ற எல்லாப் பேச்சுவார்த்தைகளிலும் திம்புவில் தொடங்கி ஜெனிவா வரை கலந்து கொண்ட பாலா அண்ணை பேச்சுக்களில் நெகிழ்ச்சித் தன்மையைக் காட்டினாலும், தமிழர் உரிமைகள் என வருமிடத்து விட்டுக் கொடுப்புக்களை செய்ததில்லை. இதுவே அவரை முன்னைய தலைமுறை அரசியல் தலைவர்களிடமிருந்து வேறுபடுத்திக் நிற்கிறது. முன்னைரைப்போல் இல்லாமல் பேச்சுக்களில் தமிழர்கள் ஏமாற்றப்படாமல் இருந்தமைக்கும் இந்தப்போக்கு காரணமாக இருந்தது. பாலசிங்கம் பேச்சுக்கு செல்கிறார் எனவே எமது தரப்பை தயார்ப்படுத்த வேண்டுமென சிங்கள தரப்பினருக்கு விசேட வகுப்புக்கள் நடாத்தப் பட்டதும் அவர் சமூகமளிக்க முடியாமல் போனபோது அவர்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டதும் மிக அண்மையில் கூட நடந்த சங்கதிகள்.

## பாலா அண்ணையின் வாழ்க்கையிலிருந்து புலத்தில் வாழும் தமிழர்கள் கற்றுக் கொள்ள வேண்டியது நிறையவே இருக்கிறது.

பாலா அண்ணா பற்றிய விமர்சனங்கள் எழாமல் இல்லை. தலைவர் பிரபாகரனை தவறாக வழிகாட்டுகிறார் என்றும் பிரபாகரனின் சொல்லுக்கு ஆடுகிறார் எனவும் நேரெதிரான விமர்சனங்கள் எழுந்தன. அவர் லண்டனில் வாழ்ந்ததை காரணங்காட்டி அவரை மேற்கத்தைய அரசுகளின் முகவர் என விமர்சித்தவர்களும் இருக்கிறார்கள். இதுபற்றி தமிழ் மக்களோ அவரோ கவலைப்பட்டது கிடையாது. பன்முக ஆழுமைகொண்ட தலைவனுக்கு பலம் சேர்த்த ஒருவராகவே அவரை தமிழர்கள் போற்றுவதால் அவர் தங்களை விட்டு பிரிவதென்பது ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தி விடப் போகிறது என்ற கலக்கம் அவர்களைத் தொற்றிக் கொள்வது தவிர்க்க முடியாதது.

பாலா அண்ணையின் வாழ்க்கையிலிருந்து புலத்தில் வாழும் தமிழர்கள் கற்றுக்கொள்ள வேண்டியது நிறையவே இருக்கிறது. மேற்கத்தைய வாழ்க்கையின் சொகுசுகளைத் துறந்து தன்னை வருத்துகின்ற நோயையோ போரின் கோரத்தையோ பொருட்படுத்தாது வேற்றினத்தைச் சேர்ந்த தனது துணைவியுடன் தமிழ் இனத்துக்காக உழைத்தவர். சாதரண தமிழர்களைப்போல் பொருள் தேடுவதில் நாட்டங் கொண்டு அலைந்தவர் அல்ல. ஏட்டிலுள்ள தத்துவங்களை பேசி விதண்டாவாதங்கள் செய்து வாழ்நாளைக் கழித்தவரும் அல்ல. பதவி ஆசைக்காக இனத்தையே காட்டிக் கொடுக்கும் அற்பர்கள் போல் இல்லாமல் தான் கற்றவற்றை தன் இன விடுதலைக்காக முடிந்தவரை உபயோகித்தவர் அவர்.

ஒரு பாலசிங்கம் போல் புலம்பெயர் மண்ணில் பத்து நூறாக பல பாலசிங்கங்கள் உருவாக வேண்டும். அந்த ஒரு உறுதிமொழியே புற்றுநோயின் உபாதையால் பாதிக்கப்பட்டிருக்கும் அந்த மாமனிதனுக்கு இன்னும் சிலகாலம் எங்களுடன் வாழும் உத்வேகத்தைக் கொடுக்கும் என உறுதியாக நம்புகிறேன்.

- *எழுபரிதி*

SATHY ESTATES LTD.
'To Buy or Sell your Home'
'To Rent or Let your Home'
Residential Sales and Lettings.
In London Boroughs of Brent, Harrow, Ealing, Barnet, Hammersmith, Fulham & Westminster.
We always have a large selection of houses & flats to choose from, to meet your needs!
www.sathy.com
Harlesden Office
220 High Street
Harlesden, London
NW10 4SY
Tel: 020 8961 9613
Fax: 020 8961 9614
Stanmore Office
306 Honeypot Lane
Stanmore, Middx.
HA7 1LY
Tel: 020 8204 9444
Fax: 020 8204 2665
Harrow Office
117 Headstone road
Harrow, Middx.
HA1 1PG
Tel: 020 8861 1110
Fax: 020 8861 1011

# தமிழ் ஒளி



தரணி எங்கும் தமிழர் விம்பம்

www.tvttn.com

இலண்டன் 020 8100 0000 பாரீஸ் 331 48393429

## 2.12.2006 முதல் 15.12.2006 வரை நிகழ்ச்சி நிரல்

### சனி

| | |
|---|---|
| 07:00 | புலரும் பொழுது புலரும் |
| 07:05 | செய்தி முன்னோட்டம் |
| 08:00 | காலைச் செய்திகள் |
| 08:15 | புலரும் பொழுது புலரும் தொடர்ச்சி |
| 09:00 | செய்தித் துளிகள் |
| 09:05 | முற்பகல் முத்தாரம் |
| 09:30 | பொங்கும் பூம்புனல் |
| 10:00 | செய்தித் துளிகள் |
| 10:05 | பொங்கும் பூம்புனல் |
| 10:30 | புன்னகைப் பூக்கள் |
| 11:00 | செய்தித் துளிகள் |
| 11:05 | புதினக் கண்ணாடி |
| 11:30 | சங்கே முழங்கு |
| 12:00 | செய்தித் துளிகள் |
| 12:05 | புதிய பாடல்கள் |
| 12:30 | நாள் இதழ் நேரம் |
| 13:00 | செய்தி முன்னோட்டம் |
| 13:05 | பார்த்தேன் பகர்ந்தேன் |
| 13:30 | செய்தி நேரம் |
| 14:00 | திரை விருந்து |
| 16:30 | திரைச்சித்திரம் |
| 17:00 | செய்தித் துளிகள் |
| 17:05 | நலவாழ்வு |
| 17:30 | வண்ண சிறகடித்து |
| 18:00 | செய்தித் துளிகள் |
| 18:05 | நிருத்திய சங்கமம் |
| 18:30 | பாடல் கலசம் |
| 19:00 | செய்தி முன்னோட்டம் |
| 19:05 | வைத்திலிங்கம் சோ |
| 19:30 | ராக மாலிகா |
| 20:00 | செய்தி நேரம் |
| 20:30 | செய்திக் களம் |
| 21:00 | ஊர்க்காற்று |
| 21:30 | திரை விருந்து |

### ஞாயிறு

| | |
|---|---|
| 07:00 | புலரும் பொழுது புலரும் |
| 07:05 | செய்தி முன்னோட்டம் |
| 08:00 | காலைச் செய்திகள் |
| 08:15 | புலரும் பொழுது புலரும் தொடர்ச்சி |
| 09:00 | செய்தித் துளிகள் |
| 09:05 | முற்பகல் முத்தாரம் |
| 09:30 | சிறுவர் கதம்பம் |
| 10:00 | செய்தித் துளிகள் |
| 10:05 | வணக்கம் ஐரோப்பா |
| 10:30 | வணக்கம் ஐரோப்பா |
| 11:00 | செய்தித் துளிகள் |
| 11:05 | ஒளிக்கீற்று |
| 11:30 | ஒளிக்கீற்று |
| 12:00 | செய்தித் துளிகள் |
| 12:05 | அறிவுச்சமர் |
| 12:30 | நாள் இதழ் நேரம் |
| 13:00 | செய்தி முன்னோட்டம் |
| 13:05 | பாடல் பிறந்த ராகம் |
| 13:30 | செய்தி நேரம் |
| 14:00 | திரை விருந்து |
| 16:30 | புதிய பாடல்கள் |
| 17:00 | செய்தித் துளிகள் |
| 17:05 | அபிநயதாரகைகள் |
| 17:30 | திரை விமர்சனம் |
| 18:00 | செய்தித் துளிகள் |
| 18:05 | நாத விநோதம் |
| 18:30 | நாத விநோதம் |
| 19:00 | செய்தி முன்னோட்டம் |
| 19:05 | படலைக்கு படலை |
| 19:30 | தில்லலே தில்லலே? |
| 20:00 | செய்தி நேரம் |
| 20:30 | சுப்பர் மடம் |
| 21:00 | ஊர்க்காற்று |
| 21:30 | திரை விருந்து |

### திங்கள்

| | |
|---|---|
| 07:00 | புலரும் பொழுது புலரும் |
| 07:05 | செய்தி முன்னோட்டம் |
| 08:00 | காலைச் செய்திகள் |
| 08:15 | புலரும் பொழுது புலரும் தொடர்ச்சி |
| 09:00 | செய்தித் துளிகள் |
| 09:05 | முற்பகல் முத்தாரம் |
| 09:30 | பொங்கும் பூம்புனல் |
| 10:00 | செய்தித் துளிகள் |
| 10:05 | பொங்கும் பூம்புனல் |
| 10:30 | ராக மாலிகா |
| 11:00 | செய்தித் துளிகள் |
| 11:05 | நிலவரம் |
| 12:00 | செய்தித் துளிகள் |
| 12:05 | வானவில் |
| 12:30 | நாள் இதழ் நேரம் |
| 13:00 | செய்தி முன்னோட்டம் |
| 13:05 | இன்றைய நேயர் |
| 13:30 | செய்தி நேரம் |
| 14:00 | திரை விருந்து |
| 16:30 | புதினக் கண்ணாடி |
| 17:00 | செய்தித் துளிகள் |
| 17:05 | நோர்வே நேரம் |
| 17:30 | மனைவி |
| 18:00 | செய்தித் துளிகள் |
| 18:05 | வண்ணத்திரையில் |
| 19:00 | செய்தி முன்னோட்டம் |
| 19:05 | அவர்கள் |
| 19:30 | சொர்க்கம் |
| 20:00 | செய்தி நேரம் |
| 20:30 | கோலங்கள் |
| 21:00 | ஊர்க்காற்று - நிலவரம் |
| 21:30 | திரை விருந்து |

### செவ்வாய்

| | |
|---|---|
| 07:00 | புலரும் பொழுது புலரும் |
| 07:05 | செய்தி முன்னோட்டம் |
| 08:00 | காலைச் செய்திகள் |
| 08:15 | புலரும் பொழுது புலரும் தொடர்ச்சி |
| 09:00 | செய்தித் துளிகள் |
| 09:05 | முற்பகல் முத்தாரம் |
| 09:30 | பொங்கும் பூம்புனல் |
| 10:00 | செய்தித் துளிகள் |
| 10:05 | பொங்கும் பூம்புனல் |
| 10:30 | அபிநய தாரகைகள் |
| 11:00 | செய்தித் துளிகள் |
| 11:05 | நகைச்சுவை நேரம் |
| 11:30 | நிருத்திய சங்கமம் |
| 12:00 | செய்தித் துளிகள் |
| 12:05 | வானவில் |
| 12:30 | நாள் இதழ் நேரம் |
| 13:00 | செய்தி முன்னோட்டம் |
| 13:05 | இன்றைய நேயர் |
| 13:30 | செய்தி நேரம் |
| 14:00 | திரை விருந்து |
| 16:30 | சிறுவர் கதம்பம் |
| 17:00 | செய்தித் துளிகள் |
| 17:05 | சுவிஸ் நேரம் |
| 17:30 | மனைவி |
| 18:00 | செய்தித் துளிகள் |
| 18:05 | சங்கமவேளை |
| 19:00 | செய்தி முன்னோட்டம் |
| 19:05 | அவர்கள் |
| 19:30 | சொர்க்கம் |
| 20:00 | செய்தி நேரம் |
| 20:30 | கோலங்கள் |
| 21:00 | ஊர்க்காற்று |
| 21:30 | எட்டாத கொப்பெல்லாம் தட்டிவா |
| 22:30 | செய்திக்கண்ணோட்டம் |
| 23:30 | கேட்டதில் இனித்தது |

### புதன்

| | |
|---|---|
| 07:00 | புலரும் பொழுது புலரும் |
| 07:05 | செய்தி முன்னோட்டம் |
| 08:00 | காலைச் செய்திகள் |
| 08:15 | புலரும் பொழுது புலரும் தொடர்ச்சி |
| 09:00 | செய்தித் துளிகள் |
| 09:05 | முற்பகல் முத்தாரம் |
| 09:30 | பொங்கும் பூம்புனல் |
| 10:00 | செய்தித் துளிகள் |
| 10:05 | பொங்கும் பூம்புனல் |
| 10:30 | பாடல் கலசம் |
| 11:00 | செய்தித் துளிகள் |
| 11:05 | நகைச்சுவை நேரம் |
| 11:30 | சுப்பர் மடம் |
| 12:00 | செய்தித் துளிகள் |
| 12:05 | வானவில் |
| 12:30 | வாராந்த அரசியல் |
| 13:00 | செய்தி முன்னோட்டம் |
| 13:05 | இன்றைய நேயர் |
| 13:30 | செய்தி நேரம் |
| 14:00 | திரை விருந்து |
| 16:30 | அறிவுச்சமர் |
| 17:00 | செய்தித் துளிகள் |
| 17:05 | இலண்டன் நேரம் |
| 17:30 | மனைவி |
| 18:00 | செய்தித் துளிகள் |
| 18:05 | சங்கமவேளை |
| 19:00 | செய்தி முன்னோட்டம் |
| 19:05 | அவர்கள் |
| 19:30 | சொர்க்கம் |
| 20:00 | செய்தி நேரம் |
| 20:30 | கோலங்கள் |
| 21:00 | ஊர்க்காற்று |
| 21:30 | அதிர்வு |
| 22:30 | வாராந்த அரசியல் |
| 23:00 | இனிய ராகங்கள் |

### வியாழன்

| | |
|---|---|
| 07:00 | புலரும் பொழுது புலரும் |
| 07:05 | செய்தி முன்னோட்டம் |
| 08:00 | காலைச் செய்திகள் |
| 08:15 | புலரும் பொழுது புலரும் தொடர்ச்சி |
| 09:00 | செய்தித் துளிகள் |
| 09:05 | முற்பகல் முத்தாரம் |
| 09:30 | பொங்கும் பூம்புனல் |
| 10:00 | செய்தித் துளிகள் |
| 10:05 | பொங்கும் பூம்புனல் |
| 10:30 | திரை விமர்சனம் |
| 11:00 | செய்தித் துளிகள் |
| 11:05 | தில்லேலே தில்லேலே |
| 11:30 | வைத்திலிங்கம் சோ |
| 12:00 | செய்தித் துளிகள் |
| 12:05 | வானவில் |
| 12:30 | நாள் இதழ் நேரம் |
| 13:00 | செய்தி முன்னோட்டம் |
| 13:05 | இன்றைய நேயர் |
| 13:30 | செய்தி நேரம் |
| 14:00 | திரை விருந்து |
| 17:00 | செய்தித் துளிகள் |
| 17:05 | சிறப்புவிருந்தினர் |
| 17:30 | மனைவி |
| 18:00 | செய்தித் துளிகள் |
| 18:05 | சங்கமவேளை |
| 19:00 | செய்தி முன்னோட்டம் |
| 19:05 | அவர்கள் |
| 19:30 | சொர்க்கம் |
| 20:00 | செய்தி நேரம் |
| 20:30 | கோலங்கள் |
| 21:00 | ஊர்க்காற்று - அதிரடி அலசல் |
| 21:30 | ஆடுகளம் |
| 22:30 | குறும்படம் |
| 23:00 | இலண்டன் நேரம் |
| 23:30 | என்றும் இனிமை |

### வெள்ளி

| | |
|---|---|
| 07:00 | புலரும் பொழுது புலரும் |
| 07:05 | செய்தி முன்னோட்டம் |
| 08:00 | காலைச் செய்திகள் |
| 08:15 | புலரும் பொழுது புலரும் தொடர்ச்சி |
| 09:00 | செய்தித் துளிகள் |
| 09:05 | முற்பகல் முத்தாரம் |
| 09:30 | பொங்கும் பூம்புனல் |
| 10:00 | செய்தித் துளிகள் |
| 10:05 | பொங்கும் பூம்புனல் |
| 11:00 | செய்தித் துளிகள் |
| 11:05 | அதிரடி அலசல்? |
| 11:30 | படலைக்குப் படலை |
| 12:00 | செய்தித் துளிகள் |
| 12:05 | வானவில் |
| 12:30 | நாள் இதழ் நேரம் |
| 13:00 | செய்தி முன்னோட்டம் |
| 13:05 | இன்றைய நேயர் |
| 13:30 | செய்தி நேரம் |
| 14:00 | திரை விருந்து |
| 16:30 | சங்கே முழங்கு |
| 17:00 | செய்தித் துளிகள் |
| 17:05 | ஜேர்மன் நேரம் |
| 17:30 | மனைவி |
| 18:00 | செய்தித் துளிகள் |
| 18:05 | இது உங்கள் நேரம் |
| 19:00 | செய்தி முன்னோட்டம் |
| 19:05 | அவர்கள் |
| 19:30 | சொர்க்கம் |
| 20:00 | செய்தி நேரம் |
| 20:30 | கோலங்கள் |
| 21:00 | ஊர்க்காற்று - அம்பலம் |
| 21:30 | திரை விருந்து |




















### சனி

| | |
|---|---|
| 07:00 | புலரும் பொழுது புலரும் |
| 07:05 | செய்தி முன்னோட்டம் |
| 08:00 | காலைச் செய்திகள் |
| 08:15 | புலரும் பொழுது புலரும் தொடர்ச்சி |
| 09:00 | செய்தித் துளிகள் |
| 09:05 | முற்பகல் முத்தாரம் |
| 09:30 | பொங்கும் பூம்புனல் |
| 10:00 | செய்தித் துளிகள் |
| 10:05 | பொங்கும் பூம்புனல் |
| 10:30 | புன்னகைப் பூக்கள் |
| 11:00 | செய்தித் துளிகள் |
| 11:05 | புதினக் கண்ணாடி |
| 11:30 | சங்கே முழங்கு |
| 12:00 | செய்தித் துளிகள் |
| 12:05 | புதிய பாடல்கள் |
| 12:30 | நாள் இதழ் நேரம் |
| 13:00 | செய்தி முன்னோட்டம் |
| 13:05 | பார்த்தேன் பகர்ந்தேன் |
| 13:30 | செய்தி நேரம் |
| 14:00 | திரை விருந்து |
| 16:30 | திரைச்சித்திரம் |
| 17:00 | செய்தித் துளிகள் |
| 17:05 | நலவாழ்வு |
| 17:30 | வண்ண சிறகடித்து |
| 18:00 | செய்தித் துளிகள் |
| 18:05 | நிருத்திய சங்கமம் |
| 18:30 | பாடல் கலசம் |
| 19:00 | செய்தி முன்னோட்டம் |
| 19:05 | வைத்திலிங்கம் சோ |
| 19:30 | ராக மாலிகா |
| 20:00 | செய்தி நேரம் |
| 20:30 | செய்திக் களம் |
| 21:00 | ஊர்க்காற்று |
| 21:30 | திரை விருந்து |

### ஞாயிறு

| | |
|---|---|
| 07:00 | புலரும் பொழுது புலரும் |
| 07:05 | செய்தி முன்னோட்டம் |
| 08:00 | காலைச் செய்திகள் |
| 08:15 | புலரும் பொழுது புலரும் தொடர்ச்சி |
| 09:00 | செய்தித் துளிகள் |
| 09:05 | முற்பகல் முத்தாரம் |
| 09:30 | சிறுவர் கதம்பம் |
| 10:00 | செய்தித் துளிகள் |
| 10:05 | வணக்கம் ஐரோப்பா |
| 10:30 | வணக்கம் ஐரோப்பா |
| 11:00 | செய்தித் துளிகள் |
| 11:05 | ஒளிக்கீற்று |
| 11:30 | ஒளிக்கீற்று |
| 12:00 | செய்தித் துளிகள் |
| 12:05 | அறிவுச்சமர் |
| 12:30 | நாள் இதழ் நேரம் |
| 13:00 | செய்தி முன்னோட்டம் |
| 13:05 | பாடல் பிறந்த ராகம் |
| 13:30 | செய்தி நேரம் |
| 14:00 | திரை விருந்து |
| 16:30 | புதிய பாடல்கள் |
| 17:00 | செய்தித் துளிகள் |
| 17:05 | அபிநயதாரகைகள் |
| 17:30 | திரை விமர்சனம் |
| 18:00 | செய்தித் துளிகள் |
| 18:05 | நாத விநோதம் |
| 18:30 | நாத விநோதம் |
| 19:00 | செய்தி முன்னோட்டம் |
| 19:05 | படலைக்கு படலை |
| 19:30 | தில்லலே தில்லலே? |
| 20:00 | செய்தி நேரம் |
| 20:30 | சுப்பர் மடம் |
| 21:00 | ஊர்க்காற்று |
| 21:30 | திரை விருந்து |

### திங்கள்

| | |
|---|---|
| 07:00 | புலரும் பொழுது புலரும் |
| 07:05 | செய்தி முன்னோட்டம் |
| 08:00 | காலைச் செய்திகள் |
| 08:15 | புலரும் பொழுது புலரும் தொடர்ச்சி |
| 09:00 | செய்தித் துளிகள் |
| 09:05 | முற்பகல் முத்தாரம் |
| 09:30 | பொங்கும் பூம்புனல் |
| 10:00 | செய்தித் துளிகள் |
| 10:05 | பொங்கும் பூம்புனல் |
| 10:30 | ராக மாலிகா |
| 11:00 | செய்தித் துளிகள் |
| 11:05 | நிலவரம் |
| 12:00 | செய்தித் துளிகள் |
| 12:05 | வானவில் |
| 12:30 | நாள் இதழ் நேரம் |
| 13:00 | செய்தி முன்னோட்டம் |
| 13:05 | இன்றைய நேயர் |
| 13:30 | செய்தி நேரம் |
| 14:00 | திரை விருந்து |
| 16:30 | புதினக் கண்ணாடி |
| 17:00 | செய்தித் துளிகள் |
| 17:05 | நோர்வே நேரம் |
| 17:30 | மனைவி |
| 18:00 | செய்தித் துளிகள் |
| 18:05 | வண்ணத்திரையில் |
| 19:00 | செய்தி முன்னோட்டம் |
| 19:05 | அவர்கள் |
| 19:30 | சொர்க்கம் |
| 20:00 | செய்தி நேரம் |
| 20:30 | கோலங்கள் |
| 21:00 | ஊர்க்காற்று - நிலவரம் |
| 21:30 | திரை விருந்து |

### செவ்வாய்

| | |
|---|---|
| 07:00 | புலரும் பொழுது புலரும் |
| 07:05 | செய்தி முன்னோட்டம் |
| 08:00 | காலைச் செய்திகள் |
| 08:15 | புலரும் பொழுது புலரும் தொடர்ச்சி |
| 09:00 | செய்தித் துளிகள் |
| 09:05 | முற்பகல் முத்தாரம் |
| 09:30 | பொங்கும் பூம்புனல் |
| 10:00 | செய்தித் துளிகள் |
| 10:05 | பொங்கும் பூம்புனல் |
| 10:30 | அபிநய தாரகைகள் |
| 11:00 | செய்தித் துளிகள் |
| 11:05 | நகைச்சுவை நேரம் |
| 11:30 | நிருத்திய சங்கமம் |
| 12:00 | செய்தித் துளிகள் |
| 12:05 | வானவில் |
| 12:30 | நாள் இதழ் நேரம் |
| 13:00 | செய்தி முன்னோட்டம் |
| 13:05 | இன்றைய நேயர் |
| 13:30 | செய்தி நேரம் |
| 14:00 | திரை விருந்து |
| 16:30 | சிறுவர் கதம்பம் |
| 17:00 | செய்தித் துளிகள் |
| 17:05 | சுவிஸ் நேரம் |
| 17:30 | மனைவி |
| 18:00 | செய்தித் துளிகள் |
| 18:05 | சங்கமவேளை |
| 19:00 | செய்தி முன்னோட்டம் |
| 19:05 | அவர்கள் |
| 19:30 | சொர்க்கம் |
| 20:00 | செய்தி நேரம் |
| 20:30 | கோலங்கள் |
| 21:00 | ஊர்க்காற்று |
| 21:30 | எட்டாத கொப்பெல்லாம் தட்டிவா |
| 22:30 | செய்திக்கண்ணோட்டம் |
| 23:30 | கேட்டதில் இனித்தது |

### புதன்

| | |
|---|---|
| 07:00 | புலரும் பொழுது புலரும் |
| 07:05 | செய்தி முன்னோட்டம் |
| 08:00 | காலைச் செய்திகள் |
| 08:15 | புலரும் பொழுது புலரும் தொடர்ச்சி |
| 09:00 | செய்தித் துளிகள் |
| 09:05 | முற்பகல் முத்தாரம் |
| 09:30 | பொங்கும் பூம்புனல் |
| 10:00 | செய்தித் துளிகள் |
| 10:05 | பொங்கும் பூம்புனல் |
| 10:30 | பாடல் கலசம் |
| 11:00 | செய்தித் துளிகள் |
| 11:05 | நகைச்சுவை நேரம் |
| 11:30 | சுப்பர் மடம் |
| 12:00 | செய்தித் துளிகள் |
| 12:05 | வானவில் |
| 12:30 | வாராந்த அரசியல் |
| 13:00 | செய்தி முன்னோட்டம் |
| 13:05 | இன்றைய நேயர் |
| 13:30 | செய்தி நேரம் |
| 14:00 | திரை விருந்து |
| 16:30 | அறிவுச்சமர் |
| 17:00 | செய்தித் துளிகள் |
| 17:05 | இலண்டன் நேரம் |
| 17:30 | மனைவி |
| 18:00 | செய்தித் துளிகள் |
| 18:05 | சங்கமவேளை |
| 19:00 | செய்தி முன்னோட்டம் |
| 19:05 | அவர்கள் |
| 19:30 | சொர்க்கம் |
| 20:00 | செய்தி நேரம் |
| 20:30 | கோலங்கள் |
| 21:00 | ஊர்க்காற்று |
| 21:30 | அதிர்வு |
| 22:30 | வாராந்த அரசியல் |
| 23:00 | இனிய ராகங்கள் |

### வியாழன்

| | |
|---|---|
| 07:00 | புலரும் பொழுது புலரும் |
| 07:05 | செய்தி முன்னோட்டம் |
| 08:15 | காலைச் செய்திகள் |
| 08:15 | புலரும் பொழுது புலரும் தொடர்ச்சி |
| 09:00 | செய்தித் துளிகள் |
| 09:05 | முற்பகல் முத்தாரம் |
| 09:30 | பொங்கும் பூம்புனல் |
| 10:00 | செய்தித் துளிகள் |
| 10:05 | பொங்கும் பூம்புனல் |
| 10:30 | திரை விமர்சனம் |
| 11:00 | செய்தித் துளிகள் |
| 11:05 | தில்லேலே தில்லேலே |
| 11:30 | வைத்திலிங்கம் சோ |
| 12:00 | செய்தித் துளிகள் |
| 12:05 | வானவில் |
| 12:30 | நாள் இதழ் நேரம் |
| 13:00 | செய்தி முன்னோட்டம் |
| 13:05 | இன்றைய நேயர் |
| 13:30 | செய்தி நேரம் |
| 14:00 | திரை விருந்து |
| 17:00 | செய்தித் துளிகள் |
| 17:05 | சிறப்புவிருந்தினர் |
| 17:30 | மனைவி |
| 18:00 | செய்தித் துளிகள் |
| 18:05 | சங்கமவேளை |
| 19:00 | செய்தி முன்னோட்டம் |
| 19:05 | அவர்கள் |
| 19:30 | சொர்க்கம் |
| 20:00 | செய்தி நேரம் |
| 20:30 | கோலங்கள் |
| 21:00 | ஊர்க்காற்று - அதிரடி அலசல் |
| 21:30 | ஆடுகளம் |
| 22:30 | குறும்படம் |
| 23:00 | இலண்டன் நேரம் |
| 23:30 | என்றும் இனிமை |

### வெள்ளி

| | |
|---|---|
| 07:00 | புலரும் பொழுது புலரும் |
| 07:05 | செய்தி முன்னோட்டம் |
| 08:00 | காலைச் செய்திகள் |
| 08:15 | புலரும் பொழுது புலரும் தொடர்ச்சி |
| 09:00 | செய்தித் துளிகள் |
| 09:05 | முற்பகல் முத்தாரம் |
| 09:30 | பொங்கும் பூம்புனல் |
| 10:00 | செய்தித் துளிகள் |
| 10:05 | பொங்கும் பூம்புனல் |
| 11:00 | செய்தித் துளிகள் |
| 11:05 | அதிரடி அலசல்? |
| 11:30 | படலைக்குப் படலை |
| 12:00 | செய்தித் துளிகள் |
| 12:05 | வானவில் |
| 12:30 | நாள் இதழ் நேரம் |
| 13:00 | செய்தி முன்னோட்டம் |
| 13:05 | இன்றைய நேயர் |
| 13:30 | செய்தி நேரம் |
| 14:00 | திரை விருந்து |
| 16:30 | சங்கே முழங்கு |
| 17:00 | செய்தித் துளிகள் |
| 17:05 | ஜேர்மன் நேரம் |
| 17:30 | மனைவி |
| 18:00 | செய்தித் துளிகள் |
| 18:05 | இது உங்கள் நேரம் |
| 19:00 | செய்தி முன்னோட்டம் |
| 19:05 | அவர்கள் |
| 19:30 | சொர்க்கம் |
| 20:00 | செய்தி நேரம் |
| 20:30 | கோலங்கள் |
| 21:00 | ஊர்க்காற்று - அம்பலம் |
| 21:30 | திரை விருந்து |

















நிகழ்ச்சிகளில் நேர மாற்றங்கள் முன் அறிவித்தலின்றி மாற்றப்படலாம்.

# அவர்கள் நட்பு

இன்று ஐரோப்பியாவில் இது பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான ஒரு போராட்டம் என்று கூடச் சொல்லலாம். முக்கியமாகப் பெண் பிள்ளைகள். இவர்கள் கலாச்சாரம் பண்பாடு என்ற இருவிடயங்களால் பெற்றோருடனும் ஒட்ட முடியாமல் ஐரோப்பிய வாழ்க்கையுடனும் ஒட்ட முடியாமல் ஒரு வித மன உளைச்சலுடன் வாழ்கிறார்கள். இதே நேரம் பிள்ளைகள் பால் வேற்றுமையின்றி நட்புடன் பழகுவதை நட்பு என்ற கண் கொண்டு பார்க்காமல் எங்கே பிள்ளைகள் தவறி விடுவார்களோ..! என்று அச்சப்பட்டே பெற்றோர்களும் தமக்குத்தாமே மன உளைச்சலை ஏற்படுத்திக்கொண்டு வாழ்கிறார்கள். இது தப்பு என்பதுதான் எனது கருத்து.

வீடு மட்டுமே உலகமாக்கப்பட்டு வளரும் பெண் பிள்ளைகள் வீட்டுக்கு வந்து போகும் அண்ணனின் நண்பனையோ அல்லது பக்கத்து வீட்டு யன்னலில் தெரியும் வாலிபனையோ காதலிக்கத் தொடங்கி விடுகிறார்கள். பெற்றோர்கள் பிள்ளைகளைக் கட்டி வைப்பதால் அவர்கள் மனதையோ உணர்வுகளையோ கட்டிவைக்க முடியாது. அத்தோடு இப்படி வளர்க்கப்படும் பெண் பிள்ளைகள் உலகத்தைக் காணத் தவறிவிடுகிறார்கள். மனிதர்களின் நியமான குணங்களைப் புரிந்து கொள்ள முடியாமற் போய் விடுகிறார்கள். தமது வட்டத்துக்குள் தாம் சந்திக்கும் யாராவது ஒரு ஆண்மகனை நல்லவனா கெட்டவனா தனக்குப் பொருத்தமானவனா என்று தெரியாமலே கண் மூடித்தனமாய் காதலிக்கத் தொடங்கி விடுகிறார்கள். எந்த வித முன் யோசனையுமின்றி கல்யாணத்துக்குத் தயாராகியும் விடுகிறார்கள். ஆனால் வெளியில் போய் ஆண் பெண் என்ற பேதமின்றி எல்லோருடனும் நட்புடன் பழகும் ஒரு பெண் யாராவது ஒருவனைக் கண்டவுடன் காதலிக்க மாட்டாள். நட்புடன்தான் பழகுவாள்.

இப்படிப் பலருடன் நட்புடன் பழகும் போது யாராவது ஒருவரின் குண இயல்புகள் பழக்க வழக்கங்கள் அவளுக்குப் பிடிக்கும் போது அங்கு அது காதலாகவும் மலரலாம். இந்தக் காதல் ஒருவகையில் நல்லதும் கூட. ஒருவரையொருவர் ஓரளவு முதலே தெரிந்து கொண்ட இவர்களின் மணவாழ்வு பெரும்பாலும் புரிந்துணர்வும் ஒற்றுமையும் மிகுந்ததாகவே இருக்கும். "எங்கடை பெடியள் சரியில்லை" இது பெண்ணைப் பெற்றவர்கள் பலரின் வாய்ப்பாடமும் மனக்கருத்தும். இது மிகமிகத் தப்பானதொரு கருத்து. நல்லவர்களும் கெட்டவர்களும் இருபகுதியிலும் உள்ளார்கள். அந்தக் கெட்டவர்கள் ஏன் உருவானார்கள் என்பதைத்தான் நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

இங்கு நாம் எடுத்துக் கொண்ட விடயத்துடன் பார்த்தால் ஆண் பெண் என்ற பாகுபாடின்றி வளரும் போது பெண் பிள்ளைகளுடன் கதைப்பதை ஒரு சாதனையாக ஆண் பிள்ளைகள் கருதவே மாட்டார்கள். கதைப்பதற்கென்றே அலையவும் மாட்டார்கள். எமது வாழ்க்கை முறையின் தவறினால்தான் இந்தத் தப்புகள் எல்லாம். சின்ன வயதிலிருந்தே பால் பாகுபாடின்றி ஒன்றாக நட்புடன் வளரும் பிள்ளைகள் மத்தியில் ஏற்படும் தவறுகளைவிட தனிமைப் படுத்தப்பட்டு வளர்க்கப்படும் பிள்ளைகளின் மத்தியில்தான் தவறுகள் அதிகமாக ஏற்படுகின்றன.

12,13 வயதுகளின் பின் ஒரு பெண் பிள்ளைக்கு பெண் நண்பிகளைத் தவிர வேறு ஆண் நண்பர்களே இல்லாத போது அவளுக்கு யாராவது ஒரு ஆணுடன் பழகும் வாய்ப்பு ஏற்பட்டால் உடனேயே அவனில் காதலின் போது என் வாழ்வு இனிமையாக அமையுமா? இவன் போக்கும் என் போக்கும் பொருந்திப் போகுமா....? என்பது போன்ற பல விடயங்களைச் சிந்தித்துப் பார்க்கும் மனப்பக்குவம் இல்லாது போய் விடுகிறது என்பதைக் கண்கூடாகக் காணமுடிகிறது.

ஆதலால் ஆண்-பெண் பால் பாகுபாடின்றிய நட்பு அவசியம். பெண் பிள்ளைகளும் உலகத்தைப் பார்க்க பெற்றோர்கள் அனுமதிக்க வேண்டும். தவறுகள் நடவாதிருக்க உரிய வயதிலேயே உடல் ரீதியான உணர்வுகள் சம்பந்தமான சில முக்கிய விடயங்களை பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுத்து அவர்கள் மனதில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். அதைவிடுத்து பெண் பிள்ளைகளை ஆண்களுடன் பழகவிடாது வீட்டுக்குள் வைத்து வளர்ப்பதுதான் சரியென நினைத்து பிள்ளைகளையும் மனரீதியாக வதைத்து பெற்றோர்கள் தம்மையும் தாமே வதைத்துக் கொண்டு ஏதோ நெருப்பைக் கட்டிக்கொண்டு வாழ்கின்றோம். என்று சொல்வது அனாவசியச் செயலே.

*- சந்திரவதனா.*

# வசந்திக்கு சுகந்தி எழுதும் கடிதம்

என் அன்புச் சிநேகிதிக்கு!! நலம் நாடலும் அதுவே!!

உனது கடிதம் இன்னும் கிடைக்காதது என்னவோ போல் உள்ளது. பதிவு தாபாலில் போட்டால் மட்டும் தான் அனுப்புகிறார்களாம், இதை இன்றைக்குப் பதிவு தாபாலில் அனுப்பலாம் என்ற முடிவோடு எழுதுகிறேன். இங்கு குளிரும் மழையுமாக மாறி மாறி உள்ளது. குளிருக்குள் எழும்பி வேலைக்கு போவதை நினைத்தாலே பாதி உயிர் போகிறது. முன்பு நீயும் நானும் மார்கழி குளிருக்குள் எழும்பி அம்மா சுடுதண்ணி வைச்சுத்தர அதில் குளிச்சு, கடைசியில் தம்பியுடன் பந்தயம் பிடிச்சு, மூன்று வாளி கிணத்தில் எடுத்து தலையில் ஊத்திக் கொண்டு, வெட வெட என நடுக்க துடைச்சு, ஓடிப்போய் திரு நீற்றை எடுத்து கை கழுத்து எல்லாம் தேய்த்து, சூடு பறக்க வரும் கோப்பியையும் குடித்து விட்டு, வெளிக்கிட்டு, மெல்லிய இருட்டில் கோயிலுக்கு போகும் அழகே தனி.

சங்கு ஊதி சத்தமும், கோயில் மணிச்சத்தமும், மாணிக்கவாசகரின் திருவம்பாவை பாடி போகும் சத்தமும் உண்மையில் நினைத்தாலே மனம் லயித்து போகிறது. அப்போது குளிர் காலம் கூட மனதில் ஒரு குளிர்மையை கொண்டு வரும். இப்போ வயது போய் விட்டது போலும், இல்லை அப்படி என்று சொல்வதற்கும் இல்லை ஏனெனில் இங்குள்ள வயது போனவர்களுக்கு வைற் கிறிஸ்மஸ் என்றால் பெரிய விடயம். மிகவும் மகிழ்ச்சியாகச்சொல்வார்கள். முக்கியமாக கிராமப்புறங்களில் பனியில் சறுக்கி விளையாடுதல், பனிமனிதஉருவங்கள் செய்தல், பனிக்கட்டி எறிந்து விளையாடுதல் என்று சந்தோசமாக களிப்பார்கள்.

எல்லாம் மனம் கொண்டதுதான் மாலிகை. வெளிநாட்டுக்கென வெளிக்கிட்டு காலப்போக்கில் எமது அடையாளங்களை ஒவ்வொன்றாக இழந்து விடுவோம் போல் உள்ளது. எனக்கு திருவம்பாவை கூட ஒன்று இரண்டு பாட்டு மறந்து விட்டது. இங்கும் தமிழ் புத்தகக்கடை உள்ளது. அறிந்து கொஞ்சப்புத்தகங்கள் வேண்டினேன் இன்னும் கொஞ்சம் எடுப்பித்து தரும்படி கேட்டிருக்கிறேன். இங்குள்ள கோயில் மலர் ஒன்றில் கந்தசஷ்ஷ்டி கவசம் இலவசமாக இணைத்திருந்தார்கள்.

இந்த முறையும் வழக்கம் போல விரதம் பிடித்தேன். இதில் அதிசயம் என்னவென்றால் நான் பிடிக்கத் தொடங்கிய 1998 ம் ஆண்டுதான் இவரும் பிடிக்கத்தொடங்கினவராம். தான் பிடித்ததன் பலன்தான் நான் கிடைத்தது என்று சொல்கிறார்! ஏய் நீ சும்மா சிரிக்காதே.. இங்கும் நிறையப்பேர் கந்தசஷ்டி விரதம் பிடிக்கிறார்கள். கோயிலுக்குள் ஆள் போக முடியாத அளவு சனம். புரட்டாதி சனிக்கும் இப்படித்தான். பாவம் சனத்திற்குத்தான் எத்தனை கவலைகள், எத்தனை வேண்டுதல்கள். விசாவில் இருந்து நாட்டு பிரச்சனை தீர வேண்டும் என்று.. ஒரு விதத்தில் பார்த்தால் வெளிநாட்டில் கோயில் கட்ட அனுமதித்த வெளிநாட்டுகாரனுக்கு ஒரு கும்புடு போட வேணும். இல்லாவிட்டால் இவ்வளவு சனமும் மன அமைதிக்கு என்ன செய்யுங்கள். பாவம். உனக்கு இன்னொரு விசயம் சொல்ல வேணும். உனக்குத்தான் மனிசனுக்கு அடுத்தாகச் சொல்கிறேன்!. வாற வருடம் எங்கள் வீட்டில் ஒரு குட்டி சுகந்தியோ, சுகந்தனோ இருப்பார்கள்! கந்தசஷ்டியின் மகிமை என நீ முணுமுணுப்பது கேட்கிறது..

*- உன் இனிய தோழி சுகந்தி*

# ஆச்சியிந்... அட்வைஸ்!

aachi@orupaper.com

*கேள்வி:*

எனது பெயர் கண்ணன். நான் இந்த நாட்டிற்கு முப்பது வருடங்களுக்கு முன் வந்து விட்டேன். நான் படிக்க வென்று வந்து மாணவர்களுக்கான விசாவில் பல வருடங்கள் இருந்து பின் அகதி அந்தஸ்து கோரி, பின் இன்நாட்டு வதிவிட அனுமதியும் எடுத்து வரிப்பணம் கட்டும் ஒரு ஊழியனாக உள்ளேன். எனது கேள்வி என்னவென்றால் இப்படி நான் கஸ்டப்பட்டு வேலை செய்ய இங்கு பலர் எமது இனத்தவர் உட்பட இங்குள்ள பெனிபிற் சிஸ்டத்தை ஏமாற்றி சொந்த நம்பர் இருக்க கள்ள நம்பரில் வேலை செய்து கொண்டும், மனைவி பிள்ளைகளை தனிய இருத்தி சிங்கிள் மதர் என்றும் காசு நிறைய ஏமாற்றி எடுத்து பின் சகோதரங்களின் பெயரில் வீடு கூட வேண்டுகிறார்கள்.

எமது நாடு இல்லைத்தானே என்பது சிலர் வாதம். எனது வரிப்பணம்.. எனது இரத்தத்தை உறுஞ்சுகிறார்கள் என்பது என் வாதம். நான் நினைப்பது தவறா?

## ஆச்சியிந்... அட்வைஸ்!

தம்பி நீர் நினைப்பது முற்றிலும் சரியானது. உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யக்கூடாது பார். உயிருக்கு பயந்து ஓடி வந்து விட்டு, அடைக்கலம் என்று தந்தவனுக்கு நன்றியாவது சொல்லாவிட்டாலும் பரவாயில்லை, அட்டை போல அவனது இரத்தத்தையே உறுஞ்சுவது என்றால்.. இது குல நாசம் தான்.

பெனிபிற் சிஸ்டம் என்பது உண்மையாகவே அந்தரித்து போய்யிருக்கிற சனத்திற்கென கொண்டுவரப்பட்டது. இதை மோசடி செய்வதால், உண்மையாகவே கஸ்டப்படுகிறவர்களும் ஏகப்பட்ட விசாரிப்புக்கு உட்படுகிறார்கள். சும்மா வாற காசு பரம்பரைக்கு நிலைக்காது பிள்ளை. மற்றவனின் நாட்டை மதிப்பவன் தான் தனது நாட்டையும் மதிப்பான்.

உது நாடு இல்லை என்று கஸ்டப்படாமல் உழைத்த காசோடு தாய் நாடு கிடைத்தாப்பிறகு போய் கஸ்டப்பட்டு உழைப்பார்கள் என்பது என்ன நிச்சயம். இது அவரவர் மனசாட்சிக்கும், சமூகத்திற்கும் சொல்லும் நொண்டிச் சமாதானம்!

# மாதர் தம்மை இழிவு செய்யும் மடமை தன்னைக் கொளுத்துவோம்

மார்கழி மாதக்குளிரில் குளிரோடு குளிராக உறைந்து விட்டீர்களோ? என எண்ணத்தோன்றுகிறது. இந்த வாரம் மகளிர் பிரிவுக்கு வந்த ஆக்கங்களை வைத்துத்தான் சொல்கிறோம். யாரை பார்த்தாலும் வாசிப்பதாகத்தான் சொல்கிறீர்கள் எழுதுவதாக சந்திக்கும் ஒருவர் இருவர்தான் சொல்கிறார்கள். கொஞ்சம் கூடப்பேர் எழுதினால் என்ன குறைந்தா போய்விடுவீர்கள்? ஆச்சியின் அட்வைஸ்க்கு வரும் கடிதங்களில் எழுதினவர்களின் விபரங்கள் சரிவர தராவிட்டால், அக்கடிதங்களை பிரசுரிக்க மாட்டோம் எனத் தாழ்மையுடன் அறியத்தருகிறோம். நாம் கூறியபடி அவர்களின் தனிப்பட்ட விபரங்களின் நம்பகத்தன்மை பேணப்படும். ஆகவே, உங்களின் விபரங்களோடு தொடர்ந்து எழுதுங்கள், அல்லது மீண்டும் அனுப்புங்கள்!

மார்கழி மாதம் இன்னும் ஒரு பதிப்புடன் இந்த வருடம் நிறைவடைகிறது. நத்தார் தினத்தையொட்டி ஏதும் ஆக்கங்கள் இருந்தால் வரும் இதழுக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வையுங்கள்.

- ஒரு பேப்பர் காரிகள்

**Westminster College**

WESTMINSTER COLLEGE OF COMPUTING

City & Guilds, Oxford Cambridge RSA, MCSE, MCSD, ECDL, Oracle & Java Certification

Full time Diplomas in IT & Part time evening and weekend classes.

London & Thames Newspaper Group has awarded WCC for "BUSINESS ACHIVEMENT IN COMPUTER EDUCATION 2002"

**Oracle 8i**
DBA, Developer 2000, Financials, Web Commerce,
**Java**
Servlets/JSP, Enterprise Development, EJB
**Net**
ASP.NET, VB.NET, C, VS.NET,XML
**Unix**
Networking, Sun Solaris, AIX, Linux
**Programming**
Client/Server with C++, VB, Oracle, Forms 6i, SQL Server, Software Testing

**Web Design/WAP**
HTML, WML, Coldfusion, Ultra Dev, Dream Weaver, Flash
**E-Commerce**
Corporate/Enterprise development with ASP, JSP,PHP
Server side Java Script
**Applications**
Autocad, Sage Line 50, Microsoft Office
**Networking**
Windows NT/2000/XP, System Engineering,
PC Assembly & Support

BCS OCR Master CIW DESIGNER

web: www.wcc.co.uk

**City: 020 7608 7010**
Warwick House
64-65 Cowcross Sreet
Farringdon EC1M6BP

**Wembley: 020 8795 3678**
513A-515A High Road,
Wembley,
Middlesex HA0 2DH

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக **ஒரு பேப்பர்** நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பிவையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 8286 9327
Fax: 020 8640 6972

கனடா:
Tel: 416-297-4999
Fax: 416-335-6009

பிரான்ஸ்:
Tel: 01 7289 8165

சுவிஸ்:
Tel: 043 5000 277

email: info@orupaper.com



## மணமகள் தேவை

1) கிழக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 31 வயது 5'11" உயரமுள்ள, லண்டனில் நிரந்தர வதிவிடவுரிமையுள்ள, படித்த, சுயதொழில் செய்யும் மணமகனுக்கு தகுந்த வரனை உறவினர் ஐரோப்பிய நாடுகளில் தேடுகின்றனர். Ref: 929

2) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 33 வயது 6'7" உயரமுள்ள, தற்போது லண்டனில் வசிக்கும் A/L படித்த மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் லண்டன்/ கனடா/ ஐரோப்பிய நாடுகளில் தேடுகின்றனர். Ref: 928

3) Jaffna Parents looking for their son,, 37 years old, 5'6' tall,, British Citizen, IT graduate, working for a leading IT consultancy in UK, a suitable bride. Ref: 927

4) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 30 வயது 5'7" உயரமுள்ள, லண்டன் பிரஜாவுரிமையுள்ள M.Sc graduate நிரந்தர உயர் பதவி வகிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளை தகப்பனார் தேடுகின்றார். Ref: 926

5) Jaffna brother living in UK looking for his brother 32 years old, 5'10" tall, ACCA partly qualified accountant working for an accounting firm, a suitable bride. Ref: 925

6) Jaffna Sister in UK looking for her divorced brother 35 years old 5'9" tall , born in Sri Lanka and living in USA , *graduate and works for the* state, a suitable bride from UK/USA/ Canada. Ref: 924

7) திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட 32 வயது 5'7" உயரமுள்ள, மட்டக்களப்பில் Programming Assistant ஆக வேலை செய்யும் MBA பட்டதாரி மணமகனுக்கு தகுந்த வரனை லண்டனிலுள்ள சகோதரி இலங்கை/வெளிநாட்டில் தேடுகின்றார். Ref: 923

8) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 36 வயது 6' உயரமுள்ள, தற்போது கனடாவில் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளை அவரது நண்பர் கனடா/Europe இல் தேடுகின்றார். Ref: 922

9) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 35 வயது 5' 8" உயரமுள்ள, தற்போது லண்டனில் வசிக்கும் O/L படித்த மணமகனுக்கு தகுந்த மணமகளை தாயார் தேடுகின்றார்.Ref: 921

10) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 32 வயது 5' 8" உயரமுள்ள, பிரித்தானிய பிரஜாவுரிமையுள்ள சொந்தத் தொழில் செய்யும் மணமகனுக்கு தகுந்த மணமகளை தாயார் தேடுகின்றார். Ref: 920

11) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 28 வயது 5' 5" உயரமுள்ள, UK PR உள்ள Manager ஆக வேலை செய்யும் மணமகனுக்கு தகுந்த மணமகளை இலங்கையிலுள்ள சகோதரி தேடுகின்றார். Ref: 919

12) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 30 வயது 5' 7" உயரமுள்ள, தற்போது கொழும்பில் வசிக்கும் B.Sc பட்டதாரி மணமகனுக்கு தகுந்த மணமகளை லண்டனிலுள்ள சகோதரி தேடுகின்றார். Ref: 918

13) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 34 வயது 5'4" உயரமுள்ள, பிரிட்டிஷ் பிரஜாவுரிமையுள்ள விவாகரத்துப் பெற்ற Computer Engineer மணமகனுக்கு தகுந்த மணமகளை உறவினர் தேடுகின்றனர்.Ref: 917

14) இந்தியா தமிழ்நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட 36 வயது 5"7" உயரமுள்ள, தற்போது லண்டனில் வசிக்கும் தாரமிழந்த மணமகனுக்கு தகுந்த மணமகளை உறவினர் தேடுகின்றனர். Ref: 916

15) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 27 வயது 5'6" உயரமுள்ள, B.Sc படித்த UK பிரஜாவுரிமையுள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் UK/Europe இல் தேடுகின்றனர். Ref: 915

16) இங்கிலாந்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 36 வயது 5'7" உயரமுள்ள, வர்த்தகத்தில் டிப்ளோமா பெற்ற விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு தகுந்த வரனை பெற்றோர் தேடுகின்றனர். Ref: 914

17) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 33 வயது 5'7" உயரமுள்ள, லண்டனில் 9 வருடங்களாக வசிக்கும் ACCA படித்த மணமகனுக்கு தகுந்த வரனை சகோதரி Europe/UK/Canada இல் தேடுகின்றார். Ref: 913

18) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 34 வயது 5'10" உயரமுள்ள, தற்போது கனடாவில் வசிக்கும் BSc படித்த மணமகனுக்கு தகுந்த வரனை சகோதரர்கள் கனடாவில் தேடுகின்றனர். Ref: 912

19) Jaffna Parents looking for their son 39 years, 5'4" tall, U.K Citizen, working in a private firm in London, a suitable bride in UK/Europe/Sri Lanka. Ref: 911

20) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 27 வயது 6' உயரமுள்ள, பிரிட்டிஷ் பிரஜாவுரிமையுள்ள Super Market இல் உதவி அதிகாரியாகப் பணியாற்றும் மணமகனுக்கு தகுந்த வரனை பெற்றோர் தேடுகின்றனர். Ref: 910

21) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 35 வயது 5'4" உயரமுள்ள, தற்போது Dubai இல் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளை கனடாவில் வசிக்கும் சகோதரன் USA/Canada/UK இல் தேடுகின்றார். Ref: 909

22) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'7" உயரமுள்ள, தற்போது Dubai இல் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளை சகோதரி கனடாவில் தேடுகின்றார். Ref: 908

23) அம்பாறையைப் பிறப்பிடமாகக் கொண்ட 39 வயது 5'9" உயரமுள்ள, A/L படித்த தற்போது லண்டனில் வசிக்கும் Europe PR உள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளை சகோதரி UK/Canada இல் தேடுகின்றார். Ref: 907

24) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 32 வயது 5'4" உயரமுள்ள, லண்டனில் 10 வருடங்களாக வசிக்கும் மணமகனுக்கு சகோதரன் தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 906

25) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 25 வயது 5'7" உயரமுள்ள, லண்டனில் 7 வருடங்களாக வசிக்கும் O/L படித்த மணமகனுக்கு தகுந்த வரனை உறவினர் தேடுகின்றனர். Ref: 905

26) Jaffna Uncle looking for his nephew 34 years, 5'8" tall, a British Citizen, Graduate in Information Technology, employed as Software Engineer in a multinational company in Cambridge, a professional partner living in U.K. Ref: 904

27) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 30 வயது 5'11" உயரமுள்ள, தற்போது கனடாவில் வசிக்கும் Ph.D பட்டதாரி, விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு லண்டனிலுள்ள சகோதரி தகுந்த வரனைத் தேடுகின்றார். Ref: 903

## மணமகன் தேவை

1) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 22 வயது 5' உயரமுள்ள, தற்போது கொழும்பில் வங்கியில் பணிபுரியும் மணமகளுக்கு தகுந்த மணமகனை உறவினர் UK/Europe இல் தேடுகின்றனர். Ref: 1240

2) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 32 வயது 5' உயரமுள்ள, O/L படித்த மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டனிலுள்ள சகோதரி தேடுகின்றார். Ref: 1239

3) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 30 வயது 5' உயரமுள்ள, A/L படித்த மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டனிலுள்ள சகோதரி தேடுகின்றார். Ref: 1238

4) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 31 வயது 5' 3" உயரமுள்ள, அவுஸ்திரேலிய வதிவிடவுரிமையுடைய Chemical engineering முடித்து M.Sc படித்துக் கொண்டிருக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனை உறவினர் தேடுகின்றனர். Ref: 1237

5) Jaffna Parents living in Canada looking for their divorced daughter 41 years, 5' tall, Canadian citizen, B.Sc graduate and working in canada, a suitable groom. Ref: 1236

6) Jaffna sister living in UK looking for her sister 41 years,, 5'4" tall, Mphill qualified, working as a lecturer in Jaffna university a suitable groom. Ref: 1235

7) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 45 வயது 5' 8" உயரமுள்ள, A/L,Hotel management படித்த கனடாப் பிரஜாவுரிமையுள்ள மணமகளுக்கு தகுந்த மணமகனை சகோதரன் தேடுகின்றார். விவாகரத்து பெற்ற பிள்ளைகள் அற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். Ref: 1234

8) கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்ட 32 வயது 5'5" உயரமுள்ள, தற்போது அங்கே Doctor ஆக வேலைசெய்யும் மணமகளுக்கு இலங்கையில் தகுந்த வரனை லண்டனிலுள்ள சகோதரன் தேடுகின்றார். Ref: 1233

9) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 30 வயது 5' 4" உயரமுள்ள, தற்போது டென்மார்க்கில் வசிக்கும் Danish citizen, Engineering & Journalism படித்து Journalist+Editor ஆக வேலைசெய்யும் மணமகளுக்கு தகுந்த வரனை சகோதரி UK/ Denmark இல் தேடுகின்றார். Ref: 1232

10) கனடாவில் 11 வருடங்களாக வசிக்கும் பட்டதாரி, அரசாங்கத்தில் உயர்நிலை வேலைசெய்யும் 28 வயது, 5'4" உயரமுடைய மணமகளுக்கு தகுந்த மணமகனை தந்தை கனடாவில் தேடுகின்றார். Ref: 1231

11) Jaffna parents looking for their daughter 40 years, 5' tall, working as a English teacher in sri lanka, a suitable groom from UK/Australia. Ref: 1230

12) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 44 வயது 5' 2" உயரமுள்ள, தற்போது கொழும்பில் வசிக்கும் A/L படித்த மணமகளுக்கு தகுந்த மணமகனை உறவினர் தேடுகின்றனர். தாரமிழந்தவர், விவாகரத்து பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். Ref: 1229

13) மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட 26 வயது 5' 3" உயரமுள்ள, தற்போது Nurse ஆக பணிபுரியும் மணமகளுக்கு தகுந்த மணமகனை உறவினர் UK/Canada/Europe இல் தேடுகின்றனர். Ref: 1228

14) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 35 வயது 5' 2" உயரமுள்ள, A/L படித்து ஆசிரியையாக பணிபுரியும் விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு தகுந்த மணமகனை உறவினர் வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref: 1227

15) திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட 43 வயது 5' 3" உயரமுள்ள, தற்போது அங்கு Primary Teacher ஆகக் கடமைபுரியும் மணமகளுக்கு தகுந்த வரனை பெற்றோர் தேடுகின்றனர். Ref: 1226

16) திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட 38 வயது 5' 4" உயரமுள்ள, தற்போது அங்கு English Teacher ஆகக் கடமைபுரியும் மணமகளுக்கு தகுந்த வரனை பெற்றோர் தேடுகின்றனர். Ref: 1225

17) திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட 35 வயது 5' 5" உயரமுள்ள, தற்போது அங்கு Science Teacher ஆகக் கடமைபுரியும் மணமகளுக்கு தகுந்த வரனை பெற்றோர் தேடுகின்றனர். Ref: 1224

18) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 33 வயது 5' 2" உயரமுள்ள, தற்போது லண்டனில் 2 வருடங்களாக வசிக்கும் B.Sc படித்த மணமகளுக்கு தகுந்த மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். Ref: 1223

19) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 34 வயது 5' 2" உயரமுள்ள, தற்போது அங்கே ஆசிரியையாக வேலை செய்யும் BA படித்த மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டனிலுள்ள சகோதரன் தேடுகின்றார். Ref: 1222

20) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 26 வயது 5' உயரமுள்ள, தற்போது கொழும்பில வசிக்கும் A/L படித்த மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டனிலுள்ள சகோதரன் வெளிநாட்டில் தேடுகின்றார். Ref: 1221

21) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 34 வயது 5' 1" உயரமுள்ள, தற்போது அங்கே விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியையாகப் பணிபுரியும் மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டனிலுள்ள சகோதரி வெளிநாடு/உள்நாட்டில் தேடுகின்றார். Ref: 1220

22) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 36 வயது 5' உயரமுள்ள, A/L படித்த தற்போது யாழ் செயலகத்தில் பணிபுரியும் மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டனிலுள்ள சகோதரி வெளிநாடு/உள்நாட்டில் தேடுகின்றார். Ref: 1219

23) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 28 வயது 5' 2" உயரமுள்ள, A/L படித்த தற்போது அங்கே வசிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டனிலுள்ள சகோதரி வெளிநாடு/உள்நாட்டில் தேடுகின்றார். Ref: 1218

24) Vadamarachchi Parents living in UK looking for their UK born daughter, 26 years old, 5'3" tall, a graduate working in London, a suitable groom from UK. Ref: 1217

25) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5' 2" உயரமுள்ள, தற்போது அங்கே அரசாங்க வேலை செய்யும் Management பட்டதாரி மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டனிலுள்ள சகோதரன் தேடுகின்றார். Ref: 1216

26) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 25 வயது 5' 4" உயரமுள்ள, தற்போது லண்டனில் வசிக்கும் BA Accounting final year படிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். Ref: 1215

27) திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட 41 வயது 5' 3" உயரமுள்ள, தற்போது அங்கு Dentist ஆக வேலைசெய்யும் மணமகளுக்கு தகுந்த மணமகனை உறவினர் வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref: 1214

28) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 25 வயது 5' 2" உயரமுள்ள, தற்போது கொழும்பில் வசிக்கும் O/L படித்த மணமகளுக்கு தகுந்த வரனை உறவினர் London/Canada/Europe இல் தேடுகின்றனர். Ref: 1213

29) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 31 வயது 5' 4" உயரமுள்ள, தற்போது அங்கே வசிக்கும் மணமகளுக்கு தகுந்த வரனை உறவினர் Canada/UK இல் தேடுகின்றனர். Ref: 1212

30) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 26 வயது 5' 4" உயரமுள்ள, கனடா பிரஜாவுரிமையுள்ள Diploma International Transportation and Customs படித்த கனடாவில் Customs இல் வேலை செய்யும் மணமகளுக்கு தகுந்த மணமகனை பெற்றோர் Canada/UK/USA/Europe இல் தேடுகின்றனர். Ref: 1211

31) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 30 வயது 5' 6" உயரமுள்ள, கனடா பிரஜாவுரிமையுள்ள விவாகரத்துப் பெற்ற B.Com இறுதியாண்டு படிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனை பெற்றோர் Canada/UK/USA/ Europe இல் தேடுகின்றனர். Ref: 1210

32) இந்தியா தமிழ்நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட 32 வயது 5'4" உயரமுள்ள, தற்போது லண்டனில் Work permit இல் Nurse ஆக பணிபுரியும் மணமகளுக்கு இந்தியாவைச் சேர்ந்த தகுந்த மணமகனை உறவினர் தேடுகின்றனர். Ref: 1209

# கவிதை

## சிலுவைகள் சுமந்தபின்பு...

அந்த...
பாழடைந்த கதவுகளுக்குள்
இன்றுவரை...
அடைபட்டு தேங்கிக்கிடந்த
எங்கள் இலட்சியங்கள்
உடைத்துக்கொண்டு வெளியேறியது...!

ஒவ்வொரு...
கணப்பொழுதின் இடையிலும்
நாளை
விடிகாலை வருமென்ற எதிர்பார்ப்பில்
ஏங்கிக்கிடந்த

அந்த...
விடுதலைசுமந்த
மாவீரம் ஓய்வெடுக்கும்
துயிலும் ஆலயங்கள்
இப்போது...
நின்மதி பெருமூச்சுவிட்டு
நெஞ்சுநிமிர்த்தி
இறுமாப்புக் கொண்டிருக்கும்...!

இதயத்தில் கனத்து
அடிக்கடி உரசி வலித்து
உறைந்துகிடந்த
பொறுமை என்ற மௌனம்...
ஊதிவெடித்து
ஏதோ ஒரு உணர்வுவந்து
அந்த இடத்தை
நிரப்புகிறது எங்களுக்கு...!

வெள்ளைக்காரனின்...
இனப்புரியாத பாதைவழியே
மணித்தேர் வேசத்தில் வந்த
சவஊர்தியில்...
ஊர் ஊராய் கொண்டுலாத்திய
அவர்களின்...
சமாதானப் பிசாசு
இப்போது...
தொடங்கப்பட்ட புள்ளியில் வந்து
செத்துக்கிடக்கிறது....!

செஞ்சோலைக் குஞ்சுகளின்
பிஞ்சுரத்தம் கண்டும்கூட
இளகாத மனநிலையில்தான்
இன்றும் உலகம்...!

நிம்மதியிழந்து...
சொல்லாமல் கலங்கும் மூச்சுக்காற்றும்
கன்மணிகடந்து...
கன்னத்தில்விழுந்த கண்ணீர்துளியுமாய்

நேற்றுவரை...
மமுத்துப்போன
உணர்வுகமுன் எண்ணக்கனவுகளை
அள்ழுயணைத்து
உதுர்கொடுத்த
முதல்வன் மகுயுரைக்க....
சிலுவைகள் சுமந்தர்ன்பு
பயணம்தொடர்யுறது....
புகுய வாழ்வொன்ன்
சுவடுகளைத்தேடி....!

- த.சரீஷ்

## அப்துல் ரவூப்

காந்தியைப் போல் நீயும் விதிவசத்தால்
பாரத மண்ணில் தோன்றினாயா?
திலீபன் தாய்வழியில் தப்பாமல்
பிறந்தவனே!
கடல்கடந்து வாழ்ந்தும் எங்கள்
கண்ணீரில் கரைந்தாயே!

அல்லாவின் அன்புவழி உன்னை
ஆகர்சித்த காரணந்தான்
எங்கள் அவலக்குரல் உன்னை
அலைக்கழித்து விட்டதுவோ!
தேசம் கடந்திருந்தும் எங்கள்
துயரத்தில் தோய்ந்தவனே
நீ தெய்வத்தின் பிள்ளையடா!

எங்கள் நள்ளிரவு இடப்பெயர்;வு
உன் நெஞ்சை வாட்டியதா?
வாழ்விடம் இழந்துபட்டு
வனவாசம் போன செய்தி
உன் வாசலுக்கும் வந்ததுவா

அயோக்கியச் சூழலில்
ஆத்மா அந்தரிக்கையில்
ஆன்மீகமும் புரட்சி செய்யுமா?
இத்தனை ஈரம் கண்ட உள்ளத்தில்
எவ்விதமாய் தீ பிடித்தது?
எங்கள் ரத்தத்துக்கும் தசைக்கும்
இல்லாத துடிப்பு
உனக்குள் ஏற்பட்டதேன்?
எங்கள் உடற்கலங்களுக்கும்
உன் உணர்கொம்புகளுக்கும்
தொடுப்பிருந்ததின் விந்தையென்ன?
அப்துல் ரவூப்
நீ தெய்வத்தின் பிள்ளையடா?
எங்கள் தாயகம் வாழும்காலம்
உன் நினைவுகள் வாழும்!

ந. ஹேமராஜ், லண்டன்.

## யாழ்...

அதிகாலை சூரியன்
அழுகையாய் உதிக்கிறது
எனது தங்கையவள்
பட்டினியாய் விழிக்கிறாள்
மகனை தொலைத்து ஒரு
தாயவள் பிரமை ஆனாள்
யாழ் இசை இன்று
அவலச் சுவையாய் ரீங்காரமிடுகிறது.

ஒரு பிடி சோறுக்காய்
எனது இமை ஏங்குது
எங்கள் வயிற்றுக்குள்
உணவு இறங்க மறுக்குது
ஏனெனில்
எங்கள் உறவொன்று அங்கே
துடிக்குதய்யா!

தமிழா உன்னை சுமந்த
அந்த அம்மாவின் வயிறும்
அங்கே பட்டினியாய்
ஒரு காலம் அங்கே
பாழை வதைக்குது
மர்மமாய் புதைகுழிக்குள்
புதைக்கும் இனவாதம்
மறவர்படை இல்லையெனில்
உன்னை முழுமையாய்
புதைக்கவும் தயங்குது
இதற்கெல்லாம் தீர்வு என்ன
நீயும் நானும் தான்!

- த.சுதர்சன் (பரிஸ்)

## குடியரசு அமைப்போம் எழுவீர்

பொறுத்தது போதும்
போராட்டம் ஒன்றே
சிறுத்தைகள் நோக்கம் – இன்று
சீறிட்டார் எம் தலைவர்.

கறுத்தது மேகம் – இனி
கொட்டிடும் குண்டு மழை
வெறுக்கவே வைத்திட்டார் – மகிந்தா
வெற்றுப் பேச்சுக்களால்

பொறுப்பு இனி இல்லை
பொங்குவோம் இனி நாம்
விறு விறுப்புடன் – இறங்குவர்
வீரவேங்கைகள் களத்தில்

அறுப்போம் அடிமை விலங்கை
அற்றுப் போகும் சிங்களம்
பொறுத்தோம் போதும்
போராட்டமே ஒர் வழி

சுறுசுறுப்புடனும் இதய
சுத்தியுடனும் தமிழர் நாங்கள்
கூறுகள் அற்றுத் தலைவர்
கூறுவதைக் கூட்டாய் கேட்போம்

சிறுமைத் தனமாய்
சிங்கள அரசு நடந்ததாலே
சீறுவோம் புலிகள் புயலாய்
சிதறுவர் சிங்களர் உறுதி

கறுவாக் காட்டுத் தமிழர்
கதறுவர் சிங்களர்க்காய்
மீறுவோம் அவர் குரலை
மீட்டிட தமிழ் ஈழத்தை

வறுமை – வதைகள் போராட்ட
வரலாற்றில்; உண்டு – ஆனாலும்
குறுகிக் கூனி வாழாமல்
குடியரசு அமைப்போம் எழுவீர்!

- தமிழினி குலேந்திரன்

## நீதியின் கரங்கள்

நீதியின் கரங்கள் எத்தனை நீளம்?
அநீதியை அழிக்கப் பொதுமா தூரம்?
நீதியின் காவலா, ஆண்டவா கூறு!
அநீதியொ தமிழனாய்ப் பிறந்தது என்று.

உரிமையைக் கெட்டால் பயங்கரவாதி.
தமிழன் என்றால் இன்னொரு நீதி.
உணவினை மறுத்து மருந்தினை நிறுத்தி
துவக்கினைக் காட்டுது இலங்கை அரசு.

இரவும் பகலும் வெடி குண்டுகளாலெ
பரவலாய்த் தூவுது குடிசைகள் மெலெ.
குடும்பமாய் அழிகிறோம், தனியனாய்
அழுகிறொம்.
முடிவெது என்று கெட்கிறொம் நாங்கள்.

அன்னையும் அப்பரும் பந்தமும் பாசமும்
வெடியுடன் சிதறியெ முடிந்ததைக் கண்டு
என்ன நாம் செய்து இப்படி நடந்தது
என்றென்று அழுகுது தப்பிய குழந்தைகள்.

பதிலென்ன இதற்குச் சொல்லிவிடு இறைவா
எங்களின் வாழ்க்கையின் கருத்தென்ன?
பிள்ளைகள் வளர இடமில்லை இங்கு.
நீதிக்கு இங்கெ பொருள் என்ன சொல்லு.

- மாதினி சிறீதரன்.

## காதல் மாணவனானேன்

வீட்டிலிருந்து மாணவனாகத்தான்
வெளியே வந்தேன்!
கல்லூரியில் மென்மையான தேவதையின்
கருங்குவளை மலர் ஒப்பும் காதளவோடிய கண்களாலும்!
எனக்கு சுவக்குழியல்லாத அந்த
மெல்லியாளின் கன்னத்துக்குழியும்!
கருமுகில் போன்ற கூந்தலையுடையாளின்
மயக்க வைக்கும் புன்னகையாலும்!
பிறை போன்ற நெற்றியும் கொவ்வை இதழில்
வந்த செம்மொழியாம் தீந்தமிழாலும்!
சங்குக்கு ஒப்பான கழுத்தையும்
வில் போன்று வளையும் இடையிலும்!
பஞ்சு போன்ற பாதங்களில் மாதுவிற்குரிய
நாற்குணங்களை அணிகலனாக தரித்ததாலும்!
அன்னப்பட்சியும் அந்த பெண்ணிடம்தான்
நடையழகு பயின்றதா என ஐயப்படும் நடையழகிலும்!
பிரம்மனே புளகாங்கிதம் அடையும்படியான
அந்த தேவதையின் புல்லாங்குழல் இசை போன்ற
சொல்லழகிலும் மெல்ல மெல்ல காதல் மாணவனானேன்!

- சீ.ஞானவேல்


Tamsons
Accountancy & Tax Consultancy Ltd.




* Accountancy & Auditing
* Business Start up Advice
* Business Plans & Cash Flow Forecasts
* Personal tax Affairs & Self Assesment
* Company Tax Affairs & Company Tax Return (CT600)
* Preparing VAT, Payroll for the Sole Trader
* Partnership & Limited Companies

Company Formation *
Attending VAT & PAYE visits *
CIS Voucher & Construction *
Industry Services *
Tax Investigations *
Solicitors Accounts *
& Accounts Reports *

65, Southlands Road, Bromley, Kent: BR2 9QR
Tel: 020 8313 0800

# அறுவைப் பக்கம்

## Gym ஜினாக்கடி Gym ஜிலாங்கடி



ரொம்ப நாளாவே எனக்கு இந்த ஜிம்முக்கு போகனுங்கரது ஆசை. இதுல வேற நம்ம ஹாலிவுட் ஹீரோஸ் அர்னால்ட், சில்வெஸ்டர் ஸ்டாலோன் படங்களை எல்லாம் பாக்குறப்போ சும்மா ஜிவ்வுன்னு ஜிம்முக்கு போற ஆசை கூரையப் பிச்சிக்கிட்டு கௌம்பும். என்னடாது இப்படி இருக்குறானுவ! நாம என்னிக்கி இப்படி ஆகறதுங்கற ஏக்கம் வேற! நம்மூரு பொண்ணுங்க வேற கோழிக் குஞ்சு கணக்கா இருக்குற ாளுவ. நாம ஆசைப் பட்டு இவனுக சைஸ் ஆகிட்டா நம்மளைப் பார்த்து தெரிச்சி ஓடிருவாளுகளேன்னு வேற தேவையில்லாத ஒரு கவலை அப்போ !

டேய் பாண்டி இந்த வயசிலயே ஜிம்முக்கு போனா உசரமா வளர முடியாதுடான்னு என் கிளாஸ்மேட் அய்யாச்சாமி சொன்னதையே வேதவாக்கா எடுத்துகிட்டு ஜிம்முக்கு போற என் ஆசைய காலேஜ் போற வரைக்கும் ஒத்தி வச்சேன். எங்க ஊரு பைப்பாஸ் ரோடுல நானும் அய்யாச்சாமியும் காலைல எந்திரிச்சு வெள்ளை பனியன் டிரவுசரைப் போட்டுகிட்டு ஓடுவோம். ஜாகிங் போற துன்னாலே வெள்ளை யூனிபார்ம் தான்னு எனக்கு பல தமிழ் சினிமாக்கள் கத்து குடுத்துருக்கில்ல??

காலேஜிலே ஒரு அருமையான ஜிம் இருந்துச்சு !மொதோ வருசம் எட்ட நின்னு பார்த்துகிட்டதோட சரி. போகலை. ராகிங் பயம்தான்! ஒருவழியா ரெண்டாவது வருசம் தான் உள்ளே எட்டிப்பார்த்தேன். ஒவ்வொருத்தனும் ஒரு மார்க்கமாத்தான் இருந்தானுவ. என் சீனியர்ஸ் பல பேரு இருந்ததால நாளும் ஒரு ஓரமா பம்மிகிட்டே இருந்தேன். தனியாப் போனா சரிப்படாதுன்னு நம்ம பயலுவ எவனையாவது கூட்டிகிட்டு போலாமின்னு பார்த்தா ஒரு பயலும் மசிய மாட்டேனுவரானுக. ஒரு வழியா கஷ்டப்பட்டு என் பிரெண்ட் தீபக்கை ஜிம்முக்கு போலாம்டான்னு கூப்புட்டேன். பயபுள்ள அவனும் மசிய மாட்டேனுட்டான். டேய் தீபக்கு இப்படி தேவாங்கு மாதிரி இருந்தால்லாம் நம்ம காலேஜு பொண்ணுக எவளும் மதிக்க மாட்டாளுவடான்னு ஒரு பிட்டைப் போட்டேன். பய கண்ணாடிய பாக்க ஆரம்பிச்சுட்டான். அவ்ளோதான் ஒருவழியா ஜிம்முக்கு ஒரு பார்ட்னரை தேத்திட்டேன்.

அடுத்த நாளுல இருந்து ரெகுலரா ஜிம்முக்கு போக ஆரம்பிச்சாச்சு. ஜிம்முல டம்பிள்ஸ் எடுத்து கொட்டை போட்ட (எத்தனை நாளைக்குத்தான் பழம் தின்னு கொட்டை போடரது?) பல பேரு இருந்தானுவ. நாங்க ஒரு ஓரமா கொஞ்சமா வெய்ட் இருக்குற டம்பிள்ளை தூக்கிகிட்டே அல்லாறும் என்னனென்ன பண்ணுறானு வன்னு நோட்டம் பாத்துகிட்டே இருப்போம். அவனவன் டிசைன் டிசைனா வெய்ட்டைத் தூக்குறானுவ. சில பேர் வெய்ட் தூக்கறதைப்பார்த்தாலே எனக்கு பேதி கௌம்பும். என்னாடாது நம்மளால இந்த கர்லாக் கட்டையவே தூக்க முடியலே இவனுக இப்படி கட்டைய சுத்தி பின்னு பின்னுன்னு பின்னுறானுகளேன்னு ஒரே பொறாமையா இருக்கும். அர்னால்ட் ஆகரது சாதாரண விஷயம் இல்லைங்கரது புரிஞ்சு போச்சு. அர்னால்ட் ஆகறதுக்குள்ள அரைக் கிழவன் ஆயிடனும் போல இருக்கே!!

இதுலவேற ரெண்டு நாள் கழிச்சி கை காலெல்லாம் ஜிம்முக்கு போறதால ஒரே வலி. இந்த தீபக்கு பய இனி ஆவறதில்ல நீயே போய்க்கோன்னு முரண்டு பண்ண ஆரம்பிச்சுட்டான். திரும்பவும் தேவாங்கு பிகருன்னு பயமுறுத்தி வரவச்சேன். இப்படியா ரெகுலரா ஜிம்முக்கு போக ஆரம்பிச்சோம். ஒரு மாசம் போயிருக்கும். அதுக்குள்ள டேய் கட்ஸ் பாரு இங்கே பாரு அங்கே பாருன்னு ரூம் மேட்டுக் கிட்டேல்லாம் ஒரே அலப்பரை விட ஆரம்பிச்சுட்டோம். ஹொஸ்டல்ல அவனவன் எங்க அலப்பரை தாங்க முடியாம பொலம்புவானுக. ஒன்னுமே இல்லாட்டியும் தீபக்கை பார்த்து டேய் சூப்பரா பாடி டெவலப் ஆகுதுடான்னு சொல்லி அவனையும் உற்சாகப்படுத்தினேன்.

இப்படியா ஒரு ரெண்டு மூணு மாசம் போய்கிட்டு இருந்தப்போதான் ஒருநாள் ஜிம் மாஸ்டர் கூப்பிட்டு காலேஜில Mr College போட்டி நடக்கப் போறதாவும் அதுல கலந்துக்க பேரு கொடுக்கறீங்களான்னு கேட்டாரு. இவருக்கு என்ன தெரியும் நம்ம bodyயப் பத்தி? T-shirt டைக் கழட்டினாதான தெரியும் நம்ம வண்டவாளத்தைப் பத்தி ! சிரிச்சி மழுப்பிட்டே வந்துட்டேன். இது நடந்து ரெண்டு வாரம் இருக்கும். நான் மறந்தே போய்ட்டேன்.

ஒருநாள் ஜிம் முடிச்சிட்டு நானும் தீபக்கும் வந்துகிட்டு இருந்தப்போதான் ஜிம் மாஸ்டர் என்னைய உடனே கூட்டிட்டு வரச்சொன்னதா என் யூனியர் ஒருத்தன் வந்து சொன்னான். என்னாடாது ஜிம்முல அவரு இல்லையேன்னு கேட்டதுக்கு இன்னிக்கி Mr College போட்டிக்காக அவரு ஆடிட்டோரியத்துல இருக்கற தாகவும் பசங்க கொஞ்சம் பேருதான் காம்படிஷனுக்கு பேரு கொடுத்திருக்கறதாகவும் சொன்னான்.

எனக்கு ஒரே திகிலாகிடுச்சு. போச்சுடா நாமதான் காம்படிஷனுக்கு வரலைன்னு சொன்னமே இவரு நம்மளை விட மாடீங்கறாரே ! என் மேல இவ்ளோ நம்பிக்கையா? என்னாடாது பாண்டிக்கு வந்த சேதனைன்னு பல யோசனையிலே நானும் தீபக்கும் போனோம். ஆடிட்டோரியம் வாசல்லயே ஜிம் மாஸ்ட்டர் காத்துகிட்டு இருந்தார். என்னைய பார்த்தோடனயே மாஸ்டர் மொகத்துலா அவ்ளோ பிரகாசம். வா வா பாண்டி! உனக்காதத்தான் காத்துகிட்டு இருக்கோம். பசங்கதான் உன்னைய suggest பண்ணுனானுங்க! போ உள்ள !? கழுத்தை பிடிச்சு தள்ளாத குறைதான்.

எங்கூட வந்த தீபக்க பார்த்து நீ வேணா போப்பான்னு சொல்லிட்டாரு. பய மொகத்தைப் பார்க்கனுமே! ஆச்சரியம் அதிர்ச்சி! சரி சரி தீபக்கு! பொது வாழ்க்கையிலே இதெல்லாம் சகஜம்டான்னு பார்வையிலேயே சொல்லி அனுப்பிச்சேன். காம்படிஷன் இன்னும் தொடங்கலே! மேடைக்கு பக்கத்துல இருக்கர ரூமுக்கு உடனே போகச்சொன்னாரு மாஸ்டரு. உள்ள போனா எங்க சீனியருக. அல்லாரும் சும்மா தீவனம் தின்னு வளர்ந்த ப்ராய்லர் சிக்கன் மாதிரி சும்மா கும்முன்னு ஜட்டியோட இருக்கரானுவ. நான் பரிதாபமா நாட்டுக்கோழிகணக்காவுள்ள இருக்கேன்! இவனுககூட எங்கடா மோதறது? கவலையோட போனேன்.

நம்மளப் பார்த்து புட்டான் என் சீனியர் வேலு. 'வாடா பாண்டி உனக்காகத்தான் எல்லாரும் வெய்ட்டிங் !சீக்கிரம் அங்க இருக்கு பாரு மசாஜ் ஆயில் எடுத்துக்கோ! ஓ இது வேறையா ?!! இத தடவிகிட்டு தான் நிக்கனுமாம்ல? அப்போதான் சும்ம பள பளன்னு பாடி தெரியும் போல! ஜட்டியோட எப்படி நிக்கறது? பொண்ணுக யாரும் இருக்கக் கூடாது கடவுளேன்னு வேண்டிகிட்டே எண்ணெய் பாட்டிலை எடுத்தேன். சீக்கிரம்டா என்ன யோசனை வந்து எண்ணெயா எல்லாருக்கும் தடவி வுடு! காம்படிஷன் தொடங்கப் போவுது. இந்த பாரு கொஞ்சம் தாராளமாவே எண்ணெய தடவி வுடுடா அப்போதான் சும்மா பள பளன்னு இருக்கும்?. அவன் பாட்டுக்கு சொல்லிகிட்டே போறான் . அடங்கொப்பொற ானே! இதுக்குத்தான் கூப்பிட்டியளா? இதென்னடாது நாறப் பொளப்புன்னு மனசுகுள்ள சொல்லிகிட்டாலும் வெளிய சொல்ல முடியுமா? சீனியராச்சே! விதியேன்னு எண்ணெய்ய தேச்சு வுட்டேன்.

இதுக்குள்ளயும் நம்ம பய தீபக்கு போயி ஹாஸ்டல்ல இருக்கற நம்ம பசங்க கிட்டேயெல்லாம் 'பாண்டி Mr College காம்படிஷன்ல கலந்துகறாண்டா வாங்க'ன்னு அல்லாரையும் சவுண்டுவிட்டு வந்துடான். என் நேரமை இப்படியா ஆகனும்? அவனுக முன்னால எல்லாரும் உடம்பு முழுசும் எண்ணெயோட நிக்கா நான் மட்டும் உள்ளங்க கையிலே மட்டும் எண்ணெய்யோட ! இந்த எண்ணெய் தேய்ச்ச விவகாரம் எல்லாருக்கும் தெரிஞ்சு போயிடுச்சு. பசங்க இதனை நாள் நான் அவனுங்களை படுத்துனதுக்கு சேர்த்து வச்சு என்னைய ஓட்டுனா ஓட்டுல கொஞ்ச நாளைக்கு ஜிம் பக்கமே எட்டிப்பார்க்கலையே நான்.

- ஜொள்ளுப்பாண்டி

## கவர்ச்சி அன்ட் ஆபாசம்



ரொம்ப காலமா இந்த கவர்ச்சி ஆபாசம்ன்னு நம்ம தமிழ் சினிமா டைரட்டருங்க ஜல்லியடிச்சுகிட்டு இருக்காங்க. அட அப்படி கவர்ச்சின்னா என்ன ஆபாசம்னா என்னா அப்படீங்கறது தெரிஞ்சுகாட்டி எனக்குத்தலையே வெடிச்சிடும் போல இருக்குங்க. சரி இனி அவரதில்லை! ஆராய்ச்சி பண்ணி கண்டு பிடிச்சிடவேண்டியதுதான்னு நம்ம பேட்டை R & D Center ல நம்ம பசங்க கிட்ட கொடுத்து ஆராயுச்சி பண்ணச் சொல்லி அந்த ஆராய்ச்சியோட முடிவுகளை கொடுத்திருக்கறேங்க. எல்லாரும் படிச்சி உங்க அறிவை வளர்த்துகணுங்கரதுதான் என்னோட ஆசைங்கரது உங்களுக்கு தெரியாதா என்ன?? இனிமேலாச்சும் கவர்ச்சின்னா என்ன ஆபாசம்னா என்னான்னு தெரிஞ்சுகிட்டு ஜென்மசாபல்யம் அடைஞ்சுக்குங்க மக்களே !!

1. முண்டா பனியனை கிழித்து விட்டு கொண்டு நமீதா போட்டு கொள்வது - *கவர்ச்சி*

முண்டா பனியனை அதே நமீதா 10 வருடம் கழித்து போட்டு கொள்வது - *ஆபாசம்*

2. பொண்டாட்டி ஊரில் இல்லாத போது Fashion TVல் மிட்நைட் ஹாட்டில் தெரிவது - *கவர்ச்சி*

பொண்டாட்டி வீட்டில் இருக்கும் போது Fashion TV வந்தாலே சொல்வது - *ஆபாசம்*

3. போனில் காதலியுடன் A ஜோக் சொல்லி சிரிப்பது - *கவர்ச்சி*

போனில் காதலிக்கு A ஜோக் சொல்லு வதை அம்மா கேட்டு விடுவது - *ஆபாசம்*

4. பக்கத்து வீட்டு ஆவின் பிகர் தாவணி கட்டி கொள்ளும் போது தோன்றுவது - *கவர்ச்சி*

அதே தாவணியை தேஜாஸ்ரீ சினிமா வில் பூணுல் போல போட்டுக் கொள்வது - *ஆபாசம்*

5. கழன்று விழுகிற ரேஞ்சில் ஜீன்ஸ் அணிந்து செல்வது - *கவர்ச்சி*

அதே ஜீன்ஸ் நெசமாலுமே பொது இடத்தில் கழன்று விழுந்தால் ஏற்படுவது - *ஆபாசம்*

6. நமீதா என்றாலே ஆண்கள் உணர்வது - *கவர்ச்சி*

நமீதா என்றாலே பெண்கள் உணர்வது - *ஆபாசம்*

7. டைட் டிசர்ட் பேண்ட் காதலி போட்டுக் கொண்டு வந்தால் காதலன் சொல்வது - *கவர்ச்சி*

டைட் டிசர்ட் பேண்ட் மனைவி போட்டுக் கொண்டு வந்தால் கணவன் சொல்வது. - *ஆபாசம்*

- ஜொள்ளுப்பேட்டை.

### காணவில்லை சேர்!

கணவன் : சேர் ! என்னோட மனைவியை காணேலை!!!

இன்ஸ்பெக்டர் : எப்ப இருந்து காணேலை?

கணவன் : ரெண்டு வருஷமா காணேலை.

இன்ஸ்பெக்டர் : இவ்வளவு நாளா என்னய்யா செய்தனீர்?

கணவன் : சந்தோஷத்துல நான் போனதே தெரியேலை சேர்!



# சினிமா

## சினித்துளி

### ஜேம்ஸ்போண்ட்



4 ஆண்டு இடைவெளிக்கு பின் கடந்த 17-ந் தேதி வெளியான கஸினோ றோயல் ஜேம்ஸ் பாண்ட் படம் திரையிடப்பட்ட 3 நாளில் ரூ. 400 கோடி வசூலாக்கியுள்ளது. எழுத்தாளர் பிளமிங் 1953ல் தனது நாவலில் ஜேம்ஸ்பாண்ட் பாத்திரத்தை புகுத்தினார். ஜேம்ஸ்பாண்ட் கதைகளுக்கு உலகெங்கும் வரவேற்பு அதிகரிக்க அந்த கேரக்டர் சினிமாவில் புகுத்தப்பட்டது. முதல் ஜேம்ஸ்பாண்ட் படம் டாக்டர் நோ ஜேம்ஸ்பாண்ட் வேடத்தில் சீன்கானரி நடித்தார். இதுவரை 20 ஜேம்ஸ்பாண்ட் படங்கள் வெளியாகியுள்ளது. இவற்றில் சீன்கானரி ஜார்ஜ் வாசன் பை, ரோஜர்மூர், டி மோத்திடால்டன், தியர்ஸ் பிரஸ்னன் ஆகிய 5 பேர் ஜேம்ஸ்பாண்ட் வேடமேற்று நடித்துள்ளனர்.

### ஜீவா



ஜீவா நயன்தாரா நடித்த ஈ படம் தீபாவளிக்கு ரிலீசானது. இந்த படத்துக்கு கூடுதல் பெட்டிகள் கேட்டு வினியோக தரப்பில் வற்புறுத்தப்படுகிறது. இதையடுத்து கூடுதலாக 25 பிரிண்ட்கள் போட தயாரிப்பாளர் முடிவு செய்துள்ளார். தேசிய விருதுக்கு ஈ படத்தை அனுப்பப்போவதாகவும் அவர் கூறினார். ஈ படத்தில் வித்தியாசமான கேரக்டர் பண்ணியதற்காக பலதரப்பில் இருந்தும் பாராட்டுகள் குவிவதாக ஜீவா தெரிவித்தார். திரையுலகில் தனக்கு திருப்புமுனையை ஈ படம் ஏற்படுத்தியதாகவும் கூறினார். ஈ படத்தில் வேறுபட்ட கதாபாத்திரத்தில் நடித்து பெரிய 10 நடிகர்கள் பட்டியலில் ஜீவா இடம்பிடித்துள்ளார் என்று டைரக்டர் ஜனநாதன் கூறினார். ஈ படம் தெலுங்கிலும் டப்பிங் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

### அசின்



கமல், விஜய், அஜீத் போன்ற பெரிய நடிகர்களுடன் நடிக்கிறேன். இது என் அதிர்ஷ்டம், கடவுள் ஆசீர்வாதமும் இருக்கு. அஜீத்துடன் ஆழ்வார் படத்தில் ஜாலியா நடிக்கிறேன். அஜீத்துக்கு நான் ரோபோன்னு பெயர் வெச்சிருக்கேன். பெயருக்கேத்த மாதிரி விறுவிறுப்பாகவும், வேகமாகவும் நடிக்கிறோம். வரலாறு படத்தைப்போல் ஆழ்வார் படத்திலும் எங்கள் ஜோடிப்பொருத்தம் சூப்பர். விஜயுடன் போக்கிரி படம் பண்ணுறேன். ஆடல் பாடல்னு கலக்கலா சூட்டிங் நடக்குது. விஜய் வழக்கம்போல் ஜாலியா நடிக்கிறார். போக்கிரி தெலுங்கில் ஏற்கனவே ரிலீசாகி இருக்கு. அதை அப்படியே எடுக்காமல் கதையில் சில மாறுதல்கள் செய்து எடுக்கிறார்கள். சொல்வது அசின்

### குற்றப் பத்திரிகை

பத்து வருடங்கள் இருக்குமா? அதற்கு மேலேயே இருக்கும். செல்வமணி இயக்கிய குற்றப்பத்திரிகை திரைப்படம் தடைசெய்யப்பட்டதை இன்னும் சில வருடங்கள் கழிந்தால் பொன் விழாவாக கொண்டாடலாம். ராஜீவ் காந்தி கொலையைக் குற்றப்பத்திரிகை என்ற பெயரில் எடுத்து, சென்சாரால் தடை செய்யப்பட்டு பல வருடங்கள் ஆகின்றன. இதை எதிர்த்து படத்தின் தயாரிப்பாளர் நீதிமன்றம் சென்றதற்கான பலன் இப்போதுதான் தெரியத் தொடங்கியிருக்கிறது. நேற்று முன்தினம் நீதிபதிகள், படத்தில் விடுதலை புலிகளை ஆதரிக்கும் காட்சிகள் எதுவும் இல்லையென்று கூறியதுடன், இருக்கிறதென்றால் எந்தெந்த காட்சிகள் என விளக்கமளிக்க சென்சாருக்கு உத்தரவிட்டுள்ளனர்.

## சிறுதுளி!

விக்ரம் பீமா படத்தில் நடித்து வருகிறார். இப்படம் முடிந்ததும் அடுத்து கலைப்புலி தாணு தயாரிக்கும் படத்தில் நடிக்கிறார். சுசி கணேசன் திருட்டுபயலே படத்துக்கு பின் இந்த படத்தை இயக்குகிறார். பீமா படத்தை ஏ.எம்.ரத்னம் தயாரிப்பதாக செய்தி வெளியானது. பிறகு அப்படம் லிங்குசாமி கைக்கு போனதாக சொல்லப் பட்டது. இப்போது மீண்டும் ஏ.எம்.ரத்னமே தயாரிக்கிறார்.

❖ ❖ ❖

இயக்குனர் சங்கர் என்றாலே பிரமாண் டத்துக்கு குறைவு இருக்காது. சிவாஜி படத்துக்காக அவர் இதுவரை இல்லாத அளவுக்கு காட்சிக்கு காட்சி இரட்டிப்பு மடங்கு பிரமாண்டத்தை கொண்டு வந்து உள்ளாராம். குறிப்பாக ரஜினி ஆடும் காட்சிகள் பிரமாண்டத்தின், பிரமிப்பின் உச்சியைத் தொடும் அளவுக்கு படமாக்கப் பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

❖ ❖ ❖

சென்சார் போர்டுக்கு திடீர் உத்தரவு ஒன்று போயிருக்கிறது. அதாவது சினிமாவில் சிகரெட்டுக்கு ஒட்டுமொத்த தடை என்பதை, பெண்களுக்கு மட்டும் என சுருக்கியிருக்கிறார்கள் அரசியல்வாதிகள். சினிமாவில் பெண்கள் சிகரெட் பிடிக்கும் காட்சியை தடை செய்யவேண்டும், அனுமதிக்கக்கூடாது என சென்சார் போர்டுக்கு சுகாதாரத் துறையிடமிருந்து கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

❖ ❖ ❖

கமலின் மூத்த மகள் ஸ்ருதி கமல்ஹாசன். பெயருக்கேற்ப ஸ்ருதி பிசகாமல் பாடக் கூடியவர். 'தசாவதாரம்' படத்தில் மல்லிகா ஷெராவத்துக்கு பாடல் ஒன்று உள்ளது. இந்தப் பாடலை ஸ்ருதி கமல்ஹாசன் பாடியிருக்கிறார். இதற்காக அமெரிக்கா விலிருந்து மும்பை வந்து மும்பையில் ஹிமேஷ் ரேஷ்மியா இசையில் பாடலை பாடி ரெக்கோர்டிங் முடிந்ததும் அமெரிக்கா திரும்பியிருக்கிறார் ஸ்ருதி.

❖ ❖ ❖

சோனியா அகர்வால் ஜோடி டிசம்பர் பதினைந்து இல்லறத்தில் இணைகிறது. சென்னை ராஜா முத்தையா திருமண மண்டபத்தில் செல்வராகவன் சோனியா அகர்வால் கழுத்தில் தாலி கட்டி மனைவி ஆக்கிக்கொள்கிறார். திருமணத்தை நடத்தி வைக்கிறார் ரஜினி. இதனால் 'சிவாஜி' படப்பிடிப்புக்கு அன்று ஒரு நாள் மட்டும் லீவ் எடுக்கயிருக்கிறார் ரஜினி.

❖ ❖ ❖

கர்ப்பகிரகம் இல்லாத கோயிலும், கவர்ச்சி இல்லாத மல்லிகாஷெராவத்திடமும் என்ன விசேஷம் இருக்க முடியும்? ஆனால், அப்படியொரு புரட்சியை செய்திருக்கிறாராம் மணிரத்னம். வரட்டும் பார்ப்போம்.



## "ஷ்ரேயா"

*மழை சினிப்பிரவேசம் புதியால்லவா பற்றி!*

மழை என்னுடைய முதலப் படம் அல்ல. நான் ஏற்கனவே தெலுங்குப் படங்களில் நடித்துக் கொண்டிருந்தபோதுதான் மழைக்கான வாய்ப்புக் கிடைத்தது.

*தென்னியந்தியக் கலைஞர்கள் பற்றி!*

மிகவும் அடக்கமானவர்கள். தொழிலில் மிகவும் கவனமாக அக்கறையுடன் வேலை செய்வார்கள் அவர்களிடம் படிக்க நிறையவேஇருக்கிறது. அவர்களுடன் வேலை செய்வது குறித்து மிகவும் மகிழ்ச்சி

*சிவாஜியில் என்ன நடக்கிறது எப்போது வரும்?*

சிவாஜியில் எவ்வளோ நடக்கிறது. தமிழ் நாட்டின் முக்கியமான ஒரு படம். இந்தியாவிற்கும் ஓர் முக்கிய படம். பெரும் நடிகர் பெரும் இயக்குனர் பெரும் இசையமைப்பாளர். சேர்ந்து பணியாற்றும் முதல்ப்படம் சிவாஜி. விரைவில் வருகிறது.

*சிவாஜியில் நீங்கள் யார்?*

அப்படியெல்லாம் அதனைச் சொல்லிவிட முடியாது. சிவாஜில் நான் ஓர் தமிழ்பெண் அவ்வளவுதான் சொல்ல முடியும். அதைவிட ஒன்றையும் செய்துவிட முடியாது. மிகுதியை திரையில்த்தான் பார்க்கவேண்டும்

*சுப்பர்ஸ்டார் ரஜினி பற்றி!*

அவர் மிகவும் அடக்கமானவர். அவர் இருக்கும் நிலையில் அவர் பழகும் விதம் ஆச்சரியமாக இருக்கும். அவ்வளவு எளிமையானவர். அப்படி இருக்கும் அவரிடம் எத்தனை விதமான திறமைகள் ஸ்ரைல்கள். அவர் வசனங்கள் பேசுகிற முறையே ஒரு தனி. எந்த ஒரு தலைப்பினையும் பேசலாம் அவ்வளவு அறிந்து வைத்திருக்கிறார்.

*அடுத்து வேறு என்ன படங்களில் நடிக்கிறீர்கள்?*

தனுசுடன் திருவிளையாடலில் நடித்தேன் அது இன்னும் ஒரிரு வாரங்களில் வெளிவர இருக்கிறது. அதைவிட தமிழில் விஜயுடனும் இந்தியில் மகேஷ்பட்டினது படத்திலும் நடிக்க உள்ளேன். விஜயுடன் நடிக்கும் படத்திற்கு இசைப்புயல் ஏ.ஆர். ரகுமானே இசை அமைக்கிறார்.

*நடிகர்களுடன் ஏதாவது கிசுகிசுக்கள்?*

நான் தொழிலுக்கும் தனிப்பட்ட வாழ்க்கைக்கும் என வரையறை வைத்திருக்கிறேன். தொழில் தொழிலாக இருக்கவேண்டும். இருக்கும் ஆகவே கிசுகிசுக்களுக்கு இடமில்லை அனைவரும் நண்பர்களே.

- விஸ்வா





NAG & CO
SOLICITORS

Tel: 020 7737 1211 | Fax: 020 7737 0809
Unit 3 Holles House, Overton Road, Myattsfield Road South, London SW9 7JN
Nearest Underground - Brixton Station on Victoria Line and Oval Station on Northern Line

- CRIME
- CONVEYANCING
- MATRIMONIAL
- IMMIGRATION
- TRAFFIC MATTERS
- LANDLORD & TENANTS
- POLICE STATION MATTERS
- EMPLOYMENT MATTERS
- WORK PERMITS

# சினிமா

## என்னைச் செருப்பால அடிக்கவும்



என்னைச் செருப்பால் அடிக்கவும் ஏனெனில் நான் இன்று வல்லவன் படம் பார்த்தேன். என்று கொழுவி என்பவரின் இணையப் பக்கத்தில் எழுதப்பட்ட வசனத்திற்குக் கிடைத்த பின்னூட்டங்கள் வருமாறு

யாரோ ஒருவர் : கொழுவி நீங்கள் பரவா இல்லை... தனியாகப் போனீர்களா என்று தெரியவில்லை. நான் என் மனைவியுடன் போய் சரியாக திட்டு வாங்கிக்கொண்டு வந்தேன். இடையில் மூன்று தரம் படம் முடிந்து விட்டது என்றே நான் எழுந்து விட்டேன். பயல் ரொம்ப அவசரப்படுகிறான்.... படத்தில் கோர்வையே இல்லை. யாரும் படம் பார்க்கலைன்னா... பணம் மிச்சம்.

டிசே தமிழன்: அதுக்கு ரீமா சென் தான் வரவேண்டும் :-). பி.கு: நான் இன்னும் உந்தப் படத்தைப் பார்க்கவில்லை.

துளசி கோபால் : எனக்கு இன்னும் அடிக்கச் சான்ஸ் வரலை:-)

யாரோ ஒருவர் : லூசு பெண்ணே... லூசு பெண்ணே

யாரோ ஒருவர்: லூசுப்பெண்ணே லூசுப் பெண்ணே என்று சொன்னதன் மூலம் கொழுவியை ஒரு பெண்ணென்று கண்டுணர்ந்து வெளிப்படுத்திய அனாமதேயத்துக்கு நன்றி.

கானா பிரபா : லூசுப் பையா உமக்கு வேற படம் கிடைக்கேல்லையே என்னட்டை கேட்ட நல்ல மலையாளப் படம் தந்திருப்பனே? மலையாளப் படம் எண்டோண்ணை வேற படங்களை யோசிக்காதையும் காணும்.

நாகை சிவா: ஹி... ஹி... எல்லோரும் இதேயே சொல்லுறீங்க.... அப்படி என்ன மாட்டரு இருக்குனு அந்த படத்தை நான் பார்க்க முடிவு பண்ணிட்டேன். பார்த்துட்டு வந்து முடிவு பண்ணலாம்-)

தருமபுரி பார்த்தவன்: உங்களுக்கே செருப்பா? அப்போ எனக்கு? : (

ஆவி அண்ணாச்சி: அந்த படத்தை நான் பார்க்க முடிவு பண்ணிட்டேன் இவர் சொந்த செல்வில் சூனியம் வைத்துக் கொள்கிறார். பரிதாபப்படுவதைத் தவிர வேறென்ன செய்வது!

செருப்புக்கடை ஓனர் : செருப்பின் அளவை மின்னஞ்சலில் அனுப்பவும்.

யாரோ ஒருவர்: என்ன உள்ளது அப்படத்தில், நான் பார்க்கவில்லை

நாடோடி : யாருடைய செருப்பால?..

யாரோ ஒருவர்: ஆகா பார்த்ததற்கே செருப்பால அடிக்கனும் எண்டா படத்தில நடிச்சவருக்கு ஐயோ நீர் சரியான கொழுவிதான்

யாரோ ஒருவர்: கொழுவி கொஞ்சம் பொறுங்கள்! என்னை அடித்துக் கொண்டு பிறகு தருகிறேன்! அந்த கருமத்தை நானும் பார்த்தேன்!

யாரோ ஒருவர்: ஐயா கொழுவி, தங்கள் நையாண்டியை மிகவும் ரசித்தேன் :))) நன்றி வல்லவன் பக்கம் தலை காட்ட மாட்டேன்?-)

யாரோ ஒருவர்: சிம்புவின் தந்தை வீராசாமி எண்டு ஒரு படம் எடுக்கிறாராம். எப்ப வரும்.?

யாரோ ஒருவர்: படம் பார்த்த நீங்களே செருப்பால உங்களுக்கு அடிக்கப் போறீங்களெண்டா, அந்தப்படத்தை எடுத்த அவரை எதால அடிக்கிறது.

யாரோ ஒருவர்: கொழுவி உமது பதிவுக்கு வந்த என்னை என்னத்தால அடிக்கச்சொல்லுறீர்? உம்மை அடித்த செருப்பை எடுத்து என்னை அடிக்கச் சொல்லுகிறீரா? இதுக்கு இவ்வளவு பின்னூட்டம் வேற::))

இருமுறை பார்த்தவன்: என்னை இரண்டு முறை செருப்பால் அடிக்கவும்.

ஈழநாதன்: செருப்பை கேவலமான குறியீட்டுப் பொருளாகப் பயன்படுத்தியமைக்காக கொழுவியைக் கண்டிக்கிறேன்

சுரேஷ்: என்னை மாதிரி விமர்சனம் எழுத கத்துக்கங்க.. செருப்படி தேவைப்படாது-) கொழுவி உமது பதிவுக்கு வந்த என்னை என்னத்தால அடிக்கச்சொல்லுறீர்? அவைய வைக்கும் தாங்கள் தங்களை எதைக்கொண்டு அடிக்கலாம் எண்டதை தெரிந்தெடுக்கிற உரிமை இருக்கிறது. ஆகவே நீங்களே முடிவு எடுங்கோ?

கொட்டாங்கச்சி: காசு கொடுத்துப் பார்த்தீங்களா? அப்படின்னா என் சார்பா ஒரு அடி போட்டுக்குங்க. ஓ.சில பார்த்தீங்கன்னா பாவன் பொழச்சி போங்க

கொழுவி: "செருப்பை கேவலமான குறியீட்டுப் பொருளாகப் பயன்படுத்தியமைக்காக கொழுவியைக் கண்டிக்கிறேன்" பெரிய கரைச்சலப்பா.. (ஈழநாதனுக்கு)-



விமர்சனம்

## அவள் அப்படித்தான்

இது ஒரு வகையான பாலசந்தர் வகைப் படமே. ஆனால் கிறுக்குத்தனமாக உளரும் கதாநாயகி இல்லை இதில், லூசுத்தனமான விடுகதை போடும் கதாப்பாத்திரங்கள் இல்லை. இரத்தமும் சதையுமாக நம்மிடையே இருக்கும், நாமாக இருக்கும் கதாபாத்திரங்களே இவை. இவன் நல்லவன், இவன் கெட்டவன் என தீர்ப்புகள் இல்லை,

இரு கதாநாயகிகள் ஒருவனை காதலித்து, கதாநாயகன் அதில் ஒருத்தியை திருமணம் செய்யும்போது, இன்னொரு கதாநாயகி, இன்னொருவனை திருமணம் செய்தால், கற்பு போய்விடும் என, அந்த கதாநாயகியை சாகடிக்கும் தமிழ் சினிமா சூழலில், இந்த படத்தில், ஏற்கனவே இருவரால் காதலிக்கப் பட்டு, அதில் ஒருவனிடம் கற்பையும் பறிகொடுத்து அதனையும் மிகவும் மனத் தெளிச்சியுடனே செய்தவள், ஒரு கள்ளக் காதலனைக் கொண்டவளின் மகள், இந்த கதாநாயகி என்பதே ஒரு புதுமை.

'எனக்கு ஒரு பசி, என்னைப் பார்க்கும் ஆண்களுக்கு ஒரு பசி' என ஒரு காபரே ஆட்டக்காரி சொல்வதுமுதல் ஆரம்பிக்கிறது படத்தில் சாட்டையடி, உங்களுக்கும் எனக்கும். கதாநாயகன் பெண்களை பற்றி குறும்படம் எடுக்க கோவையிருந்து சென்னை வருகிறான். பெண்ணுரிமை பேசுகிறான். கதாநாயகியின் சோகங்களை பரிவுடனே கேட்டுக்கொள்கிறான். அவளின் 'கற்பு' கதை தெரிந்து அவளை காதலிப்பதாக 'க்ளைமாக்'சில், அவளிடமில்லை, அவள் தோழியிடம் சொல்லி தன் புனித பிம்பத்தை காத்துக்கொண்டு, திருமணம் செய்வதோ, 'பெண்ணுரிமை' பேசாத, ஒரு அடக்கமான பெண்ணை.

கதாநாயகி, போலி வேஷங்களை சாட்டையடி அடிப்பவள். சோஷியல் வேக்கரை பேட்டி காண செல்லும்போது, வேறு எந்த மேக்-அப்பும் வேண்டாம், சோஷியல் வேக்கர் என்னும் மேக்-அப்பே போதும் என்று சொல்பவள், ஆனால் தன் பெற்றோர் பாரிஸில் உள்ளனர் என போலி வேடம் போட எத்தளிப்பவள். சமூகத்திற்காக கணவன் மனைவியாக இருக்கும் பெற்றோர்களாலும், தன்னை காதலித்து சீரழித்தவன் தன்னையே தங்கை எனக்கூறி உறவுகளை கொச்சைப்படுத்துவதாக வாதம் செய்பவள், உறவுகளை வெறுப்பதாக கூறுபவள், உறவுக்காக, அன்புக்காக ஏங்கி ஒருமுறை இல்லை, இரு முறை ஏமாந்தாலும் மூன்றாம் முறையும் காதலிக்கிறாள் ஏமாறுவதற்காகவே.

மூன்றாவதாக ஒரு கேரக்டர். கதாநாயகன் கமலின் நண்பனாக, கதநாயகி ப்ரியாவின் முதலாளியாக, ரஜினிகாந்த். நம்மில் பலரின் பிம்பம். பெண்களை போகப்பொருளாக எண்ணுபவன். தன் சொந்தக்காலில் நிற்கலாம் என பெண்கள் நினைப்பதையே பாவம் என நினைக்கும் ஆச்சாரியான்(?) அவன். சந்தர்ப்பம் கிடைக்கும்போது, கதாநாகியிடம் கலவிக்கும் ஆயத்தமாகிறான். அவள் அறைந்தவுடன், வில்ல வசனம் பேசவில்லை... அந்த இடத்தை விட்டே ஓடிவிடுகிறான். வாய்ப்பு கிடைக்கும் வரை நல்லவன் நம்மைப்போலவே.

கதாநாயகின் இரண்டாவது காதலன். ரவீந்தர். நல்லவன். பக்திமான். கதநாயகியுடனான உறவுக்குப்பின் தவறு செய்துவிட்டதாக அழுகிறான். தவறை தெரிந்தே செய்த பின், அதனை மறைத்து, பின்னர் உணராமல் செய்து விட்டதாக பாவமன்னிப்பு கேடபவர் எத்தனை பேர். ஆனால் இச்சை முடிந்தவுடன் தன் வேஷம் கலைந்து தன் காதலியை சகோதரி என்கிறான்.

பக்திமான்களுக்கே உரிய புத்தி. குரூரம். வெளிவேஷம். கிளைமாக்சில் நாயகன் மனைவியிடம் (சரிதா?), நாயகி 'பெண்கள் சுதந்திரத்தைப் பற்றி என்ன நினைக்கிறாய்' எனக்கேட்க, அவள் 'எனக்கு அதைப் பற்றி ஒன்றும் தெரியாதே' என 'அதனால்தான் நீ சந்தோஷமாய் இருக்கிறாய்' என்பாள் கதாநாயகி. அவள் மீண்டும் இறந்து போனாள், அவள் இறப்பாள், பிறப்பாள், இறப்பாள். . . அவள் அப்படிதான்? என்ற பின் குரலோடு படம் முடியும். இந்த படத்தில் எந்த தீர்ப்பும் சொல்லப் படவில்லை . யாரும் திருந்தவில்லை. எனவே அவள் மட்டுமில்லை அவர்கள் எல்லோருமே அப்படித்தான். இயக்குனர் ருத்ரையா மனித உறவுகள், எண்ணங்களோடு ஒரு காவியமே உருவாக்கி இருக்கிறார். பாலசந்தர் போன்றவர்கள் அளவுக்கு மீறி போற்றப்படும் சூழலில், ருத்ரையா போன்றோர் வாய்ப் பில்லாமல் தவிப்பது தமிழ் சினிமாவுக்கு ஒரு சாபக்கேடு. குத்தாட்ட கூமுட்டைகளிடமிருந்தும் பஞ்ச் வசன பரதேசிகளிடமிருந்தும் தமிழ் சினிமாவுக்கு எப்போது விடுதலையோ ?

- யாழ்

Experts in Immigration, Asylum, Entry Clearance and Immigration Appeals

We are also specialised in Conveyancing, Commercial Leases and Litigation

Our Favourite Subjects are Landlords and tenants law and Licensing Matters

Principal:
Suramya Krishnakumaran LLM
Loshasan Thevarasan Solicitor

Regulated by the Law Society

SK Solicitors
Administratiors of Oaths



Unit 405, 4th Floor, 71 Bondway, London SW8 1SQ
Tel: 020 7840 0505 / Fax: 020 7840 0505
Mob: 07985 189 290 / 07747 708 213

## LETTINGS & MANAGEMENT

Clockwise Property Services

- Free Valuation
- Competitive Rates
- Rent Guaranteed scheme
- Legal Documentation
- Rent Collection

# CLOCKWISE PROPERTY SERVICES

Residential Lettings | Management | Mortgage | Insurance

## FINANCIAL SERVICES

*Mortgages,*
- Commercial & Residential
- Re-mortage
- Buy To Let
- Secured Loans
- Business Loans
- Insurance



**£499**

**BROKER FEE**

(subject to availability)

Email: clockwiseproperty@gmail.com
Web: www.clockwiseproperty.co.uk

Morden, Surrey
**01784246300 / 07961981278**

# "காருக்கு டயர் அழகு"

புதிய பழைய டயர்கள் மாற்றிக் கொடுக்கப்படும் மற்றும் கார் சேர்விஸ் உட்பட சகல கார் திருத்த வேலைகளுக்கும் எங்களை நாடுங்கள்

- Wheel Balancing
- Wheel Alignment
- New & Second Hand Rims
- Shock Absorbers
- Batteries
- Exhaust
- Brakes
- Services
- MOT Work

Open 7 Days a Week
Mon - Sat 8:30am - 7pm
Sun 9:00am - 6pm

**Mini bus for hire - Wales Visit**

New & Part - Worn Tyres, Sold and Fitted
Punctures Repaired while you wait

British & Foreign Cars

Continental · GOODYEAR · MICHELIN · PIRELLI · DUNLOP

# TYRE CHECK

*Auto Spares- Accessories*

368 High Street North, Eastham, E12 6PH
Tel: 0208 586 08 86, Fax: 0208 470 47 45
Mob: 07956 353 774, T Suresh@ tiscali. co.uk

# JANANY

## ஓட்டுனர் பயிற்சிப்பள்ளி

**School of Motoring**

A Driving School With a Difference

அனைத்துவிதமான வாகனங்களுக்குரிய
(Car, Motorbike, Bus & Lorry)
தியரி படிப்பதற்கும் மிகவிரைவில்
எளிதாக சாரதி அனுமதிப்பத்திரம்
பெறுவதற்கும் தொடர்புகொள்ளுங்கள்.

அரச அங்கீகாரம் பெற்ற
ஓட்டுனர் பயிற்சிப்பள்ளி

**Morden, Tooting**
**Wimbledon**
Suthan
07904817539

**Southall**
**Hayes**
B.Gobu
07908665633

**Lewisham**
S.Balakrishnan
07983336020

இ பஸ், லொறி தியரி படிப்பதற்கு
ஆங்கிலமொழி ஒரு பிரச்சினையே இல்லை.

# Your Magical Gateway Into The World

# e-TOURS LTD.

T: 020 8429 5200
T: 020 8429 5201
F: 020 8429 5203
E: info@e2ours.co.uk
W: www.e2ours.co.uk

Talbot House
204/226 Imperial Drive
Rayners Lane, Harrow
Midlesex HA2 7HH



**We Are Specialist In:**

- flights worldwide
- hotel booking
- travel insurance
- package holidays

**Colombo, Chennai, Singapore, Kulalumpur, Bangkok £210 + tax**

**Special Offer**

- Sri Lanka five star hotel 7 nights from £510 including flights & transfer
- Canada from £109
- Dubai from £129 + tax

**Kerala Holiday**

Very Special Offer By E-Tours Only
2 nights houseboat
3 nights Kovalam Beach
2 nights Munar Kerala
inc Flights, Transfer, Meals, and Travel Insurance
All These Just For £499 Per Person

Hurry !!! December Seat Sale
Colombo £330 + tax

SriLankan · Qatar Airways · Emirates · Etihad

All Major Credit Cards Accepted
Maestro · VISA · Delta · Mastercard

CALL US FIRST OR LAST IT DOESN'T MATTER !!!

# Amazing Prize

for 1st Anniversary of E-Tour Ltd
Book For December and win this ipod

*Conditions apply

# 020 8429 5200

**mobile: 07771 788 598: Ragu**

# டில்டா கொண்டு வருகிறது
# உங்கள் தாய் நாட்டின் சுவையை.




வழங்குகிறோம் உங்கள் நாட்டின் மிகச் சிறந்த அரிசி வகைகள்.

டில்டா ஸோனா மசூரி — டில்டா பொன்னி புழுங்கலரிசி

டில்டா பொன்னி பச்சரிசி — டில்டா மட்டா புழுங்கலரிசி

www.tilda.com